


பொருளடக்கம்


| | |
|---|---|
| அரசன் சத்ரபதியின் விஜயமும் அவர் தர்பாரும் ... | i |
| திருப்தி .. ... ... ... | 267 |
| விக்ரஹாராதனமும் வேதரஹஸ்யமும் ... ... | 268 |
| ஹிந்துக்களின் பூர்வ நாகரீகம் ... .. ... | 272 |
| தேவாரம்—சிற்றாராய்ச்சி ... ... ... | 275 |
| கம்பநாடர் சரித்திர விளக்கம் ... ... ... | 279 |
| ஆத்திசூடி விளக்கம் ... ... ... ... | 282 |
| சில அற்ப ஜீவராசிகள் ... ... ... | 284 |
| வசனம் எழுதல் ... ... ... ... | 286 |
| நமது சக்கரவர்த்தி யவர்களின் சரித்திரச் சுருக்கம் ... | 290 |
| சோழன் கரிகாலன் ... ... ... ... | 295 |
| நியாயமாலை ... ... ... ... | 296 |
| சூரியனும், பூமியும்—வருஷகதி ... ... | 298 |
| பறவைகளின் கூடுகளும், முட்டைகளும், குஞ்சுகளும் ... | 302 |
| ஸ்தல சரித்திரக்கதைகள் ... ... ... | 306 |
| பெரும்புயல் ... ... ... ... | 314 |
| கல்யாணி ... ... ... ... | 318 |
| உல்லாஸன் சரித்திரம் ... ... ... | 321 |
| வஸந்த மாளிகை ... ... ... ... | 324 |
| மாணவர் பக்கங்கள் : வியாஸ விதானம் ... ... | 326 |
| நாகாநந்தம் ... ... ... ... | 330 |
| சிறுவர்களுக்கான பக்கங்கள்.— ... ... ... | 333 |
| ஸ்திரீகளுக்கான பக்கங்கள் ... ... ... | 335 |
| விசேஷக் குறிப்புகள் ... ... ... ... | 337 |





இப்பத்திரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் பிரசுரிக்கக்கூடாது.

304

“விவேக போதினி” அனுபந்தம்



மாட்சிமைதங்கிய நமது
சக்கரவர்த்தி ஜியார்ஜ் V.

மாட்சிமைதங்கிய நமது சக்கரவர்த்தினி
மேரி மஹாராணியார்.

MADRAS : THE GUARDIAN PRESS, MOUNT ROAD

# THE DURBAR & THE IMPERIAL VISIT

## அரசன் சத்ரபதியின் விஜயமும், அவர் தர்பாரும்



சீற்றஞ் செற்று பொய்நீக்கிச் செங்கோலினாற்
கூற்றங் காய்ந்து கொடுக்க வெணுந்தினை
மாற்றமே நவின் ருன்றடு மாற் றத்துத்
தோற்றந் தன்னையுங் காமுறத் தோன்றினன்—குண்டலகேசி

**'திருவுடை மன்னர்க்காணின் திருமாலைக் கண்டேன்'** என்று ஆழ்வார் பணித்த திருவாக்கு திருவருள் பிரகாசம் வீசுங் கண்ணன்பால் கொண்ட அன்பினால் கூறப்பட்டதே ஆயினும், அம்மாலோனுடைய அம்சபூதனாகி அவர்செயலில் ஓர் பங்கிற்கு ஆளாகி பொருப்பு பூண்ட மன்னனைக் காண நேருமிடத்துக் கூட்டங்கூட்டமாக வரும் பெருஞ்சனத்தொகையின் நெருக்கத்தையும், பல தொழிலாளர்கள் நிறைந்து, மதபேதமின்றி யாவருங்கலந்து மனமொருமித்து ஈடுபடுஞ் செயலையுங்கண்டு மனம் பரவசமாகி "உம் கொண்ட சமயத்தன்னன் உருவை' நினைத்த ஸமயவாதிகள் யாவரும், தம்முள் பேதப்படினும் அம்மூல பரம்பொருள் வரில் எதிரில் கைக்குள் கைக்கலந்து அவனது குணத்தை அனுபவித்தலாகிய மனோதர்மத்திற்குடன்பட்டவராய் விடுவர் என்ற எண்ணம் மனத்தின்முன் பிரதிபலிக்கக்கண்டவர், அவ்வைபவகாலத்துச் சிறியரும் பெரியரும், பல செயலினரும், பல கொள்கையருங் கலந்து, பல சடங்கு நடத்தியும் ஒடுக்கியுங் காட்டு நிலையுங்கண்டு— 'இவனே தானம் மூலமுதற் காரணமென்பான்' என்று விராட் புருஷனது உருவத்தை அனுபவித்து வாய்மலர்ந்ததாயினும் உருவத்திலிருந்து அருவத்தைக் காண முயன்றதாகும். அவ்வாறு பெரியோர் கூறியவாறு இந்நாட்டில் உள்ளூறிப் பாயும் ஆசைவெள்ளத்தின் பெருக்கத்தில் இடையறாது அலைக்கும் ஆனந்த ஆலோலம் அன்று, 1911ஆம் டிசம்பர்மீ 2உ மாட்சிமைதங்கிய அரசன், தலைவியோடு, பொம்பாய் நகரத்து துறைமுகத்து ஆங்கடித்த அலையின் ஆரவாரத்தில் மயங்கிக் காதில் படாதிருக்குமென்று சொல்ல யார் நா எழும்? நாட்டிற்குத் தலையாய், ஜனங்களின் ஸுக துக்கங்களிற்குப் பாத்தியப்பட்டவனாய், தனது ஊழியரது ஜாக்ரதாஜாக்ரதைக்குப் பொருப்பனாய், காவலிற்கு முதல்வனாய்,

"உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்"

என்ற திருத்தக்கதேவரது வாக்குபோல் தான் வெளியிருந்து, இந்நாட்டிற்குள் இல்லாதிருப்பினும் தனது பெயர் மிகுதியால் ஆண்டு வருமன்னன் தான் கொண்ட நாட்டைக் காணவந்தபொழுது யார் இந்நாட்டின் "இன்றைக்கு அரசர் கப்பல்விட்டு இந்நாட்டில் கால்வைத்தார்" என்று சொல்லாதவர்? அரசர் இறங்கியதும், "முன்வந்து கண்டு சென்ற ஞாபகந்தூண்ட மற்றும் எமது அரசியுடன் உம்மைக்கண்டு செல்ல வந்தேம்" என்று கூறிப் புராதன நகரமாகி இந்தியர் மனத்தில் ஊன்றி விளங்கு இந்த்ரப்ரஸ்தஸ்தானத்தில் விளங்கிவரும் டில்லிமா நகரில் ப்ரவேசஞ் செய்தகாலத்து வைசிராய் அவர்கள் இந்திய ஜனங்களுடைய வரவேற்கும் பத்திரிகையை அளித்த காலத்து இந்நாட்டு ஜனங்களின் விருத்தியும், ஸுகமே தனது முக்கியமானதென்று கூறினார். மற்றொரு முறை தர்பாரை ஆரம்பித்தபொழுது,

"உம்மிடம், உள்ளூறி வழியும் அன்பின் பாத்ரனாக நாமின்று நிற்கிறோம். என்றுங் "காணத் தாங்கமுடியாத பெருஞ்செயல்களைக் காணும்படியான அத்ருஷ்டத்தை அரசிக்கும் எனக் "கும் இவ்வருஷம் கொடுத்திருக்கிறது. தாங்கமுடியாதாயினும், மனத்தை வெருட்டக் கூடிய "தன்று—ஆனந்த மிகையால் பொறுக்கச்செய்வது. நெடுநாள் கடந்தும், நெடுந்தூரம் சென் "றும், உம்மை எம் காதலியோடு முன்கண்டதும் எங்கள் மனத்தில் பதிந்த ஞாபகம் விடாது "தூண்ட, அப்பொழுது நாகரீக விஷயங்களைப் படிக்கக் காணவந்து எமது வீடென அனுபவித்த "இந்நாட்டை மற்றுங்காணவேண்டும் என்ற ஆவல் முந்த இங்கு வந்துளேம். அவ்வாறு செய்த "தில் சென்ற வருஷம் நெடும் பகல் தினம் (ஜூன்மீ 22உ) கடவுள் அருளை முன்னிட்டு எமது "மூதாதையாது மகுடம் இம்முடிமேல் அணியப் பெற்ற அந்நாள், உறுதியோடு நாம் உமக்கு "அளித்த வாய்மொழியையும் பூரிக்கச் செய்ததாகும். எமதரசியும் யாமும் எமது ஜனங்களிடத்தி "லும், சாமந்தராஜர்களிடத்திலும் எங்களுடைய ஆசைமிகுதியையுங் காட்டவும், அவர்களுடைய "ஸுகமும் வாழ்வும் எமது மனத்திற் கினியதென்பதைக் காட்டவும், வந்தேம். ஆயினும் "நம்மை வந்து எமதூரில் முடிசூட்டு நாளில் காணமுடியாதவர்கள் இப்புராதன நகராகிய "டில்லியில் நடக்கும் வைபவங்களை அனுபவிக்கவேண்டுமென்பது எமது திடக்கொள்கை. இப் "பெரும் ஸமூஹத்தைக் கான அரசி மனமும் எமது மனமும் ஆனந்தத்தில் பொங்குகிறது. "* * * * * ஸாமந்தராஜர்களும் நீங்களும் ஒற்று வாழவேண்டும் என்ற அபீஷ்டம் இச்சிறந்த "ஸமயத்தில் எமதுமனத்தில் உத்பவிக்கின்றது. * * * உம்முடைய அன்பைப் பாராட்டி "யாமும் எமது அருள் காட்ட விரும்புகிறோம். எமது பிரதிநிதி பின் அதைப் பிரசுரிப்பர். "அத்ருஷ்டவசமாக நாம் இன்று உமக்கு என் முன்னோர் உமது ஸுகம், தர்மம், நியாயம் "முதலியவைகளைப்பற்றி அளித்த வாக்கை யாமே உம்முன் நின்று பின்பற்றுவதாக வாக்களிக்க "ஸந்தோஷப்படுகிறோம். எமது ஜனங்களின் நிலைமை மேலோங்கும்படிக்குப் பரம்பொருளின் "தெய்வீக அருள் காத்து எம்மையும் அவர்க்கு ஸுகமும் சீரும் ஓங்க உழைக்க உதவி "புரியுமாக! * * * *"

என்று உரைத்த மொழிகள் அவரது மனதில் உதித்து எழுந்து அலைத்த அன்பின் பிரவாஹத்தைக் காட்டவில்லையா? இவ்வாறு பெரியோன் பேசிய பிறகு பிரதிநிதியார் அரசரது நன்கொடைகளைப் பிரசுரம் செய்தனர். அவை வருமாறு:—

(1) பாலபோதன விஷயமாக 50 லக்ஷரூபா செலவிட உத்தரவு. இது இந்திய நாட்டிற்கு முற்றும் போதாவிடினும் நல்ல ஆரம்பம்; விருத்திக்குவரவேண்டியது. இதைப்பற்றி பல முறை நாம் ராஜாங்கத்தாரை வேண்டிக்கொண்டது.

(2) அரைமாத சம்பள இனம்—இது கடல் தரை படைகளிலும், ஸிவில் பிரிவிலும் உள்ள ராஜாங்க உத்யோகஸ்தர்களுக்குள், காயமான சம்பளம் 50 ரூபாய்க்கு மேற்படாதவற்கு அளிக்கப்பட்டது.

(3) பெருமை விஷயம்.—திவான் பஹதூர், ஸர்தார் பஹதூர், முதலிய பட்டங்களுக்கு அடையாளக் குறிகளிருக்கவேண்டும் என்றும், படித்தோர்களில் மஹாமஹோபாத்யாயர், ஷாம்ஸ்-உல்-உல்மா என்னும் கௌரவப்பட்டம் பெற்ற பெரியோர்க்கு வருஷவாரி பென்ஷன் கொடுக்க வேண்டும் என்பதும்.

(4) இந்தியர்களுக்கு "விக்டோரிய கிராஸ்" பட்டங்கொடுக்கலாம் என்பதும்.

(5) வடமேற்கு பாகத்தில் நிலக்கோடை.—வடமேற்கு மாகாணத்திலும், பெலுசிஸ்டானிலும், வரியில்லாமல் நிலம் பெற்றோர் தமது வாழ்க்கை முழுதோ ஸந்ததி வாழ்க்கை முழுதோ, ஸ்வதேச ராஜாங்க அபிப்பிராயப்படி வரிபோடப்படாமலிருக்கவேண்டும் என்பதும்; கைப்பற்றிய நிலங்களை மற்றும் திருப்புதல் என்பதும்.

(6) இந்திய சிற்றரசர் தமது ஆதிக்கிய மடையும்பொழுது கட்டவேண்டிய "நாஜரானு" செலுத்த வேண்டியதில்லை என்பது—இது ஸாமந்த ராஜர்களுக்காகச் செய்த நன்கொடை. இது மாத்ரமன்றிச் சில அரசர்களது கடன்களை ஒழிக்கவும் சில வழிகள் ஏற்படுத்தியது.

(7) கைதிகளை விடுதலை செய்தது.

(8) பலபேர்களுக்குக் கௌரவப்பட்டங்களும் பரிசுகளும் அளிக்கப்பட்டது.

இவைகள் அனைத்தையும் காட்டிலும் ஜனங்களது மனத்தை உத்ஸாஹ மூட்ட செய்த செயல்கள் இரண்டுண்டு. அதை நாமிப்பொழுது விரிவாக எழுதுவோம்.

**டில்லி இந்திய தலைநகராக மாற்றப்பட்டது.—**

சென்ற மாதத்திய ஸஞ்சிகையில் எழுதிய டில்லிமா நகரத்தின் சரித்ரத்தைப் படித்தவர், அந்நகரத்தின் வயதை அறிந்திருக்கமாட்டார் என்று சொல்லமுடியாது. அவ்விடம் டில்லியானது முடிசூட்டுமிடமாகவே என்றும் விளங்கியதென்று கூறப்பட்டுள்ளது. அவ்வாறு முடிசூட்டும் இடம் முடியைச்சூடும் இடமாகவும் அமைந்த தன் பாக்யமே! ஆயினும் சிலர் இவ்வாறு மாற்றியது தவறென்பாராயினும், புராதன நகராகி இந்தியாது மகுடத்தில் புராண இதிஹாஸங்களின் வாயிலாகப் பதிந்து கிடக்குமிடத்தைப் புனருஜ்ஜீவனம் பண்ணி பழைய பிரதான நகரம் இன்றும் பிரதான நகரமாகியதென்று காண்பது யாவர்க்கும் மனத்திற்கின்பமே! காளிகட்ட நகரார்க்கது அருவருப்பாக இருக்கலாம். ஆனால் எல்லா விஷயங்களையும் ஆய்ந்து ஓய்ந்து பார்த்தே டில்லி தலைநகராக்கப்பட்டதென்று, கனம் இந்திய மந்திரிக்கும், இந்திய ராஜப்ரதிநிதிக்கும் நடந்த கடிதங்கள் மூலமாய்த் தெரியவரும். அதைப்பற்றி நாம் வீணில் பேசுவதும் நியாயமன்று. தாம் நின்று சிங்காதனம் ஏறிய இடமும் புறச்சாரலும் எல்லாங் கலந்து ராஜாங்க மந்திரமும் புறப்புரமுமாக வேண்டுமென அரசனே அபிப்பிராயப்பட்டதாகத் தெரியவருகிறது. மற்றும் அநேக அரசர்கள் ஆண்ட இடமென்னும் சரித்திரப் பெருமையுங் கலந்து, தான் ஞாபகச் சின்னமுமாக அவ்விடத்தை ராஜாங்கபீடமாகச் செய்திருக்கலாகாதென்று சொல்ல முடியுமா?

**பிரிந்த வங்காளத்தின் சேர்க்கை.—**

இவ்வாறு ராஜாங்கத்தலைநகர் தன்னைவிட்டுச் சென்றுவிட்டதே என்று வ்யாகூலம் வங்காளம் அடையக் கூடாதென்னும் வ்யாஜங் கொண்டு, அத் திடநெஞ்சன் அன்று துண்டித்த வங்காளத்தைச் சேர்த்து வங்காளிகளுக்கு மாளாத ஆனந்தத்தை யுண்டாக்கியது யாவர்க்கு மானந்தமே! கீழ் வங்காளத்தோடு, பர்த்வான், மிதனபுரி, சித்தகாங், டக்கா, ராஜ்ஷாய் ஜில்லாக்கள் கலந்து வங்காள ராஜதானியாக மாற்றப்பட்டது. இந்த ராஜதானிக்கு ஒரு கவர்னரும், அவர் நல்ல ப்ரபுவின் வம்சத்தில் தோன்றி இருக்கவேண்டும் என்று ஸித்தாந்தப்படுத்தப் பட்டிருக்கிறது. பீஹார், சோடாநாகபுரம், ஒரிஸ்ஸாவையுஞ் சேர்த்து ஓர் லெப்டினெண்ட் கவர்னர் கீழ் வைத்ததோடு, அஸ்ஸாமிற்கு ஓர் கமிஷனர் ஆதிபத்யமும் ஏற்படுத்தப்பட்டது.

இவ்வாறு எல்லாம் நடந்ததற்குக் காரணம் அரசனும், அவர்க்கினிய மந்திரியும், நன்மனங் கொண்ட பிரதிநிதியுமேயாகும்.

இவ்வாறு செயல்களால் மனத்தை உத்ஸாகத்தில் மூழ்கச் செய்த அரசன் தனது அன்பினாலும் ஜனங்களை வச்யஞ்செய்யக் கூடிய மகானாக விளங்குகின்றனர். டர்பார் நடந்ததும் காளி கட்டத்தில் சென்றவ்விடம் தன்னைக் காணவிரும்பிய ஜனங்களைத் தடைசெய்த கொத்தவாலைத் தடுத்து ஜனங்கள் யாவரும் காணும்படி நின்றது அவர் இந்தியரிடம் கொண்ட பேரன்பைக்காட்டும். இது முதலிய செயல்களால் ஜனங்களது மனதை மலர்த்தி அதனிடமிருந்து வழிந்த மதுவையுண்டு ஸுகமாகக் காலம் கழித்து வந்த நமது அரசன், நடக்கும் மாதம் 10உயன்று பொம்பய் நகரத்துக் கடற்கரை வழியாய்த் தன்னுடன் இந்திய நாட்டாரது நல்லெண்ணம் தொடர, அவ்விடம் விச்வாஸம் வளரவும் தமது புரம் நோக்கலாயினர். ஆயினும் தாம் கண்ட காட்சியும், எங்குங் காணாத ஆரவாரமும், ஜனங்களின் விச்வாஸமும், பக்தியும், அவர் கண்ணின் ஒளிபோல் எதிர் நின்று நாட்டியஞ் செய்யக்கண்டு மனமுருகி இந்தியர்க்கென்செய்வதென் றேக்கங் கொள்ளாதிரார்.

மனது நம்பால் இழுக்க, உடலை அங்நாவாய் ஊர்பாலிழுக்க இடையிற் பட்டு ஊசலாடு சிந்தையோடு ஞாபகம் மயங்கி அறியாத இந்திய உருவம் மனதிற் பதிந்து அவரிடம் அன்பாகிய கப்பத்தைச் செலுத்து மிந்தியரிடம் அருள்வீசி விளங்குவதென்பதற் கையமில்லை.

இந்தியர்நாட்டு ஆசீர்வசனங்கள் உடன்காத்துவர, பெரியோனது அருளும் உடன் போற்ற அரசற்கு நீடூழி வாழ்வும் பெருமையும் சீரும் குணமும் யாவும் பூரணமாக விளங்கவேண்டுமென்பது இந்நாட்டின் கோரிக்கை. கருணைவிலாஸத்தின் மஹிமையால் தன் பக்கங்கொள்ளும் தலைவன், தம் ஊர் அல்லாததாகிய நாட்டில் இருந்து தம்பதி ஸமேதராய் தம்மூர் அடையுங் காலத்து இம்மி அளவும் உடற்சலனமாவது மற்றெச்சலனமாவது உண்டாகாது, என்றும் பசுமை வாழ செழித்து, வாழை அடிபோல் வாழ்ந்து, இப்புண்ய பூமியாகிய தேசத்தின் பெருமையை மேன்மை படுத்தும் வழிகளுக்கியக்கமிட்டு, சரீர ஸம்பத்துடன் சௌக்ய ஸம்பத்துமடைந்து, ஜனங்களின் நம்பிக்கையின் வழி யீடேறும்படிக்குக் செய்யக் கடவுள் அவர்க்கு மதியும் பலனும் முண்டாக்கி என்றுந் திரண்டு சுடர்ப்பிழம்புபோல் துல்யமாக விளங்கி நீடூழி வாழ்ந்து, நெடும்பெயரடைந்து, குலப்பெருமையை வளர்த்து, இந்திய ஜனங்களின் வருத்தங்களை ஒழித்து, உயர்த்த, கடவுளைப் பிரார்த்திக்கிறோம். அரசன் ஊரைவிட்டுச் செல்வது மனத்திற்கூறு விஷயமாயினும், அவர் தமது வம்சத்தாரைக் காணச் செல்லும்பொழுது அவருடைய உயிர்க்கும் உடற்கும் தினையளவும் குறை வாராது நிற்க இவ்வூர் ஜனங்களும், இந்நாட்டு ஜனங்களும், அவ்வவர் வீட்டுக்குல தெய்வங்களைப் போற்றுவதும் யாம் இப்பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தி, இந்தியர் மனமாகிய மலர் ராஜ சூர்யனால் மலர்ந்து வழிந்த அன்பின் ஒழுக்கின் மிகையையும் அதை அரசன் அனுபவித்திருந்திருக்க முடியாதென்பதையும் திடமாகக் கூறுவோம்.

“ வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீய தெல்லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. ”

# விவேக போதினி

“எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.”——திருவள்ளுவர்

தொகுதி IV } விரோதிகிருதுஸு மார்கழிமீ: 1912-ஸு ஜனவரிமீ { பகுதி 7


## திருப்தி

### CONTENTMENT

ஆசையால் அலைக்கப்படும் மனம், கலக்கம் நீங்கி நிற்கும் நிலையே திருப்தி என்னப்படும். (இந்தத் திருப்தி மனத்தின் ஓய்வாதலால் இதில் ஒருவித ஸுகம் எப்பொழுதும் உண்டு.) இந்த ஸுகத்தின் ஸ்வரூபத்தை உணர்ந்தே எல்லோரும் தமது ஆசைகளைப் பூர்த்திசெய்ய முயல்கின்றனர். நாம் ஆவலுடன் அடைய விரும்பிய விஷயம் கைகூடுங்கால் இந்த மன ஓய்வு அல்லது சாந்தரூபமான திருப்தி உண்டானபோதிலும், இந்தச் சாந்தம் நீடித்து நிற்பதில்லை. ஆதலால் கொஞ்ச காலமானதும் ஆசை மீண்டும் வேறோர் விஷயமாகக் கதித்து எழுகின்றது. இதனால் கைகூடிய விஷயங்களில் உண்மையான ஆசை நமக்கு இல்லை என்பதும், கைகூடுவதால் உண்டாகும் மனஸ் ஸமாதானமே நாம் கோருவது என்பதும், அது நீடித்து நிற்கவேண்டும் என்பதே நமது அடங்கா ஆவல் என்பதும் நன்றாக வெளியாகும். நாம் எல்லோரும் அறிந்தோ அறியாமலோ அடைய விரும்பும் நீடித்த மனஸ் ஸமாதானத்திற்கே திருப்திஎன்று சாஸ்திரங்களில் பெயர். விஷய ஸுகானுபவங்களால் உண்டாகும் ஸமாதானத்திற்கு உபசாரமாகத் திருப்தி என்ற பெயர் இடப்பட்டு உலகில் வழங்கிவருகிறது. உலக விஷயத்திருப்தி விஷயச்சிறப்பு ஏராளமாக இருக்குங்கால் வெறுப்பு ரூபமாகவும், மிதமாக இருக்குங்கால் ஸுகரூபமாகவும், இல்லாவிடில் துக்க ரூபமாகவும் மாறுதலடையும் தன்மையது. எல்லோரும் அடைய உண்மையில் விரும்பும் திருப்தியோ முற்கூறிய மூன்று நிலைகளிலும் மாறுதலடையாது: சித்த சாந்தியாக விருந்து எப்பொழுதும் ஒருவித ஸுகத்தைத் தந்துகொண்டேயிருக்கும் தன்மையது.

உலகவிஷயமாக ஏற்படக்கூடிய வெளிதிருப்தி ஒருவனுக்கு வந்துவிட்டால் அஸூயை, பொறாமை, பேராசை முதலிய கெட்ட குணங்கள் புகுந்துவிட இடங்கொடுக்காமலிருக்குமாயினும், ஸன்மார்க்கத்தில் மேல் மேல் முயன்று, நாம் எல்லோரும் தேடித்திரியும் பரம திருப்தியை அடைவதற்கு வேண்டிய முயற்சியைச் செய்யவொட்டாது, தாம் இருக்கும் நிலையைவிட மேலான நிலை இல்லை என்ற இறுமாப்பை உண்டாக்கும். ஆகவேபெரியோர் இவ்வகைத்திருப்தி ஒரு ப்ரதிபந்தம் மருட்சிமை உண்டாக்கும் ஓர் நோய் என்று கூறுவர். இதற்குத் தரித்திரமே நல்ல மருந்து. இது வந்துவிட்டால் விஷயநிலையாமை விளங்க அதுகாறும் இருந்த சாந்திக்கு ஆதாரமாகத் தோன்றிய வெளிவிஷயப்பற்று நீங்க, அது நிலைத்து நிற்பதற்குக் காரணமாகிய நிராசையின் சிறப்பு நன்கு வெளியாகும். ஆகவே உலக விஷய ஸம்பந்தப்பட்டமட்டும்திருப்தி பொதுத்தன்மையுடையது.நாம்அதைமேற்கொள்ளுங்கால் அதனால்மேல் விருத்திக்கும் தடை ஏற்படாதபடி பழகிவரவேண்டும்.

விஷயம் நிலையில்லாதது, அதைப் பிடிப்பதால் ஏற்படும் சாந்தியே நமக்கு முக்யம், இந்தச் சாந்தி நமது உள்நிலை, இது விஷயத்தால்தான் வருவது என்று நம்பி நாம் அதைப் பின்பற்றுகிறோம்; தற்கால சாந்தி உண்டாயினும் அது விஷய ஸம்பந்தமுடையதாதலால் மாறிவிடுகின்றது, ஆதலால் விஷயத்தைப் பின்பற்றி ஓடித் திரிவது இந்த சாந்திக்கு ஒரு தடை. ஆகவே இவ்விஷயத்தில் ஆசை எழுவதே துக்கம், என்று நிராசையில் பழகி, மனம் அடங்கிவரச்செய்து சாந்தி பெறுவதாகிய நித்யதிருப்தி எல்லோராலும் விரும்பத்தக்கது. எந்த விஷயத்திலிருந்து ஆசை குறைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந்த விஷயத்தால் ஏற்படக்கூடிய துக்கம் குறைய, சித்தம் கலையாதிருக்கும். இம்மாதிரி ஒதுங்குவதால் ஏற்படக்கூடிய திருப்தி ஒரு விதக்கேட்டையும் விளைவிக்காது. ஸமாதானம், ஸுகம் எல்லாம் நம்முள்ளிருக்க ஏன் வீணில் வெளிப்பட்டு உழலுவானேன் என்று திரும்புவதால் உள்நாட்டம் ஏற்பட்டு, விஷய திருப்தியை மிகத் துச்சமாக நினைக்கும் நிலை நமக்கு வரும். இதனால் உள்விஷய ஆராய்ச்சி அதிகரித்து முடிவில் நிலைத்த திருப்திக்கு ஆதாரமாகவிருக்கும் வஸ்து விளங்க இந்தத் திருப்தி எப்பொழுதும் ஒரேவிதமான நிலையில் நமது யத்தனமின்றியே நிற்கும் மோக்ஷநிலை கைகூடும். இதுதான் அளவில்லா ஆசை அடங்கும் இடம்.

# விவேக போதினி

தொ 4] விரோதிகிருது௵ மார்கழி௴ [பகுதி 7


## விக்ரஹாராதனமும் வேதரஹஸ்யமும்
## IMAGE WORSHIP AND VEDIC TEACHINGS

கர்மகாண்ட உபாஸனாகாண்ட பாகங்களில் காட்டப்பட்டுள்ள வர்ணனை முதலியவைகளைக் சப்தரூபமாக ஆராதித்து வருவது ப்ராஹ்மணர்களுக்கேற்றது என்றும், அவைகளை உருவங்களாக்கி, முற்கூறியபடி வழிபட முடியாத ப்ராஹ்மணர்கள், இன்னும் மற்றைய ஜாதியார்கள் எல்லோரும், எளிதில் வழிபட்டு எல்லோருக்கும் பொதுவாகிய ஞானகாண்ட முடிவை அடைய, நமது முன்னோர் விக்ரஹாராதனத்தை விதித்திருக்கின்றனர் என்றும் முன்னரே கூறியாகிவிட்டது. இங்கு ஞானகாண்ட ரஹஸ்யத்தையும் இவ்வாறு விக்ரஹாராதனம் உள்ளடக்கி யுள்ளது என்பதை நன்கு விளக்குவோம்.

விக்ரஹ ரூபமாகக் கடவுளை ஆராதிப்பது என்பது வேதங்களிலிருந்து உண்டான சைவ வைஷ்ணவ ஆகமங்களாலும், அவைகளை முறையே தேச பாஷைகளில் விவரித்த நாயனார்கள், ஆசாரியர்கள், ஆழ்வார்கள், தாஸர்கள், பாகவதர்கள் முதலியவர்கள் முயற்சியாலும் விரிந்து, இப்பொழுது எல்லோருக்கும் வேதரஹஸ்யம் இன்னது என்பதை உணர்த்தி அவர்களை எளிதில் பரம புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை அடையும்படி தூண்டுகின்றது. இதன் ஸஹாயத்தால் தான் பறையராகிய நந்தனும் திருப்பாணாழ்வாரும், வேடராகிய கண்ணப்பரும், குயவராகிய திருநீலகண்டரும், ப்ராஹ்மணகுலம் தவிர மற்றைய குலங்களில் பிறந்தும் ஆழ்வார்களும் நாயனார்களும், உபநிஷத்ருஷிகள் நிலையை அடைய அவர்கள் அருள்வாக்குக்கள் வேதமென இக்காலத்தும் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆகவே இம்மாதிரி சிறந்த மஹான்களை ஸகல ஜாதிகளிலும் உண்டாக்கும் திறனுடைய விக்ரஹாராதனம் மிகச்சிறந்த வழி என்பதை எடுத்துரைக்கவும் வேண்டுமா!

இதுவரையில் கூறிவந்தது இந்த விக்ரஹாராதனா மார்க்கம் வேதங்களின் கர்ம உபாஸ காண்ட ரஹஸ்ய விவரணம் என்பதையே. இவைகளை ஏற்படுத்தி, ஸாதாரண ஜனங்கள் எளிதில் பின்பற்றி அடைந்து ஆனந்திப்பதற்காக, இவைகளின் முடிவு பரமாத்மாவின் பாகமாக நாம் விளங்குவது, அல்லது பரமாத்மாவில் ஒளி இழந்து கலந்து லோகானுக்ரஹார்த்தம் திவ்ய உருவந் தாங்கிவருதல், என்பவைகளை எடுத்துக் காட்டியும், வேதங்களில் கூறப்படும் பரம்பொருளோடு இரண்டறக் கலத்தல் என்ற நிலையை மறைத்தும் கூறியுள்ளார் நம்முன்னோர். ஆயினும் இந்த முடிவான நிலை இவ்விக்ரஹாராதனை மூலமாக உற்று நோக்குவோருக்கு வெளிப்படாமலிராது. அதாவது ஞானகாண்டத்தில் கூறப்படும் ரஹஸ்யங்களும் இதில் குறிப்பாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

வேதமுடிவாகிய ஞானகாண்டத்தில் இரண்டு வித ரஹஸ்யங்கள் கூறப்பட்டுள்ளன. இவைகள் முறையே **அபர வித்யை** (தாழ்ந்த வித்யை) **பரவித்யை** (மேலானவித்யை) என்பவைகளே. பரம்பொருளைப்பற்றி ஆராய்ந்து அதை அடைய மானிடர்க்கு வழிகாட்ட உதவியாக இருக்கும் ஞானகாண்டம், பந்தம் நீங்கி ஆனந்திக்கப் புகும் முமுக்ஷுவின் நிலையை நன்கு ஆராய்ந்து, அவனுள்ளும் அதுபோல மற்றவருள்ளும், ப்ரபஞ்சம் எங்கும் பரவியிருந்து எல்லாம் உண்டாகி, நிலை பெற்று, ஒடுங்க ஆதாரமாகவிருக்கும் பொருள் ஒன்று உள்ளது, ஸர்

வாந்தர்யாமியாகிய அதற்கு ஸர்வசக்தி ஸர்வக்ஞத்வம், முதலிய சிறந்த குணங்கள் இருக்கின்றன என்று எடுத்துக் காட்டி, அதை மோக்ஷம் அடைய விரும்புவோர் இங்கு கூறியபடி கேட்டுத் தியானிக்க வேண்டுமென்று கட்டளையிடுகின்றது. இந்த விஷயத்தைப் பெரும்பாலும் வியாஸர் எழுதிய ப்ரஹ்மஸூத்ரம் யுக்தி பூர்வமாக ஸ்தாபித்து இதிலிருந்து வரக்கூடிய பயனை நன்கு எடுத்து விளக்குகிறது. இந்தப் பொருளுக்கு வேதத்தில் சப்தப்ரஹ்மம் (கேட்டு கேட்டவாறு தியானித்து அடையவேண்டிய ப்ரஹ்மம்) என்று பெயர். இதற்கு ஸகுண ப்ரஹ்மம் என்றும், அபர ப்ரஹ்மம் என்றும் பெயர். இதை அடையச்செய்யும் வித்யைக்கு அபரவித்யை என்று பெயர். இந்தப் பிரஹ்மத்தைத்தான் ஆகம சாஸ்திரம், லிங்கம் முதலிய குறிகளால் வெளிப்படையாகக் காட்டி எல்லோருக்கும் இதை அடைய ஊக்கம் உண்டாகும்படி செய்கின்றது. இந்தச் சப்த ப்ரஹ்ம விஷயமாக நோக்கில் உலகில் உள்ள ஜீவராசிகள், ஜடமான ப்ரபஞ்சம் எல்லாம் இந்த ப்ரஹ்மத்திற்குச் சரீரம் போன்றவை; இது இவைகளுக்கு எல்லாம் உயிர் போன்றது இவ்வளவு நெருங்கிய ஸம்பந்தம் இங்கு உண்டு. ஜீவர்களது அறியும் சக்தி மிக சிறியதாயினும் அது இப்பிரஹ்மத்தின் ஸர்வக்ஞத்வத்தின் ஒரு லேசமே ஒழிய வேறல்ல. ஆகவே ஜீவர்களுக்கு இந்த ப்ரஹ்மத்தை விட்டுத் தனி இருப்பே இல்லை என்பதாகும். பகவத்பக்தி, அவனன்றி ஓரணுவும் அசையாது, நாம் கடவுளிடம் நமது உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் ஒப்புவித்து அவரை வழிபட வேண்டும், முடிவான மோக்ஷமும், அவன் அருளாலே வரவேண்டியது, நாமாக அதைகூடக் கைம்மாறாகக் கருதி பகவத் ஆராதனம் செய்யக்கூடாது என்ற ஆராதன ஒழுங்குகளால் முற்கூறிய உண்மைகளை எல்லாம் ஆகமங்கள் விக்ரஹாராதன விஷயத்தில் வற்புறுத்துகின்றன. பாமரர்களாகிய நாம் எல்லோரும் உள்ளபடி நிஷ்காம்யமாக இந்த ஸகுண ப்ரஹ்மத்தை விக்ரஹ மூலமாக அவைகள் உட்கருத்து உணர்ந்து வழிபட்டாலே போதும். அதுகூடச் செய்ய இயலாது வாயால் ஸகுண ப்ரஹ்மம் உபாஸனார்த்தம் கல்பிதம், அது உண்மையில் இல்லை, உண்மையில் இருப்பதாகிய நாமே ப்ரஹ்மம் என்று அஸார வேதாந்தம் பிதற்றுவதே நமது கதியாகிவிட்டது. தாமரைகளுக் கிடையில் இருந்தும் தவளைகளுக்கு எவ்வாறு அவைகள் தேனை ருசிபார்க்க முடியாமல் போய்விடுகிறதோ, அதுபோல இக்காலக் கொடுமையாலோ அல்லது நமது கர்மவிசேஷத்தாலோ நமக்கு வேதரஹஸ்யங்களை உணரும் திறனிருந்தும், பரமரஹஸ்யங்களை உணர்ந்தும், அவைகளுள் மிகத் தாழ்ந்ததான நிலையிலிருந்து வரக்கூடிய அனுபவானந்தத்தில் மூழ்க நாம் கொடுத்து வைக்கவில்லை, என்ன விபரீதம்!

வேதாந்தமாகிய ஞானகாண்டம் ஸகுணப்ரஹ்மத்தை மாத்திரம் கூறி நிறுத்திவிட வில்லை. இதில் ஆங்காங்கு பரம்பொருள் ஸச்சிதானந்தம், அவாங்மனஸ் கோசரம், (மனவாக்கிற் கெட்டாதது), ஏகமேவா த்விதீயம், (ஒன்றே இரண்டற்றது) என்று கூறப்படுகின்றது. இதன் விஷயமான அனுபவத்தைக் கூறுங்கால் இந்நிலையை அடைந்த ரிஷி 'என்னுள் ப்ரபஞ்ச லேசமே கிடையாது, அது சிதறிப்போய்விட்டதா அஸ்தமித்து விட்டதா' என்றும், 'எல்லாம் நானே, நானே அது, அதுவே நான்' என்றும், 'அனுபவிக்கும் வஸ்து, அனுபவிப்பவன் இரண்டும் நானே' என்ற இவை முதலான அபேத வாக்யங்கள் காணப்படுகின்றன. இந்த ப்ரஹ்மத்திற்கு நிர்க்குண ப்ரஹ்மம் என்று பெயர். இதற்குப் பரப்ரஹ்மம் என்றும் பெயர். இதை அடைந்து நிலைபெற ஏற்பட்டிருக்கும் ஸாக்ஷி விருத்தி, ஸமாதி பழகல் முதலியவைகளுக்குப் பரவித்தை என்று பெயர். இது மிக ரஹஸ்ய விஷயமாதலாலும், இது வெளிப்பட்டால் ஸாதாரணமாக எல்லோருக்கும் அனுபவத்திற்கு முன்னரே விஷயம் தெரிந்துவிட்டது என்ற திருப்தியை

உண்டாக்கி மேற்செல்லவொட்டாது விபரீத நிலைகளை விளைக்குமாதலாலும், ஸகுண ப்ரஹ்மத்தை உள்ளபடி உபாஸித்துவந்தால் முடிவில் பழம் நழுவிப் பாலில் விழுவதுபோலவும், தூங்குபவன் கையிலிருந்து புஷ்பம் நழுவுவது போலவும்! ஸகுணப்ரஹ்மம் குணம் நழுவி நிர்க்குணமாகி ஆராதிப்பவனையும் விழுங்கி நிற்கும் ஆதலாலும், இது குறிப்பாகவும், சிற்சில விடங்களில் வெளிப்படையாகவும் பிரஹ்மஸூத்ரத்தில் ப்ரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிர்க்குண முடிவை நன்கு உணர்ந்தே ஸகுணோபாஸனை செய்ய வேண்டும்; இல்லாவிடில் பிரயத்தனம் வீணாகும், அல்லது ஸகுணோபாஸனையின் முடிவில் உண்டாகும் நிர்க்குணத்தில் மூழ்குதல் என்பது பயத்தை உண்டாக்கி அதை நாம் அணுகவொட்டாது செய்து விடும் என்பதே அத்வைதிகளது கொள்கையே ஒழிய, ஸகுணப்ரஹ்ம உபாஸனையே அவஸியம் என்று அவர்கள் கூற வரவில்லை. ஆனால் மற்றைய மதஸ்தர்கள் ஸாதாரண ஜனங்கள் விஷயத்தில் இந்த நிர்க்குண ப்ரஹ்ம ஞானம் ஸகுணப்ரஹ்ம உபாஸனையின் வலுவைக் குறைத்து விடும் என்று கருதி, இதைத் தமது மதத்தில் வெளிப்படுத்தாமலும், சிற்சில விடத்தில் கண்டித்து மிருக்கின்றனர். எப்படியாயினும் நாம் செய்யும் விக்ரஹாராதனத்தில் இந்த ஞானகாண்ட பரமரஹஸ்யமாகிய நிர்க்குண ப்ரஹ்மவிஷயம் குறிப்பாக வெளியாகாமல் போகவில்லை. விக்ரஹாராதனத்தில் எதிரிலுள்ள விக்ரஹத்தைக் குருமூர்த்தமாகத் தியானம் செய்யும் வழி ஒன்று உண்டு. விக்ரஹபாவம் நீங்கி இப்பாவம் திடப்பட்டால் அப்பொழுது மனத்தில் உண்மை வெளியாகும் என்பது அனுபவிகள் துணிபு. இதற்காகவே சிவன் கோயில்களில் பரம்பொருளைப் பரம குருவாகிய தக்ஷிணாமூர்த்திவடிவமாகவும், சிற்சில விஷ்ணுகோயில்களில் பரம்பொருளைக் கீதாசார்யனான பார்த்தஸாரதியாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மார்க்கம்தான் விக்ரஹாராதனத்தை ஸகுணப்ரஹ்ம உபாஸனையிலிருந்து நிர்க்குண ப்ரஹ்ம உபாஸனைக்குக் கை தூக்கிவிடுவது.

இனி விக்ரஹாராதனம் இவ்வாறு நிர்க்குணோபாஸனைக்கு ஆதாரம் என்பதை ஆராயப்புகுவோம். நிர்க்குண ப்ரஹ்மஉபாஸனையில்முதிர்ந்து தாமே ப்ரஹ்மமான அனுபவி ஆரூட்களை வேதம் வர்ணிக்கும் விதத்தைப் பின்வருமாறு கைவல்ய நவநீத நூலாசிரியர் எடுத்துக்கூறுகிறார்.

பேதகர் மத்தால் வந்த ப்ராத்தம் நானா வாகும்,
ஆதலால் விவஹா ரங்கள் அவரவர்க் காவ வாகும். [வர்
மாதவம் செயினும் செய்வர் வாணிபம் செயினும் செய்
பூதலம் புரப்பர் ஐயம் புகுந்துண்பர் ஜீவன் முக்தர்.

பின்னமூ வரிலி ரண்டு பேர்களுஞ் சமாதி யோகம்
தன்னையுற்றிருப்பார்தேக சஞ்சாரநிமித்தந்தானாய் [கும்
உன்னுவோன்வரன்வேற்றோரா லுணர்பவன் வரியானா
அன்னியர்தம்மாற்றன்னா லறியாதோன் வரிட்டனாமே.

அரிதாகு மிவர்க ளிவ்வா றநேகரா னாலு முத்தி
சரியாகும் பாடு பட்ட சமாதிக்குப் பலனே தென்றால்
பெரிதான திருஷ்ட துக்கம் பிரமவித் தநுப விப்பன்
வரியானும்வரனுமற்றை வரிட்டனுஞ்சுகமாய்வாழ்வார்

இம்மேற்கோள்களால், பரமநிலையை அடைந்தவர்கள் நான்குவிதம் என்பதும், அவர்களுள் உலகிற்கு உபகாரம் தன்இயக்கமின்றியே ப்ரஹ்மவித்தால் ஏற்படும் என்பதும், ப்ரஹ்மவரிஷ்டன் தன் ஸந்நிதான மாத்ரத்தால், ஈசுவரன்போல, உணர்ந்து அணுகுபவரைக் கரை ஏற்றுவான் என்பதும் வெளியாகும். இந்த வரிஷ்டநிலையே மனிதர் இவ்வுலகில் உயிருடனிருக்கையில் அடையக்கூடிய மேலான நிலை. இந்த நிலையில் அவன் ப்ரஹ்மமே. இந்த வரிஷ்டன்தான்வேதத்தின் பரம ரஹஸ்யம். இம்மாதிரி வரிஷ்டர்கள் இக்காலத்தில் இல்லாமல் போய்விடவில்லை. கும்பகோணத்தில் **மௌனஸ்வாமிகள்** என்ற மஹான் ஒருவர் இந்நிலையில் நெடுநாளிருந்தார் என்பதுஎல்லோரும்அறிந்த விஷயமே. இவரைச் சேர்ந்தவர்கள் இவரை அன்புடன் ஆதரித்து சிறந்த உலக ஸுகங்களைப் பெற்றிருக்கின்றனர். இவரை அணுகிய பாமரர் பரிசுத்தராகியும், பரி

சுத்தர் வேதரஹஸ்ய நிலையில் அவாப்பெற்றும் இருந்தனராம். பரமநிலையில் அவாப்பெற்றவர் அதில் நிலைபெற்றும் இருப்பர், ஆனால் அவர் விஷயம் எளிதில் வெளிப்படக் கூடியதல்ல. இந்த மௌனஸ்வாமிக்குக் கோயிலில் நடக்கும் உபசாரங்கள், பூஜைகள், உத்ஸவங்கள் நடப்பதுண்டு. என்ன செய்தும் உலகப்ரக்ஞைக்கே வாராது தமது வாழ்நாள் முழுவதும் இவர் இருந்தார். இம்மாதிரியே ஜடபாதர் வரிஷ்ட நிலையில், உலாவியதாக ஸ்ரீமத் பாகவதத்தில் விஸ்தாரமாகக் கூறியுள்ளது. கங்கா ப்ரஹ்மபுத்ரா ஸங்கம பூமியிலிருக்கும் ஸுந்தர வனத்தில் ஒரு பெரியவர் இந்த வரிஷ்டநிலையில் ப்ரஹ்மமாய்க் கிடந்தார் என்றும், இந்நிலையின் அருமையை உணராத வேடன் ஒருவன் அவரை கண்டெடுத்து என்ன செய்தும் உயிர் இருக்கிறதோ இல்லையோ என்ற ஸந்தேகம் நீங்காதிருக்க முடிவில் ஈயத்தைக் காய்ச்சி அவர் மேல் விட அவருக்குத் தேஹ உணர்ச்சி வந்து,உடனே தேஹத்தியாகம் செய்து ப்ர்ஹ்மை பூதரானார் என்றும், அவர் ப்ராத்வசமாயிருந்த பாபத்திற்கு வேடன் ஆளானான் என்றும் ஒரு ஸமாசாரம் கொஞ்ச நாளைக்கு முன்னர் வெளியாயிற்று. இம்மாதிரியே ஆப்ரிக்காகண்டம் ஈஜிப்த் தேசத்தில் பாயும் **நைல்** நதிக்கரையில் ஒரு பெரியவர் இந்நிலையில் பாலைவன உஷ்ணத்தையும் கவனியாது கிடந்தார் என்றும், இந்நிலையின் அருமையை அறிந்து ஆனந்திக்கக் கொடுத்து வையாத ரேனன் என்ற குணதோஷ ஆராய்ச்சியில் தேர்ந்தவர்,இங்கு கல்லைப்போல் அசையாது உலக உபகாரமின்றிக்கிடக்கும் இவரை இகழ்ந்துவிட்டு, உள்ளிருக்கும் ப்ரஹ்மானந்த ஸுகத்தை நம்பாமல் போய்விட்டார் என்றும் உள்ள ஸங்கதி எல்லோரும் அறிந்த விஷயமே. ஆகவே ப்ரஹ்மமே ஆகி நின்று உலக ப்ரக்ஞைக்குத் திரும்பி வாராது நிற்றலே வேதரஹஸ்யமான பரமநிலை. இது எவ்வளவுதான் நம்மால் அடைய முடியாததாயினும், நமக்கு அடைய விருப்பம் ஏற்படக்கூடிய நிலையில்லாவிடினும், வேதரஹஸ்யம் வேதரஹஸ்யமே. இந்த வரிஷ்டநிலையையே கோயில் விக்ரஹங்கள் நன்கு உணர்த்துகின்றன. இதைக் குறிக்கவே தான் மிகச்சிறந்த கோயில்களும் சிறந்த விக்ரஹங்களும் பரம யோகிகளது தேஹத்தை ஸமாதி வைத்திருக்கும் இடங்களின் மேல் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் சிலாரூபமாக இருந்துகொண்டும் திருஷ்டமாக உள்ள ஒருவித பயனையும் நேரிடக் கொடுத்திடாது,ஆராதிப்பவர் மனோபாவத்திற்கேற்ப தன்னிடம் ஒருவிதப் பற்றை உண்டாக்கிக்கொண்டும், ஸகலவித பூஜைகள் செலவுகள் எல்லாவற்றையும் பிறர் செய்யும்படித் தூண்டிக் கொண்டும், நிற்கும் மூலஸ்தான விக்ரஹங்கள் ப்ரஹ்மரிஷ்ட நிலையில் ப்ரஹ்மமேயாகி நிலைத்து நிற்கு மஹானை எப்படி அறிந்தோருக்கு நினைப்புறுத்தாமல் போகும்? மேலும் அநேகவிதமாக அலங்கரித்து விதம்விதமான வாஹனங்களில் ஏற்றிப் பற்பல வாத்யங்கள் முதலிய கோலாஹலங்களுக்கு இடையில் தூக்கிவரப்படும் உற்ஸவ மூர்த்திகளைக் காணும்பொழுது கொஞ்சமேனும் சாஸ்திரப் பழக்கமுடையவருக்குக் கும்பகோணம் மௌன ஸ்வாமிகளைப்போன்றவர்கள் இம்மாதிரி ஸமயங்களில் இருந்தநிலை ஞாபகம்வாராமல் போய்விடுமா? ஸகலஜனங்களுடைய வந்தனை வழிபாடுகளையும் ஏற்று ஒருவித விகாரமுமடையாது அவரவர்க்கு ஆவன ஈந்து அவரவர்களைத் தத்தம் நிலைக்கு அடுத்த மேல் நிலையில் நிறுத்தும் திறன் ஈசுவரனுக்கு உண்டு என்று கூறும் சாஸ்திரமே ப்ரஹ்மவரிஷ்டனுக்கும் அது உண்டு என்று கூறுவது மஹோத்ஸவங்களுக்கிடையில் சற்றுக் கற்றுத் தேர்ந்தவருக்கு ஞாபகம் வராமல் போகுமா! இம்மாதிரியான வேதப்ரஹ்ம ரஹஸ்யம் விக்ரஹாராதனையில் அடங்கி இருப்பதால் தான் பட்டினத்தடிகள், தாயுமானவர், சங்கராசாரியர் முதலிய மஹான்கள் உத்ஸவங்களையும் கோயில்களையும் கொண்டாடி அநுபவிப்பதும்.

இனிக் கோயிலுள் காணப்படும் விக்ரஹங்களின் அமைப்பிலேயே இங்குக் கூறப்பட்டுள்ள இருவித வேதரஹஸ்யங்களாகிய ஸகுண, நிர்க்குண ப்ரஹ்ம விஷயங்கள் இவ்வாறு புதைந்து கிடக்கின்றன என்பதைப் பின்னர் விவரிப்போம்.

## ஹிந்துக்களின் பூர்வ நாகரீகம்
### ANCIENT HINDU CIVILIZATION

தற்காலத்தில் சிறப்புற்றோங்கும் நாகரீகங்களில் தாம் உயர்நிலை யடைந்திருப்பதாய்ப் பெருமை பாராட்டிக்கொள்ளும் ஏனைய ஜாதியார்களின் முன்னோர்கள், நாகரீகமென்பதே கனவிலும் கண்டிராதவர்களாகவும், தாங்கள் உண்ணும் உணவைப் பக்குவம் செய்யத் தெரியாதவர்களாகவும், உடுக்கும் உடையை நெய்துகொள்ள வறியாதவர்களாகவும், கேவலம் மிருகங்களுடன் மிருகங்களாய் வனங்களில் ஸஞ்சரித்து, குகைகளில் துயின்று கட்டைகளையும், கற்களையும் ஆயுதங்களாய் உபயோகித்து, அநாகரீகமென்னும் அந்தகாரத்தி னடுவே உழன்டு கொண்டிருந்த அந்தப் புராதன காலத்தில், நமது இந்து தேசமானது, கல்வி, செல்வம், ராஜரீகம், கைத்தொழில்கள் முதலான எண்ணிறந்த நாகரீகங்களில் உயர்பதவி யடைந்து, இவ்வுலகத்தின்கண் பரவியுள்ள நாகரீகங்களுக்கெல்லாம் ஜன்மபூமியாகவும், இவ்வுலக முழுமைக்கும் ஓர் கொடிவிளக்குப் (Beacon Light) போல் அதியுன்னத தசையிலிருந்த அப்பூர்வகாலமே, இந்தியாவின் பூர்வசரித்திர காலமாகும்.

### ஆர்யர்களின் ஜன்மபூமி

மேற்கூறியவாறு ஹிந்து ஆர்யர்களின் பூர்வகால நிலைமைகளையும், சரித்திரங்களையும், நாகரீகங்களையும், பெரும்பான்மை வேத ஆதாரங்களைக்கொண்டே நிர்ணயிக்கவேண்டும்.

ஆனால் ஆர்யர்களின் இந்திய வாஸச் சரித்திரம் தவிர வேறு அவர்களின் இன்னும் பூர்வசரித்திரங்களைப்பற்றியும் அநேக ஸித்தாந்தங்கள் (Theories) மனித நூலோர் கூறுகின்றார்கள்.

இந்தியாவிலுள்ள ஆர்யர்களின் ஸம்ஸ்கிருத பாஷையும், வேதங்களும், ஜெண்ட் அவஸ்தா முதலான பார்ஸி, இரேனியர்களின் வேதங்களும், க்ரீக், லாடின் பாஷைகளைச்சேர்ந்த பூர்வசரித்திரங்களும், ஆங்க்லோ ஸாக்ஸன் முதலானவர்களின் பூர்வ சரித்திரக்கதைகளையும் பாஷைகளையும் ஆராய்ச்சி செய்து பார்க்கின், இவர்களெல்லோரும் முன் ஒரு காலத்தில் ஒரே ஜன்மபூமியில், ஒரே பாஷையைப் பேசிக்கொண்டும், ஒரேவித நடையுடை பாவனைகளனுஸரித்துக்கொண்டும், ஒரேவிதமான தெய்வங்களைப் பூஜித்து ஒரேவித மதாசாரனைகளை யனுஷ்டித்தும் வந்திருக்கவேண்டுமெனத் தெரியவருகின்றது.

பூர்வ ஆர்யர்களின் ஜன்ம பூமியைப்பற்றி பலர் பலவிதமாய் ஊகிக்கின்றனர். முன்னொரு காலத்தில், பூர்வ ஆர்யர்கள் ஐரோப்பாவின் வடமேற்கு தேசமான ஸ்காந்தினேவியாவில் வசித்திருக்கவேண்டுமென்றும், அவர்களில் ஓர் பிரிவினர் தென்கிழக்கே சென்று க்ரீக், இத்தாலி முதலான தேசங்களில் குடியேறி இருக்கவேண்டும் என்றும், மற்றோர் பிரிவினர், ஆசியா கண்டத்தில் பிரவேசித்து, பாரஸீகத்தில் ஓர் பிரிவினரும், ஹிமயமலைக் கணவாய்களின் வழியாய்ச் சென்று இந்தியாவின் உத்தர பாகமான பஞ்சாப் தேசத்தில் ஸிந்து நதிக்கரைகளிலும், அதைச் சார்ந்த பீடபூமிகளிலும் குடியேறி இருக்கவேண்டுமென்றும் சிலர் அபிப்பிராயப் படுகின்றனர்.

இந்தியாவின் உத்தர பாகமே பூர்வ ஆர்யர்களின் ஜன்மபூமியென்றும், அவ்விடத்திருந்தே அவர்களில் அநேக பிரிவினர், மேற்கூறியவாறு மற்றதேசங்களில் தங்கள் நாகரீகங்களுடன் பரவியிருக்கின்றார்களென்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள்.

மத்ய ஆசியாவின் பீடபூமியின்கண், ஆக்ஸஸ் நதி தீரங்களே பூர்வ ஆர்யர்களின் ஜன்மபூமியென்றும், அவ்விடத்திருந்தே அவர்கள் பல பிரிவாகப் பிரிந்து, மேற்கூறியவாறு பல தேசங்களில் குடியேறி இருக்கின்றார்கள் என்று வேறு சிலர் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

மேற்கூறிய மூன்றுவித ஸித்தாந்தங்களைத் தவிர, த்ருவ ஸித்தாந்தம் (Arctic Home of the Aryans) என்ற ஓர் ஸித்தாந்தமானது இப்

பொழுது அங்கீகரிக்கப்பட்டு வருகின்றது. அதன்பிரகாரம், பூர்வ ஆர்யர்கள் முன் ஒரு காலத்தில் உத்தரத்ருவப்ரதேசங்களில் வஸித்திருக்கவேண்டுமென்றும் காலபேதத்தால் அப்பிரதேசங்கள் பனி மிகுதியால் (Glacial Periods) மனிதர்கள் வஸிக்கக்கூடாதவாறு அவ்வளவு குளிர்ச்சியடைந்து விட்டபடியால், ஆங்கிருந்தோர் சிதறுண்டு நானாதேசங்களிலும் பரவி மேற்கூறியவாறு குடியேறி இருக்கவேண்டும் என்றும், அவர்களில் ஓர் பிரிவினரே தெற்கே சென்று பாரஸீகத்திலும், உத்தர இந்தியாவிலும் குடியேறி இருக்கவேண்டுமென்றும், திலகர் முதலான சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். இந்த த்ருவஸித்தாந்தத்துக்கு ஆதாரமாய், உத்தரத்ருவ ப்ரதேசங்களையும், ஆங்கே இன்றைக்கும் பார்க்கத்தக்க பற்பல அதிசய காட்சிகளையும், இரவு ஆறுமாதம், பகல் ஆறுமாதம் என்ற கால அமைப்பையும், சூரியன் உச்சமடையாமல் அடிவானத்திலேயே மஹாமேரு என்று சொல்லப்பட்ட உத்தரத்ருவத்தை ப்ரதக்ஷிணமாய்ச் சுற்றி ஸஞ்சரிப்பதையும், த்ருவ நக்ஷத்திரம், ஸப்தர்ஷிமண்டலம் முதலான நக்ஷத்ரமண்டலங்கள், தலைக்கு நேரே உச்சியில் பிரகாசிப்பதையும் இவைபோன்ற இன்னும் எண்ணிறந்த அதிசயமான உத்தரத்ருவ காட்சிகளையும் பற்றி வேதங்களில் சில மந்திரங்கள் விவரமாய்க் கூறுவதால், அவைகள், அவ்வுத்தரத்ருவகாட்சிகளைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டுகளித்த ஆர்யர்களாலேயே மனமகிழ்ச்சியுடன் கவனம் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று தெரியவருகின்றது. மேற்கூறிய ஆதாரங்களால், இந்திய ஆர்யர்களின் பூர்வீகர்கள், முன் ஒரு காலத்தில் உத்தரத்ருவ ப்ரதேசங்களில் வஸித்திருக்க வேண்டுமென்றும், உத்தரத்ருவப்ரதேசமே பொதுவாக ஸகல ஆர்யஜாதியார்களின் ஜன்மபூமியாயிருந்திருக்க வேண்டுமென்றும் ஊஹிக்கப்படுகின்றது. அவ்வுத்தர த்ருவப்ரதேசங்களினின்றும் மேற்கூறிய காரணங்களால், ஆர்யர்களின் ஓர் பிரிவினர், ஹிமயமலைக்கணவாய்கள் வழியாய் உத்தர இந்தியாவில் முதல் முதல் குடியேறத் துவங்கியகாலமே, இந்தியாவின் பூர்வ காலத்தின் ஆரம்பமாகும்.

இந்துதேசச் சரித்திரமானது பூர்வகால சரித்திரமென்றும், மத்யகால சரித்திரமென்றும், தற்கால சரித்திரமென்றும், காலவரைக் கிணங்க மூன்று பாகங்களாகப் பிரிக்கப்படலாம்.

மகததேசத்தி லரசாண்டுவந்த மௌர்ய ராஜ**வம்சத்து** முதல்வனான **சந்திரகுப்த** மஹாராஜனுடைய அரசாட்சி காலத்துக்கு முந்தின காலமே **பூர்வ கால**மெனவும், அதற்குப்பின், ஆங்கிலேயர்கள் இந்துதேசத்தில் முதல்முதல் ராஜத்வம் (Sovereignty) அடைந்த 1765-ம் ஆண்டு வரை **மத்யகால**மெனவும், அதற்குப் பிற்காலமே **தற்காலம்** எனவும் வகுக்கப்படலாம்.

**க்ரீக்** சக்கரவர்த்தியான **அலக்ஸாந்தர்** அன்னவர் ஸேனாதிபதியான **ஸேலுகஸ்**, சந்திரகுப்த மஹாராஜன் ஸதஸில் க்ரீக் ஸ்தானாதிபதி (Ambassador) யாய் விளங்கிய **மகாஸ்தனிஸ்**— இவர்களுடைய சரித்திரங்களாலும், புஸ்தகங்களாலும் சந்திரகுப்த மஹாராஜன் கி. மு. 4-ம் நூற்றாண்டின் இறுதியில் அரசாண்டிருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது

ஆகையால் **பூர்வகாலம்** என்பது மகததேசத்தில் சந்திரகுப்த மஹாராஜன் அரசாளத் தொடங்கிய காலமான கி. மு. 4-ம் நூற்றாண்டின் பிற்பாகத்துக்கு முன் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முந்திய காலமாகும். அக்காலத்தில் நடந்தவர்த்தமானங்களை, காலபரம்பரையாய் (In chronological order) துல்யமாய் ஒழுங்குபடுத்திக் கூறுவது அஸாத்யமாகும். ஆனால், மேற்சொல்லிய பூர்வகாலத்தில் உண்டான நூல்

---

1 "The age of Chandraguptha is the sheet anchor of Indian Chronology"—*Maxmuller.* சந்திரகுப்தன் கி. மு. 315-ம் ஆண்டில் மகத தேசத்தில் பட்டம் தரித்ததாய் மாக்ஸ்முல்லர் அபிப்பிராயப் படுகிறார். (Vide History of Ancient Sanskrit Literature by *Maxmuller*)

களைக் கொண்டும், ஏனைய ஆதாரங்களைக் கொண்டும், அவைகளின் காலக்கிரமங்களைமாத்திரம் ஒருவாறு சொல்லலாம்.

### பூர்வகாலம்—நான்கு பிரிவுகள்

பூர்வகால நூல்கள் (Literatures) ச்ருதி, ஸ்மிருதி, இதிஹாஸம், புராணம் என நான்கு பிரிவுகளாக, அவைகளின் அமைப்பு (Style) சந்தஸ் (Metre) கருத்துக்கள் (ideas) தேசவர்ணனை, காலவர்ணனை, ஜ்யோதிஷக்குறிப்புக்கள் (Astronomical references) முதலான பலவித அந்தரங்க ஆதாரங்களைக் (internal evidences) கொண்டு பிரிக்கப்பட்டிருக்கின்றன.

### ச்ருதி

அனாதியாய், ஹிந்து மதத்துக்கே ஆதியாதாரமாய், மனிதர்களால் மாற்றப்படக்கூடாததாய், உலகத்தையே சிருஷ்டித்த ஈசுவரனாலேயே கற்பிக்கப்பட்டனவாய்ச் சொல்லப்படும் வேதங்களே ச்ருதிகள் என்று சொல்லப்படும்.

### வேதங்கள்

வேதங்கள் இவ்விந்துமத க்ரந்தங்களுள் மாத்திரமன்று, இவ்வுலகத்துள்ள எண்ணிறந்த க்ரந்தங்களுள்ளும், ஆதியானவை. வேதங்களுக்கு முன் ஏதாவது நூல்களிருந்தனவோ வென்று கூட இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. உலகத்தின்கண் பாவியிருக்கும் நாகரீகங்களினுடையவும், மனித ஜாதியார்களினுடையவும், அவர்களின் புத்திவிசாலத்தின் பரம்பரா நிலைமைகளி (Various stages of development of human intelligence) னுடையவும், ஆதியாதாரங்களை (Germs) வேதங்களிலேதான் காணலாம்.

வேதநூல்கள், (1) மந்திரம், (2) ப்ராஹ்மணம், (3) உபநிஷதம் என மூன்று பிரிவாக இருக்கின்றன. அதற்கிணங்க வேதகாலமானது, மந்திரகாலம், ப்ராஹ்மணகாலம், உபநிஷதகாலமென மூன்று காலங்களாகப் பிரிக்கப்படலாம். ஆனால், மேற்கூறிய காலப்பிரிவினையானது அவ்வளவாகத் துல்யமாய்ச் சொல்லத் தக்கதன்று. ஏனென்றால், மந்திரங்களில் பிந்தியவைகளில் சில ப்ராஹ்மணங்கள் கவனம் செய்ய ஆரம்பித்த காலத்துக்குப் பின்னும், ப்ராஹ்மணங்களில் பிந்திய சில உபநிஷதங்கள் கவனம் செய்ய ஆரம்பித்ததற்குப் பின்னும் கவனம் செய்யப்பட்டனவென்று நிர்ணயிக்கப்படுகின்றன.

### நான்கு வேதங்கள்

ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என வேதங்கள் நான்கு. அவைகளில் ரிக்வேதமே ஆதியில் உண்டானதாய்த் தெரிகின்றது. ஆகையால் முன் ஒருகாலத்தில் ஒரே வேதம் (அதாவது ரிக்வேதம்) மாத்திரமிருந்ததென்றும், பின்பு ரிக், யஜுஸ், ஸாமம் எனமூன்று வேதங்களுண்டான காலமும், பின்பு அதர்வண வேதமும் சேர்ந்து நான்கு வேதங்களான காலமுண்டென, காலக்ரமப்படி வேதக்ரமங்களும் ஏற்பட்டிருப்பதாய்த் தெரியவருகின்றது. மேலும் ரிக்வேதம் மாத்திரம் ப்ராஹ்மண காலத்துக்கு முன்னமே இருந்ததாகவும், யக்ஞம், யாகம் முதலான கர்மகாண்ட ஸம்பந்தமான (Sacrificial systems) நூல்கள் பலவாறாகப் பெருகி ஒவ்வொரு யாகத்தையும் * நான்குவித ரித்விக்குகள் நடத்தவேண்டுமென்ற விதிகள் ஏற்பட்ட ப்ராஹ்மண காலத்திலேயே அந்த ரித்விக்குகள் உச்சரிக்கத்தக்க பல மந்த்ரங்கள், ரிக்வேதத்தினின்றும், † யஜுர் வேதத்திலும், ஸாமவேதத்திலும் சேர்க்கப்பட்டனவாய்த் தெரிகின்றது.

“அது (யாகம்) மூன்று வேதங்களாலும் நடத்தப்படவேண்டும். ரிக், யஜுஸ், ஸாமம் என்ற

---

* குறிப்பு—இவ்வாறு மூன்று வேதங்கள் மாத்திரம் உள்ள (முவ்வேத) காலத்தைப்பற்றி, ஆபஸ்தம்பர், பரிபாஷ்ய ஸூத்ரத்தில் கூறுவதாவது,

† सात्रिभिर्वेदैः विधियते (3)
ऋग्वेद यजुर्वेद सामवेदैः (4)
ऋग्वेदेन होता करोति (16)
सामवेदेनादृगाता (17)
यजुर्वेदे नाध्वर्युः (18)
सर्वै ब्रह्मा (19)



விக்டோரியா மஹாராணியவர்களின் மகுடாபிஷேக வைபவம்
1838-ம் ஞூ ஜூன்மீ 28உ

வேதங்களால் ரிக்வேதத்தால் ஹோதாவும், ஸாம மந்திரங்களால் உத்காதாவும், யஜுர் மந்திரங்களால் அத்வர்யுவும், ஸகலவேத மந்திரங்களாலும் ப்ரஹ்மாவும் தங்கள் தங்கள் க்ரியைகளைச் செய்யவேண்டும். *

तस्मारिचरणौ इतरौवेदौ ॥ 6 (2)

மேற்கூறியவாறு நான்கு வேதங்களாக அமைந்த விதத்தைக் காலக்ரமப்படுத்தப் புகின், அவைகள் முறையே (1) ஏகவேதகாலமெனவும், (2)†மூவ்வேதகால மெனவும், (3) சதுர் வேத காலமெனவும், மூன்று காலமாய்க் கூறலாம்.

முன்கூறியவாறு, மற்ற மூன்று வேதங்களிலும் பெரும்பான்மை ரிக்வேத மந்திரங்களே காணப்படுவதாலும், மூன்று வேதங்களும், ரிக்வேத காலத்துக்குப்பின், யாகாதிக்ரதுக்களுக்கு உசிதமாய்ச் சேர்க்கப்பட்டன வர்தலாலும், ரிக்வேதமே மற்ற மூன்று வேதங்களுக்கும் ஆதாரமாய்ச் சொல்லப்படலாம்.

R. S நாராயணஸ்வாமீ ஐயர், பி. ஏ., பி. எல்.

---

* கௌசிதகி ப்ராஹ்மணத்தில் மற்ற இரண்டு (யஜுஸ், ஸாம) வேதங்களும், ரிக்வேதத்தின் உபவேதங்களெனவே கூறப்பட்டிருக்கின்றது.

† குறிப்பு:—த்ரயீ (त्रयी) என்னும் பதமானது மூன்று வேதங்களையும், முன்னொரு காலத்தில் மூன்று வேதங்கள் மாத்திரமுண்டென்றும் தெரிவிக்கும். இவ்வாறே பல ஆதாரங்கள் காணப்படுகின்றன.

---

**கடவுளைக் கண்டவனை உலகம் பாதிக்காது.**—'கண்ணும்பூச்சி' யென்னும்விளையாட்டில் தாய்ச்சியைப் போய்த் தொட்டுவிடுகிறவன் குருடனாவதில்லை. அதுபோல் கடவுளை யொருமுறைக் கண்டு விட்டவனை இவ்வுலகபாசங்கள் கட்டுப்படுத்தா. தாய்ச்சியைப் போய்ப் பிடிக்கிறவன் திருடனாக்கப்படாமல் சுயேச்சையாய்த் திரிவதுபோல் எம்பெருமானது திருவடிகளைத் தொட்ட தொண்டர்கள் இப்பிரபஞ்சநாடக அரங்கத்தில் நிர்ப்பயமாய் ஓடியாடி உலக மாயாபாசங்களினின்றும் விடுதலை பெறுகின்றமையால் அவர்களை மீண்டும் எதுவும் ஒருகாலும் பந்திக்காது.



# தேவாரம்-சிற்றாராய்ச்சி

## SAIVITE HYMNS—A CRITICAL NOTE

(தொடர்ச்சி)

தமிழ் அவாவினோருக்குத் தண்ணமுதொக்கும் விஷயதான போதினியாம் விவேக போதினிக்கண் சென்ற ஜூன்மீ திருஞான சம்பந்த சுவாமிகளது சரித்திர விஷயங்களில் அவர்தம் பாசுரங்களினின்றே அறியக்கூடியவையை எடுத்தெழுதினேன். இனி, அவர் காலத்திலேயே விளங்கின திருநாவுக்கரசு சுவாமிகளது சரித்திர விஷயங்களை அந்நாவுக்கரசரது தேவார வாயிலாகவே ஆராய்ந்து ஈண்டு எழுதுகின்றேன்:—

### 1. திருநாவுக்கரசு சுவாமிகளது சரித்திர சம்பந்தமான விஷயங்கள்.—

(1) சமணமதத்தைத் தழுவித் திகைப்புற்ற தம்மீது சூலைநோயை ஏவி, அந்நோயினால் தாம் மிகவருந்தி நோயைத் தீர்த்தருளுமாறு சிவபெருமானை வேண்ட அவர் அவ்வேண்டுகோளுக்கிரங்கி, நோயைத்தீர்த்து, சமணர் கூட்டத்தினின்றுந் தம்மை மீட்டு, தன் தலையிற் பாலைத் தெளித்துச் சுத்திசெய்து, பாததரிசனந் தந்து, ஆட்கொண்டுபொருட்படுத்தித் தம்மீது பாமாலை பாடும்படி அருளினரென்பது.—

"அமணர்கள்த மறவுரைகேட் டலமந்தேன்."

"சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர் *** அதிகைக் கெடில வீரட்டானத் துறையம் மானே."

"குண்டர்கள்தஞ் சொல்லே கேட்டு, உருகுவித்தெனுள்ளத்தி னுள்ளிருந்த கள்ளத்தைத் தள்ளிப்போக்கி, யருகுவித்துப் பிணிகாட்டி யாட்கொண்டு பிணிதீர்த்த ஆரூரர்."

"வெஞ்சொற் சமண் சிறையி லென்னை மீட்டார்."

"சூலைதீர்த் தடியேனை யாட்கொண் டாரே."

"பண்டமாப் படுத்தென்னைப் பால் தலையிற் றெளித்துத்தன் பாதங் காட்டி."

"ஊனத்தை நீக்கி உலகறிய என்னை ஆட்கொண்டவன்."

"பந்தமறுத் தாளாக்கிப் பணிகொண் டாங்கே
பன்னியநூற் றமிழ்மாலை பாடுவித்தென்
சிந்தைமயக் கறுத்ததிரு வருளினனை."

(2) தம் மதத்தை விட்டுச் சைவத்தைத் தழுவிய காரணத்தால் இவர்மீது பொறாமைகொண்ட சமணர்கள் மதயானையை இவர்மீது ஏவின போது "அதிகைப் பெருமானுக்கு உறவினன் ஆய்விட்டேன். ஆதலினால் யான் எதற்கும் இனி அஞ்சேன்" எனத் திருப்பதிகம் பாடினது.—

"திண்ணன் கெடிலப் புனலு
முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை."

(3) அழுக்காறு கொண்ட அமணர் விஷங் கலந்த பாற்சோற்றைத் தமக்கு உண்ண அளித்தனரென்பதும் அவ்வுணவை அமுதமாக்குவித்தார் சிவபிரான் என்பதும்.—

"வஞ்சனைப் பாற்சோறாக்கி
வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமு தாக்கு வித்தார்
நனிபள்ளி யடிகளாரே."

(4) சமணர்கள் தம்மைக் கல்லோடு கட்டிக் கடலிலிட்டபோது நமச்சிவாயப் பதிகம் பாடித் தாம் உய்ந்தன ரென்பது.—

"கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே."
"கல்லி னோடெனைப் பூட்டி யமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினால்
நெல்லு நீள்வய னீலக் குடியரன்
நல்ல நாம நவிற்றியுய்ந் தேனன்றே."

(5) தில்லையில் நடன தரிசனம் பெற்றது.—

"இருத்தமாந் தில்லை தன்னுட்
டிகழ்ந்தசிற் றம்பலத்தே
திருத்தநான் காணவேண்டி
சேர்பட வந்த வாறே."

(6) திருஞானசம்பந்த சுவாமிகளோடு தலங்கள்தோறுஞ் சென்று சுவாமி தரிசனஞ் செய்தன ரென்பது.—

"பண்மலிந்த மொழியவரும்* யானு
மெல்லாம் பணிந்திறைஞ்சி."

(7) திருப்பதிகம் பாடிப் பரிசிலாகப்பழங்காசு பெற்றது.—

"பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
வாட வாட்டந் தவிர்ப்பார்"—

(8) திருமறைக்காடு எனப்படும் வேதாரணியத்தில் அடைபட்டிருந்த திருக்கதவத்தைத் திறந்தருளும்படி சிவபிரானை வேண்டினது.—

"பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே."

(9) தாமிருக்கும் இடத்துக்கு வந்து யாம் இருக்கும் ஊர் திருவாய்மூர்; அங்கு வருதி எனச் சிவபிரான் சொல்லிப்போக, அவரைப் பின் தொடர்ந்து இவர் செல்ல சுவாமி ஒளித்துக்கொள்ள செந்தமிழ் அரசாம் திருஞான சம்பந்தரும் அங்கு வந்து சேர, "சுவாமியே, இனி நீர் ஒளித்துக்கொள்ளல் இயலாது; மறைக்கதவம் அடைப்பித்த மாட்சியாளராம் சம்பந்தர் வந்துள்ளார்" எனச்சொல்லி தரிசனம் பெற்றது.—

"எங்கே யென்னை யிருந்திடந் தேடிக்கொண்
டங்கே வந்தடை யாள மருளினார்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனா ரதென்கொலோ."
"திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி யடைப்பித்தா ருண்ணின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே."

(10) இவர் தூங்கும்போது சிவபிரான் வந்து "நம்மூர் புறம்பயம்" என்று சொல்லிப் போனது.—

"துஞ்சிடையே வந்து துடியுங் கொட்டத்
துண்ணென் றெழுந்திருந்தேன் சொல்லமாட்டேன்
புன்சடையின் மேலோர் புனலுஞ் சூடிப்
புறம்பயநம் மூரென்று போயினாரே."

* பண்மலிந்த மொழியவர் = திருஞான சம்பந்த சுவாமிகள்.

(11) நல்லூர்க் கடவுளைக் கனவின்கண் கண்டு தொழுதது.—

" நல்லூருறை நம்பனை நானொருகாற்
றுஞ்சிடைக்கண்டு கனவின் றலைத்
தொழு தேற்கவன்முன்
நெஞ்சிடை நின்றகலான் பல காலமு நின்றனனே."

(12) திருவடியைத் தம்மீது பொறித்து வைக்கும்படி திருச்சத்தி முத்தத்துக் கடவுளை வேண்டினா ரென்பது.—

" ** ** கூற்றங் குமைப்பதன்முன்
பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை * *
தேவா திருச்சத்தி முத்தத்துறையுஞ்
சிவக்கொழுந்தே."

(13) மேற்சொன்ன வேண்டுகோளுக்கிரங்கி நல்லூர்ப் பெருமான் திருவடி சூட்டினரென்பது.—

" நல்லருளாற் றிருவடியென் றலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே."

(14) திருவையாற்றிற் கயிலாய தரிசனம் பெற்று, கண்ட ஒவ்வொரு பொருளும் காதலன் காதலி சொரூபமாக இருப்பதாகவும், கண்டறியாத அரிய விஷயங்களைக் கண்டதாகவும் பாடினது.—

" ஐயா றடைகின்றபோது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங்
கண்டறியாதன கண்டேன். "

(15) திருக்கடந்தை என்கிற பெண்ணாகடத்தில் வீற்றிருக்கும் சிவபிரானைச் சூலக்குறியும் இடபக்குறியும் தம்மீது பொறித்து ஆட்கொள்ளுமாறு வேண்டி விண்ணப்பம் செய்தது.—

" பொன்னார் திருவடிக் கொன்றுண்டு
விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண்
டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூல
மென் மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுட் டூங்கானை
மாடச் சுடர்க் கொழுந்தே. "

" இடபம் பொறித்தென்னை யேன்று
கொள்ளாய் இருஞ்சோலை திங்கள்
தடவுங் கடந்தையுட் டூங்கானை
மாடத்தெந் தத்துவனே. "

(16) தாம் மூத்த வயதினா ரென்பது.—

" தளையவிழ் கோதை நல்லார்
தங்களோ டின்ப மெய்த
இளையனு மல்லே னெந்தாய்
என்செய்வான் தோன்றினேனே. "

(17) திருப்புகலூர் என்னும் க்ஷேத்திரத்திற் சிங்கரூபமாய்த் தோன்றின சிவபிரானது திருவடி நிழலைச் சேர்ந்தது.—

"சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே !!"

II. இவரது தேவாரத்திற் கூறப்பட்டுள்ள நாயன்மார், முநுவர், அரசர், முதலியோர்.—

இராவணன், அருச்சுனன், பகீரதன், தசரதர், ஸ்ரீராமர், கோச்செங்கணான், மாபலி, மார்க்கண்டர், அகத்தியர், சண்டேசுரநாயனார், கண்ணப்ப நாயனார், சாக்கிய நாயனார், கணம்புல்ல நாயனார், திருஞானசம்பந்த சுவாமிகள், அப்பூதியடிகள், தில்லைவாழந்தணர், அமர்நீதிநாயனார், நமிநந்தியடிகள், தருமி, மேலும், "பேய்த்தொழிலாட்டியைப் பெற்றுடையீர்" எனவருந் தேவாரத்தாற் காரைக்காலம்மையாரையும், "நரியைக் குதிரை செய்வானும்," "குடமுழ நந்தீசனை வாசகனுக் கொண்டார்," "வையைத் திருக்கொட்டி நின்றதோர் திறமுந் தோன்றும்," "குசையும் அங்கை

322



யிற் கோசமுங் கொண்டவவ் வசையின் மங்கல வாசகர் வாழ்த்தவே" எனவரும் தேவாரத்தால் மாணிக்கவாசகரையும் குறிப்பிட்டிருக்கின்றனரோ என்னும் ஐயமும் நிகழ்கின்றது.

### III. அப்பர் தேவாரத்தில் அருமையாகச் சொல்லப்பட்டுள்ள சில விஷயங்கள்.—

(1) மகாவிஷ்ணுவே சிவபெருமானுக்குத் தேவி என்பது.—

*"காவியங் கண்ணளாகிக் கடல்வண்ண னாகி நின்ற*
*தேவியைப்பாகம்வைத்தார் திருப்பயற் றூரனாரே."*
*"அரியலாற் றேவியில்லை ஐயனை யாறனார்க்கே."*
*"மறிகடல் வண்ணன் பாகா மாமறை யங்க மாறும்*
*அறிவனே யாலவாயி லப்பனே யருள்செ யாயே."*
*"நாரணனை யிடப்பாகத் தடைத்தார்போலும்."*

(2) கெடிலநதி தென்றிசைக் கங்கை என்பது.

"நங்கையைப் பாகமு நயப்பர் தென்றிசைக்
கெங்கைய தெனப்படுங் கெடில வாணரே"

### IV. இவரது தேவாரத்தில் விசேடித்துச் சொல்லப்பட்டுள்ள திருவிழா முதலியன.—

1. திருவாரூர்த் திருவாதிரைவிழா
2. திருவாரூர்த் தேர்
3. திருவிடைமருதூர்ப் பூசஸ்நாநம்
4. கடுவாய்க்கரைப்புத்தூர் பூசஸ்நாநம்.

### V. இவரது தேவாரத்திலுள்ள பழமொழி போன்ற வாக்கியங்கள்:—

1. தன்னை யடைந்தார் வினைதீர்ப்ப தன்றோ தலையா யவர்தங் கடனாவதுதான்.
2. கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வன் நானே.
3. முயல்விட்டுக் காக்கைப் பின் போன வாறே.
4. அறமிருக்க மறம் விலைக்குக் கொண்டவாறே.
5. பனிநீராற் பாவைசெயப் பாவித்தேனே.
6. ஏதன்போர்க் காதனாயகப்பட்டேனே.
7. இருட்டறையின் மலடு கறந் தெய்த்தவாறே.
8. விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்தவாறே.
9. பாழூரிற் * பயிக்கம் புக் கெய்த்தவாறே.
10. தவமிருக்க பவஞ்செய்து தருக்கினேனே.
11. கரும்பிருக்க இரும்பு கடித் தெய்த்தவாறே.
12. உற்றாருளரோ, உயிர் - கொண்டு போம் பொழுது குற்றாலத்துறை கூத்தனல்லானமக் குற்றாருளரோ.
13. பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை.
14. ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்.
15. கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது.
16. நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே.
17. வெந்தநீ றருங்கலம் விரதிகட்கெலாம்.
18. அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்.
19. அறுகயிறூசல்.
20. மன்றத்துப் புன்னைபோல மரம்படுதுயரம்.
21. நரிவரால் கவ்வச் சென்று நற்றசை யிழந்த தோற்றம்.
22. கழியிடைத் தோணி போன்றேன்.
23. உற்றலால் கயவர் தேறார்.
24. ஒருமுழம் உள்ள குட்டம் ஒன்பது துளை யுடைத்தா யரைமுழம் அதனகலம் அதனில்வாழ் முதலை ஐந்து.
25. காம்பின மூழைபோல.
26. மத்துறு தயிரேபோல.
27. என்னிலாரும் எனக்கினி யாரிலை.
28. நாலும்வேண்டுமோ நுண்ணுணர்ந்தோர்கட்கே.
29. ஓடு நீரினை ஓட்டைக் குடத்தட்டி
    மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே.
30. யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்
    மாதே வனலாற் றேவர்மற் றில்லையே.
31. கூவலாமை குரைகடலாமையைக்
    கூவலோ டொக்கு மோகட லென்றல் போல்.
32. நரிவிருத்தமதாகுவர் !
33. செத்தால் வந்துதவுவார் ஒருவரில்லை.
34. எங்கெழிலென் ஞாயிறு ? †

வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.

* பயிக்கம் = பிச்சை

† சூரியன் எந்தத் திசையில் உதித்தால் என்ன ?

# கம்பநாடர் சரித்திர விளக்கம்

## LIFE OF KAMBAN

கம்பநாடனுமை செவி சாற்றுபூங்
கொம்பநாடன் கொழுனனி ராமப்பேர்
பம்பநாடழைக்குங் கதை பாச்செய்த
கம்பநாடன் கழறலையிற் கொள்வாம்.

### 1. முகவுரை

இவர் ஓர் மகாகவி; கவி சக்கிரவர்த்தி என்று புகழ்ப்பெற்றவர். வேதத்தி னுட்பொருள்களாகிய தர்மங்களை அனுபவரூபமாய் எடுத்துக்காட்டியதும், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பயன்களைத் தழுவியுள்ளதும், வீரம் கருணை அற்புதம் சாந்தம் இன்ப முதலிய நவரஸங்களை யுடையதும்; சத்தியம்பொறை ஊக்கம் பத்திமை நேயம் ஆற்றல் முதலிய பல ஏற்றங்கள் அமைந்துள்ளதுமான, இதிஹாஸ ரத்னமாகிய ஸ்ரீமத் இராமாயணத்தைத் தமிழ்நாட்டவருக்கு இனிய செந்தமிழிலியற்றி உதவி புரிந்தவருமிவரே.

இவர் கவியைக்கண்டு மகிழாத தமிழ் மாந்தர் இம்மாநிலத்திலிரார் (கம்பநாடன் கவிதையிற் போற் கற்றோர்க்கிதயம் களியாதே) என்ற கவியினடி யாவர் மனதிற்றான் குடிகொண்டிராது. இதை அறியாதார், தமிழ்ச்சுவை யறியாதாரே யாம். சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை திருக்குறள் ஆகிய அற்புதமான பற்பல சங்க நூல்களாகிய அங்கலக்ஷணமுற்ற தமிழ்தெய்வத்தைப் பரவசமாகி ஈடுபட்டு (இன்பம்) புகழ் என்ற பரம நிலையைப் பெற்றவர் இப்புலவர் பெருமான் ஒருவரே.

ஆகையால் கல்வியிற் பெரியோன் கம்பன், என்னும் தமிழுலக முழுதையும் ஆண்டனுபவித்த திறத்தினாலேயே கவி சக்கிரவர்த்தியென்றும், சொன்னயம் பொருள் நயம் கற்பனாலங்காரம் ஓசையுடைமை ஆழமுடைமை முதலிய பல, அழகுகளமைந்து 'கம்பசித்ரம்' 'கம்பசூத்ரம்' இது என்ன கம்பராமாயணம், "கம்பர்வீட்டுளொரு சிறு புள் கட்டுத்தறியும் கவி பாடும்" என்று மிக்க அருமை மொழிகளால் பாராட்டப்படுவது மிவர் நூல் ஒன்றே.

இவரைப்பற்றி விநோதரஸமஞ்சரி, புலவர்புராணம், தமிழ் நாவலர் சரிதை, பாவலர்சாத்திரதீபம், சோழமண்டல சதகம், தொண்டைமண்டல சதகம், தனிச்செய்யுட் சிந்தாமணி, ஏரெழுபதும் அல்லாமல் பல சமயங்களில் பல வித்வான்களால் எழுதப்பட்டிருக்கிற அனேக புஸ்தகங்களினும் இவர் தேசம் வாசம் பேர் முதலியவைகளைப் பற்றி ஒன்றிலேனும் முற்றும் விவரிக்கப்படவில்லை.

கம்பன் பிறந்தவூர் காவேரி தங்குமூர்
கும்பமுனி சாபம் குலைந்தவூர்—செம்பதுமத்
தாதகத்து நான்முகனுந் தாதையுங்கா ணன்மறையை
ஓதுவித்த வாழு மழுந்தூர்.

என்ற கவியால் திருவழுந்தூரிலே பிறந்தார் என்றூர். சிலர் அதற்கடுத்த மூவலூர் மறையோன் மனையிற் பிறந்து திருவழுந்தூர் வந்து சேர்ந்தார் என்றூர்.

கன்னன் பிறப்பு பினுளிற்
றுலங்கிற்று கம்பன் பிறப்
பின்னந் தெரிந்தார்க ளிலையில்லை
முக்காலு மிதுமெய்மையே.

என்றது புலவர் புராணம். இவர் பேரினும் இப்படியே பெருஞ் சந்தேகம். (அதாவது)

சிலர், கம்பங்கொல்லை காத்ததனாற் கம்பன் என்றூர். (கம்பம்) தூண் எனும்படி இளம்பருவத்தில் மலைத்து நிற்கும் காரணத்தால் சிலர் கம்பன் என்றூர். சிலர், மனம் நிலைகொள்ளாது சலிக்கும் சுபாவத்தால் கம்பன் என்றூர்; (கம்பம்) (நடுக்கம் சலனம். சோழராஜன் முன் கொண்டுபோய் விடப்பட்ட போது ஒரு கொம்பு (கம்பும்) கையுமாய் நின்றதைக் கண்டு காலிங்கராயன் குதிரையைக் கொன்றதும் எழுப்பியது மிக்கம்பனு என அன்றுதொட்டுப் பெயர் வழங்கலான தென்றூர். கம்பத்தி னருகோர் சிசு கிடந்திட்டதாற், கம்பன் என்று இவ்வாறெல்லாங் கூறினூர்.

நமது நாட்டில் பூர்வம் இருந்த எந்த வித்வான்கள் பெயர்தான் உள்ளபடி வெளிப்பட்டிருக்கிறது! எல்லாம் குணம்,குறி, இடம், மரபு முதலிய காரணங்களைக்கொண்டு விளங்கி இருக்கின்றதை அன்றிவேறில்லை. வால்மீகி முனிவர் பேரும் இப்படித்தானே. வால்மீகம் புத்து அதினிடம் தோன்றியவர் என்பதுபோலும். வள்ளுவர் குலத்துற்ற திருவம் இவைபோல்வன சான்றாக எனேகம். அவை பின்வரும் கம்பநாட்டிற் பிறந்த காரணத்தாற் கம்பருக்கு இப்பெயர் வந்தது.

இவர்இயற்றிய இராமாயணத்தில் இவர் குமாரரும் பெரும்புலவருமான அம்பிகாபதி, என்பார் (கம்பநாடன் கழறலையிற் கொள்வாம்) என்றபடி இத்துடன் 6, தனியன் செய்யுட்கள் இப்பெயரே புனைந்து கிடக்கின்றது. வெள்ளிடை மலைபோல் விளங்கக் கண்டும் கொம்பைவிட்டு வாலைப் பிடிப்பார் போல் நாடன் பெயரை விட்டு கம்பர், என்னும் மொழியைத் தொட்டு பிஷ்ட பேஷணமாவை அரைக்கும் நியாயமாக அப்பெயரை துகைக்கிறார்கள்.

சிலர் இவருடைய முன்னோர் ஜன்மதேசம் கம்பநாடாக இருக்கலாம், என்று நுனி நாவினை விடறினர்கள். ஆனல் பெரும்பாலர் இவரை முதிர்ந்த வைஷ்ணவர் என்று சொல்லி குதுகலிக்கிறார்கள். ஆயினும்அது இராமாயணம்பாடி (கம்பநாட்டாழ்வான்கவி) என்று ஆசாரிய புருஷர்களாலும் பகவானுலும் கொண்டாடப் பெற்று ஆழ்வார்பட்டம் பெற்றது மலை மீதேற்றிய தீபம் போல் மானிலமுழுதும் இராமாயண ஒளி வீசிய பின்னரே என்பது யாவரும் ஒப்புக்கொண்ட விஷயமே. இராமாயணம் பாடிய புலவர்க்கெல்லாம் இப்பட்டம் சித்தம் என்பது பின்னரும் எடுத்துக் காட்டப்படும்.

அதற்கு முன்னிருந்த இவர் நிலைமைகளையும் பெயரையும் ஜாதியையும் தொழிலையும் உபாசனைக் கிரமங்களையும் பிள்ளைக் கிட்டிருக்கிற பெயரையும் வேறு செய்திருக்கும் நூல்களையும் பிரபல ராமாயணத்திலேயே எடுத்து ஆண்டிருக்கும் உள்நோக்குகளையும் நன்றாய் சமாதான புத்தியுடன் உய்த்துணரவல்லார்க்குக் கைத்துறு நெல்லியிற் காணல் ஆம் இவர் கொள்கை. ஆகையால் ஒவ்வொருவரும் முற்றும் துலக்காது தமக்கு வேண்டிய அளவே எடுத்து விளக்கிக் கொண்டனர்போலும்.

வடமொழியில் வால்மீகி முனிவர்போல் தென்மொழியிற் இவர் பாராட்டப் படுகிறாராதலின் இவருடைய சரித்திர முழுதும் விஸ்தாரமாய் தெரிந்துகொள்ள வேண்டிய ஆசை யாவருக்கும் மனத்தினளவாய் நெடுங்கால் நிரம்பிக் கிடந்தமையால், அதைக்கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு உள்ள நியாயங்களை விளக்கி பக்ஷபாதமின்றி ஆதியோடந்தமாய் ஒருவாறு வெளியிடப்பட்டிருக்கிறது.

## 2. இவர் பிறந்த நாடு!

மிக்க புண்யபூமியாகிய பரதகண்டத்தின் தென்பாகமாகிய தமிழ்நாட்டில் தொண்டை நன்னாடு சான்றோருடைத்து எனப் புகழ்பெற்ற தொண்டை நாட்டிலிவர் தோன்றினர். இந்நாட்டைத்தான் கம்ப நாடென்பர். இங்கு கோயில் கொண்டெழுந்தருளிய பெருமானைக் கம்பர் என்பர், இங்குள்ள புண்ய நதிகளிற் சிறந்தவொன்றைக் கம்பை என்பர். இதனை திருஞானசம்பந்த மூர்த்திகள்

காயவரன் மதன் பட்டதுங் கம்பமே
கண்ணுதற் பரமற்கிடங் கம்பமே. என்றும்

சுந்தரமூர்த்திகள் கண் பெற்றபோது

கால காலனைக் கம்ப னெம்மானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே என்றும்

சேக்கிழார் சுவாமிகள்

“குழ லிமையைக் கொம்பு கம்பர்
கொள்ளும் பூசனை குறித்த தானம்”
“கம்ப மேவிய தம் பெருமானை
கம்பர் காதலிதழுவ மெய் குழையக் கண்டு.”

என்று திருநெறித் தமிழாகிய தேவாரம் பெரிய புராணங்களில் கூறியுள்ள கம்பநாடாகிய காஞ்சிமாநகரில் முன்னவராகிய மறையவர் குலத்தில் ஆதிகாவியமாகிய ஸ்ரீமத் ராமாயணத்தை வடமொழியி லமைத்தபடி இனிய தென்மொழியிலு மளிக்கத் திருவுளங்கொண்டு அவ்வான்மீகி முனிவரோ இவ்வடிவம் கொண்டவதரித்தார்.

வடமொழியிலும் தென்மொழியிலும் இராமாயணத்தை ஒருங்குணர்ந்த அறிவுடையோர், இவரை அபர வால்மீகி என்பர். அதற்குக் காரணம் இவரியற்றிய இராமாயணத்தின் அருமைப் பாட்டுகளே என்பது பின் விளங்கும்.

### 3. இவர் காலம்.

சாலிவாகன சகம் 770-ம் ஆண்டுக்குமேல் இவர்காலம் என்று ஊகிக்கப்படுகிறது. இராமாயணம் அரங்கேற்றிய காலம் சாலிவாகனம் 807-ம் ஆண்டென்று ஸ்பஷ்டம். அதற்கு ஆண்டு 35-க்கு முன் இக்குழந்தை பிறந்த பின் சில ஆண்டு செல்லவே காலகெதியால் தாய் தந்தையரும் காலம் சென்றனர். ஆருமற்ற அகதியான அக்குழந்தை அவ்வூராரால் போஷிக்கப்பட்டு பரமனருளால் வளர்ந்து வந்தது.

### 4. பாலப் பருவம்.

அப்பொழுது சோழநாட்டில் திருவழுந்தூர் ஒச்சர்குலத்து ஆதித்தன் என்பான், தன்மனைவியோடு மக்கட்பேறு விரும்பி பலத்தலயாத்திரை செய்து கடைசியிற் காஞ்சியடைந்து கம்பமேவிய கடவுளைத் தொழுது கண்ணீர் பெருகக் கசிந்து உருகி 'காதலர் இல்லாக்குறையை நீக்கி யருளவேண்டும் கடவுளே' என்று அச்சந்நிதானத்திலேயேஅன்று முழுதும் (கம்பத்தடியிற்றவம்) ஆன * உபவாசமிருந்து வருந்தினர். அக்கடவுள் கிருபை கூர்ந்து நின்கவலை ஒழியும் என்று அசரீரிமுகத்தாற் கூறக்கேட்ட ஆதித்தன் வெகுசந்தோஷமடைந்து மறுபடியும் பிரதக்ஷணம் செய்து பணிந்து விழுந்து எழுந்து சந்நிதினின்று நீங்கி கோபுர வெளி மண்டபத்தில் வந்தான். ஒரு சிறு குழந்தை ஓடிவந்து அப்பாவென்று தன்னைக் கட்டிக்கொள்ள கண்ட ஆதித்தன், அபரிமித மகிழ்ச்சி யடைந்து இது என்ன ஆச்சர்யம்? யாவர் குழந்தையோ திசை தப்பி வந்து நம்மை தாய் தந்தையார் என்று தழுவிக்கொண்டது. யார் குழந்தையாயிருந்தால் தான் என்ன? 'மக்கள் மெய்தீண்டலுடற்கின்பம் மற்றவர் சொற்கேட்டலின்பஞ்செவிக்கு' என்றுஎடுத்து அணைத்து பிறர் குழந்தையாவது, நம்மை அப்பாவென்றழைக்கப் பெற்றோமே இதுவே பாக்கியம், ஈசுவரன் நமக்கும் கடாக்ஷம் செய்வார், என்று கட்டி முத்தமிட்டு குழந்தாய் நீ! யாவன்? என்றான், அதற்கு அது 'நான் இந்தவூர். எனக்கு அம்மாவுமில்லை. அப்பாவுமில்லை. சாதம் போட ஒருவருமில்லை' என்றது. இதனைக் கேட்டவர்கள் முன்னிலும் அதிக மகிழ்ச்சியும் பரிவு மடைந்து ஈசர் திருவருளே இவ்வடிவாய் வந்ததுபோலும் என்று திகைத்து நின்றார்கள். பின்பு தேறி, அப்பா குழந்தாய், நீ ஒன்றுக்கும் அஞ்சாதே உனக்கு என்ன குறைவு, இனி ஒன்றுமில்லை. நாங்கள்தான் உன் தாயும் தந்தையும் என்று தேற்றி, அக்குழந்தையின் மலர்ந்த கண்களையும், அழகிய முகத்தையும் சிறந்த தோற்றத்தையும், இனிய மழலைச் சொல்லையும், பழுதற்ற அவயவங்களையும், பார்த்துப் பார்த்து ஆனந்தித்து மனையாட்டியை நோக்கி இந்தா! உன் மலட்டுக்குறை தீர்த்த மாநிதியம் என்றளிக்க, அவளுமப்படியே புதையல் எடுத்தனம் போலும்குருடனடைந்த கண்போலும் மகிழ்ந்து 'கச்சி கம்பர் தந்த கட்டி திரவியமே' என அணைத்து முத்தமிடவே, மனமுருகிப் பால் சுரத்தல், புளகமுறுதல், கண்ணீர் வரல் முதலிய செயல் கண்டு

> கொம்பொத்தவவள் மார்பிலமுதூற
> னமுதலாயகுண மெய்தலால்
> நம்பத்தி கண்டீசனருள் செல்வ
> மீதுவென்ன நனியெண்ணினர்.

என்றபடி ஆனந்தித்து அக்குழந்தைக்காகவே சிலநாளங்கிருந்து மூவரும் நாள்தோறும் ஆலயம் போய் கடவுளைப் பணிந்து முக்காலும் தொழுது சிலநாள் கழித்துப் புதல்வனுடன் தம் வாசஸ்தலமாகிய திருவழுந்தூரை யடைந்தார்கள்.

வஸிஷ்ட பாரதி.

---

* இது காஞ்சியிலுள்ள ஆறு அற்புதங்களில் ஒன்று இதனைக் காளமேகர்

> அப்பா குமரகோட்ட கீரை செவ்விலிமேட்
> டுப்பாகற் காய்ப்பருத்திக் குளநீர் செப்புவர்
> சற்காற்று கம்பத்தடியிற்றவங் கருமா
> றிப்பாச்சல் யார்க்கு மினிது.

என்று கூறியிருக்கிறார்.

# √ ஆத்திசூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

### 10. ஒப்புர ஒழுகு

தகுந்தபடி நட என்பது இதன் பதப்பொருளாயிற்று. எதற்குத் தகுந்தபடி என்ற கேள்வி பிறக்கும். உலகம் அதாவது உலகில் பெரியோர் நடந்துகொண் டிருப்பதற்குத் தக்கபடி என்பதே இதற்குத் தகுந்த விடை. பெரியோர்கள் நடத்தையையும், அவர்கள் எந்த மனோபாவத்துடன் எந்த ஒழுங்கைப் பின்பற்றி நடந்தார்கள் என்பதையும் நன்கு உணர்ந்து அவர்கள் நடத்தைப்படி நாமும் நடப்பதற்கு, போதுமான சாஸ்திரக்ஞானம் வேண்டும். ஆனல் சாஸ்திரத்தைக்கொண்டு மாத்திரம் நடத்தையை முற்றிலும் ஒழுங்குப்படுத்திவிட முடியாது. கொக்கு ரூபமான யக்ஷன் விஷக் குளக்கரையில் தர்மபுத்திரரைக் கேட்ட அற்புதக் கேள்விகளுள் 'எது மோக்ஷபந்தா' என்பது ஒன்று. அதற்கு அவர், 'வேதங்கள் பலவாருக இருக்கின்றன. தர்க்கத்தால் பயனில்லை. ரிஷிகளது அபிப்பிராயங்களோ பேதப்பட்டிருக்கின்றன. மதவிஷய உண்மைகளோ மிக ரஹஸ்யமாக விருக்கின்றன. ஆகையால் பெரியோர் நடத்தையே மோக்ஷபந்தா' என்று மறுமொழி கூறியிருக்கிருர். ஆதலால் எவ்வளவு கற்றும், குழப்பமான நிலைகளும் ஸந்தர்ப்பங்களும் வந்துவிட்டால் இவ்வளவும் குழப்பத்தை அதிகப்படுத்தி நாம் சரியான வழியில் தொழில்பட்டு வெளியேற வொட்டாது அவைகளுக்கு ஆளாகித் தத்தளித்து அதோகதியை அடையும்படி செய்துவிடும். இந்த ஸமயங்களில் நமக்குத் தெரிந்த பெரியோர்கள் சாஸ்திர உண்மைகளுக்கு விரோதமின்றி இவ்வாறு நடந்துகொண்டிருக்கின்றனர் என்பதை நன்கு உணர்ந்து நடக்கவேண்டுமே ஒழிய நமக்குத் தெரிந்தவரையில் சாஸ்திர உண்மைப்படி கொக்கு மூக்கு நேரே வழி என்று பிடிவாதமாக நடந்துவிட்டால் மஹாபாபம் அபாயம் முதலியன வந்துவிடும். ஆகவே எவ்வளவு கற்றுத் தேர்ந்தவராயினும் நமக்கு ஒழுக்க விஷயத்தில் ஸந்தேஹம் வருங்கால், அதேமாதிரியான ஸந்தர்ப்பங்களில் பெரியோர் எவ்வாறு நடந்திருக்கின்றனர் என்பதை நாம் உணர்ந்து நடக்கவேண்டும் என்பதே இந்நீதி வாக்யத்தின் பொருள். உலகத்தோ டொத்துவாழ் என்பதற்கும், ஊருடன் கூடிவாழ் என்பதற்கும் இம்மாதிரி பொருளுரைக்கினும் பொருந்தும்.

இந்நீதி வாக்யத்திற்கும் எல்லையுண்டு. அதற்கு அப்பால் இதை உபயோகப்படுத்தினல் இதனல் அனர்த்தம் விளையும். இந்த எல்லையை முன் எழுதிய விரிவுரையில் **ஒழுக்க விஷயத்தில் ஸந்தேஹம் வருங்கால்** என்ற தொடர்மொழியால் குறிக்கப்பட்டிருக்கிறது. ஸந்தேஹ மில்லா விடங்களில் சாஸ்திரப்படி நடக்க வேண்டுமே ஒழிய பெரியோர் மாருன நடத்தைகளைக் கைக்கொள்ளவே கூடாது. மரணம் உலகில் ஸஹஜம். நமது தாய் முதலியோர் இறந்தால் நாம் அழுவது நமது மன இழிவைக் காட்டும் என்பது சாஸ்திரங்கள் துணிபு. நமது தாய் முதலிய நெருங்கிய உறவினர் இறக்கும்படி நேரிடுங்கால் 'ஒப்புர வொழுகு' என்று ஔவை கூறியிருக்கிருள். பட்டினத்துப் பிள்ளையாகிய மஹான்கூட தாய்க்கு அழுதிருக்கிருர். ஆகையால் நாமும் அழுது ஆர்ப்பாடம் பண்ண வேண்டும் என்று அழப்புகுதல் இந்நீதி வாக்யத்தை எல்லை கடந்து பொருத்துவதே. இம்மாதிரி கூறுவதால், பெரியோர்கள் ஏமாந்து சாஸ்திர விருத்தமாக நடந்த நடத்தைகளை உலகறிய வெளிப்படுத்தி அவர்களுக்கு ஒரு இழுக்கு உண்டாகும்படி செய்த பாபம் நமக்கு வருமே ஒழிய, ஒப்புரவொழுகியதால் ஏற்படக்கூடிய புண்யம் வாராது. ஸ்ரீமத் சங்கராசார்யர் ஒரு ஸமயத்தில் கள்ளுண்டார், ஸ்ரீ கிருஷ்ணபகவான் கோபஸ்திரீகள் அநேகரோடு உல்லாஸமாக விருந்தார், நாமும் அவ்வாறே இருப்போம் என்று கூறுவது இந்நீதி வாக்யத்திற்கு முற்றும் விரோதமே.



ஏழாவது எட்வர்டு சக்கரவர்த்தியவர்களின் மகுடாபிஷேக வைபவம்
1902ஞு ஆகஸ்டுமீ 9உ

ஆகவே ஒப்புறவொழுகுங்கால் 'பெரியோர் வாக்கின்படி நடக்கவேண்டுமே ஒழிய அவர்கள் செயல்களை முற்றிலும் பின்பற்றலாகாது' என்பதையும் கருதிச் சீர்தூக்கி நடத்தல் வேண்டும். அவர்கள் செயல்களின் ரஹஸ்யங்களை உணராது நாம் ஸந்தேஹமில்லாத காலங்களில் நடத்தினால் அதோகதியை அடைவோமே ஒழிய சீர் திருந்தோம்.

உண்மையை உரைக்கவேண்டும் என்று வேதங்கள் சாஸ்திரங்கள் 'எல்லாம் முறையிடுகின்றன. ஹரிச்சந்திரன் உண்மைக்காகவே படாதபாடெல்லாம் பட்டு முடிவில் உண்மையில் நிலை பெற்றான். இந்த ஒழுங்கை ஸரிவர நடத்த, பெரியோர் ஒழுக்கத்திற்கு ஏற்ப பிறருக்குக் கெடுதி செய்வதாயும் தனக்கு யாதொரு மேன்மையையும் தாராததாயும், பொது நியாயங்களுக்கு விரோதமாயும் உள்ள உண்மையைக் கூறலாகாது. இச்சமயங்களில் பொய் சொல்ல வேண்டிவரினும் அதுவே உண்மையாகும். உண்மையை உரைப்பது பொய்யின் பாவத்தை விளைக்கும் என்ற ரஹஸ்யம் வெளியாகும்.இதைக் கவனியாது ஒழுகி ஒருவன் அதோகதியடைந்தான் என்பதைப் பின்வருமாறு பாரதம் கர்ணபர்வத்தில் விளக்கியிருக்கிறது.

ஒரு மலைச்சாரலில் ஒரு கிராமம் இருந்தது. அங்கு கௌசிகன் என்ற ப்ரஹ்மசாரி மஹாஸத்யஸந்தனாக விருந்தான். இவன் சிறப்பு உலகெங்கும் பரவியது. இவனைக் கிராமத்தார் எல்லோரும் மிகுந்த அன்புடன் ஆதரித்து இவன் ஆச்ரம தர்மங்களுக்கு பங்கம்வராது நடத்திவந்தனர். அவ்வூருக்குச் சில திருடர்கள் வருவதாக ஒருநாள் ஸங்கதி தெரிய எல்லோரும் தமது பொருள்களை மறைவாக அடக்கம் செய்துவிட்டு மலைக்குஹைகளில் நன்றாக ஒளித்துக்கொண்டு விட்டனர். குறிப்பிட்ட இரவில் திருடர்கள் வந்து சேர்ந்தனர். ஊரில் ஒருவரையும் காணேம். எங்கும் சுற்றிப் பார்த்தனர். ஒரு வீட்டுத் திண்ணையில் கௌசிகன் விழுந்து கிடந்ததைக் கண்டார்கள். அவனிடம் என்ன இருக்கிறது. அதனல் தான் ஓடி ஒளியாமலிருந்தான்: மடியில் கனமிருந்தாலல்லவோ வழியில் பயம் உண்டு. இவன் ஸத்யவாக் விஷயம் திருடர்களுக்கும் தெரிந்திருந்தபடியால், இவனைத்தட்டி எழுப்பி இவ்வூரார் எங்கே என்று கேட்டனர். அவன் முன்பின் யோசியாது அவர்கள் ஒளிந்திருந்த விடத்தைச் சொல்லிவிட்டான். திருடர்கள் வந்து நம்மைக் கேட்டால் என்ன சொல்வது என்று பொய் சொல்ல அஞ்சி இவனும் ஓடிப்போயிருக்கவேண்டும். அவ்வாறின்றி இருந்து விட்டபடியால் தனக்குத் தெரியாதென்று பொய் கூறியிருக்கவேண்டும். அல்லது மஹா தீரனாக விருந்து தேஹதுக்கத்தை லக்ஷ்யம் செய்யாது 'எனக்குத் தெரியும் உங்களுக்குச் சொல்லமாட்டேன்' என்றாவது கூற வேண்டும். ஒன்றும் இன்றி 'நாம் உண்மை கூறுவது பயத்தால் உண்டாவது. இதனல் நமது வ்ருதம் அதிகமாக? உயராது. நாம் உண்மை உரைத்தால் பொதுவாகத் திருடர்கள் அந்யாய லாபம் பெற்ற நல்லவர்களான ஊரார்கள் கேட்டிற்கு உள்ளாகின்றனர். ஆதலால் பொய்யைக் கூறி விடவேண்டும்' என்று கருதாது திடீரென்று உண்மையைக் கூறிவிட்டதே இவனுக்குப் பெரும் பாபத்தைக் கொண்டுவந்து விட்டது. இவன் நரகில் துக்கம் அநுபவித்தானும். ஒப்புறவொழுகி இருந்தால் இவனும் வேறு எங்கேயாவது ஓடி இருக்கவேண்டும். முதல் கோணல் முற்றுங்கோணல் என்றபடி முதலிலே பெரியோர் நடத்தைப்படி நடவாததால் பின்னர் சாஸ்திர ஒழுங்குப்படி நடந்தால் பெரும் பாபமும், நடவாவிடில் பொய்கூறிய பாபமும், இரண்டு மின்றி நேர்மையாக நடந்தால் கொடிய கஷ்டமும் உண்டாக்கக்கூடிய தர்மஸங்கடத்தில் வந்து மாட்டிக்கொண்டு, பயங்குள்ளி போல நடந்து பெருங் கேட்டை வாரிக் கட்டிக் கொண்டான் கௌசிகன். ஆகவே பெரியோரைப் பின் பற்றுங்கால் முதலிலேயே விட்டு விலக வேண்டிய விஷயங்கள் நம்மைச் சூழும்படி இடங் கொடுத்துவிட்டுப் பின்னர் ஒப்புற வொழுகுவது அஸாத்ய மாகிவிடும் என்பது இக்கௌசிகன் கதையால் நன்குவிளங்கும்.

## சில அற்ப ஜீவராசிகள்*

### SOME LOWER FORMS OF LIFE.

"கண் கண்டதுதான் காட்சி," என்பதற்கு ஏற்ப இருகண்ணுக்குச்சாதாரணமாய்ப்புலப்பட்டது தான் பொருள்களென்றும், அவ்வாறு புலப்படா நிற்கும் மற்ற வஸ்துக்கள் இருக்கக்கூடுமென்ற நம்பிக்கைகூட சில வருஷங்களுக்குமுன் நமக்குக்கிடையாது. "மைகிராஸ்கோப்" என்கிற பூதக்கண்ணுடியின் உபயோகத்தைக் கண்டறிந்து வெளியிட்ட பின்னர்தான், கண்ணுக்குச் சாதாரணமாய்ப் புலப்படாத நுண்ணிய பொருள்களின் தோற்றங்கள் எவ்வாறிருக்கின்றனவென்றறியவிடமுண்டாயிற்று. அணுவிலோர்அணுவாயிருக்கப்பட்ட லோகப் பொருள்களும், ஜீவப் பொருள்களும் இருக்கின்ற வைபவம் இன்னதென்று அப்போதுதான் தெரியலாயிற்று. அக் கண்ணுடியின் உபயோகத்தினல் தெரிந்துகொண்ட விஷயங்களின் மேம்பாடுபற்றி இதுவரையில் அந்தகாரத்தில் மூடப்பட்டிருந்த லோகத்தின் விசித்திரங்களை நமது நுண்ணிய அறிவுக்கு எளிதில் புலப்படும்படியாக ஏற்பட்ட ஒரு விசித்திர தீபம் என்றே கொள்ளலாம். இவ்வாறு பூதக்கண்ணுடியின் உதவியால் நாம் யறியப்பெற்ற சில அற்ப ஜீவராசிகளின் குணங்களைப்பற்றி இங்கு விவரிப்போம்.

சென்ற வருஷம் ஜூன்மீ த்துச் சஞ்சிகையில் பிராணிகளின் முக்கிய குணநிசயங்களை விவரித்தோம். அதில் எடுத்துக் காட்டப்பட்ட அமீபா என்ற ஒரு அற்ப ஜீவராசி ஒன்றை,500-மடங்கு பெருக்கிக் காட்டக்கூடிய பூதக் கண்ணுடியின் உதவியின்றி நாம் காணமுடியாதென்றும், நமது ஏரி குளங்களில் பாசத்தோடுகூட வசிப்பதையும், அவைகளின் உயிர் வாழ்க்கை எப்பேற்பட்டதென்பதையும் சற்று விபரமாய்க் கூறினேம். அமீபாவானது, நோங்குபோல வெளுத்த பசைப்பற்றேடு கூடிய தேக அமைப்பின் விசேஷத்தால், தன்னிலும் எளிய அற்ப ஜீவராசிகளைத் தேகத்தில் அணைத்து ஒட்டி அவ்வாறு விழுங்கித் தனது தேகத்தோடு தேகமாக அதனை ஜீரணம் செய்துகொள்ளக்கூடிய சக்தியைப் பெற்றிருக்கிறது. இவ்வாறு உயிர் வளர்த்து, தேகம் பருத்து, மக்கட்பேறு உண்டாக்கும் பருவம் வருங்கால், தானே இரண்டாகப் பிரிந்து, தன் குஞ்சுகளாகின்றது. அமீபா இனத்திலோ ஆண் பெண் என்ற வித்தியாச வீவகாரங்கள் கிடையாது. வித்தியாசமற்ற பிரம்மஸ்வரூபமென்றே சொல்லலாம். அமீபாவுக்குக் காலுமில்லை கையுமில்லை, வாயுமில்லை வயிறுமில்லை. ஆனபோதிலும் தேகத்தில் எந்தப்பாகமும் எந்தத்தொழிலையும் செய்யவல்ல சக்தியை பெற்றிருக்கிறது.

இதுவரையில் அமீபாவில் நாம் கண்டறிந்த அவ்வளவு அற்புதச்செய்கைகளையும் நம் இரத்தத்தில் நீந்தி விளையாடும்படியான சுத்த ஸ்படிக நிறத்தோடு காணப்படும் வெள்ளைச்செதில்களில்* நாம் காணலாம். நம் தேகத்தில் அசைவின்றிக் கட்டுண்டு கிடக்கும் மற்றைச்செதில்களாகிய மாமிசம், தோல், நரம்பு, இவைகளைப்போலிராமல் தன்னிச்சையாய்த் தனித்துத் திரியக்கூடிய சக்தியைப்பெற்று, இவ்வெள்ளைச் செதில்கள், நம் இரத்தத்துக்குள் புகுந்து, தங்கள் வாழ்நாளைக் கழிக்க வந்த இதர ஜீவன்களைப்போல் காணும். ஆனல் தேகசாஸ்திரம் உணர்ந்தோர் நமது தேகத்தைப் பீடிக்கப் புகும்படியான அநேக அற்பஜீவராசிகளை உயிர் தொலைக்க, நமது தேகமாகிய கோட்டையைக் காத்து இரட்சிக்கும்படி ஏற்படுத்தப்பட்ட இராணுவ வீரர்கள் இவ்வெள்ளைச் செதில்களே எனக் கூறியிருக்கின்றனர்.

நமது இரத்தத்தில் காணப்படும் வெள்ளைச் செதில்கள் அமீபாவினும் நுண்ணிய தேகவமைப்புடையன வென்றுலவகைகள் எதிர்த்துச் சண்டையிட்டுக் கொன்று ஜீரணித்துக் கொள்ளக்கூடிய அவைகளினும் கேவல ஜீவராசிகள் உண்டா

* மதுரை உபாத்திமைச் சங்கத்தில் பிரசங்கித்தது.

* செதில்களைக் கண்ணறைகள் என்றும் சொல்வார்கள்.

என்று ஐயம்கொள்ள சற்று இடமுண்டாகிறது. அப்பேர்க்கொத்த ஜீவராசிகளும் இருக்கின்றன. அவைகளின் இருப்பும் செய்கைகளும் பூதக்கண்ணுடியின் உதவியாலின்றி ஒருகாலும் நாம் அறியக்கூடியதன்று. பதார்த்தங்கள் புளித்தல், பண்டங்கள் அழுகுதல், இவைகளின் காரணங்களைச் சற்று நோக்குங்கால் அற்ப ஜீவராசிகளின் குணநிசயங்கள் நன்றாகவிளங்கும். புளித்தலுக்ும் அழுகுதலுக்கும் காரண பூதங்களாக நிற்பன மிகவும் நுண்ணிய தேக அமைப்போடு காணக்கூடிய (Yeast) ஈஸ்டு (Bacteria) பாக்டீரியா, என்று சொல்லப்படும் ஜீவராசிகளே. இவைகள் சில நிமிஷங்களுக்குள்ளே பிறந்து வளர்ந்துமக்கட்பேறு உண்டாக்கும் திறமைபெற்றிருக்கின்றன. ஒன்று லக்ஷக்கணக்காகப் பெருகக்கூடிய இயல்பையும் அடைந்திருக்கின்றன. ஆகவே இவைகளோ, இவைகளின் முட்டைகளோ நம்மைச் சுற்றிலும் இருக்கிற காற்றிலும், ஜலத்திலும், வஸ்துக்கள் ஒவ்வொன்றிலும் நிறைந்துள்ளன. இவைகளில் அநேக ஜாதிப் பிரிவினைகள் உண்டு. இவைகளெல்லாம் நமக்குக் கொடுமை செய்ய ஆரம்பிக்குமாயின் ஒரு ஜீவராசியும் உலகத்தில் உயிர்வாழ இடமில்லை. ஆனால் அவைகளுக்கு ஏற்பட்ட காரியங்கள் உலகத்தில் காணும் பதார்த்தங்களைக் கூடிய சீக்கிரத்தில் அவைகளின் பிரதம சேர்க்கைப் பதார்த்தங்களாக வாக்குவதுதான். உதிர்ந்த இலைகளோ, இறந்த பிராணிகளோ, இஜ்ஜீவராசிகளின் வேலைகளால்தான் மண்ணோடு மண்ணாய்ப் போகும்படியாகச் செய்யப்படுகின்றன. அதனாலேயே பூமிக்கு உரம் ஏற்படுகிறது. இவைகளின் செய்கையே மலைகளிற் காணக்கூடிய பெரும்பாறைகள் பலம் குன்றிப் பொறியுண்டை மாதிரி எளிதில் உதிர்ந்து பொடியாகும்படியான நிலைமைக்கு வந்து விடுவதற்குக் காரணம் என்றும் சொல்லுகிறார்கள்.

இவ்வளவு லோகோத்தமமான காரியங்களில் இராமல் மனிதருக்கு ஹிம்ஸை உண்டுபண்ணக்கூடிய சில அற்ப ஜீவராசிகள் இருக்கின்றன. அவைகள்தாம் அநேக வியாதிகளுக்குக் காரண பூதமென்று சொல்லப்படும் **முளைக்கிருமிகள்.**

வியாதிகளுக்குக் காரணம் ஆராய்ச்சி செய்யுங்கால் வைத்திய சாஸ்திரிகள் பூதக்கண்ணுடியின் உதவியைக் கொண்டு அநேக நுட்பமான காரண விவகாரங்களைக் கண்டறிந்திருக்கிறார்கள். அநேக வியாதிகளின் மூலகாரணம் இம் முளைக்கிருமிதான் என்று அப்பொழுது அறியலாயிற்று. முளைக்கிருமிகளும் அநேக வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சில ஜுர முளைக்கிருமிகள் மேலேரியா (Malaria) டைபாயிட், (Typhoid) புதிதாகக் கண்டறிந்த பிளாக் டவுன் பீவர் (Black Town Fever) என்று சொல்லப்படும். காலஹஜார் (Kalahazar) என்ற ஜுரமும் முளைக்கிருமிகளின் விளையாட்டினால் ஏற்பட்ட விபரீதமான விஷ ஜுரங்களாம். அம்மை, காலரா (Cholera) என்ற வாந்திபேதி, இரத்த காசம் முதலிய க்ஷய ரோகங்களும் முளைக்கிருமிகளின் செய்கைகளால் ஏற்பட்ட வியாதிகள் என்று சொல்லுகிறார்கள். சொறி சிரங்கு, தேமல், படை, குஷ்டம் முதலிய தோலைப்பற்றிய வியாதிகளும் அற்ப ஜீவராசிகளாகிய முளைக்கிருமிகள் நமது தேகத்தில் உண்டாக்கக்கூடிய அற்புதங்களாம். ஆகவே வியாதிகளின் மூலகாரணத்தை இன்னதென்று தெரிந்த பிறகாகிலும் முளைக்கிருமிகளை நமது தேகத்தில் அணுகவொட்டாதபடி கூடியவரையில் நாம் ஜாக்கிரதையுடனிருக்க வேண்டும். வியாதிக்கு ஆதாரமாக இருக்கக்கூடிய முளைக்கிருமிகள் அநேகமாயெங்கும் இருக்கின்றன. ஆனால் அவைகள் இடமறிந்துதான் சேரும்

தேகத்தின்அசுத்தத்தையோ,துர்ப்பலத்தையோ, துர்நடத்தைகளையோ, இவைகளையே பெரும் பாலும் தழுவி நிற்கும். உட்புகுந்த முளைக்கிருமி கள் உஜ்ஜீவிக்கும் பொருட்டு உறைவிடம் தேடு கின்றன. அப்பொழுதுதான் அவை நமது இரத்தத்தில் தயாராயிருக்கும் படைவீரர்களா கிய வெள்ளைச் செதில்களால் கண்டு பிடிக்கப் பட்டு உயிர் தொலைக்கப்படுகின்றன. இரத்தத்தி னுடைய வலிமை குறைந்திருப்பவர்களுடைய தேகத்தில் பிரவேசித்த முளைக்கிருமிகளோ தங்குதடையின்றித் தாங்கள் போய்ச் சேரவேண் டிய அங்க அவயவங்களைப் பீடித்துப் பிராண ஹானியையும் எளிதில் கொண்டுவந்து விடு கின்றன.

ஆகையால் முளைக்கிருமிகளின் பாதையின்றி நாம் உயிர் வாழவேண்டுமானல் சுகாதார விதி களில் முக்கியமானவைகளான, தேகசுத்தம், இரத்தசுத்தம், சுத்தமான காற்று, ஜலம், ஆகா ரம், உடை இவைபோன்றவைகளை முக்கியமாகக் கவனித்தல் அவசியம். அப்படிக் கவனித்து நமது தேகத்தைப் பக்குவமான நிலைமையில் வைத்திருக்கும் பட்சத்தில், கல்பம் சாப்பிட்ட பைராகியைக் கடித்த விஷப்பாம்பானது தானே இறப்பதுபோல, நம்மையடைந்த முளைக்கிருமி களும் அவ்வாறே உயிர் துறக்கப் பெறுமேயன்றி நம்மை யொருகாலும் பீடிக்கமாட்டாது என் பது நிச்சயம்.

N. S. ஐம்புநாதய்யர் B. A., L. T., F. Z. S.

கடவுளைக் காதலிக்கும் அன்பன்.—எச்சிற்றே னைச் சொறியச் சொறிய நமைச்சல் அதிகமாகி மீண்டும் சொறிவதால் அதிக ஆநந்தம் உண்டாவது போல், மெய்யன்பர்கள் எம்பெருமான் பெருமைகளை ஒருமுறை பாடத் தொடங்கிவிட்டால் பின்னர் எப்போதும் அலுப்பு சலிப்பின்றி, அதேரீதியாய் எத்தனை நாழிகை யானாலும் பாடிக்கொண்டே யிருப் பார்கள்.

## வசனம் எழுதல்
### PROSE WRITING

நாங்கள் கல்லூரி மாணாக்கர்களாக இருந்த காலத்தில் பரீக்ஷையில் வினாக்கள் பத்திரிகையில் உபாத்யாயர்கள் "வியாஸம் எழுதுக" என் றுரைக்க அறியார்கள். "இதைப்பற்றி ஒரு உபந்யாஸம் எழுதுக;" "இதைப்பற்றி இரண்டு பக்கம் எழுதுக" என்பர். அல்லது இங்கிலீ ஷில் அந்தப் பாகத்தை எவரைக்கொண்டாகிலும் எழுதுவித்துக் கொள்வர். ஸுமார் இருபது வருஷகாலமாக "இதைப்பற்றி வியாஸம் எழு துக" என்பது வழங்கி வருகின்றது. சிலர் "கட்டுரை எழுதுக" "உரை நடை எழுதுக" என்று இன்னும் வழங்கி வருகின்றனர். வியா ஸம் என்கிற வார்த்தை இப்பொழுது வழக்காற் றில் வந்துவிட்டது.

வியாஸம் என்கிற வார்த்தைக்குப் "பகுத் தறிவு," "விரிவு" முதலான பொருள்களை அக ராதியில் காணலாம். சிதைந்து கிடப்பவைகளை வகைபடக்கோத்தல் என்னும் பொருளில் இந்த வார்த்தை ஸமஸ்கிருதத்தில் வழங்கி வருவது பிரஸித்தம். சிதைந்து கிடந்த வேதப்பாசுரங் களை வகைபடுத்திக் கோவை செய்ததனல் பரா சரர் புத்ரருக்கு வியாஸர் என்கிற பெயர் உண்டா யிற்று. இங்கிலீஷில் எஸ்ஸே என்கிற வார்த் தைக்கு "முயற்சி", "பரிசோதனை" என்பது சப்தார்த்தம். நூல் வழக்கில் ஒரு விஷயத் தைப்பற்றிப் பரிசோதனை செய்து எழுதியது என்கிற பொருளில் அது வழங்கி வருகின்றது. வியாஸம் என்கிற சொல், இப்பொழுது, ஒரு பொருளையாவது விஷயத்தையாவது பரிசோதனை செய்து விரித்துரைத்தது என்னும் பொருளில் வழங்கி வருகின்றது. மிகவும் விரிவான நூலா யின் பொருளை அல்லது விஷயத்தை நூலுக்குப் பெயராக இட்டுக்கொள்வர். ஸாதாரணமாய் வியா ஸம் என்பது விரிந்த நூல் ஆவதில்லை: சுருக்க மாகவே இருக்கும்.

வியாஸங்களில் மூன்று கூறுகள் உண்டு. முதலாவது பாயிரம். இது பிரவேசமென்றும் வாலாறென்றும் வழங்கப்பெறும். வியாஸத்துக்குரிய பொருளின் சிறப்பு அல்லது விஷயத்தின் சிறப்பு வியாஸத்தை எழுதலுற்ற காரணம் முதலிய வற்றை எடுத்துக்கூறுவதே பாயிரமாகும். இரண்டாவது எடுத்துக்கொண்டபொருளின் ஆராய்ச்சி. இது அப்பொருளின் பல முக்கியாம்சங்களை முறைபட வகுத்து ஆராய்ந்துரைப்பதாகும். மூன்றாவது முடிவுரை, அதாவது, எடுத்துக்கொண்ட விஷயத்தை ஆராய்ச்சி செய்து பெறுதலான முடிவை எடுத்துரைப்பது. விவாத விஷயங்களைப் பற்றிய வியாஸங்களில் முடிவுரை சித்தாந்தம் எனப் பெறும்.

பெரும்பான்மையாய்ப் பாயிரமும் முடிவுரையும் ஒவ்வொரு பந்தியாக இருக்கும். ஆராய்ச்சியாகிய பாகம் ஆராய்ச்சி செய்யும் அம்சங்களுக்கேற்றவாறு சில பஸ்திகளாகவும், பல பஸ்திகளாகவும் அமையும். அந்த அம்சங்களின் முறையை ஒட்டி இந்தப்பஸ்திகள் ஒன்றோடொன்று தொடர்புடையனவாய் நிற்கும். ஒவ்வொரு பத்தியும் ஒவ்வோரம்சத்தைப் பற்றியதாகும். ஒவ்வொரு பந்தியும் சிலவும் பலவுமான வாக்கியங்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு வாக்கியத்திலும் முடிவான ஒவ்வொரு கருத்து அடங்கியிருக்கும். வாக்கியங்கள் ஒன்றோடொன்று தொடர்புடையனவாய்ப் பந்தியின் அங்கங்களாக அமைத்திருப்பது மரபு.

பந்திகளைத் தொடர்பு படுத்திக் காட்டுவதில், "இனி," "இது இப்படியிருக்க," "அநந்தரம்," "இன்னது உரைத்தோம் இன்னது உரைக்கப் புகுவோம்," என்றாற் போன்ற சொற்களும், தொடர்களும் உதவியாகும். அங்ஙனமே, "அதன்மேல்," "அப்பால்," "அப்புறம்," "ஆகையால்," 'ஆகவே," "ஏனெனின்," "அதனால்," "ஆனால்;" 'ஆயினும்," "எனினும்," "என்றாலும்," என்றாற்போல்வன வாக்கியதொடர்பை விளக்குவதில் ஏற்ற பெற்றி உதவியாகும்.

இந்தப்பிரகாரமாக வியாஸம் எழுதுகின்ற வித்தை யூரோப்பில் மாதாந்தர பத்திரிகைகளால் விர்த்தியாகி முற்றுப்பெற்றிருக்கிறது. பழைய இங்கிலீஷ் வியாஸங்களில் பேகன் வியாஸங்கள் முதன்மை பெற்றவை. எஸ்ஸே என்கிற வார்த்தையை வழக்காற்றில் கொண்டுவந்தார் அவரே. இந்த வித்தை நமக்கு வந்தேறிபழமையான தன்று. திருவள்ளுவருடைய திருக்குறள் பாவால் அமைத்ததேயாயினும், அதில் ஒவ்வோ ரதிகாரத்தையும் ஒவ்வொரு சிறு வியாஸமாகக் கொள்ளலாம். சில இடங்களில் ஒரு விஷயமே பல அதிகாரங்களில் உடம்பாடும் எதிர்மறையுமாக உரைத்திருக்கும். அவைகளை ஸாவகாசமாக ஆராய்ந்து பார்த்தால் அவை அங்ஙனம் வியாஸத்தில் அடங்குமாறு புலப்படும். திருக்குறள் நீங்கலாக இங்ஙனம் கொள்ளத்தக்க நூல்கள் வேறில்லை.

சென்ற நூற்றாண்டில் புதிய பத்திரிகைகள் ஏற்பட்டபோது வியாஸங்களும் தமிழில் தலைகாட்டத் தொடங்கின. தினவர்த்தமானி என்னும் பத்திரிகையில் பல விஷயங்களைப்பற்றி எழுதியிருந்தவர்களில் ராஜதானி கலாசாலைத் தமிழாசிரியர் வீராசாமி செட்டியார் என்பவர் ஒருவர். விநோதரஸமஞ்சரி என்பது அவர் எழுதிய சில வியாஸங்களின் தொகுதியே. யாழ்ப்பாணத்துத் தமிழ்ப்புலவர்களில் பிரஸித்தமானவரும் அரிய பல பழைய தமிழ்நூல்களை அச்சிட்டவருமான ஆறுமுகநாவலர் எழுதிய பாலபாடங்களில் நான்காவதில் தேசாசார மதாசார ஸம்பந்தமான சில வியாஸங்கள் அடங்கியிருக்கின்றன. திமிரி சபாபதி முதலியார் என்பவர் பொதுவாய் உபயோகமான சில விஷயங்களைப்பற்றிச் சில வியா

ஸங்களை எழுதி அத்தொகுதிக்கு நற்புத்தி போதம் என்று பெயரிட்டு வெளிப்படுத்தினர். அது இப்பொழுது (வியாஸமஞ்சரி என்கிற பெயருடன் அச்சிட்டிருக்கிறது). மயூரத்தில் டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப்பாயிருந்த வேதநாயகம் பிள்ளை என்பவர் பெண் கல்வி என்று ஒரு வியாஸம் எழுதி அச்சிட்டார். ஜனவிநோதினி என்று பெயர் பூண்டு நடந்திருந்த மாதாந்தப் பத்திரிகையும் இது விஷயத்தில் செய்த உபகாரம் மிகப் பெரிதே.

இப்பொழுது நமது யூனிவர்ஸிடி என்னும் கலாசங்கத்திலும் துரைத்தன பரீக்ஷாரீதியிலும் ஏற்பட்ட சில வேறுபாடுகளில், நமது ஸ்வபாஷைகளைக் கைசோரவிட்ட செய்தி ஜனங்களுக்குக் கவலையை விளைப்பதாயிற்று. குழந்தையைக் கிள்ளிவிட்டுத் தொட்டிலாட்டுவதுபோல் வசனமெழுதப் பயில்வதை இதற்குப் பரிஹாரமாக அதிகாரிகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்தப் பரிஹாரமும் துரைத்தனத்தார் ஏந்திக்கொண்ட புண்யம். தகுந்த நூற்பயிற்சி இல்லாமல் பிள்ளைகளை வசனமெழுத நிர்ப்பந்திப்பது மலடியை மகப்பெறுமாறு நிர்ப்பந்திப்பதாக இருக்கின்றது. இப்பொழுது மாணாக்கரில் பெரும்பாலனரும் எழுதுகின்ற வியாஸம் பசியேப்பமாகவே இருப்பதை அநேக ஆசிரியர்கள் நன்கறிவர். மாணாக்கர்கள் எத்தனை காலம் வெறுங்கைகொண்டு முழம் போடுவார்கள். ஆசிரியர்கள் அடித்தடித்து ஓட்டினாலும் இடையின வல்லினப் பேய்கள் வியாஸங்களை விட்டு ஓடாமல், மீண்டு மீண்டும் வந்து பற்றிக்கொள்கின்றன. இவற்றினிடையே ஒருமை பன்மைப் பேய்கள் ஒழுங்கில்லாமல் குரவைக் கூத்தாடுகின்றன. சந்திப்பேய்கள் இடமல்லாத இடத்தில் எட்டிப் பார்க்கின்றன. இவைகளைத் தள்ளிக்கொண்டுபோய் நூற்றுக்கு நாற்பது வாங்கி வருவது லேசான காரியமல்ல.

ஸ்வபாஷைகளைப் பிடித்த சனியன் அவைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களில் பலரைப் பிடித்தது. மங்கு சனியாதலால் அவர்களுக்கு அன்னவஸ்திரம் அரிதாய் விட்டது. ஹை ஸ்கூல்களில் சில இங்கிலீஷ் ஆசிரியர்கள் இந்தக் சனியின் பார்வையில் அகப்பட்டுக் கொண்டனர். சனிபிடிக்காத தமிழாசிரியர்களுக்கு இந்த இங்கிலீஷ் ஆசிரியர்கள் சில இடங்களில் வழிகாட்டி மரங்களாக ஏற்பட்டார்கள். அடி பெயராமலே வழிகாட்டுமே தவிர, அடி பெயர்ந்தால் வழிகாட்டி மரம் சாய்ந்துவிடும். அங்கங்கே அதனை நிலைநாட்டிக் கொண்டு தமிழாசிரியர்கள் வழியறிந்து வருகின்றார்கள். ஒன்றியாக உள்ள இங்கிலீஷ் ஆசிரியர்கள், ரகர றகர நகர னகரங்களிடையில் சிக்கி, சொல்முட்டில் அகப்பட்டு, சணப்பன் வீட்டுக் கோழிபோல் கைகால் உதறி வருகின்றனர். ஸ்வபாஷையில் போதுமான புலமையுள்ளவர்கள் அருமையாதலால், வசனமெழுதலான பயிற்சியால் பிள்ளைகள் ஸ்வபாஷைகளில் விசேஷ நன்மை அடைவது துர்லபம்.

பிள்ளைகள் வசன மெழுதுவதில் ஒருவாறு ஸித்தியடைதலான சில உபாயங்களை இங்கே காட்டுவது சிறிது நன்மை பயத்தல்கூடும்.

திராவிட பாஷைகளின்வாக்கியப்போக்கு ஆர்ய பாஷைகளின்வாக்கியப் போக்கினுக்குவேறானது. வாக்கியப்பாகுபாட்டிலும் ஆதிக வேறுபாடுகள் உண்டு. அவைகளில் பெரும்பாலும் வேற்றுமைகளெல்லாம் பயனிலையின் பின்னே வரும். பெயரின் அடைகளான எச்சத் தொடர்மொழிகள் பெயரின் பின்னே வரும். வினையின் அடைகளான எச்சத்தொடர்களும் அங்ஙனமே வரும். பெயரின் எச்சத்தொடர்கள் அந்தப் பாஷைகளில் ஒரே ரீதியாய்ப் பல அடுக்கி வரும். நமது பாஷைகளிலோ அவை அங்ஙனம் வாரா. இறுதியில் ஒரு பெயரெச்சத்தொடரை மாத்திரம் வைத்துக்கொண்டு மற்றவைகளை வினையெச்சத்தொடர்களாக அமைத்துக்கொள்வது நமது

335



பாஷைகளின் போக்குக்கு அடுத்ததாகும். நாம் சிறுவயதில் தற்காலம் இங்கிலீஷில் அதிகம் பயில்வதால் நம்முடைய வாக்யப்போக்குகளை நன்கு கவனிப்பதில்லை. நல்ல நூல்களிற் பயின்று அவைகளை உய்த்துணரவேண்டும்.

நமது பாஷைகளில் மற்றோர் இடர்ப்பாடு உண்டு. அது சந்தி வழக்கு. இது செய்யுளில் பெரும்பான்மை. வசனத்தில் சொல்தோறும் ஸந்திகளை அநுசரித்தலான நியதி இல்லை. சில ஸந்திகள் இல்லாமலும் வசனநடை செவ்வியடையாது. இடத்துக்கேற்ப வலி மிகுவதும் மிகாமையும், தந்நகாரன்னகாரங்கள் வருவதும், ரகர றகரங்கள் வருவதும், இனமெய்கள் வருவதும் ஆகிய ஸந்திகளை மாத்திரம் கவனிப்பது போதும். வசன நடையில் தேர்ச்சியுற்றவர்கள் இதற்குமேலாக அநாவசியமான ஸந்திகளைப் பாராட்டுவதில்லை.

தமிழிலும், மற்ற திராவிட பாஷைகளிற் போலவே, ஒட்டுச் சொற்கள் அதிகம். அதாவது அவைகளில் பகுதி விகுதி இடைநிலை முதலியன ஒன்றோடொன்று ஒட்டிநின்று விளக்கமாகப் புலப்படும். ஆர்ய பாஷைகளில் இங்ஙனம் இல்லை : மரூஉ மொழிகளே அதிகம். நமக்கு ஒட்டுச்சொற்களே பலவாதலால், ஒவ்வொரு சொல்லிலும் ஸந்தியிடர்ப்பாடு உண்டு. பயிற்சி-பயிர்ச்சி, கவற்சி-கவர்ச்சி, அவர்க்கு-அவற்கு என்பவை உச்சரிப்பளவில் ஏறக்குறைய ஒத்திருப்பினும் வரிவடிவில் வேறுபாடுடையனவாதலால், அவைகளை ஸந்தி லக்ஷண மறிந்து புணர்த்தாவிடில், வாக்கியங்களின்பொருள் ஆபாஸமாகும் ; ஒருமை பன்மை மயக்கம், வந்தெய்தும். ஆகவே இவைகளை ஆசிரியர்களுடைய உதவிகொண்டு திருத்தமாக எழுத அறிவது மாணாக்கர்களுக்கு இன்றியமையாததாகும். இன்னோரன்ன வழக்குகளில் தவறுகின்றவர்களைத் தமிழ்ப்புலமை நிரம்பாதவர்களென்று வித்வான்கள் அவமதிப்பர்.

தமிழில் வசனநடையில் வடமொழி திசைமொழிகளை அடியோடு அகற்றித் தமிழ்மொழிகளையே வழங்குதல்வேண்டும் என்பது சிலருடைய மதம். நாகரீகம் நாட்குநாள் மிகுதலான இக்காலத்தில் இம்மதத்தை அநுஸரிப்பவர்கள் சில ஸந்தர்ப்பங்களில் தங்கள் கருத்துக்களை வெளியிட இயலாமல் மூங்கைகள் ஆதல் வேண்டும். ஆத்மவிசாரணை பௌதிக ரஸாயன சாஸ்திரி விசாரணை-யந்த்ர ஸூக்ஷ்ம விசாரணை செய்யுமவர்களுக்கு வடமொழி திசைமொழிகளின் வழக்கு ஒருதலை. ஸாதாரண ஜனங்கள் பேசும்போதும் திசைமொழிகள் இக்காலத்து அதிகரித்து வருதல் கண்கூடாக இரா நின்றது. நியதியாகவே நாம் திசைமொழி வடமொழிகளை ஒழித்துவந்தால் சில காலத்தில் நமது பாஷை உள்ள உரமும் குன்றி கவலைப்படும். பாஷையின் போக்கைத் தவிர்ப்பது ஒரு விதத்தில் முடியாத கார்யம். ஆகையால் இன்றியமையாத அளவில் திசைமொழி வடமொழிகளை ஸ்வீகாரம் செய்துவருதல் வேண்டும். ஆயினும் அளவுக்கு அதிகப்பட்டால் அமுதமும் விடமாகும்.

தாண்டவராய முதலியார், ஆறுமுக நாவலர், வேதநாயகம் பிள்ளை தற்காலத்தில் மஹாமஹோபாத்யாயர் சாமிநாத ஐயர் முதலானவர்களுடைய வசன நூல்களில் நன்கு பழகினால் மாணாக்கர்களுக்கு வசனநடை வாய்ப்புறும். வீட்டில் அத்தை பாட்டி முதலிய பெண்பாலினரிடத்தும் வெளியில் சாதுர்யமாகத் தமிழ் பேசுகின்றவர்களிடத்தும், ஸமயம் வாய்க்கும்போதெல்லாம் வார்த்தையாடுவது நன்மையைத் தரும் என்பது அநுபவ முதிர்ச்சியுள்ளவர்களுடை கொள்கை. "பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்" என்றனர் ஔவையார். குறள் நாலடி முதலிய சங்கநூல்களில் சிறிது பழகுவதும், மூதுரை நல்வழி நீதிவெண்பா முதலிய பிற்கால நீதிகளில் சிறிது பழகுவதும், பாரதவெண்பா நளவெண்பா குசேலோபாக்யானம் முதலிய காவ்யங்களில் சிறிது பழகுவதும் அவகாசமுள்ளவர்களுக்கு நம்மையை விளைக்கும் என்பதில் ஐயமில்லை. பழமொழிகளை இடமறிந்து வழங்குவதினால் நமது கருத்துக்களைப் பிறரிடம் வற்புறுத்தலான ஸாலபசாதனம் ஏற்படுகின்றது. ஆதலால் பழமொழிப் பிரயோகங்களைக் குறித்தறிவது நன்மை. அநுசிதமான பழமொழிகளை அகற்றி விடவேண்டும். இங்ஙனம் செய்வதோடு நில்லாமல் சில காலம் மொழிபெயர்த்தலான அப்யாஸங்களைச் செய்வது, வாக்கியப் போக்கை ஸூக்ஷ்மித்தறிவதற்கும், சொல்முட்டறுவதற்கும், அதனால் பாஷையில் விற்பத்தி யடைவதற்கும் சிறந்த உபாயம்.

டி செல்வகேசவராயன், எம். ஏ.

## மாட்சிமைதங்கிய இந்திய சக்கரவர்த்தி ஐந்தாம் ஜியார்ஜ் அவர்களது ஜீவிய சரித்திரச் சுருக்கம்

## HIS MAJESTY KING GEORGE V.

*(A life sketch)*

"திலக நீண்முடித் தேவரும் வேந்தரும்
உலக மாந்தர்கள் ஒப்பவென் றோதுப
குலவு தார்மன்னர்க் கியான்இது கூறுவன்
பலவு மிக்கனர் தேவரிற் பார்த்திவர்."

"உறங்கு மாயினும் மன்னவன் தன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்."

சீவக சிந்தாமணி.

"கோன் நிலை திரிந்திடிற் கோள்நிலை திரியும்;
கோள்நிலை திரிந்திடில் மாரிவறங் கூரும்;
மாரிவறங் கூரின் மன்னுயிர் இல்லை;
மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்;
தன்னுயிர் என்னுந் தகுதியின் றாகும்."

மணிமேகலை.

அரசர் கடவுளின் அம்சம் என்று, பொதுவாக இந்தியா முழுவதிலும், சிறப்பாகத் தமிழ் நாட்டிலும், ஜனங்களெல்லாம் தொன்றுதொட்டு நம்பி வருகிறார்கள். 'திருவுடை மன்னர்க் காணின் திருமாலைக் கண்டேன்' என வைஷ்ணவப் பெரியாரும், "காவலன் கல்வி காமர், விண்ணினைச் சுழல வோடும் வெய்யவன் (சூரியன்) இவை உலகுக்குக் "கண்ணெனப் படுவ மூன்று" என்றும், இம்மூன்று கண்களிலும் சிறந்ததாகக் காவலனென்னும் கண்ணைக் கொள்ளவேண்டும் என்னும் கருத்துடனே (காவலன், கல்வி) வெய்யோன் (சூரியன்) என்பதில் காவலனை முதலில் கூறினேம், என்றும் சூளாமணி யுடையாரும் சொல்லியிருக்கிறார். இராமாயணம் மஹாபாரதம் முதலிய காவியங்களில் உள்ள அரசர்கள் அவதாரபுருஷர்கள். திருக்குறள், நாலடியார் முதலாய நீதி நூல்களும் அரசின் தூய்மை (பரிசுத்தம்) யை ஆற்றவும் போற்றுகின்றன. இப்படிப் பட்ட சிறந்த அரசபதவியை இப்போது அடைந்து, முப்பது கோடி இந்தியக் குடிகளுக்கும் ஒருகுடை வேந்தராய் விளங்கும் ஐந்தாம் ஜியார்ஜ் சக்கரவர்த்தியாரின் அரிய வாழ்க்கைச் சரிதத்தைச் சுருக்கமாகக் கீழே வரைகின்றோம்.

1865 ஆம் ஜூன்மீ 3-ம் தேதியில், நம் ஜியார்ஜ் மன்னர் விக்டோரியா மஹாராணிக்குப் பேரனாய், எட்வர்டு அரசர்க்கும், அலெக்ஸாண்ட்ரா மஹாராணிக்கும் புத்திரனாய், இவர்கள் இயற்றிய தவத்தின் பலத்தினால் அன்றி, இந்தியா நாடு முழுதும் இயற்றிய தவத்தின் பயனாக அவதரித்தார். இவர், பெற்றோர்க்கு இரண்டாவது பிள்ளையாகப் பிறந்ததனால் இளம் பிராயத்தில் இவர் அரசுக்குரியவர் எனக் கருதப் படவில்லை. ஆதலால் இவர் மற்றை சாதாரண பிள்ளைகளைப் போலவே கல்வி பயின்று வர வேண்டுமென்று இவருடைய பெற்றோர்கள் ஏற்பாடு செய்தார்கள். இவர் குழந்தைப் பருவத்திலேயே மிக்க சுறுசுறுப்பும் தேக வன்மையும் உடையவரா யிருந்தமைபற்றி, ஏழாம் ஆண்டு முதலாகவே இவரை நாவிகத்தொழிலில் (கப்பல் விஷயமாகக் கல்விகற்பதில்) சேர்த்துவிட வேண்டும் எனத்தீர்மானம் ஆயிற்று. ஜியார்ஜுக் குழந்தைக்கும் தன் சகோதர சகோதரிகளுடன் ஓடியாடுவதிலும் சமுத்திரத்திற் குதித்து நீந்துவதிலும் மிக்க ஆவல் இருந்தது. ஒரு முறை குழந்தைகள் எல்லாம் தம் மாதுலர் ஊராகிய கோபன்ஹேகனுக்குப் போயிருந்தபோது, அங்குக் கடலிற் குதித்து விளையாடக் கருதினார்கள். அப்போது அனைவரும் அஞ்சி நிற்க, நம் ஜியார்ஜே ஆண்டில்இளையவரேனும், தைரியத்தில்மூத்தவராய்த் தண்ணீரில் 'தொப்' என்று குதித்தனராம். ஜியார்ஜுக்குப்பன்னிரண்டாம்ஆண்டு முடியவே அவர் தன் தமையனோடும், 'டார்ட்மத்' (Dartmuth) என்னும் துறைமுகத்தில் பிரிட்டேனியா' எனப்பெருள்ள கப்பலில் கல்வி பயிலச் சென்றனர். அப்போது அங்கே உடன்

விக்டோரியா மஹாராணியும் அவர் வம்சத்தார்களும்



ஏழாவது எட்வர்ட் சக்ரவர்த்தி | இந்திய இளவரசு | ஜ்யார்ஜ் V. சக்ரவர்த்தி | விக்டோரியா மஹாராணியார்

படித்துவந்த மற்றை மாணாக்கர்களுக்கும் இவர்க்கும் உணவு, உடை, வேலை முதலியவற்றில் சிறிதும் வித்தியாசம் இல்லை. நாளடைவில் கப்பல் நுணுக்கங்களைக் கண்டுணர்வதில் நம் ஜியார்ஜ் மிக்க தேர்ச்சியுள்ளவரானார். நாவிகக்கலை நன்குணரும்பொருட்டு, மத்தியதரைக்கடல் (Mediterranean Sea),மேற்கு இந்தியா(West India) முதலிய தூர ஸ்தலங்களுக்கும் போனார். அப்படிப் போனபோது, தம் பெற்றோருக்கு அடிக்கடித் தமது யாத்திரையைப்பற்றிக் குறிப்புகளை எழுதி யனுப்புவது வழக்கம். 1880-ம் வருஷம் இவர் கப்பல் மூலமாக ஒரு முறை பூப்பிரதக்ஷிணம் செய்து ஆங்காங்குப் பற்பல அதிசய காட்சிகளைக் கண்ணுற்றார். 1884-ம் வருஷம் பரீட்சையில் முதல் வகுப்பில் தேறி "சப் லெப்டினெண்ட்"(Sub Lieutenant)என்ற பட்டம்பெற்றார். பிறகு அதனோடு திருப்தி யடையாது கிரீனிச் (Greenich) பட்டணத்துள்ள உயர்தர நாவிக காலேஜ் சேர்ந்தார். அங்கும் தளரா ஊக்கம் உடையவராயிருந்து வந்தார். 1889-ம் வருஷம் விக்டோரியா மஹாராணியார் தமது திருப்பெயரனது திறத்தினை வியந்து அவரைத் தமது கப்பல் மெய் காப்பாளரில் (Naval Aides-de-camp) ஒருவராய்ச் செய்துகொண்டார்.

1891-ம் வருஷம் இவர் சேனைத்தலைவர் (Commander) ஆனார். இவ்வாண்டின் இறுதியில் இவர் தமையனாராகிய டியூக் அப் க்ளாரென்ஸ் (Duke of Clarence)க்குத் தங்கள்சுற்றத்தாருள் ஒரு பெண்ணை மணம் செய்யவேண்டும் என நிச்சயம் செய்தார்கள். ஆனால் அவ்வரசிளங்குமரர் திடீரென்று நோயுற்று 1892-ம்ஆ ஜனவரிமீ காலமாயினர். அப்போது அவர் பெற்றோரும், மற்றோரும் துன்பக்கடலுள் ஆழ்ந்தனர். அரசுக்குரிய மூத்த புதல்வன் மணஞ் செய்துகொள்ள இருக்குஞ் சமயத்தில் மரிக்க நேர்ந்ததைக் குறித்து யார்தான் வருந்தியிருக்கமாட்டார்?

இத்துக்க சங்கதி நம் ஜியார்ஜின் வருங்கால நிலைமையைப் பெரிதும் மாறுபடச் செய்தது. தனக்கும் அரசுரிமைக்கும் சிறிதும் இயல்பு இல்லை எனக் கருதி வந்த அவர்க்கு 27-ம் பிராயத்தில் ராஜ்யத்துக்கு பாத்தியதை தெய்வ சங்கற்பத்தால் உண்டாயிற்று. தம் தமையனார் மணப்பதற்கிருந்த கன்னியையும், அவர் (ஜியார்ஜ்) தாமே மணக்கும்படி ஏற்பாடு ஆயிற்று.

இப்போது முதல் நம் ஜியார்ஜ் 'ட்யூக் அப் யார்க்' (Duke of York) என்னும் பட்டம் பெற்றார். அவர் தந்தையாரும், பாட்டியாரும் அவருடன் அடிக்கடி அரசியல் விஷயங்களைப்பற்றி ஆழ்ந்து யோசிக்கலானார். அவரும் பாராளுமன்றுக்கு (Parliament)அடிக்கடிச் சென்று அங்கு நிகழும் விஷயங்களை மிக்க கவனத்துடன் ஆராய்ந்து வந்தனர். அவர் ஆங்காங்கு சபைகளில் அக்கிராசனம் வகித்துப் பிரசங்கம் செய்ய நேரிட்டபோதெல்லாம், பாராளுமன்றில் தாம் சிறந்த பிரசங்கங்களைக் கேட்டு வந்தது அவருக்குப் பெரிதும் உதவியாய் இருந்தது.

விரைவில், அவர் சுருக்கமாகவும், விளக்கமாகவும் பிரசங்கம் செய்வதில் மிக்க சமர்த்தர் என மதிக்கப்பட்டார். ஒரு சமயம், ஜீவபிராணி ஹிம்ஸ நிவாரண சங்க (Society for preventing cruelty to animals) த்தில் தலைமை வகித்து அச்சங்கத்தின் நோக்கங்கள், அது செய்து வரும் வேலை முதலியவற்றில் மிக்க அனுதாபங்காட்டிக் கேட்டோரெல்லாம் மனமுருகும்படி பேசினார். அப்பிரசங்கத்தின் பயனாக அச்சபை கலைந்தபோது, 2800 பவுன் அச்சங்கத்திற்குதவியாக அங்கு வந்திருந்தவர்கள் அளித்துச் சென்றனராம்.

நம் ஜியார்ஜ் இளவரசரின் மணத்தினைப்பற்றி முன்னோரிடத்தில் குறித்தோம். அவர்க்கு வாழ்க்கைத் துணையானவர், அவருடைய நெருங்கிய உறவினருள் ஒருவராகிய 'மேரி' என்னும் இளவரசியே. மேரி யிளவரசி 1867-ம் ஆண்டிற் பிறந்து தக்க ஆசிரியரால், உரிய காலத்தில் சித்திரம் எழுதல், வஸ்திரம் நெய்தல், பந்து ஆடல் முதலியவற்றில் செவ்வனே பயிற்றப்பட்டு

வந்தாள். அவளுடைய போழகுபற்றி அவளுக்கு இங்கிலீஷ்காரர் 'எல்லாம் இங்கிலீஷ் ரோஜா' எனச் செல்வப்பேரிட்டனர். அவள் இளம்பிராயம் முதலாகவே ஏழைகளுக்கிரங்கும் இயல்புடையவள். இவ்விரு தம்பதிகளுக்கும் 1893-ம் வருஷம் ஜூலை மாதம் 6-ம் தேதி மிக்க வைபவத்துடன் வதுவை நடந்தேறிற்று. அப்போது இங்கிலாந்து முழுவதும் இணையில்லாத இன்பம் எய்திற்று.

1894-ம் வருஷம் ஜூன் மாதம் 23-ந் தேதி இவர்களுக்கு முதற் குமாரன் பிறந்தனன். 1895-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் இன்னொரு புத்திரன் பிறந்தனன். 1897-ம் வருஷம் ஏப்பிரலில் ஒரு செல்வப் புதல்வியுந் தோன்றினள்.

பிறகு மனைவியும் தாமுமாக இளவரசர் ஐர்லாந்துக்குச்(Ireland) சென்றபோது ஐர்லாந்தார் மிக்க களிப்புடன் இவர்களை வரவு ஏற்று உபசரித்தார்கள். இங்கிலாந்துக்குத் திரும்பிய பிறகு ஐர்லாந்து வைசிராய்க்கு நமதிளவரசர் "நாங்கள் ஐர்லாந்துக்கு வந்தபோது நீங்கள் எங்களை வரவேற்றது எங்கள் மனத்தினின்று ஒருபோதும் அகலாது" என்று எழுதியனுப்பினர்.

பிறகு தென் ஆப்பிரிக்காவில் போயர் யுத்தம் ஆரம்பித்தது. அப்போது அதைக் குறித்து அரச வம்சத்தார் பட்ட கவலைக்கு அளவேயில்லை. 1901-ம் ஆண்டில் 64-வருஷம் அரசாண்டு, அழியாக் கீர்த்திபெற்ற அரசியாகிய விக்டோரியாவும் மேலுலகம் சென்றனள்.

உடனே இளவரசாயிருந்த எட்வர்ட் என்பவர் இங்கிலாந்துக்கு அரசரானர். நமது ஜியார்ஜூம் பட்டத்துக்குரிய இளவரசாய் பிரின்ஸ் ஆப் வேல்ஸுமாக (Prince of Wales) ஆனர். பிறகு ஜியார்ஜூம் மேரியுமாக நியூ ஸிலெண்ட் (New Zealand), தென் ஆப்பிரிக்கா (South Africa), வட அமெரிக்கா, (Canada) முதலிய இடங்களுக்குச் சென்று அங்கங்குள்ள காட்சிகளைக் கண்டு அவ்வவ்விடங்களில் உள்ள இங்கிலீஷ் குடிகளுக்கு இன்பம் விளைத்துப் பின் இங்கிலாந்து வந்து சேர்ந்தனர். வந்தவுடன் 'கில்டு ஹாலில்' இவர் செய்த பிரசங்கம் மிகச் சிறந்ததென எல்லாரும் எண்ணினர்கள்.

1904-ம் வருஷம் ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் சண்டை நேரிட்டபோது அவ்விஷயத்தைக் குறித்து நமதிளவரசர் கவனித்து வந்ததுபோல மிகச்சிலரே கவனித்திருக்கக்கூடும். ஏனெனில் ருஷியா அரசர் முதலாயினோர் தனது நண்பரும், சுற்றத்தாரும் ஆனவர்கள். ஜப்பான் தலைவர்களாகிய 'அட்மிரல் டோகோ,' 'ஜெனரல் நோகி' என்பவர்கள் நம் ஜியார்ஜ் இளவரசர்க்கு நன்குய்த் தெரிந்தவர்கள். இன்னும் கப்பற்போரில் உள்ள நுணுக்கங்களெல்லாம் இவர் நன்குணர்ந்தவர். ஆதலால், அந்த ருஷியா—ஜப்பான் யுத்தத்தில் இவர்க்கு மிக்க கவனம் ஏற்பட்டது. ஒருமுறை 'ஓர்ஸஸ்ட' ரில் (Worcester) நமதிளவரசர் சென்று பிள்ளைகளுக்குப் பரிசளித்தபோது, அவர் கூறியதாவது:— "ஒவ்வொரு ஓர்ஸஸ்டர் மாணுக்கனும் உலகெலாம் புகழ்பெற்ற உயர்தாக்கப்பல் தலைவராகிய 'அட்மிரல் டோகோ' என்பவர் ஓர்ஸஸ்டரில் ஒன்றரை வருஷம் கல்வி பயின்றார் என்பதைக் குறித்துச் செருக்கடைய வேண்டும்" என்று கூறினர்.

ஏழாவது எட்வர்டரசர் பட்டத்துக்கு வந்தது முதல் உலகில் சண்டை சச்சரவு இல்லாமல் அமைதியே அதிகமாக இருக்கவேண்டுமென்னும் நோக்கத்துடன் மிகவும் உழைத்து வந்தார். அவர் ராஜ காரியங்களிலெல்லாம் நமதிளவரசர் ஜியார்ஜோடு யோசித்தது மன்றி, ராஜ தந்திரம் இன்ன இன்ன எனப் பல விஷயங்களைக் குறித்து அவர்க்குக் கடிதம் எழுதி வைத்ததுமுண்டு.

1905-ம் ஸ்ரீ நமது இளவரசரும் இளவரசியும் இந்தியாவுக்கு வந்த விஷயம் பலர்க்கும் ஞாபகம் இருக்கலாம். அவர்கள் ஏறக்குறைய

ஆறு மாதம் இந்தியாவிலுள்ள முக்கியபட்டணங்களுக்கெல்லாம் சென்று, அங்கங்குள்ள விஷயங்களை எல்லாம் ஆராய்ந்தறிந்துகொண்டு 1906-ம் வருஷம் இங்கிலாந்து சென்றனர். சென்றவுடன் 'கில்டு ஹாலில்' தாம் இந்தியாவிற் கண்டுணர்ந்தவற்றைக் குறித்துச் செய்த ஒரு பிரசங்கமானது சிறந்த கருத்துக்கள் அமைந்து விளங்குகிறது. அதன் கண்ணேதான், அவர் "இந்திய அரசாட்சியில் இன்னும் 'அனுதாபம் என்பதை' நாம் அதிகமாகச் சேர்த்தால், நமதாட்சி சிறக்கும்" என மிக்க பெருந்தன்மை கூட்டிப்பேசினர். இவ்வாக்கியம் அன்றுமுதல் ஒவ்வொருபடித்த இந்தியன் மனத்திலும் பசுமரத்தாணிபோற் பதிந்து, இந்தியர்களது இயற்கை இராஜ விசுவாசத்தை எண்மடங்கு அதிகப்படுத்தி யிருக்கிறது.

இச்சமயங்களில் இங்கிலாந்தில் அமைச்சர்கள் அபிப்பிராய பேதத்தாலும் பிற காரணங்களாலும் அடிக்கடிமாறிவிடும்படி நேர்ந்தது. அப்போதெல்லாம் நமதிளவரசர் ஜியார்ஜூம் ராஜாங்க நிலைமையைச் செவ்வனே சிந்தித்து வந்தனர்.

1910-ம் வருஷம் மேமீ 6-ம் தேதி ஜலதோஷங்காரணமாக எட்வர்டரசர் திடீரென்று எவரும் எதிர்பாராதபடி தேகவியோசமாகவே, அதுவரையில் 'பிரின்ஸ் ஆப் வேல்ஸ்' ஆய் இருந்த நம் ஜியார்ஜூம் 'ஐந்தாம் ஜியார்ஜ்' என்னும் பேருடன் இங்கிலாந்துக்கரசரும் இந்தியாவுக்குச் சக்கரவர்த்தியும் ஆனர். பட்டத்துக்கு வந்தவுடனே, அவர் தாமும் தந்தையார் கொள்கையையே தம்மால் இயன்றமட்டும் மேற்கொண்டு நாட்டினை ஆண்டு வருவதாக வாக்களித்தார்.

கேனடாவு(Canada)க்குக் கவர்னர் ஜனரல்ஆக அரச வம்சத்தைச் சேர்ந்த ட்யூக் ஆப் கன்னட் (Duke of Connought) என்பவரையே நம் ஜியார்ஜ் அரசர் அனுப்பினர். இதற்கு முன் அரசவம்சத்தைச் சேர்ந்தவர் 'கவர்னர் ஜனரல்' ஆக எங்கும் நியமிக்கப்பட்டதேயில்லை. கேனடா (Canada) தேசத்தார் இதைப்பற்றி மிகவும் திருப்தி அடைந்தனர்.

நம் வேந்தர் பெருமான் சிறிய பிள்ளையாய் இருந்தது முதல் மிக்க சுறுசுறுப்புள்ளவரா யிருந்தார் எனக் கூறினேமன்றோ? அவர் தாம் செய்யும் வேலைகளில் மிகவும்ஒழுங்கு வாய்ந்தவர். சாதாரணமாக ஒவ்வொரு நாளும் அவர் காலங் கழிக்கும் விதம் பின்வருமாறு:—காலையில் $6\frac{1}{2}$ மணிக்கே அவர் எழுந்து விடுவார். இங்கிலாந்து அதிக குளிர்ச்சியுள்ள தேசம் என்பதை நினைத்தால் $6\frac{1}{2}$ மணிக்கு எழுந்திருப்பது ஆச்சரியகரமானதே. உடனே, காரியதரிசியால் முறைப்படுத்தப்பட்டிருக்கும் கடிதங்களையும், மனுக்களையும் பார்ப்பார். காலையிற் பிரசுரமாகும் சமாசார பத்திரிகைகளையும் அப்போதைக்கப்போதே அதி காலையிற் பார்த்துவிடுவார். பிறகு காலை போஜனமான பிறகு பகல் 1 மணிவரை தம்மைக் காண வருபவர்க்கு முன் குறித்திருக்கும் நிமிஷக் கணக்குப்படி முறை தவருது 'பேட்டி' தருவார். பிறகு பிற்பகலில்தாம் தனித்திருக்குங் காலத்தில் குதிரைவண்டியிலாவது, குதிரைமீதாவது சவாரிபோவார். அன்றி ராஜகுமாரர்கள் முதலியோர் அரண்மனையில் இருப்பார்களேயானுல் அவர்களுடன் ஏதேனும் விளையாடிப் பொழுது போக்குவார். மாலையில் ஏதேனும் நல்ல புஸ்தகத்தை எடுத்துப்படிப்பார். இரவில் 11, அல்லது 12, மணிக்கே நித்திரை போவார். இவ்வாறு பிரதிதினமும், சிறிது நேரமும் வீணே கழிக்காமல், காலத்தின் அருமையினைத் தம்செயலால் பிறர்க்குச் சக்கரவர்த்தியார் தெரிவிக்கிறார்.

நமதரசர் ஏழைகளிடத்து வைத்துள்ள அன்புக்கறிகுறியாக, அவர் தம் சொந்தப் பணத்திலிருந்து எட்வேர்டரசர் ஏற்படுத்திய மருத்துவச்சாலைநிதிக்குத் (Hospital Fund) தவறாமல் சந்தா அனுப்பிவருவது மன்றித் தன் புத்திரர்களையும் அவ்வாறே செய்வித்திருக்கிறார்.

நமதரசர்க்கு நண்பராயுள்ளவர், அரச வம்சத்

தைச் சேர்ந்தவர்கள்தாம் என்று நாம் எண்ணக் கூடும். அது தப்பெண்ணம். விக்டோரியா அரசி முதல் தலைமுறை தலைமுறையாகவே ஆங்கில அரசர்க்கும் ஆங்கிலநாட்டிலுள்ளமேதாவிகளான க்ளாட்ஸ்டன் (Gladstone), ரோஸ்பரி (Rosebury), ஸாலிஸ்பரி (Salisbury), டனிஸன்(Tennyson) முதலிய நிபுணர்களுக்கும் நெருங்கிய நட்பு வாய்ந்திருந்தது. எத்தனையோ முறை நம் ஜியார்ஜ் மன்னர் தமது ஆப்த சிநேகிதர்களுக்கு, அவர்கள் சுகதுக்கத்தைக் குறித்து, மற்றையோ ரனைவரினும் தாமே முதலாவராகத் தந்தி யடித்ததுண்டு.

1911-ம் ஆண்டாகிய இவ்வாண்டில் ஜூன் மாதத்தில் நம் ஜியார்ஜ் அரசர்க்கு லண்டனில் மகுடாபிஷேகம் மிக்க சிறப்புடன் நடந்தது. அது முடிந்தவுடன், ஜியார்ஜ் மன்னரும், இந்தியாராகிய நம்மீது தமக்குள்ள அளவில்லாத அன்பினைக் காட்டுவதற்காகத் தாம் இந்தியாவுக்கு வந்து சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்தார். அது கேட்டு இந்தியா முழுவதும் மிக்க சந்தோஷம் அடைந்தது. மகுடாபிஷேகத்துக்காக டில்லியில் நடந்த வைபவங்களை யெல்லாம் வர்ணிக்க எவராலும் இயலாது. இங்கிலாந்தரசர் இந்தியாவுக்கு வந்து முடிசூட்டிக் கொள்வது இப்போதுதான் முதல் முறை. இந்தியாவும் மகுடந் தரிக்கும் அரசனைக் கண்டு நூற்றுக் கணக்கான வருஷங்களாயின. சிற்சில இடங்களில் சில பேதைச் சிறுவர்கள் ஆங்கில ஆட்சியில் அதிருப்திகொண்டு சில்லறைக் குறும்புகள் செய்ததனல் நாட்டில் கலகம் ஏற்படும் எனக் கவர்ன்மெண்டார் பயந்திருந்த இத்தறுவாயில் மணிமுடி சூட, அரசர்பிரானே இந்தியாவுக்கு நேரில் வருவதைவிடச் சிறந்த ஏற்பாடு எது வாகும்?

நம் சக்கரவர்த்தியாரும் சில நாட்களுக்குமுன் பம்பாய் வந்து சேர்ந்து, அங்குப் பேசியபோது "கடைசியாக இந்தியாவின் நன்மைக்காக ஈசனைப் பிரார்த்திக்கிறேன்" என்றதும், தாம் டில்லியில், முடிசூட்டிக்கொண்டதற்கு அறிகுறியாகப் பங்காளப் பிரிவினையை ரத்து செய்ததும், பிரைமரி படிப்புக்காக 50 லட்சம் ரூபாய் அளித்ததும், பிறவும் இந்தியர் மனத்தில் எல்லையில்லாத இன்பத்தை விளைத்திருக்கின்றன. இத்தகைய அன்பு மிக்க அரசர் ஆட்சியில் குடிகள் பல நன்மைகளை அடைவார்கள் என்பதிற் சந்தேகமேயில்லை.

நாமகளும்ம வள் நாடகிலாத
பூமகளும் புகழ் ஓங்குநம் மேரிக்
கோமகளும் மகிழ் கோமுடி சூடப்
பூமகளும் மினிப் பொங்குவ ளின்பம்.

ஆதலால் இந்தியரெல்லோரும், "நம் மன்னர் பிரானும், அவர் மனைவியாரும், அவர்கள் அருமைப் புதல்வர் ஐவரும், புதல்வி ஒருத்தியும் மற்றுமுள்ள அரசவம்சத்தார் அனைவரும் இறைவனருளால் ஆக்கமும், ஆயுளும், மேக்குறப் பெற்று விளங்குவார்களாக" என்று மனப்பூர்வமாக விரும்புவோமாக.

சீர்வளரும் ஐந்தாம் ஜியார்ஜு மகிபனெனப்
பேர்வளரும் வேந்தர் பிரானே! நீ—ஏர்வளரும்
மேரி யரசியொடும் மேதகுநல் லாட்சியோடும்
பாரில்மிக வாழி பரந்து.

வே. முத்துசாமி ஐயன், பி. ஏ., எல். டி.

---

உபகாரம்:—உபகாரமென்பது அந்நியர்க்குத் துன்பம் வந்தபோது உதவுதலாம். உலகத்தில் நாம் நம்முடைய சொந்த நன்மைகளை மாத்திரம் கருதி நடப்பது பெரிதல்ல. அப்படியே நம்மைச்சேர்ந்த பந்துவர்க்கத்தாருக்கும், அக்கம்பக்கங்களில் வசிக்கும் இதர ஜனங்களுக்கும் ஏதாவது துன்பம் வந்த காலங்களில், அது நமக்கே வந்ததாகப் பாவித்து, நம்மாற் கூடுமானவரையில் அது நீங்கும்படி வகைதேடல் வேண்டும். ஒவ்வொரு மனிதரும் அனேக சமயங்களில் அந்நியருடைய ஒத்தாசையைக் கோருவது உலகத்தில் சாதாரணமாய் இருக்கிறது. உபகாரம் செய்வதில் இன்ன ஜாதியாருக்காவது இன்ன மதஸ்தருக்காவது செய்யவேண்டு மென்பது விதியல்ல. கஷ்டப்படுபவர்கள் யாராயிருந்தாலும் அவர்களுக்கு அது நீங்கும் பொருட்டு இயன்றதை நாம் செய்யக் கடமைப்பட்டவர்களா யிருக்கிறோம். ஒருவருக்கு உபகாரம் செய்வதிலும் பாத்திரா பாத்திரங்கள் அறிந்து செய்வது உத்தமம். அதாவது துஷ்டர்களுக்கு உபகாரம் செய்தால் எப்போதும் அபகாரம் செய்யவேண்டுமென்கிற எண்ணமே உண்டாகிறது. அதையே நல்லவர்களுக்குச்செய்தால், அவர்கள் நன்கு மதித்துப் பதில் உபகாரம் செய்ய முயலுவார்கள். அது எப்படி யென்றால், பசுவுக்குப் புல்லைப் போட்டால் அது மதுரமான பாலைக் கொடுக்கும்; அந்தப் பாலை பாம்புக்கு வார்த்தால் அது விஷத்தையே கொடுக்கும். ஆகையால் ஒருவருக்கு உபகாரம் செய்வதில் பாத்திரா பாத்திரம் அறிந்து செய்வதோடு சமயமறிந்து செய்வதும் உசிதம்.



மாக்ஷிமைதங்கிய ஐந்தாம் ஜியார்ஜ் சக்கரவர்த்தியவர்களின் மகுடாபிஷேக வைபவம்
1911-ம் ௵ ஜூன் ௴ 22௳

# சோழன் கரிகாலன்

## CHOLAN KARIKALAN

**ஆ**திகாலத்தில் சோழநாட்டை யாண்டுவந்த அரசர்களுள் அநேகர் கடைச்சங்கப் புலவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டிருக்கிறார்கள். அவர்களுள் **சோழன் கரிகாலனே** முதன்மையானவன் எனச் சிறப்பித்துக் கூறலாம். அவனைச் சோழன் கரிகாலன் என்றும், சோழன் கரிகால் வளவன் என்றும், சோழன் கரிகாற் பெருவளத்தான் என்றும் சொல்வதுண்டு

தேசத்தை ஆளும் வன்மையிலும், பகைவரை வெல்லும் ஆண்மையிலும், கற்றோரைப் பரிபாலித்து அவர்களுக்கு ஊக்கமளிக்கும் வண்மையிலும், பிரஜைகளுடைய குறைகளைத் தீர விசாரித்தறிந்து அவர்களுக்குவேண்டிய ஸௌகரியங்களை அப்போதைக் கப்போதே செய்யும் அன்பிலும், விவகாரங்களைச் சீர்தூக்கிப் பார்த்து நியாயமளிக்கும் நுண்ணறிவிலும், அவன் சிறந்து விளங்கினானென்பது பழமொழி, பத்துப்பாட்டு, புறநானூறு, முதலிய நூல்களால் தெரிகின்றது.

சோழன் கரிகாற் பெருவளத்தான் என்ற பெயரில் கரிகாலன் என்பது காரணம்பற்றி வந்தது. இவன் சிறுவயதில் காலில் நெருப்பு பற்றி கால் வெந்து போனதால், கரிகாலன் என்ற பெயர் இவனுக்கு காரணம்பற்றி வந்த பெயராயிற்று. இதனை,

> "முச்சக் கரமும் அளப்பதற்கு நீட்டியகா
> விச்சக் கரமே யளந்ததாற்-செய்ச்செ
> யரிகான்மேற் றேன்றொடுக்கு மாய்புனனீர் நாடன்
> கரிகாலன் கானெருப் புற்று."

என்ற பழைய செய்யுள் தெரிவிக்கின்றது.

இவன் பால்யத்திலேயே சிங்காதனம் ஏறினதாக அறியக் கிடக்கின்றது. இவன் பட்டத்துக்கு வந்தவுடனே ஒரு ஆச்சரியமான விஷயம் நிகழ்ந்தது. இரண்டு முதியவர்கள் தமக்குள் சண்டையிட்டுக்கொண்டு நியாய ஸ்தலத்துக்கு வந்தார்கள். அவர்கள் நெடுந்தூரத்தில் வரும்போது நியாய ஸபையில் ஓர் சிறுவன் சிங்காதனத்திலிருப்பதைக் கண்டு, தமது வழக்கை அச்சிறுவனால் தீர்க்க முடியாதென்று ஸந்தேகித்தார்கள். அவர்கள் பேசிக்கொண்ட விஷயத்தை ஒற்றர் மூலமாகவோ வேறு விதமாகவோ அறிந்துகொண்ட கரிகாலன், அரண்மனைக்குள் விரைவாகச் சென்று கிழவனைப் போல வேஷந் தரித்துக்கொண்டு சிங்காதனத்தில் வந்து உட்கார்ந்தான். இதற்குள் ஸபையை நெருங்கி வந்த இரண்டு முதியவர்களும் சிங்காதனத்தில் வயது சென்ற அரசனே இருக்கிறானென்று தங்கள் ஸந்தேகம் தீர்ந்தவராய், அவ்வரசனிடம் தமது வழக்கைத் தெரிவித்துக்கொண்டார்கள். இளம்பிராயத்தானாயினும், கூரிய புத்தியுள்ள கரிகாலன் அன்னவர் மாறுபாட்டை விசாரித்து நியாயமளித்தான். இச்செய்கை இவ்வரசனது நுண்ணறிவை விளக்குவதோடு, பிரஜைகள் மனம் எவ்வாறோ அவ்வாறேதான் நடந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் அவனிடம் இருந்ததென்பதையும் புலப்படுத்துகிறது. இதனை

> "உரைமுடிவு காணா னிளமையோ னென்ற
> நரைமுது மக்க ளுவப்ப—நரைமுடித்துச்
> சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
> கல்லாமற் பாகம் படும்"

என்ற பழமொழிச் செய்யுளால் அறியலாம்.

அவன் அநேகம் தடாகங்கள், கால்வாய்கள் முதலிய ஜலாதாரங்களை உண்டுபண்ணியதன்றி, பழைய ஊர்களைப் புதுப்பித்தும், புதிதாக அநேகம் பட்டணங்களை ஸ்தாபித்தும், குடிகளுடைய விவஸாயம், வியாபாரம், ஆகிய இரண்டும் செழித்தோங்குவதற்கு இன்றியமையாத ஸாதனங்களையெல்லாம் குறைவின்றிச் செய்தான்.

முன்னே காடிருந்த விடமெல்லாம் நாடு உண்டுபண்ணி, ஜலாதாரம் உண்டு பண்ணி, விவஸாயிகளுடைய க்ஷேமத்தைப் பெருக்கி, பிரஜாலக்ஷணத்தைச்சீர்படுத்தி, கோயிலமைத்து, தன் னிராஜதானியைச் சுற்றி மதிலெழுப்பி, அம்மதிலில் அங்கங்கே மறைந்து எய்வதற்கு ஸௌகரியமாகச் சிறு துவாரங்களைக் கட்டி, தேசத்தின் பாதுகாப்பைச் சரிவரச் செய்தான் என்பது.

> "காடு கொன்று நாடாக்கிக்
> குளந்தொட்டு வளம்பெருக்கிப்
> பிறங்குநிலைமாடத் துறந்தை போக்கிக்
> கோயிலொடு குடிநிறீஇ
> வாயிலொடு புழையமைத்து
> ஞாயிறொறும் புதைநிறீஇ"

என்ற பட்டினப்பாலை செய்யுளடிகளால் தெரியக் கிடக்கின்றது.

இத்தகைய பாதுகாப்பு காரணமாக விவஸாயிகள் மிக்க சிறப்புடன் விளங்கினார்கள். வியாபாரம் மிகச் செழித்தது. வெளிதேசங்களிலிருந்து குதிரை, கற்பூரம், சந்தனம், அகில் முதலியவை விசேஷமாகத் தென்தேசத்துக்குக்கொண்டுவரப் பெற்றன. தென்தேசத்திலிருந்து முத்து, பவழம், மிளகு, வாஸனைஸாமான்,முதலியவை வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்யப்பெற்றன. இவ்விதமாக வியாபாரம் நடந்து வந்தமையால், அரசனுக்கு ஏற்றுமதி இறக்குமதி மூலமாக வரக்கூடிய இறைவரியிலிருந்து வருமானமும் அதிகரித்தது. கடலோரங்களில் கட்டப்பட்டுள்ள பெரிய மண்டிகளில் இரவும் பகலும் வந்திறங்கிய பொருள்களுக்கு இறைவரி யதிகாரிகள் அப்போதைக்கப்போது வரி போட்டு, அதைப் பெற்றுக் கொண்டு, ஸாமான்களை எடுத்துப்போக உத்தரவு கொடுத்தார்கள்.

“அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
யருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி.”

என்ற செய்யுளடிகளால் அரசனுடைய உத்தியோகஸ்தர்கள் ஆங்காங்கு சென்று பண்டப் பொதியின்மீது சோழன் கொடியின் அடையாளமாகப் புலிப்பொறியை அப்பண்டப்பொதிகளின்மீது பொறித்து விடுவார்கள். அவ்வாறு பொறித்த பிறகு, வரியைக் கொடுத்து ரசீது பெற்றுக்கொண்டுதான் வியாபாரிகள் தமது பண்டங்களை எடுத்துப் போவார்கள்.

வியாபாரத்துக்காக வெளியூர்களிலிருந்து வந்துள்ள வர்த்தகர்கள் உள்ளூரிலிருந்த வர்த்தகர்களோடு இனிமையாக உறவாடி கலந்து வாழ்ந்தார்கள். அவர்களைப் பற்றிப் பேசுமிடத்து, கவி,

“பதிபழகிக் கலந்தினி துறையும்”

வர்த்தகர்கள் என்று சிறப்பித்திருக்கிறார்.

இவ்வாறு கரிகாலன் தானும் நடுநிலைமையினின்றும் வழாது, குடிகளும் வழாமல் இருக்கத்தக்க ஏற்பாடுகளையும் செய்து சிறப்புற்றோங்கினான்.

C. P. வேங்கடராமய்யர், எம். ஏ.

# நியாய மாலா

## POPULAR MAXIMS EXPLAINED

इक्षुरस न्यायः

ఇక్షురస న్యాయః

### 20. இக்ஷுரஸ ந்யாயம்

கரும்பு மிக ருசியான வஸ்து. இதில் ரஸபேதம் உண்டு. கரும்பின் நுனிபாகம் போக, ருசி குறைந்துகொண்டும், அடிபாகம் போகப் போக ருசி அதிகமாகிக் கொண்டும் வரும். இந்த நியாயம் பொதுவாக முதலில் ஒருவிதமாகவிருந்து வரவர அதிகரிக்கும் விஷயங்களிலும், அல்லது குறையும் விஷயங்களிலும் உபயோகப்படும். துஷ்டர்கள் நேசம் முதலில் மிக ஸுகமாயிருந்து வரவர பெரியதுக்கத்தை விளைக்கும். இது கரும்பின் ருசி அடியிலிருந்து நுனி போகும்கால் குறைவதுபோலிருப்பது; நல்லோர் இணக்கமோ முதலில் மிகக் கஷ்டமாகவிருந்து முடிவில் பெரிய ஸுகத்தை விளைக்கும். இது கரும்பின் ருசி நுனியிலிருந்து அடிநோக்கிப் போகும் கால் அதிகரிப்பதுபோலவுள்ளது. இதுபோலவேதான் நல்லோர் வாக்கால் ஏற்படும் இலக்கியம், அதாவது எழுத்தாலாகிய கல்வியும், தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும். இந்த விஷயத்தில் ஒரு பெரிய கவி வேறுவித உபமானம் ஒன்று கூறுகிறார். தீயோர் இணக்கம் காலை ஸூர்யன் ஒளியால் ஏற்படும் நிழல் வரவரக் குறைந்து, நடுப்பகல் ஒன்றுமில்லாமல் போவது போல முதலில் ஸுகமாகவிருந்து குறைந்து முடிவில் ஸுகம் இல்லாமலே போய்விடும்; பெரியோர் இணக்கமோ நடுப்பகல் ஸூர்யனால் ஏற்படும் நிழல் ஒன்றுமில்லாமலிருந்தும் மாலைக் காலம் வரவர நீண்டு வருவதுபோல முதலில் ஸுகமில்லைபோலத்தோன்றினும் வரவர ஸுகத்தில் அதிகரித்து முடிவில் பேரின்பத்தைவிளைக்கும். கடோபநிஷத்திலும் இந்நியாயத்திற்கு உதாரணம் ஒன்று உண்டு. யமன் நாசி கேதஸ்ஸுக்கு உபதேசம் பண்ணத் தொடங்குகையில் ‘உலகில் சிரேயஸ்கரமானவை, ஸுககரமான

347



வை என விஷயங்கள் இரண்டு விதம்' என்று கூறுகிறான். ஸுககரமானவை முதலில் இன்பமாயிருந்து முடிவில் வெறுப்புக்கிடனாகும். ஆதலால் கரும்பின் ரஸம் அடியிலிருந்து நுனி நோக்கித் தின்று போகுங்காலிருப்பது போலவிருக்கும். சிரேயஸ்கரமானவையோ முதலில் வெறுப்பானவைபோலவிருந்து முடிவில்பேரானந்தத்தை விளைக்கும்; கரும்பை மாறுய்த் தின்று வருங்காலிருக்கும் ருசிபோல வாகும். ஆகவே விஷயஸுகத்தின் நிலை அடியிலிருந்து நுனி வரையில் தின்னப்படும் கரும்பின் ருசிபோலவும், பரம்பொருள் தியான விஷயம் கரும்பை மாறுகத் தின்னுவது போலவும் இருக்கும்.

इक्षुविकार न्याय ः

ఇక్షువికార న్యాయః

### 21. இக்ஷுவிகார நியாயம்

கருப்பஞ்சாறு திரவமாக விருக்கிறது. அதிலிருந்து உண்டாகும் சர்க்கரை, வெல்லம் முதலியவை கடின பதார்த்தமாகவிருக்கின்றன. ஆகையால் பிரகிருதியைப்போல (காரணத்தை; ஆதியைப்போல) விகிருதி (கார்யம்; முடிவு) இருப்பதில்லை. சிற்சில பாகங்களில் ஒற்றுமையுடனுமிருக்கலாம். இங்கு ருசியில் எல்லாம் ஒரே மாதிரியாக விருக்கின்றன. ஆகவே வஸ்து விஷயத்தில் மாற்றமின்றி, உருவம் முதலிய சக்தி விஷயத்தில் மாறும் மாற்றமாகிய **சக்திதத்வ மற்ற** (Physical Change) விஷயமாக இந்த நியாயம் உபயோகப்படும்.

इषुवेगक्षय न्यायः

ఇక్షువేగక్షయ న్యాయః

### 22. இக்ஷுவேகக்ஷய நியாயம்

**பாணம்**, குண்டு முதலியவைகளை விடுகையில் முதலில் வேகமாகப் புறப்பட்டு வரவர வேகத்தில் குறைந்து முடிவில் வேகம் ஓய்ந்து விழுந்து விடுகின்றன. எந்த விஷயத்திலும் முதலில் வெகு ஊக்கத்துடன் இருந்து வரவர உத்ஸாஹம் குறைந்துபோகும் குணமாகிய **ஆரம்பசூரத்வ** விஷயமாக இந்நியாயம் உபயோகப்படும்.

उत्पाटितदन्तनाग न्यायः

ఉత్పాటిత దంతనాగ న్యాయః

### 23. உத்பாடித தந்தநாக ந்யாயம்

'**பை**ங்கண்ணாவிற்கு விஷம் பல்லளவே' என்றபடி பாம்புக்கு விஷம் பல்லிலே. அதைப் பிடுங்கி விட்டால் அதைப் பூமாலைபோலப் பயமின்றி எடுத்து மேலே போட்டுக்கொள்ளலாம். பாம்பு சாந்தமாகிவிடும். இதுபோலவே துஷ்டர்கள் சக்தியை ஒடுக்கிவிட்டால் அவர்கள் வெகு நல்லவர்களாகி விடுவார்கள். இந்திரியங்களுக்கு வெளிச் சென்று விஷய ஸம்பந்தப்பட்டு ஸுகம் அடைய முயல்வதேவிஷப்பல். இந்தப்பல்லை ஞான நிஷ்டையால் பிடுங்கிவிட்டால், ஞானி இவைகளோடுகூடியிருந்தும், இவைகளால் ஒருவிதகெடுதியும் ஏற்படாது. எப்பொழுதும் ஸுகரூபியாகவே இருப்பான். இம்மாதிரி செய்தால்தான் இப்பாழுலகில் ஆனந்த ரூபியாக விருக்கலாம் என்பதைக் கிருஷ்ண பரமாத்மா ஐந்தலை (பஞ்சேந்திரிய ரூபமானக்) காளிங்கன் மேல் நர்த்தனமாடி விஷத்தைக் கக்கும்படி செய்து விட்டுவிடுவதும், பாலஸுப்ரஹ்மண்யர் சூர பத்மாஸுரனுடன் அநேக விதமாகப் போர்செய்து அவன் கொடிய உருவங்களை நீக்கி நல்ல உருவங்களான மயில் கோழியாக வருங்கால் வாஹனமும் கொடியுமாக ஏற்று ஆட்கொண்டதும் நன்கு விளக்கும். ஆகவே **கூர்ம விருத்தி** (அபாய காலங்களில் ஆமை தனது நான்கு கால், தலை ஆகிய ஐந்தையும் வெடுக்கென்று தன்னை அறியாதும் இழுத்துக் கொள்ளுவது போல, விஷயங்கள் வந்து தாக்குங்கால் இயல்பாகவே ஐந்து இந்திரியங்களையும் உள்முகப் படுத்தும் சக்தி) வாய்ந்த ஞானிக்கு ஐந்தலை நாகமாகிய இந்திரியங்கள் பல்லெடுத்த பாம்பே ஒழிய வேறொன்றுமன்று. ஈசுவர ஸ்ருஷ்டியில் உள்ளவைகள் பொது, அவைகளிலிருந்து கொடியவைகளைத் தகைந்து நல்லவைகளை கிரஹிக்கு மிடங்களில் இந்நியாயம் உபயோகப்படும்.

## VIII. சூரியனும், பூமியும் வருஷகதி

### THE SUN & THE EARTH—ANNUAL MOTION

(தொடர்ச்சி)

சென்ற நவம்பர் மாதத்து விவேக போதினியில் (199-பக்கம்) சூரியோச்ச காலங்கள் பிரதி தினமும் 24-மணி நேரத்துக்கொரு முறையும், நக்ஷத்திரங்களின் உச்ச காலங்கள் 23-மணி, 56-நிமிஷத்துக் கொருமுறையும் சம்பவிக்கின்றனவென்று சொன்னோம். இவ்விதத் தினகதித் தோற்றம் பூமி தன்னைத்தானே சுற்றுவதாலுண்டாகிறதல்லவா? ஆகையால் பூமி தன்னைத் தானே ஒரு முறை சுற்றுவது நக்ஷத்திரங்களை அபேக்ஷித்து 23-மணி 56-நிமிஷத்துக்கொருதரமென்றும் சூரியனை அபேக்ஷித்து 24 மணிக் கொருதரமென்றும் ஏற்படுகிறது.

சூரியன், நக்ஷத்திரங்கள், இவை யெல்லாம் அந்தரத்தில் அசைவற்றுநின்றால் இவ்விதக்கால வித்தியாஸங்களேற்படுவதற்குக்காரணம் யாது? ஒருவிதம், சூரியன் நக்ஷத்திரங்களை அபேக்ஷித்துக் கிழக்கு நோக்கி நகர்வதாகவேண்டும். அவ்விதமாயின், நக்ஷத்திர உச்சகாலங்களைவிட சூரியோச்ச காலங்கள் தினமொருமுறை 4-நிமிஷம் தாமதப்படுவதற்கு ஹேது வேற்படும். அல்லது, நக்ஷத்திரங்களெல்லாம் சூரியனை அபேக்ஷித்து, மேற்கு நோக்கி நகர்வதாகவேண்டும். அவ்விதமாயின், நக்ஷத்திரோச்ச காலங்கள் தினமொருமுறை சூரியோச்சகாலங்களை விட 4-நிமிஷகாலம் முன்னால் சம்பவிக்கலாம். தவிர இவ்வித காலபரிமாண வித்தியாஸத்தால், சூரியன் இன்று எந்த நக்ஷத்திரத்துக் கருகாமையில், எந்த ஸ்தானத்தில் காணப்படுகிறதோ, அந்த ஸ்தானத்தை விட்டு விலகி மறுநாள் கொஞ்சம் கிழக்கே தள்ளப்பட்டிருப்பதாகத் தோன்றவேண்டுமென்பது தெளிவாகிறது. இப்படிக் கொஞ்சங் கொஞ்சமாக மேற்சொன்ன ஸ்தானத்துக்கும் சூரியனுக்குமுள்ள தூரமதிகரித்துக்கொண்டே வந்து, கடைசியாக ஒரு வருஷகாலமானதும், சூரியன் முன் ஸ்தானத்துக்கே வந்து விடுவதாகத் தோன்றும்.

இந்த ஸந்தர்ப்பத்தில் நாம் கவனிக்க வேண்டிய விஷயமொன்றுண்டு. நமக்கும் சூரியனுக்குமுள்ளதூரம் சுமார் ௯-கோடி மைல். ஆனால் பூமிக்கும் நக்ஷத்திரங்களுக்குமுள்ள தூரமோ அதைவிட அநேக மாயிரம் மடங்கு கொண்டது. இவ்விஷயத்தை வான சாஸ்திரிகள் வெகுப்பிரயாஸைப்பட்டு நிஸ்ஸந்தேகமாய் ஸ்தாபித்திருக்கிறார்கள்.

எப்படித் தினகதித்தோற்றம் பூமி தன்னைத் தானே ஒருமுறை தினம் சுற்றுவதாலுண்டாகிறதென்று கண்டோமோ, அதேவிதமாய் இவ்வருஷ மாறுதல்களும், பூமி சூரியனைச்சுற்றி வருவதால் ஏற்படலாமென்பது பின்வரும் உதாரணங்களால் தெளிவாகும்.




இந்தப்படத்தில் காட்டியிருக்கிற வீட்டின் முன் நிற்கும் மரத்தை, அதன் அருகாமையிலிருக்கும் ரஸ்தா வழியே போகும் ஒரு மனிதன் பார்த்துக் கொண்டேபோனால், A - இடத்தில் போகும்போது அம்மரம் வலது பக்கத்து ஜன்னலுக்கு எதிராகவும், B - இடத்தில் அவ் வீட்டின் வாயிற்படிக்கெதிராகவும், C - இடத்தில் இடதுபக்கத்து ஜன்னலுக்கெதிராகவு மிருப்பதாகத் தோன்றும். X, Y. இந்த இடங்களிலிருக்கும்போது அம்மரத்தின் திசை வீட்டை விட்டு விலகிக் காணப்படும். இம்மாறுதல்



காலஞ்சென்ற ஹானரபிள்

மிஸ்டர் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர், ஸி. எஸ். ஐ.

THE GUARDIAN PRESS MADRAS

களெல்லாம் அம்மனிதன் மாறுவதாலுண்டாவதே தவிர வேறில்லை.




Fig. 2.

இதேமாதிரி, இங்கு படத்தில் காட்டியபடி, சூரியனை ஸ்திரமாக வைத்து, அதைச்சுற்றி பூமி வருஷமொருமுறை வருமானல், பூமி $E_1$ இடத்திலிருக்கும்போது சூரியன் A-என்னும் நக்ஷத்திரத் திசையில் இருப்பதாகவும், $E_4$-ல் இருக்கும்போது B-நக்ஷத்திரத்தருகே இருப்பதாகவும், பூமி யொருமுறை முழுதும் சுற்றி வந்தவுடன், சூரியன் மறுபடியும் A-என்னும் ஸ்தானத்துக்கே திரும்பி வந்து விட்டதாகவும் தோன்றுகிறது.

ஆகையால் சூரியன் நக்ஷத்திரமண்டலங்களின் நடுவே வருஷ மொருமுறை சுற்றி வருவதாகத் தோன்றுவது, பூமியானது சூரியனை வருஷமொருமுறை சுற்றி வருவதாலாகிய தோற்ற மென்றேற்படுகிறதல்லவா? மேலும், பூமி சூரியனை விட அநேகமாயிரம் மடங்கு சிறியதானதால், சூரியன் பூமியைச் சுற்றுவதைவிட, பூமி சூரியனைச்சுற்றுவது எளிதாகவும் யுக்தமாகவும் தோன்றுகிறது.

இவ்வருஷ கதியின் வேகம் எவ்வளவென்று நினைக்கிறீர்கள்? சூரியனுக்கும் பூமிக்கும் 9-கோடி மைல் தூரமாகையால், இப்பெரும் யாத்திரையின் சுற்றளவு சுமார் 58½ கோடிமைலாகிறது. இந்த யாத்திரையை ஒருதரம் செய்து முடிக்க 365-நாள்கள் செல்வதால், நாளொன்றுக்குப் பூமி 16-லக்ஷம் மைல் தூரம் ஓடுவதாகிறது. அதாவது இந்த க்ஷணத்தில் இருந்த இடத்தை விட்டு இன்னம் ஒருமணிநேரத்தில் சுமார் 67-ஆயிரம் மைல் தூரம் விலகிவிடும்! இவ்வளவு வேகமான ஓட்டமும், தன்னைத்தானே பூமி சுற்றுவதும் வெகு அமரிக்கையாய் கொஞ்சங்கூட சலன மில்லாமல் நடக்கிறபடியால் நாம் சிறிதும் அவைகளை உணர்வதேயில்லை.

ஒரு வண்டி சக்கரம் தன்னைத்தானே சுற்றும்போது, அதன் எல்லாப் பாகங்களும் அதன் அச்சை சுற்றி வருகின்றன. பம்பர மொன்று அசைவற்று நின்று சுற்றும்போது, அதன் ஆணி மத்திய ரேகையை அப்பம்பரத்தின் ஒவ்வொரு பாகமும் சுற்றுகிறது. இவைகள் போலவே, பூமி தன்னைச் சுற்றும் விஷயத்தில், அதன் அச்சுஸ்தம்ப ஸ்தானத்தில் ஒரு ரேகையைச் சுற்றிச் சுழல்வதாக நாம் நினைத்துக் கொள்ளலாம். இதற்கு உதாரணமாக, ஒரு கிச்சிலிப் பழத்தின் மத்தியமாக ஒரு இரும்பு ஊசியைச் சொருகிப் பார்ப்பதைச் சொல்லலாம். இவ்வூசி அப்பழத்தில் ஓரிடத்தில் பிரவேசித்து அதற்கு நேராக எதிர்புரத்தில் வெளிப்படும். அதுபோல பூமியின் அச்சுரேகை பூமிதலத்தில் எதிர்முகமாயுள்ள இரண்டு (N, S) இடங்களில் முடிவு பெறவேண்டும். அவைகளில் ஒன்று (N) துருவ நக்ஷத்திரத்தை (P)யை நோக்கி இருப்பதால் அதற்கு உத்தரத் துருவ மென்றும், மற்றொன்றுக்கு (S) தக்ஷணத்துருவ மென்றும் பெயரிடலாம். இவ்விரு துருவத்தினின்றும் சமதூரமாய் பூமியைச் சுற்றி (ER) ரேகையை ஏற்படுத்தி, அதற்குப் பூமத்திய ரேகை (Equator) என்று பெயரிடலாம்.

பூமியானது சூரியனைச் சுற்றி வருகையில், மேற் சொன்னத் துருவரேகை (NS) பூமியின் கதிமார்க்கமட்டத்துக்கு (plane of the Earth's orbit) A, என்னு மிடத்தில் காட்டியபடி




Fig. 3.

செங்குத்தாயிராமல், B, இடத்தில் காட்டியபடி சாய்வாயிருக்கிறது. மேலும், பூமி சூரியனைச்




Fig. 4.

சுற்றிச் செல்லும்போது, இவ்வச்சுச் சாய்வு எப்பொழுதும் ஒரே பக்கமாக, ஒரே திசையை நோக்கி நிற்கிறது. இவ்விஷயம் இப்படத்தினுல் தெளிவாகலாம். ஒருபந்தில் நீண்ட இரும்பு கம்பியைக்குத்தி, அது மேற் சொன்னவளவு சாய்ந்து நிற்கும்படி பந்தை ஒரு பக்கத்தில் கனப்படுத்தி ஒரு தொட்டி ஜலத்தில் பாதிவரையில் மூழ்கும்படி மிதக்கவிட்டு, கையால் திரித்துச் சுற்றிக்கொண்டே வந்தால், பூமி சூரியனைச் சுற்றிவரும் விதத்தை ஒருவாறு உதாகரிக்கலாகும். (தொட்டி மத்தியில் சூரியனிருப்பதாகப் பாவனைசெய்துகொள்ளவேண்டும்). மேலே சொன்ன பூமியின் துருவரேகை (அச்சு) யின் சாய்வு எப்போதும் ஒரேபக்கமாய்ச் சாய்ந்திருக்குமாவென்று சந்தேகப்பட இடமில்லை. வெகு வேகமாய்ச் சுற்றிவரும் பம்பரம், அதன் 'தலை




Fig. 5.

கனம்' எவ்வளவு இருந்தபோதிலும், அவ்வேகம் தணிகிறவரையில் தலை சாய்க்காது. அதே மாதிரி, பூமிபோன்ற வெகு வேகமாய்ச் சுழன்றுகொண்டிருக்கும் வஸ்துக்களின் அச்சின் திசையை மாற்றுதல் கடினம்.

இவ்வாருகப் பூமிச்சுற்றிச் செல்லுகையில், BD, என்னுமிடத்தில் பூமி வரும்போது அதன் மத்திய பாகத்துக்கு (Equatorial regions) நேராகச் சூரியன் அத்தினங்களில் உதித்து, ஆகாயத்தைக் கடந்து, அஸ்தமிக்கும் C யிடத்திலிருக்கும்போது உத்தரத்துருவம் சூரிய வெளிச்சத்தை யடையாமல் மறைபட்டு, தக்ஷிணத்துருவம் சூரியனை நோக்கிச் சாய்ந்திருப்பதால் சூரிய வெளிச்சத்தைப் பூர்ணமாயடைந்து, பூமி மத்தியரேகைத் தெற்கிலுள்ளோருக்கு உஷ்ணம்அதிகமாகக்கிடைக்கும். A இடத்தில் பூமி வரும்போது C இடத்தில் கண்டதற்கு நேர்விரோதமாக தக்ஷிண உத்தரத்துருவப் பிரதேசங்களில் அநுபவங்கள் மாறுபட்டுத் தோன்றும். பூமி மத்தியரேகையின் வடக்குப்

பிரதேசங்களில் வசிப்போர்கள் உஷ்ணத்தை யதிகமாய் அடைவார்கள். இதன் விபரம் சித்திரத்தால் நன்கு விளங்கும். எனெனில், A இடம் வழியாய் பூமி போகும்போது, மேல் சொன்ன உத்தரப்பிரதேசங்களில் பகல் இரவை விட நீண்டதாகவும், C இடத்தில் பூமி வரும் போது, தக்ஷிண பாகத்திலிருப்போர்க்குப் பகல் இரவைவிட நீண்டதாகவும் இருக்குமாகையால், அந்தந்த இடங்களில் உஷ்ண லாபங்கள் ஏற்படும். A, B, C, D, இந்த ஸ்தானங்களுக்கிடையில் பூமி வரும்போது, தாராதரப்படி வெளிச்சமும் இருட்டும் அந்தந்தத் தினங்களில் ஏற்படும்.

மேலும், படத்தில் காட்டியபடி, பூமியின் மார்க்கத்தில் AB, BC, CD, DA, என்பவை ஒவ்வொன்றும் கால்பாகம். ஆகையால் A யிலிருந்து B க்குப்போக 3-மாதகாலமாகும். இதே மாதிரிதான் மற்றமூன்று பாகங்களிலும்.

இம்மாறுதலையொட்டி, நம் நாட்டாருக்குச் சில நாள்களில் நமக்கு வடக்குப்பக்கமாகவும், சில நாள்களில் நமக்குத் தெற்குப்பக்கமாகவும், மற்றுஞ்சில நாள்களில் ஏறக்குறைய கிழக்கு மேற்காகவும் சூரியோதய, உச்ச, அஸ்தமனங்கள்




Fig. 6.

காணப்படுகின்றன. இது படத்தில் தெளிவாய் விளங்கும். முன் தினங்களில் சூரியன் ஆகாயத்தில் செல்லுவதாகத் தோன்றும் மார்க்கங்கள் வரையப்பட்டிருக்கின்றன. மேலும் நாம் எற்கனவே தெரிந்துகொண்டிருக்கிற பிரகாரம் உத்தராயண காலத்தில் அகஸ்ஸு (அதாவது பகலளவு) இரவளவைவிட அதிகமாய்க்கொண்டே வருவது, அதற்கு விரோதமாய் தக்ஷிணாயனத்தில் பகல் க்ஷீணித்து இராப்பொழுததிகரித்துக் கொண்டே வருவதும் தெளிவாய் விளங்கும்.

ஆகவே, நமக்கு ஏறக்குறைய நேர் கிழக்கு மேற்காய் சூரியதினகதி ஏற்படும்போது, நம்மிடத்துக்கு அநேகமாய்ச் செங்குத்தாய் சூரிய கிரணங்கள் பகல் மத்தியில் வந்து சேருவதாலும், இரவைவிட பகல் நேரமதிகமாயிருப்பதாலும், சூரிய உஷ்ணம் ஜாஸ்தியாகக் கிடைத்துக் கோடைகால சமயம் ஸம்பவிக்கிறது. மற்றக் காலங்களில் சூரியகிரணங்கள் முன்போல அவ்வளவு செங்குத்தாக விராமல் சாய்வாக நமக்குக் கிடைப்பதாலும், பகல் நேரம் இரவைவிடக் குறைந்து வருவதாலும் சூரிய உஷ்ணம் குறைந்து குளிர்காலம் ஏற்படுகிறது.

இதுவும் தவிர, பூமி A என்னுமிடத்தில் (See fig. 5) பூமிவருகையில் சிலகாலம் சூரியன் எப்போதும் அடிவானத்துக்கு மேலேயே உலாவுவதாகத் தோன்றி உத்தரத்துருவத்திலும் அதைச் சுற்றிலுமுள்ள பிரதேசங்களிலும் நெடும்பகலைக் கொடுக்கும். இதேமாதிரி C இடத்தில் பூமி வரும்போது தக்ஷணத்துருவப்பிரதேசங்கள் அநுபறங்களுண்டாகும்!

S. பாலகிருஷ்ணய்யர், பீ. ஏ., எல். டி.

---

நீதிஸாரம்.—1. மனிதர்கள் புண்ணியத்தின் பயனை விரும்புகிறார்களேயன்றி, அதனைப் பெறுவதற்குக் காரணமாகிய புண்ணியத்தைச் செய்ய விரும்புகிறதில்லை; அவ்வாறே பாவத்தின் பலனை விரும்புகிறதில்லை; ஆனால் பாவத்தையோவெனின், வேண்டுமென்றே செய்கிறார்கள்.

2. ஜனங்கள் கிருபணனிடத்திற்குச் சென்று எனக்குக் கொடு” என்று அவனைக் கேட்பதானது, “நீ கொடாதிருந்து என்னைப்போலாகவேண்டும், “என்று அவனுக்கு உபதேசஞ் செய்ததுபோலாகுமேயன்றி எற்பதாகாது.

3. அறிவுடையோரது காலமானது, அருங்கலை விநோதர்களாய், நீதியையும் சாஸ்திரங்களையுங் கற்பதில் கழிகின்றது. மற்றவர்களின் காலமோவென்றால் தூங்குவதினாலாயினும், கலகமிடுவதினாலாயினுங் கழியும்.

4. கொடுக்க மனமிருந்தால் பொருளிராது; பொருளிருந்தால் கொடுக்க மனமிராது. இவ்விரண்டுமிருந்தால், கொடுக்க நல்ல பாத்திரமகப்படாது; ஆதலால் நல்ல மனது, பொருள், பாத்திரம் இம்மூன்றும் ஒருவன் புண்யஞ் செய்திருந்தாலன்றி அவனுக்குப் பொருந்தாவாம்.

## பறவைகளின் கூடுகளும் முட்டைகளும் குஞ்சுகளும் *

## BIRDS' NESTS, EGGS &c.

தேவையானவை.—பல பறவைகளின் முட்டைகளும் கூடுகளும் குஞ்சுகளும் பல. கோழிமுட்டைகள் இரண்டு மூன்று. கத்தி ஒன்று. தட்டு ஒன்று. கிண்ணம் ஒன்று. தீபம் ஒன்று. பந்து ஒன்று. இவைகளே.

பறவைகளெல்லாம் முட்டைகளையே இடும் என்பது உங்களுக்குத் தெரியவரும். அவற்றில் புல்புல், வானம்பாடி முதலிய சிறு பறவைகள் வருஷத்தில் ஒரு தடவையும், கோழி, வாத்து போன்றவைகள் அநேக தடவையும் முட்டைகளை யிடும். இதோ இங்குள்ள பலவகை முட்டைகளைப் பாருங்கள். இது ஒரு சுண்டக்காயளவுதானிருக்கிறது. இது ஒரு சிட்டுக் குருவியின் முட்டையாகும். இதோ புறாவின் முட்டை. இதோ வாத்தின் முட்டை. இதோ கோழி முட்டை. இவை ஒவ்வொன்றும் ஒரு எலுமிச்சம் பழமளவிருக்கின்றன. ஒட்டகப் பக்ஷியின் முட்டையானது ஒரு உரித்த தேங்காயளவிருக்கும். இவற்றிலிருந்து நாம் அறிவது என்ன? முட்டைகளின் ஆகிருதி அவைகளின் தாயின் ஆகிருதிக்குத் தக்கபடி இருக்கிறதென்றே.

அன்றியும் பறவைகள் இடும் முட்டைகள் எண்ணிக்கையிலும் வித்தியாசமுண்டு. சில பறவைகள் தடவைக்கு ஒன்று அல்லது இரண்டும், சில நாலைந்தும் முட்டைகளை இடுகின்றன. இப்படிக்கேன்? பறவைகள் முட்டைகளை இடும் இடங்களைக் கவனிப்போம். கோழி வாத்து போன்ற பறவைகள் திறந்த வெளிகளில் வெறுந் தரையிலாவது அல்லது மணலில் சற்றுப் பள்ளம் பறித்தாவது அநேகம் முட்டைகளை யிடுகின்றன. இம்முட்டைகள் நமக்கும் பல பிராணிகளுக்கும் மிகுதியாய் இரையாய் விடுவதால் ஏதோ தப்பிப் பிழைத்தன சிலவே முட்டை உடைந்து குஞ்சுகளாகின்றன. அதனால் தான் இப்பறவைகள் அநேக முட்டைகளிடுகின்றன. கிளி, புறா, ஆந்தை போன்ற சில பறவைகள் அவை வசிக்கும் மரப்பொந்துகளில் முட்டை இடுகின்றன. மற்றும் சில பறவைகள் முட்டையிடுவதற்கு வெகுகாலம் முன்னதாகவே தாயும் தந்தையுமாகப் பல விடங்களில் அகப்படும் புல், முள், இலை, உரோமம், குச்சி முதலியவற்றைத் தேடி எடுத்துக்கொண்டு வந்து மரத்தின் உச்சியிலும் பாறைகளினிடையிலும் நமது வீட்டு அட்டங்களிலும் மற்றும் பத்திரமான விடங்களிலும் கூடுகட்டி அதில் ஒன்று இரண்டு முட்டைகளை யிடுகின்றன. கூடுகளில் வளரும் இம்முட்டைகள் எளிதில் நாசமடைவதில்லை. அதனால்தான் இப்பறவைகள் ஒன்று அல்லது இரண்டு முட்டைகளை இடுகின்றன.



கூடும் குஞ்சுகளும்

கூடு.—இப்பொழுது இந்தப் பலவிதமான பறவைக் கூடுகளைப் பாருங்கள். வெகு நேர்த்தியாயும் பல மாதிரியாயும் செய்யப்பட்டிருக்கின்றன. ஒருவிதக் கூடானது அகன்ற வாயையுடைய கிண்ணம்போ லிருக்கின்றது. பச்சென்ற பல இலைகளைச் சேர்த்துத் தைத்ததுபோலுமிருக்கின்

* இதைப்போன்ற மற்றப் பாடங்களை "ஜீவவர்க்க போதினி" என்னும் புஸ்தகத்தில் பார்க்கலாம்.

றது. இது ஒரு தைலத்தின் (Swallow) கூடு. தைலமானது பல இலைகளைத் தன் எச்சிலோடு கலந்து கூடுகட்டும். இந்தக் கூட்டைக் கொண்டு வந்து அநேகர் ருசியுடன் உண்பார்கள். இதோ இந்தக் கூடோ கவிழ்த்துவைத்த ஒரு நார்ப்பை போலிருக்கிறது. இது தூக்கணாங் குருவியின் கூடாகும். இது குச்சியால் முடைந்த பெட்டி போலிருக்கிறது. இது காகத்தின் அல்லது நாரையின் கூடாகும். இதனால் பல பறவைகள் பலவிதமான கூடுகள் கட்டுமென்று தெரிந்து கொண்டோம்.

**நிறம்.**—இப்பொழுது நாம் முன் பார்த்த பல முட்டைகளின் நிறத்தைக் கவனிப்போம். சில முட்டைகளை கோழிமுட்டைகளைப்போல் வெண் மஞ்சள் நிறமாயும், புறா, சிட்டுக்குருவி இவற்றின் முட்டைகள் நீலமாயும், வேறு சில முட்டைகள் பல வர்ணங்களமைந்த சிறு புள்ளிகள் உள்ளனவாயுமிருக்கின்றன. இவ்வித மிருப்பானேன்? கோழியானது தரையில் மணலில்தானேமுட்டையிடுகிறது. அதனால்தான் அதன் முட்டைகள் மணல்போல் வெண்ணிறமா யிருக்கின்றன. இந்த முட்டைகள் செடிமரங்களில் இடப்பட்டபடியால்தான், இலை, மரத்தின்பட்டை இவற்றின் நிறம்போலிருக்கின்றன. ஆதலால் முட்டைகளின் நிறம் அவை இடப்படும் இடத்தை ஒத்திருக்குமென்றாயிற்று. இதனால் உண்டாகும் சாதகம் என்ன? கூறுங்கள்.

**உருவம்.**—இதோ இந்தக் கோழிமுட்டையைப் பாருங்கள். இது எப்படி இருக்கிறது. சற்று நீண்ட உருண்டை வடிவாக இருக்கிறதல்லவா? ஒரு பக்கம் கனமாயும் எதிர்ப்பக்கம் லேசாயும் இருக்கிறது. இப்படி இருப்பானேன்? நான் செய்வதைக் கவனியுங்கள். இதோ! இதென்ன? ஒரு பந்துதானே. இதன் உருவம் என்ன? மிகவும் உருண்டையா யிருக்கிறதல்லவா? ஆம். இதை மேஜையின்பேரில் வைக்கிறேன். பிறகு அதன் பேரில் மெதுவாக ஊதிக் காற்றைச் செலுத்துகிறேன். என்னவாகிறது. பந்தானது உருண்டுகொண்டேபோய்த் தொப்பென்று கீழேவிழுகிறதல்லவா? இப்பொழுது ஒரு கோழிமுட்டையை அதுபோலவே மேஜையின்பேரில் வைத்து அதை ஊதிப் பார்ப்போம். இதுவும் உருளுகிறது. ஆனால் நேரே ஒழுங்காக உருளவில்லை. ஒருநுனி பெருத்தும் கனமாயுமிருப்பதால் அதேவிடத்தில் சுற்றிச் சுற்றி உருளுகிறதே தவிர மேஜையிலிருந்து கீழே விழவில்லை. இம்முட்டையும் பந்துபோல் உருண்டிருந்தால் உருண்டுகொண்டே போய்த் தொப்பென்று கீழே விழுமல்லவா? கீழே விழுந்தால் உடையும். முட்டை உடைந்தால் உள்ளிருப்பது எல்லாம் வெளிவந்துவிடும். அப்படியாயின் குஞ்சுகளாகா வன்றோ?

இந்தப் பல பறவைகளின் முட்டைகளைக்கவனியுங்கள். சிறியதும் பெரியதுமா யிருந்தபோதிலும் எல்லாம் கோழி முட்டைபோல் நீண்ட உருண்டை வடிவமாகவே இருக்கின்றன. பறவைகள் பாறையிலும் மரத்திலும் முட்டையிடுமென்று சொன்னோம். காற்றுப் பலமாக அடிக்கும்பொழுது இம்முட்டைகள் பந்தைப்போலிருந்தால் உருண்டுபோய்க் கீழே விழுந்து உடைந்து போகுமல்லவா? அப்படி உருண்டு போகாமலிருப்பதற்கே முட்டைகளெல்லாம் நீண்ட உருண்டை (Oval) வடிவாக இருக்கின்றன.

**முட்டையின் அமைப்பு.**—இப்பொழுது முட்டைகளின் அமைப்பைக் கவனிப்போம். இதோ ஒரு கோழிமுட்டை. இதைக் கையிலெடுத்துச் சற்று அழுத்திப் பாருங்கள். கைக்குக் கெட்டியாய்க் காண்கிறதல்லவா? இப்பொழுது தூக்கிப்பாருங்கள். சற்றுப் பளுவாயிருக்கிறது. இதனுள் என்ன இருக்கிறதென்று பார்க்க இதோ இந்த மேல் பக்கத்தில் கத்தியால் கொஞ்சம் துவாரமிடுகிறேன் பாருங்கள். இப்போது இதனுள் என்ன இருப்பதாகத் தெரிகிறது. ஏதோ ஒருவித ஜலமிருப்பதாகக் காண்கிறதல்லவா? இதை மெதுவாக இந்தத் தட்டில் ஊற்றுகிறேன். நீங்கள் நான் ஊற்றும்போது கவனித்துப் பாருங்கள். இப்பொழுது வெள்ளை ஜலம்

விழுந்ததல்லவா? இப்பொழுதென்ன, மஞ்சள் ஜலமல்லவா விழுகிறது. இதை நன்றாகக் கவிழ்க்கிறேன். ஜலம் எல்லாம் விழுந்துவிட்டது. இதற்குள் பாருங்கள். உள்ளே ஒன்றுமில்லாமல் போலாகத் தெரிகிறதல்லவா? இதற்குத்தான் ஓடு என்று பெயர். இதுதான் உள்ளிருந்த ஜலத்தை வெளிவிடாமல் காத்து வந்தது. இந்த ஓட்டை நொறுக்கிக் கீழே போடுகிறேன். தனித்தனி தூளாக விழுகிறதா? இல்லை. ஓடு உடைந்துமட்டும்போய் தூட்களெல்லாம் ஒன்றோடொன்று உட்பக்கமிருக்கும் ஒரு வெளுப்பான மெல்லியதும் மிருதுவானதுமான தோலில் ஒட்டிக்கொண்டிருக்கின்றன பாருங்கள். ஆகையால் இந்தத் தோலும் உள்ளிருந்த நீரைச் சுற்றியிருந்ததே.




உடைத்த கோழிமுட்டை

1. ஓடு 2. வெண்பிசின் 3. மஞ்சட் பிசின் 4. கரு.

இப்பொழுது இந்தத் தட்டில் நாம் முட்டையிலிருந்து ஊற்றின நீரைத் தொட்டுப் பாருங்கள். பிசின்நீர்போல் கையில் ஒட்டிக்கொள்ளுகிறதல்லவா? இந்த வெள்ளை மஞ்சளாகிய இரண்டுவித நீரும் முட்டைக்குள் எவ்விதமாய் அமைந்திருந்தன வென்பதையும் அவைகளின் உபயோகமென்ன வென்பதையும் கவனிப்போம். இதோ இந்தக் கோழிமுட்டையை நீரில் போட்டு 10 நிமிஷம் வேகவைக்கிறேன். உஷ்ணம் நீங்கச் சற்றுநேரம் இம்முட்டையை ஆறவைப்போம். இப்பொழுது நன்றாய் ஆறிப்போய்விட்டது. இது இப்போது முன் பார்த்தபடிதானே இருக்கிறது. எங்கே, இதன் ஓட்டை முன் போலவே துவாரமிட்டுக் கவிழ்க்கிறேன். ஒன்றும் வெளிவரக் காணோமே? இதில் முன்னிருந்த ஜலம் எங்கே போயிற்று. ஓட்டை ஜாக்கிரதையாக உடைத்து எடுப்போம். முன் பார்த்த வெள்ளைத் தோல் மூடியையும் உரித்தெறிவோம். இப்பொழுதும் முட்டைவடிவாகவே யிருக்கிறதே. மிக வெளுப்பாகவும் காண்கிறது. இதைத் தொட்டுப் பாருங்கள். கைக்கு மிருதுவாய், அழுத்தினால் அமுங்குகிறதல்லவா? இதுதான்நாம்முன்பார்த்த வெள்ளைப்பிசின். இது இப்படிக் கெட்டியானதற்குக் காரணம் நாம் வேகவைத்ததே. அந்த முட்டையை நாம் முன் கவிழ்த்தபோது வெள்ளைப்பிசினுக்குப் பின் விழுந்த மஞ்சட்பிசின் எங்கே இங்கு காணோம். அது இதற்குள்ளிருக்கிறதோவென இதைச்சரிபாதியில் அறுத்துப் பார்ப்போம். நடுவில் மஞ்சளாகத் தெரிகிறதல்லவா? இதுதான் அந்த மஞ்சட் பிசின். வேகவைத்ததால் இதுவும் கெட்டியாய் விட்டது. மற்றொரு பாதிமஞ்சள் எங்கே? இதோ இந்தப் பாகத்திலிருக்கிறது. இந்த இரண்டு மஞ்சட் பாதியையும் இவைகளின்மேல் சூழ்ந்திருக்கும் வெள்ளையிலிருந்து வெளியிலெடுத்து ஒன்றோடொன்று சேர்க்கிறேன். இப்போது ஒரு மஞ்சள் நிறமான பந்தைப்போலிருக்கிறதல்லவா? இதோ மஞ்சளின் மேல் இங்கே கடுகளவு சற்றுச் சிவப்பாய்த் தெரிகிறதைப் பாருங்கள். இதுதான் கோழியினுடைய கரு. இக்கருவானது தன்னைச் சுற்றியிருக்கும் மஞ்சளைத் தின்று பெரிதாக வளர்ந்து பின்பு குஞ்சாகிறது. ஆனால் வெள்ளைப்பிசினும் வெள்ளைத்தோலும் மேல் ஓடும் எதற்காக விருக்கிறதென்றால், வளரும் கருவை நன்றாகக் காப்பாற்றுவதற்கேயாம்.

ஆனால் இந்த ஓடு ஏன் கெட்டியாக விருக்க வேண்டும் என்பீர்கள். ஓடு மெல்லியதாயிருந்தால் என்னவாகும்? நாம் முட்டையைச்சுடுநீரில் வைத்ததும் முட்டையினுள்ளிருந்த வெண்ணீரும் மஞ்சள்நீரும் எப்படிக் கெட்டியாய்விட்டதோ அப்படி முட்டையின்பேரில் உஷ்ணக்காற்று படுவதால் அவைகள் இறுகிவிடும். அதனால் அதனுள்ளிருக்கும் கரு அழிந்து போம்.

அதற்காகவே ஓடு கெட்டியாயமைந்திருக்கிறது. இந்த ஓட்டில் இன்னொரு விசேஷம். அதை நன்றாகச் சோதித்தால் அதில் நமக்குக் கண்ணுக்குத் தெரியாத அநேகம் சிறு துவாரங்களிருக்கும். வெளிக்காற்றானது இத்துவாரங்களின்வழியாய் முட்டையினுட் சென்று கருவுக்கு நல்ல காற்றைக் கொடுக்கிறது. உள்ளிருக்கும் கெட்ட காற்றும் இத்துவாரங்களின் வழியாகவே வெளிவருகின்றன. அதனால்தான் குஞ்சுகள் நன்றாக வளருகின்றன. ஆகையால் குஞ்சுகள் வளர இத்துவாரங்கள் அவசியமாகும். இத்துவாரங்கள் எவ்விதத்திலாவது அடைபடுமாகில் குஞ்சுகள் வளரா. ஒரு முட்டையைச் சுற்றிலும் நாம் வார்னிஷைப் (varnish) பூசி வைப்போமாகில் இத்துவாரங்கள் அடைபடுமாகையால் உள்ளிருக்கும் குஞ்சானது இறந்துபோம். முட்டையின் ஒரு பக்கத்தில்மட்டும் வார்னிஷ் பூசினால் அப்பக்கத்திலிருக்கும் குஞ்சின் அங்கங்கள் குறைவுறும்.

கோழிமுட்டையை நாம் உடைத்து முன் சோதித்தோமல்லவா? இப்பல முட்டைகளையுமுடைத்துச் சோதித்தால் கோழிமுட்டைபோலவே இம்முட்டைகளும் அமைந்திருக்கக் காணலாம். கெட்டியான ஓட்டினுள் மிருதுவான தோலும் வெண் பிசினும் மஞ்சட் பிசினும் இருக்கும். இந்த மஞ்சட் பிசினைக் கருவானது உண்டுவளரும். கருவானது குஞ்சாவதற்கு வேண்டிய உஷ்ணத்தைத் தாயாவது தந்தையாவது அல்லது இருவருமாகவாவது அடைகாத்துக் கொடுக்கும். அப்பொழுது முட்டைகளின் எல்லாப்பாகங்களிலும் உஷ்ணம்படும்படி தாயானது அவற்றை அடிக்கடிப் புரட்டிப் புரட்டி அடைகாக்கும். புரட்டுவதால்தான் முட்டைகளின் எல்லாப் பாகங்களும் ஒரே அளவாகச் சூட்டை அடைகின்றன. இல்லாவிடில் குஞ்சுகளின் சில பாகங்கள் அதிகமான சூட்டை அடைந்துமிகவும் பெரிதாய் வளர்ந்துவிடும். அக்குஞ்சுகள் வெகு விகாரமாயிருக்கும். சில பறவைகள் அடைகாப்பதில்லை. அவற்றில் குயில் ஒன்று. அது காக்கை அல்லது கருமா இவற்றின் கூட்டில் முட்டைகளையிட்டு ஓடிப்போய்விடும். அப்பொழுது காக்கையானது தன் சொந்த முட்டைகளோடு அம்முட்டைகளையும் அடைகாக்கும். முட்டையுடைந்து வெளிப்படும் குயிலின் குஞ்சுகளுக்கும் காக்கை ஆகாரம் தேடிக்கொண்டு வந்து ஊட்டும். குயிலின் குஞ்சுகள் சற்றுப்பெரிதானதும் நன்றியில்லாமல் காக்கையின் குஞ்சுகளைக் கூட்டிலிருந்து விரட்டிவிடும். ஒட்டகப்பக்ஷியும் தன் முட்டைகளை அடைகாப்பதில்லை. அது மணலில் ஒரு பள்ளந்தோண்டி அதில் முட்டையை இட்டுவிட்டுப் போய்விடும். மணலிலிருந்தே முட்டை உஷ்ணமடைந்து குஞ்சாகும்.

குஞ்சுகள்.—பறவைகளின்குஞ்சுகள் முட்டையினுள் நன்றாக வளர்ந்ததும், தங்கள் அலகின் நுனியால் முட்டையை உள்ளிருந்து கொண்டே டப்! டப்! என்று அடித்து ஒரு சிறு பொத்தலிடும். பொத்தலின் வழியே முட்டையினுட் செல்லும் காற்றைத் தங்கள் சுவாஸப் பையினுட்கொண்டு இரண்டொருநாள் முட்டையினுள்ளேயே வசிக்கும். சற்று வலுவந்ததும் முட்டையை நன்றாக உடைத்துக்கொண்டு வெளியில் குதிக்கும். கூடுகள் கட்டாத சில பறவைகளின் குஞ்சுகளுக்கு முட்டையிலிருந்து வெளிப்பட்டவுடனே இறக்கைகளும் கால்களும் நன்றாகவளர்ந்திருக்கும். அதனால் அவை தாமே ஆகாரத்தைத் தேடி உண்டு உலாவும். கூடுகட்டும் அநேகம் பறவைகளின் குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிப்பட்டதும்இறகுகளில்லாததால்பலமற்றவைகளாயிருக்கும். அதனால் அவை தாமே நடமாடி ஆகாரம் தேடி உண்பதில்லை. இறக்கைகள் முளைத்துத் தாமே பறக்க சக்திவருமட்டும் தாயானது பலவிடங்களில் திரிந்து புழுபூச்சிகளைத் தேடிக் கொண்டுவந்து அவற்றைத் தன்னுடைய பால் போன்ற ஒருவித எச்சிலோடு கலந்து அதைத் தங்கள் குஞ்சுகளின் வாயில் போட்டு ஊட்டும். அப்படி ஊட்டுவதை எல்லாம் நழுவவிடாமல் பிடித்துக் கொள்வதற்குத்தான் இக்குஞ்சுகளின் வாயானது அகன்றதாயும் உதடானது சதையாலமைந்ததாயும் இருக்கின்றன பாருங்கள்.

நம்மில் அநேகர் கோழி வாத்து முதலிய பறவைகளை ஏராளமாக வளர்க்கிறோமல்லவா? அவற்றில் ஒவ்வொன்றும் அநேகம் முட்டைகளை யிடுமென்று சொன்னோம். முட்டைகள் எல்லாம் குஞ்சாக வேண்டுமாகில் எல்லாவற்றிற்கும் ஒரே தடவையில் உஷ்ணம் அகப்படவேண்டு

மல்லவா? ஆனால் ஒரு தாய்க்கோழிக்கு அவ்வளவு முட்டைகளுக்கும் எப்படிச் சூடுகொடுக்கமுடியும்? முடியாதல்லவா? அதனால் அநேகம் முட்டைகள் போதுமான உஷ்ணம் பெறாமல் இறந்துபோய் விடும். அதனால் நமக்கு நஷ்டமுண்டாகும். இதற்காகக் கோழி வாத்து இவைகளை வளர்ப்போர் ஒருவித அடைகாக்கும் இயந்திரத்தை வாங்கி வைத்துக் கொள்வதுண்டு. அதற்கு இங்கு



பேடர்(Incubator)என்றுபெயர். இது சுமார் 10 ரூபா விலைதானிருக்கும். இது ஒருவிதத் தகரப் பெட்டியாகும். இப்பெட்டியின் எல்லாப் பக்கங்களின் உட்பக்கமும் போலாக விருக்கும். அதில் நீரை நிரப்பி, பெட்டியின் ஒருபக்கத்திலிருக்கும் ஒரு சிறு விளக்கை ஏற்றி வைப்பார்கள். கோழிகள் முட்டைகளை யிட்டதும் அம்முட்டைகளை இப்பெட்டியில் வைப்பார்கள். அவை சுடுஞ்சலத்திலிருந்து சூட்டை அடைந்து சில நாட்களுக்கெல்லாம் குஞ்சுகளாய்விடும்.

V. R. துரைசாமி சாஸ்திரி, எம்.ஏ., எல்.டி.

# ஸ்தல சரித்திரக் கதைகள்

## STORIES FROM LOCAL HISTORY
## THE CHOLA KINGDOM

### 6. கங்கைகொண்ட சோழபுரமும், ராஜேந்திர சோழரும்.

முன் கதையில் ராஜராஜ சோழர் அநேகமாய் தென்னிந்தியா முழுமையும் ஜெயித்தாரென்றும், அவர்காலத்தில் சோழராஜ்யம் உன்னதபதவி யடைந்ததென்றும் சொன்னோம். அக்காலத்தில் தென்னிந்தியாவிற்கு வடக்கே இரண்டு ராஜ்யங்களிருந்தன. அவைகள் மேல செளுக்கிய, கீழ செளுக்கிய ராஜ்யங்களே. இவைகளில் பெரியதும் வலிமையுமுடையதும் மேல செளுக்கிய ராஜ்யம். கீழ செளுக்கிய ராஜ்யத்தின் ஒரு பாகத்திற்கு வெங்கி நாடென்று பெயர். வெங்கி நாட்டை ராஜராஜர்ஜெயித்த காலத்தில், செளுக்கியர் சோழராஜ்யத்தின்மீது படையெடுக்காமல் தடுப்பதற்காக வெங்கிநாட்டரசன் சிநேகம் சம்பாதிக்கும்பொருட்டு, அந்த அரசனுக்கு அவனுடைய ராஜ்யத்தைத் திருப்பிக்கொடுத்தது மன்னியில் தன்னுடைய பெண்ணையும் அவனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தார்.

ராஜராஜர் அரசாண்டுகொண்டிருக்கையிலேயே, இவர் புத்திரனான ராஜேந்திரருக்கு இளவரசாக முடிசூட்டப்பட்டது. ராஜேந்திரருடைய எண்ணமும் சோழராஜ்யத்தை மேன்மைபடுத்த வேண்டுமென்பதே. இவர் காலத்தில் மைசூரிலுள்ள கங்கர்கள் கலகம் செய்து, செளுக்கியர்களோடு சேர முயன்றார்கள். உடனே ராஜேந்திரர் இவர்களை முறியடித்து, தன் மருமகனான வெங்கி நாட்டரசனுக்குத் தன்மகளைக் கல்யாணம் செய்துகொடுத்து, வெங்கிநாட்டு உறவைப் பலப்படுத்தினார். ஆகையால் வடதிக்கிலிருந்து சோழராஜ்யத்திற்கு யாதொரு அபாயமுமில்லாமலிருந்தது.

வட எல்லையைப் பலப்படுத்தினபின்பு தெற்கேயுள்ள லங்கைத் தீவை ஜெயித்தார். சோழ அரசர்களுக்குக் கடற்சேனை யுண்டென்று முன் கதையில் சொன்னோம். ராஜேந்திருடைய கடற்சேனை பர்மா தேசத்தின்மீது படையெடுத்துச் சென்று, போகும் வழியில் அந்தமான், நிக்கபார் தீவுகளைப் பிடித்தது.

ராஜேந்திரர் கங்கைநதிவரையிலுள்ள தேசங்களின்மீது படையெடுத்துச் சென்றதாக



பெருமை பாராட்டி, 'கங்கைகொண்ட சோழர்' என்று பெயர் பூண்டாரென்பது, அவர் கட்டின ஜெயஸ்தம்பங்களைக்கொண்டு தெரியவருகிறது. அவைகளிலொன்று கஞ்சம் ஜில்லாவிலுள்ள மஹேந்திரமலை மீதிருக்கிறது. ராஜேந்திரர் புதிதாக ஒரு ராஜதானி ஏற்படுத்தி, அதற்குக் 'கங்கைகொண்ட சோழபுரம்' என்று பெயரிட்டார். இது திருச்சினப்பள்ளி ஜில்லாவிலிருக்கிறது. இதில் ஒரு அழகான கோவிலும் கட்டி, ஒரு பெரிய ஏரியும் வெட்டுவித்தார்.

### 7. ராஜேந்திரசோழ தேவகுலோத்துங்கர்

ராஜேந்திர சோழர் இறந்தவுடன் சோழ ராஜ்யத்திற்கு அனேக கஷ்டங்களுண்டாயின. பாண்டியர்களும், சேரர்களும், கங்கர்களும், கலகம் செய்தார்கள். மேல செளுக்கியர்கள் சோழ மண்டலத்தின்மீது படையெடுத்தார்கள். இவர்களை எதிர்த்த சோழராஜன் யுத்தகளத்தில் இறந்துபோனன். வெங்கிநாட்டு கீழ செளுக்கியர்கள்கூட உறவைப்பாராட்டாமல் கலகம் செய்யத் தொடங்கினர்கள். சுமார் இருபத்தெட்டு வருஷகாலம் சோழ ராஜ்யத்திற்குச் சனியன் பிடித்து, பின்பு நல்ல காலம் பிறந்தது.

முன்கதையில் ராஜேந்திர சோழர் சோழ ராஜ்யத்தின் வடஎல்லையைத் பலப்படுத்துவதற்காகத் தன் பெண்ணை வெங்கி நாட்டரசனுக்கு விவாகம் செய்து கொடுத்தாரென்று சொன்னேம். இந்தப் பெண்ணினுடைய பிள்ளைதான் ராஜேந்திரனென்கிற குலோத்துங்கர். இவர் வெங்கி நாட்டை ஆண்டுகொண்டிருந்தார். இவருக்கும் சோழ வம்சத்திலேயே ராஜேந்திருடைய பேத்தியைக் கலியாணம் செய்து கொடுக்கப்பட்டது. ஆகையால் இவர் சோழராஜ்யத்தை அடைவதற்கு அனேக பாத்தியங்களுள்ளவராக விருந்தார். இத்துடன் பார்ப்பவர் மனதைக் கவரும்படியான வெளித் தோற்றமும், அழகும், தைரியமும் வாய்ந்தவர். போரில் ஒரு சிறந்த வீரர். சோழ ராஜ்யத்தின் சத்துருக்களான கலிங்கர்களையும், கங்கர்களையும், பாண்டியர்களையும் வென்று, அவர்களுடைய தேசங்களைப் பிடித்து, சோழ சிம்மாசனத்தின்மீது ஏறினர். தென்னிந்தியாவில் இவரால் ஜெயிக்கப்படாத தேசம் ஒன்றுமில்லை.

இவர் சுமார் ஐம்பது வருஷகாலம் அரசாட்சி செய்தார். ராஜ்யத்தில் சமாதானமே தவிர, சண்டை சச்சரவுகளே கிடையாது. ஆகையால் தான் தன் ராஜ்யத்தை நன்குய் ஆளுவதற்கு இவருக்குச் சாவகாசமிருந்தது. இவர் காலத்தில் ராஜ்ய முழுமையும் ரிவினியூ சர்வே செய்யப்பட்டது. இவர் அனேக ராஜ்யங்களின்மீது படையெடுத்து ஜெயித்தபடியால், இவரிடமிருந்த பொருளுக்கு அளவில்லை. இப்பொருளுதவியால், ராஜ ராஜரைப்போல் அனேக கோவில்களையும் கட்டி, தமிழ் தெலுங்கு பாஷைகளைப் பரிபாலித்து வித்வான்களுக்குத் தகுந்த பரிசுகள் கொடுத்து வந்தார். அக்காலத்தில் வியாபாரிகளும், பிரயாணிகளும் ஒரு ஜில்லா விட்டு மற்றெரு ஜில்லா போனல் கடுமையான சுங்கான் கொடுக்கவேண்டி யிருந்தது. இவ்விதமான வரியினல் வியாபாரமும், பிரயாணமும் மிகவும் கஷ்டமாக விருந்தன. குலோத்துங்கர் இப்பேர்ப்பட்ட வரிகளை அடியோடு தள்ளிப் போட்டார். இதனல் வியாபாரம் விருத்தியடைந்து, சோழ தேசத்தினுடைய செல்வமும், நாகரீகமும் மேன்மேல் பெருக ஆரம்பித்தன.

G. இரத்தினம் பிள்ளை, பீ. ஏ., எல். டி.

# உபநிஷத் ரத்தினமாலை

## SUMMARY OF THE MINOR UPANISHADS

### 15. ஜாபால உபநிஷத் (13)

ஓம்:—ப்ருஹஸ்பதி யாக்ஞவல்க்யரை நோக்கி, 'குருக்ஷேத்ரம் தேவர்களுக்குத் தேவயக்ஞமாயும், எல்லாப் பூதங்களுக்கும் ப்ருஹ்மஸ்தானமாயும் உள்ளது. இதற்கு அவிமுக்தம் என்று பெயர். ஆதலால் எங்கே போனாலும் குருக்ஷேத்ரத்தை முன் கூறியபடி கருத வேண்டும். பிராணிகளுக்குப் பிராணன் இங்கிருந்து கிளம்பும்பொழுது ருத்ரன் தாரக மந்திரத்தை உபதேசிக்கிறார். இதனால் அவர்கள் அமிருதத்தைப் பெற்று மோக்ஷம் அடைகிறார்கள். ஆதலால் இந்த அவிமுக்த க்ஷேத்ரத்தைக் கைவிடாது ஸேவிக்கவேண்டும்' என்று உபதேசித்தார்.

பின்னர் அத்ரி என்பவர் யாக்ஞவல்க்யரை அடுத்து, 'அனந்தமாயும் அவ்யக்தமாயும் உள்ள ஆத்மாவை நான் எவ்வாறு தெரிந்துகொள்ளுவேன்?' என்று கேட்டார். அதற்கு யாக்ஞவல்க்யர், 'நீர் கேட்ட ஸ்வரூபமுடைய ஆத்மா அவிமுக்தத்தில் நிலை பெற்றிருப்பதால் அதனோடு பொருத்தி ஆத்மாவை உபாஸிக்கவேண்டும். அந்த அவிமுக்தம் வாரணைக்கும், நாசிக்கும் இடையில் ஏற்பட்டுள்ளது?' என்றார். 'வாரணை என்பதென்ன? நாசி என்பதென்ன'? என்று வினவினார் அத்ரி. 'இந்திரியங்களால் ஏற்படும் தோஷங்கள் எல்லாவற்றையும் தடுப்பதால் அதற்கு வாரணை என்று பெயர். இந்திரிய ஸம்பந்தமாக ஏற்படும் பாபங்களை நாசம் செய்வதால் அதற்கு நாசி என்று பெயர்' என, அத்ரி, 'இவைகளின் ஸ்தானம் எது?' என்று கேட்டார். 'புருவங்களுக்கும் மூக்குக்கும் நடுவிலுள்ளது இவைகளின் ஸ்தானம். ப்ருஹ்மவித்துக்கள் இந்தச் சேர்க்கையைத்தான் ஸந்தியையாக உபாஸிக்கின்றனர். ஆதலால் இது எல்லோராலும் உபாஸிக்கத் தகுந்தது. இதனால் மோக்ஷ ஸாதனமான ஞானம் கைகூடும்' என்று உபதேசித்தார் யாக்ஞவல்க்யர்.

வேறு ஒரு ஸமயத்தில் சில ப்ரஹ்மசாரிகள் யாக்ஞவல்க்யரை நோக்கி, 'மந்திரத்தினால் மோக்ஷம் கைகூடுமோ?' என்று கேட்டார்கள். அதற்கு யாக்ஞவல்க்யர், 'சதருத்ரீயத்தினாலே மோக்ஷம் கிடைப்பது திண்ணம். அதுவே மோக்ஷ ஸாதனம்' என்றார்.

மற்றொரு காலம் வைதேஹ ஜனகர் யாக்ஞவல்க்யரை அணுகி, 'ஸந்யாஸத்தைபற்றி விஸ்தரிக்கவேண்டும்' என்று கேட்டார். 'ப்ருஹ்மசரியம், கார்ஹஸ்த்யம், வானப்ரஸ்தம் முதலிய முதல் மூன்று ஆச்ரமங்களையும் முறையே முடித்துப் பின்னர் ஒருவன் ஸந்யாஸியாகவேண்டும். தகுந்த வேறு காலங்களில் முதல் இரண்டு ஆச்ரமங்களி லிருந்தபடியே நேரிட ஸந்யாஸத்தைக் கைப்பற்றலாம். நியமம் இருந்தாலும் ஸரி இல்லாவிட்டாலும் ஸரி, ஸ்நாதகனாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஸரி, அக்நிகார்யத்தை முடித்தவனாகிலும் ஸரி இல்லாவிட்டாலும் ஸரி எப்பொழுது ஒருவனுக்கு (நிஜ) விரக்தி உண்டாகிறதோ அப்பொழுது அவன் ஸந்யாஸத்தைக் கைக்கொள்ள வேண்டும். சிலர் செய்வதுபோலப் பிராஜாபத்ய இஷ்டியைச் செய்யாது, 'பிராணரூபமான அக்நி ஸம்பந்தப்பட்ட ஆக்னேய இஷ்டியைச் செய்யவேண்டும். இதில் ஒரு மந்திரபூர்வமாக அக்னியை முகர்ந்து, பின்னர் கிராமாக்னியையும் அவ்வாறே செய்ய வேண்டும். அக்னி கிடைக்காவிடில் ஜலத்திலே ஹோமம்செய்ய வேண்டும்.' ஜலமே ஸர்வதேவதாஸ்வரூபம். அதில் 'எல்லா தேவதைகளுக்கும் ஹோமம் செய்கிறேன்' என்று செய்துவிட்டு, வேதவிதிப்படி சிறந்த ஹவிஸ்ஸை நெய்யோடு உட்கொள்ள வேண்டும்' என்று யாக்ஞவல்க்யர் விஸ்தரித்தார்.

இதன் பின்பு அத்ரி யாக்ஞவல்க்யரை நோக்கி, 'யக்ஞோபவீதமற்றவன் எவ்வாறு பிராஹ்மணனாவான்' என்று கேட்க, யாக்ஞவல்க்யர், 'முற்கூறியபடி எவனொருவன் உண்டு ஆசமனஞ்செய்து பரிசுத்தனாகிறானோ அவன் பரிசுத்தமே யக்ஞோபவீதம். இது எல்லாவித விருத நியமங்களிலும் உள்ளது. காஷாயம், முண்டனம், பத்னியில்லாமை, பரிசுத்தம், துரோகமின்மை, பிக்ஷான்ன போஜனம் ஆகிய இவைகள் அமையப்பெற்ற ஸந்யாஸி பிரஹ்மத்வத்தை அடைகிறான். நோயால் வருந்துபவன் வாக்கினாலும் மனத்தினாலும் ஸந்யாஸம் செய்துகொள்ளலாம். ஸுகமாகவிருப்பவன் இவ்வாறு செய்யவேகூடாது. இவ்வாறு ஸந்யாஸியாகிவிடுபவன் பிருஹ்மவித்தாகிறான். ஸம்வர்த்தகர், ஆருணி, சுவேதகேது, துர்வாஸர், ரிபு, நிதாகரர், ஜடபாதர், தத்தாத்ரேயர், ரைவதகர் முதலியவர்கள்

இம்மாதிரியான பரமஹம்ஸர்களே. இவர்கள் மறைவான ஆசாரமுடையவர்களாகவும் தோற்றமாத்திரத்தில் உன்மத்தர்போலவும் காணப்படுவோர்கள். இப்படி இருக்கும் பரமஹம்ஸன், 'திரிதண்டம், கமண்டலு, காவடி, ஜலபாத்ரம், சிகை, யக்ஞோபவீதம் ஆகிய இவைகளை மந்திரபூர்வமாக ஜலத்தில் எறிந்துவிட்டு, ஆத்மாவை த்யானம் செய்யவேண்டும். பிறந்த மேனியாக ஒன்றுடனும் ஸம்பந்தப்படாமல் பிரஹ்மத்யான மார்க்கத்தில் நன்ருகப் பழகிவரவேண்டும். சுத்தத்தன்மை; பிராண தாரணத்திற்காக சாஸ்திரீய காலங்களில் வயிருகி பாத்திரத்தில் பிக்ஷான்னத்தை இடுதல்; லாபநஷ்ட ஸமத்வம்; பழம்வீடு, தேவாலயம், புற்றரை, புதர், மரவேர், குயவன்வீடு, அக்கிஹோத்ரசாலை, நதியில் உள்ள மணல்திட்டு, குஹை, பொந்து, மலையருவி, கட்டாந்தரை, இவைகளில் வஸிப்பது; முயற்சியற்றிருத்தல்; அகங்காரமின்மை; நாராயணத்யானம்; ஆத்மவிசாரம்; பாபத்தை நாசம் செய்தல்; என்றவைகள் அடங்கிய ஸந்யாஸத்திலிருந்து தேஹத்தை விடுபவர்கள் தான் பரமஹம்ஸர்கள். ஓம் தத்ஸத்.

## 16. அம்ருதபிந்து உபநிஷத் (20).

மனம் இரண்டுவிதம். ஆசை நிறைந்ததற்கு அசுத்த மனமென்றும், ஆசையற்றிருப்பதற்குச் சுத்த மனம் என்றும் பெயர். மனிதர்கள் பந்தமோக்ஷங்களுக்கும் இந்த இருவிதமான மனதேதான் முறையான காரணம். விஷயப்பற்று அற்ற மனதால் மோக்ஷம் அடையலாமாகையால் முமுக்ஷுக்கள் எப்பொழுதும் தமது மனதைப்பற்றற்றதாக வைத்திருக்கவேண்டும். மனம் பற்றற்று ஹ்ருதயத்துள் அடங்கி ஆத்மஸ்வரூபத்தை அடைவதே பரமபதம் என்னப்படும். ஹ்ருதய ஸங்கல்பம் ஒயும்வரை மனதை நிரோதம் செய்யவேண்டும். இது தான் ஞானம் என்பதும் தியானம் என்பதும். மற்றவைகள் எல்லாம் வீண் ஆடம்பரப் பேச்சுகள். (ஸுகம் கொடுக்கும் வெளி வஸ்துவாக) எண்ணமுடியாததும், (துக்க வஸ்துக்களைப்போல) தள்ளிவிடமுடியாததும், வாக்குக்கும் மனஸுக்கும் ஸம்ஸாரத்திலிருப்பவர்களுக்கும், தட்டாததும், (அதன் சிறப்பால்) ஸதாத்தியானிக்கத் தகுந்ததுமாக இருக்கும் ப்ரஹ்மம். முற்கூறிய அறிவுண்டாகுங்கால் மனம் இந்தப்பக்ஷபாதங்களிலிருந்து விடுபட்ட பிரஹ்மமாகிறது. ஸ்வரத்தால் யோகாப்யாஸம் செய்து அஸ்வரமாகிய ப்ரஹ்மத்தை ஒருவன் த்யானம் செய்யவேண்டும். இதனால் ஒருவனுக்கு எல்லாவித எண்ணங்களிலிருந்தும் விடுபட்ட வஸ்து விளங்கிநிற்கும். இந்த அகண்டப்ரஹ்மம் எண்ணத்திற்கு அப்பாற்பட்டு பரிசுத்தமாகவுள்ளது. 'அந்த ப்ரஹ்மம் நானே' என்றுணர்பவன் அசைவற்ற ப்ரஹ்மமாகிறான். அனந்தமான இது காரண உதாரணங்களுக்குஅப்பாற்பட்டது, அறிவுக்கு அடங்காதது, ஸ்வயம்புவானது, இதை உணர்ந்து ஞானி விடுபடுவான். ஜனனம், மரணம், பந்தம், அப்யாஸி, முமுக்ஷு, முக்தன் இவை உண்மையில் இல்லை. இது தான் பரமார்த்தமானது.

ஜாக்ரதை, ஸ்வப்னம், ஸுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளுள்ளும் ஒரே ஆத்மா இருப்பதாகக் கருதவேண்டும். இம்மாதிரி மூன்று ஸ்தானங்களுக்கும் அப்பாற்பட்டவனுக்கு மறுஜன்மமே கிடையாது. சந்திரன் ஒன்றுயினும் ஜலங்கள்தோறும் வெவ்வேறுகி அநேகமாகக் காணப்படுவதுபோல ஒரே ஆத்மாதான் பூதங்கள்தோறும் வெவ்வேறுபோலக் காணப்படுகிறது. ஒரு பானையை எடுத்துச் செல்லுங்கால் அது மாத்ரம் நகர உள்ளிருக்கும் வெளி எப்படி நகராதிருக்கிறதோ அதுபோலவேதான் ஜீவனும். பானைகள் வெவ்வேருகவிருந்து அடிக்கடி உடைந்துபோக, அதனுள்ளிருக்கும் ஆகாசம் இதை உணராது. ஆனால் ஜீவனே எல்லாவற்றையும் உணருகிறான். சப்தரூபமான மாயையால் மூடப்பட்டிருப்பவன், அது நீங்கும் வரையில் விடுபடாது, பின்னர் எல்லாம் ஒன்றே என்பதைக்கண்டு தெளிகிறான். சப்த அக்ஷரரூபமாக (ப்ரணவமாக) பரப்ரஹ்மம் உள்ளது, அதன் முடிவில் எது மிகுதியாக விருக்கிறதோ அந்த அழிவற்றதைச் சாந்தி பெறவேண்டுமாகில் ஒருவன் தியானிக்கவேண்டும்.

சப்த ப்ரஹ்மவித்தை, பரப்ரஹ்மவித்தை என வித்தை இரண்டுவிதம். முதலில் தேர்ந்தவன் பின்னதை அடைவான். வேதாதி பரம்பொருள் விஷயமான நூல்களைக் கற்று அறிவு ஒழுக்கம் இவைகளில் பற்றுள்ளவனும் முடிவில் தான்யத்தை விரும்புவன் வைக்கோல் உமி முதலியவைகளை எறிந்துவிடுவது போல இந்த நூல்களை நீக்கவேண்டியது. பசு அநேக வர்ணங்களோடிருந்தபோதிலும் பால் ஒரே வர்ணம் தான்; உண்மை ஞானத்தைப் பாலைப்போலவும், ரூபங்களடங்கிய பிரபஞ்சத்தைப் பசுக்கள் போலவும்கருதுவர் பெரியோர். சித்துருவான ஆத்மா பாலுள் மறைந்து கிடக்கும் வெண்ணெய்போலப் பூதங்கள்தோறும் மறைந்துள்ளது, மனதை மத்தாகவும், ஞானத்தைக் கயிருகவும்கொண்டு, கடைந்து நெருப்புப்போன்ற பரம்பொருளை வெளிப்படுத்துங்கள். 'அகண்ட நிச்சலசாந்த

ரூபமான பிரஹ்மம் நானே' என்று உணரப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் எல்லாவற்றுள்ளும் வஸிப்பதால் வாஸுதேவனாக இருப்பவனும் நானே.

## 17. ஸ்கந்தோபநிஷத் (51).

ஓ மஹாதேவா! உங்கள் அருள் திவலையாலே நான் அழிவற்று, அறிவுவடிவமாகி, மங்களகரனாகி விட்டேன். இதைவிடச் சிறந்தது எது? அந்தஃகரணக் கலக்கத்தால் உண்மை உள்ளபடி விளங்கவில்லை; அதன் ஒடுக்கத்தாலே ஹரி ஞானஸ்வரூபியாக விளங்க, நானும் அவ்வாறே விளங்கி பிறப்பு நீங்கினேன். இதைவிட மேன்மையானது ஏதேனும் உண்டோ? ஆத்மா நீங்கலான மற்றையவைகள் எல்லாம் ஸ்வப்னம் போன்றவை. ஆத்மானாத்மாக்களை அறிபவன் எவனோ அவன் அழிவற்றவன், ஞானஸ்வரூபன், அவனே மஹாதேவன், ஹரி, ஜ்யோதிக்கெல்லாம் ஜ்யோதி, பரமேச்வரன், ப்ரஹ்மம்: அந்தப்ரஹ்மம் நான், ஸந்தேஹமே இல்லை!

ஜீவனே சிவன்: சிவனே ஜீவன்: இதற்கு ஐயமில்லை. உமியால் மூடப்பட்டிருக்குங்கால் நெல்லாகவிருப்பது, உமி நீங்கில் அரிசியேயாகும். கர்மபந்தம் நீங்கும் வரையில் ஜீவனாகவிருப்பது முடிவில் சிவனேயாகும்.

விஷ்ணு ரூபமான சிவனுக்கும், சிவரூபமான விஷ்ணுவுக்கும் நமஸ்காரம். சிவன் ஹ்ருதயமே விஷ்ணு, விஷ்ணு ஹ்ருதயமே சிவன். இவர்களை ஒன்றாகக் கருதும் அளவுக்கு ஏற்ப எனக்கு ஸந்தோஷமும் மாறா இருப்பும் உண்டாகட்டும். சிவகேசவர்களுள் பேதமேயில்லை.

தேஹம் தேவாலயம்; ஜீவன் தேவனாகிய ஸதாசிவன் என்றும் கூறப்பட்டிருக்கிறது. அஞ்ஞானம் என்ற நிர்மால்யத்தைத் தள்ளி, அவனே நான் என்ற பாவனையுடன் பூஜை செய்யவேண்டும்: அபேதப் பார்வை ஞானம்: மனம் விஷயப்பற்றின்றி நிற்றல் த்யானம்: மனத்தோஷம் நீக்கலே ஸ்நாநம்; இந்திரிய நிரோதம் சௌசம்: ப்ரஹ்மாமிர்த அனுபவமேபானம்:

தேஹதாரணத்தை முன்னிட்டு பிக்ஷை எடுத்து உண்ணவேண்டும். ஒருவனாகத் தனிமையாக வாஸம் செய்யவேண்டும். இரண்டற்ற ப்ரஹ்மத்தில் மாறாப் பாவனையுடனிருக்கவேண்டும். இவ்வாறு நடக்கும் புத்திமான் முக்தியடைவான்.

ஸ்ரீமத் பரம்ஜ்யோதிக்கு நமஸ்காரம்! ஸந்தோஷமும் மாறாநிலையும் வரட்டும். ஓ நரஸிம்மா, தேவேசா உமது கிருபையாலே விருஞ்சி நாராயண சங்கர ஸ்வரூபியாய், அசிந்த்ய, அவ்யக்த, அனந்த, அவ்யய, தேவதாத்மகமாயும் உள்ள ப்ரஹ்மத்தை உள்ளபடி பெரியோர் உணருகிறார்கள்.

அறிவுடையோர் விஷ்ணுவின் பரமபதத்தை ஊனக் கண் எவ்வாறு ஆகாயப்பரப்பைக் காண்கின்றதோ அவ்வாறு எளிதாயும், ஓயாதும் காண்கின்றனர். எப்போதும் விழித்துக்கொண்டிருக்கும் ஞானக்கண்ணை உடைய ப்ராஹ்மணர்கள் இந்நிலையைப் புகழ்ந்து கூறி எல்லோரும் அறிய வெளியிடுகின்றனர். இது தான் மோக்ஷ விஷயமான வேதாக்ஞை என்பது உபநிஷத்.

## 18. தக்ஷிணாமூர்த்தி உபநிஷத் (49).

ப்ரஹ்மவர்த்தத்தில் பந்தீர ஆலமரத்தடியில் ஸனகாதியோகிகள் ஒரு பெரிய யாகம் செய்ய வந்து கூடினர். அப்பொழுது அவர்கள் உண்மையை உணர விருப்பம் உடையவராகி ஸமித்தைக் கையில்கொண்டு, சிரஞ்ஜீவியாக அங்கு இருந்த மார்க்கண்டேயரை மஹாவிநயத்துடன் அணுகி 'இந்த மாறா இருப்பு உங்களுக்கு எப்படி வந்தது? இந்த ஆனந்தம் உமக்குக் கிடைத்தது எவ்வாறு?' என்று வினவினர்.

அதற்கு மார்க்கண்டேயர், 'இவைகள் எனக்குப் பரமரஹஸ்ய சிவதத்வ ஞானத்தால் ஏற்பட்டன' என்றார். அதற்கு அவர்கள், பரமரஹஸ்ய சிவதத்வ ஞானம் என்றால் என்ன? அதற்குத் தேவதை யார்? அதற்கு மந்த்ரம், நிஷ்டை, ஞானஸாதனம், ஸஹாயம், அர்ப்பணம் செய்யவேண்டியது, காலம், ஸ்தானம் எவை?' என்று மறுபடியும் விஸ்தாரமாகக் கேட்டார்கள்.

மார்க்கண்டேயர் கூறலுற்றார். 'தக்ஷிணாபிமுகனாகிய சிவனை நேரிட அனுபவித்தறியும் ஞானமே பரமரஹஸ்ய சிவ தத்வஞானம் என்பது. இவர்தான் ஸம்ஹாரகாலத்தில் எல்லாவற்றையும் தம்முள் அடக்கிக்கொண்டு தம்முள்ளிருக்கும் ஆனந்தத்தாலேயே மகிழ்வடைந்து ப்ரகாசிப்பவர். [இங்கு 5 மந்திரங்கள் காணப்படுகின்றன. அவைகள் ஒவ்வொன்றன் முடிவிலும் பின்வரும் தியான ச்லோகங்கள் காணப்படுகின்றன].

1. த்ரிநேத்திரராயும் சந்திரகலாதரராயும், ஸ்படிகம் வெள்ளி இவைகள் நிறத்தை உடையவராயும், கைகளில் முத்துமாலை, அமிருதகலசம், புத்தகம், சின்முத்ரை முதலியவைகளை உடையவராயும், பாம்பை அரையில் கயிறாகத் தரித்தவராயும், அநேக ஆபரணங்களை உடையவராயும் உள்ள தக்ஷிணாமூர்த்தியை தியானம் செய்கிறேன்.

2. பால்போல வெளுத்து, முக்கண்களையும் உடையவராயும், ஆலமரத்தடியில் சுகர் முதலிய ரிஷிகளால் சூழப்பட்டு கைகளில் சின்முத்ரை, மான்மழு ஏந்தி ஒரு கையை முழங்கால்மேல் வைத்துக்கொண்டிருப்பவராயும், பாம்பை அரைஞாணாக்கி, சந்திரகலையை ஜடையில் தரித்தவராயும் உள்ளவர் எமக்குப் பாவசுத்தி (மனத்தூய்மை) யைக்கொடுக்கட்டும்.

3. விபூதியால் வெளுத்தவராயும், சந்திர சூடராயும், தமது கரகமலங்களில் சின்முத்திரை அக்ஷமாலை, வீணை, புஸ்தகம் இவைகள் பிரகாசிக்க யோகக்கட்டுடையவராய் குருபீடத்தில் உட்கார்ந்து அநேக ரிஷிகளால் சூழப்பட்டு நாகாபரணராக விருக்கும் ஈசனாகிய தக்ஷிணாமூர்த்தி எம்மைக் காப்பாராக.

4. கைகளில் வீணை புஸ்தகம் அக்ஷமாலை ஆகிய இவைகளையும் மேகம் போன்ற கண்டத்தையும் உடையவராய், வரந்தருவதில் சிரேஷ்டராய், பெரிய பாம்பை அரைக்கிசைத்தவராய், சுகாதியோகிகள் வந்து அணுக ஆலடியில் அமர்ந்திருக்கும் பரம்பொருளை நாம் தியானிப்போம்.

5. வேதங்களால் கூறப்பட்டவராயும், புஸ்தகம், அக்னி, பாம்பு ஆகிய இவைகள் ப்ரகாசிக்கும் கைகள் உடையவராயும், முத்துமாலை, சந்திரகலை பொருந்திய கிரீடம், இவைகளால் அலங்கரிக்கப்பட்டு ஆலடியில் அமர்ந்திருக்கும் பிரஸன்ன வதனத்தை உடைய பவனீபதியான அஜ்ஞானம் நீக்கும் பரமகுருவைப் பரமபதம் பெற தியானிக்கிறேன்.

முற்கூறிய பரமரஹஸ்ய சிவதத்வஞானத்திற்கு, அவனே நான் என்ற ஆகாரமாக நிலைத்திருப்பதே நிஷ்டை. அபேத மந்திரத்தை ஜபிப்பதே ஸாதனம். மனதை ஏகாக்ரப்படுத்தி அவன்மேல் நிறுத்துவதே ஸஹாயம்; தேஹ சேஷ்டைகளை ஈச்வரார்ப்பணம் பண்ணுவதே நிவேதனம்: அவஸ்தாத்ரயங்களே காலம். துவாதச ஸ்தானமாகிய ப்ரஹ்ம ரந்த்ர ஸ்தானமே ஸ்தானம்' என்று கூறி முடித்தார் மார்க்கண்டேயர்.

மறுபடியும் ஸனகாதிரிஷிகள் மிகுந்த ச்ரத்தையுடன் 'அவர் உதிப்பது எவ்வாறு? அவர் ஸ்வரூபம் யாது? அவர் உபாஸகர் யார்? என்று வினவினர்.

மார்க்கண்டேயர் சொல்லுகிறார். பூர்ண ஞானமாகிய தகளியில் வைராக்யம் என்ற எண்ணையிட்டு பக்தியாகிய திரியிட்டு ஞானம் என்னும் விளக்கேற்றிப் பார்க்க வேண்டும். மோஹாந்தகாரம் நீங்க சிவன் தாமே தோற்றுவார். அடர்ந்த இருளை நீக்க வைராக்யத்தை அடி அரணியாகவும், ஞானத்தை மேல் அரணியாகவும், உபாஸகன் கொண்டால் பரம்பொருள் ரஹஸ்யத்தை வெளிப்படுத்தும். விவேகம் என்னும் மார்க்கண்டேயர் மோஹம் என்ற யமனால் தகையப்பட்டு தத்வ விசாரம் இன்மை என்ற கயிறுகளால் கட்டுண்டு த்வைதம் என்னும் பயத்திற்கு ஆளாகித் தத்தளிக்கையில் உபாஸகன் உள்ளிருக்கும் ஸ்வஸ்வரூபமாகிய நிஜானந்தம் விவேகம் என்னும் மார்க்கண்டேயரைக் கிளப்பி உயிர் தருகின்றது.

தக்ஷிணா என்பதற்கு புத்தி என்பது பொருள். புத்தி என்னும் கண்ணுக்கு நேரே போதமாவதால் சிவன் தக்ஷிணாமூர்த்தி என்று ப்ரஹ்மவாதிகள் மதிக்கின்றனர்.

ஸ்ருஷ்டிகாலத்தில் விருஞ்சியாகிய ப்ரஹ்மதேவர் சிவனை உபாஸித்து ஸ்ருஷ்டி சக்தியை அடைந்து ஸந்தோஷித்தார். இம்மாதிரி நிலைத்திருக்கும் உபாஸகன் இஷ்டபூர்த்தி அடைந்து ஸுகிப்பான்.

இந்த பரமரஹஸ்ய சிவதத்வ வித்யையைப் படிப்பவன் ஸகல பாபங்களிலிருந்து விடுபட்டு முக்தி பெறுவன்.

ஓம் தத்ஸத்.

# ஷேக்ஸ்பியர்

## SHAKSPEARE (A LIFE SKETCH)

(Concluded)

ஷேக்ஸ்பியர் நாடகங்களை மூன்று முக்கிய பிரிவாகப் பிரித்தல் கூடும். வேடிக்கை நாடகங்களென்றும், சரித்திரத்தினின்றெடுக்கப்பட்ட நாடகங்களென்றும், மனிதரது துயரங்களைக் காட்டுவனவென்றும் மூன்றாகும். ஆனால் இங்ஙனம் பிரிக்கப்பட்டவை ஒன்றோடொன்று ஊடுருவிச் செல்லுவதால் இவ்விதப் பிரிவு எல்லா நாடகங்களிலும் பயன்படாது. ஆகையால் உற்று யோஜிக்குமிடத்து ஒருவிதமான பிரிவும் பிரயோஜனமில்லை. மாரிகாலக்கதை என்னும் நாடகம் வேடிக்கையானது என்று சொல்லுகிறோம். என்றாலும் அதிற் படுந்துயரம் மனதை முள்ளிட்டுக் கிழிக்கிறது. ஷேக்ஸ்பியர் நாடகங்களிலுள்ள பையன்களிலெல்லாம் அதிகச் சிறந்த மாமிலியஸ் என்னும் பையன், இந்நாடகத்தின் முதலிலேயே இறந்து விடுகிறான். இதை யென்னென்று சொல்வது. என்றாலும் வேடிக்கைக் கதைகளுள் சேர்க்கப்பட்டிருக்கிறது. பிறகு அனேகர் வேடிக்கை நாடகத்தி லிருப்பவரும், துயரப்பட்ட நாடகத்திலிருப்பவரும், அனேகவிஷயங்களைப்பற்றி ஒரேமாதிரி பேசுகிறார்கள். வீண் அமக்களம் என்னும் நாடகத்தில் பெனிடிக் என்பவன் 'ஒருவன் சாமுன்னர் தனக்குத் தானே ஒரு கல்லறை கட்டிக்கொள்ளாவிட்டால், அவனிறந்ததற்காக மணி யடிப்பதும், அவன் மனைவி யழுவதையும் தவிர வேரு எவ்விதமாயும் மனிதர் ஞாபகத்திலிருப்பதரிது என்று சொல்லுகிறான். அப்படியே ஹாம்லேட்டும் நம்மை எவ்லோரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்றால் கோவில் கட்டினால்தான் ஞாபகமிருக்கும். இல்லாவிட்டால் விளையாட்டுக் கருவிகளை விசிறி விடுவதுபோல் நம்மையும் வெகு சீக்ரத்தில் விசிறிவிட்டு, முற்றிலும் மறந்து விடுவார்கள் என்று சொல்லுகிறதையும் பார்க்கலாம். என்றாலுமிவை முதலாவது வேடிக்கைக் கதையினின்று இரண்டாவது துயரக்கதையினின்று எடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே ஷேக்ஸ்பியர் நாடகங்களில் வேடிக்கையும் விசாரமும் அதிக வித்யாஸமின்றி, உலகிலுள்ளது போல் ஒன்று சேர்ந்தே யிருக்கின்றன.

வெரோனா நகரத்திருவர் என்னும் நாடகத்தில் புரோட்டியஸ் என்பவன் மிகவும் போலியனாயிருந்தபோதிலும், கதை நன்றாய் முடியும்பொருட்டு அவ

னுக்கு ஜூலியாவை மணம் புரிவிக்கிறார். என்றாலும், பன்னிரண்டாவது இரவு என்னும் நாடகத்தில் வயோலா, என்பவளது உண்மையும், அன்பும் அறிவு மழகுங்காணுங்கால் அவள் மனம்போல மணம் புரிவித்தது சரியென்றே தோன்றுகிறது. இந்நாடகத்தில் வானவில் எப்போதும் பிரகாசித்துக்கொண்டு, வாழ் நாளே ஒரு வேடிக்கை யல்லது ஒரு கனவு என்று நினைத்து ஓடியாடித்திரியும் விஷயமாயிருக்கிறது. அதிலுள்ள எல்லோரும் சந்தோஷமாயிருப்பதால் சோம்பலாயும், ஒருவரை யொருவர் காமுற்றுத் திரிபவராயிருக்கிறார்கள்.

ஷேக்ஸ்பியர் தனக்கு வேண்டாத காரிய புருஷர்களைத் திடீரென்று தள்ளிவிடுகிறார். இது விஷயமாக மாரிகாலக்கதை என்னும் நாடகத்தில் ஆன்டிகோனஸ் என்பவனைத் தள்ளிவிட்டவிதம் பார்க்கலாம். அவனைக் கரடி ஒன்று தூக்கிக்கொண்டுபோய் கொன்றொழித்துவிடுகிறது. இப்படிச்சிறிய நாடகங்களிற் சாதாரணமாய்ச் செய்வித்தாரேனும் தனது சிறந்தவற்றில் சிறிதுந் தவறாது, வெகு சாதுர்யமா யமைத்திருக்கிறார். ஒதெல்லோவைத் தன் மனதிற்கிணங்க பக்ஷமும், தயாளமும், தைரியமும், பெருந்தன்மையு முடையவனுக்கி யிருக்கிறார். வெனிஸ் நகரத்து அதிகாரியாகிய பிரபான்டோ, அனேக மனிதர்களைக் கூட்டிக்கொண்டு, ஒதெல்லோ தன் மகளைக் கூட்டிக் கொண்டு போய்விட்டானென்று எதிர்த்து வரும் போது, ஒதெல்லோவினுடைய தைரியமும், பெருந் தன்மையுங் காட்டப்படுகின்றன. பிரபான்டோவுடன் தெருச்சண்டை யிழுப்பதிருவருக்கு யிழிவு என்றும், பிரபாண்டோவினது வயதும் பெருமைக்கும் யோஜித்து, இரண்டு வார்த்தையில் தன் மரியாதையுங் கெடுத்துக் கொள்ளாமல் பேசுவது எவ்வளவு மனப் பெருமையும், குணகீர்த்தியும், பெருந்தன்மையுங் காட்டுகிறது. இப்படிப்பட்ட ஒதெல்லோவிற்குக் கஷ்டமினி நேரப்போகிறது. அதற்காக ஷேக்ஸ்பியர் அயாகோ என்பவனை யுண்டுபண்ணுகிறார். ஒன்றின் பின் ஒன்றாய், ஒழுங்காய்க் கொண்டுவந்து இச்சிங்கத்தை வலையிற் பிடித்தாற் போலப் பிடிக்கிறார் இவ்விதமாய் ஆழ யோஜித்துக் கெடுதிசெய்வது அவருக்குப் பிடியாது, அவருக்குத் தெரியவும் தெரியாது. சண்டையாயின் எதிரியோடு சிங்கம் போல் போர்புரிபவருக்கு இவ்விதச் சில்லரை விஷயத்தில் கஷ்டமுண்டாகிறது என்றாலும் கடைசிவரை தன் பெருங்குணமும், உயர்ந்த மனமும் தாழ்வுபடாமலே யிருக்கிறார்.

ஆன்றணியும் கிளியோபேற்றவும், என்னும் நாடகத்தில் கிளியோபேற்ரு, அகஸ்டஸ் வீஸர் கையிலகப்பட்டபோது, ஒருவிதமான தீங்குஞ் செய்வதில்லையென்று சொல்லியும், கிளியோ பேற்ரு அவனைத் தனது எஜமானென்று சொல்லி அவனைக் குறிப்பாகப் பார்க்கிறாள். இல்லை இல்லை என்று ஒருமாதிரி சொல்லிவிட்டுப் போவதைப்பார்த்து உடனே, இவனை வசப்படுத்துதல் முடியாது, நாம் உயிர் பிழைத்தால் மானமிழத்தல் வேண்டுமென்றுடனே கண்டுபிடித்து விஷப்பாம்பைத் தன்னைக் கடிக்க விட்டு இறந்துபோகிறாள். இவள் தன் காலமெல்லாம் வெகு உல்லாஸமாயிருந்து அரசர்களையு மரசர் குடிகளையு மண்டு வந்தவள் உடனே இக்குறிப்பைக்கண்டு தன்னுயிரை மாய்த்துக்கொண்டது என்றும் ஆச்சரியப்படக் கூடியதே. இது ஷேக்ஸ்பியர் சாதுர்யத்தின் சிகரத்திற்குச் சிகரம் என்று சொல்லலாம். இதே நாடகத்தில், ஆட்டம் ஆபிரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கும், திரும்பவும் ஆபிரிக்காவுக்கும் மின்னல்போல பாய்கின்றது. வழியில் ஆசியாவிலும் போய் வருகிறது. இதிற் காட்டிய திறமையும், வர்ணனையினுடைய செழிப்பும் சிறப்பும் யோஜிக்குமிடத்து, அன்பைப் பற்றிய இக்கவியின் நாடகங்களெல்லாவற்றிலு மிதுவே சிறந்ததென்று சொல்லச் சிறிதுமையமில்லை.

ஷேக்ஸ்பியரது நாடகங்கள், உலக நடவடிக்கை போலவே அத்யந்த மிருப்பதுபற்றி ஒரு சிறு விஷயம் ஹாம்லெட் என்ற நாடகத்திலிருந்து காணலாம். ஆஸ்ரிக் என்பவன் லேயார்டிஸ் கடிதத்தை ஹாம்லெட்டுக்குக் கொடுப்பதைவிட வேறு வேலையொன்றுமில்லை என்றாலுமவனை ஷேக்ஸ்பியர் வெகு குறிப்பாகக் காண்பித்திருக்கிறார். அவன் அரண்மனைகளில் முகஸ்துதியும் வீண்பேச்சும் பேசிக்கொண்டு, வெயில் நாளில் பறந்து, மழைகாலத்திலிறந்துபோம் வண்ணத்திப் பூச்சிபோல் அங்குமிங்கும் பறந்துபோகும் வீணர்களிலொருவன். அவனை இங்ஙனம் குறிப்பிட்டதுபற்றியே அரண்மனையைப்பற்றிய விஷயங்கள் அதிக வுண்மை வாய்ந்திருக்கின்றன. இனி வேண்டாத காரிய புருஷரையுங் கொணர்ந்து, அவர்களுக்கு உயிர் கொடுத்து நாடகத்தி லாட்டிவைக்குந் திறமுடையரென்பதுபற்றி சரிக்குச்சரி என்னு நாடகத்தில் பார்னடயின் என்னுங் கைதியைக் குறிப்பிட்டதில் காணலாம்.

இனி ஷேக்ஸ்பியர் தனது நாடகங்களில் பெண்களை எவ்விதமாகக் குறிப்பிட்டிருக்கிறார் என்று காண்

போம். இவ்விஷயத்தின் முக்கிய மென்னவென்றால், ஒவ்வொரு மனிதனுடைய பெருமையும் பெருந்தன்மையும், அவன் தன் தாய், தங்கை, தமக்கையர், அவர்களின்று மற்றப் பெண்ணாய்ப் பிறந்தவரனைவரையு மிகுந்த மரியாதையுடனும் உள்ளன்புடனும், உதவி புரிந்து காப்பாற்றுதலாலும், பெருந்தன்மையுடையவனாய் நடந்துகொள்ளுவதாலும் பெரியோனாவன். ஷேக்ஸ்பியர் முதலிவிருந்தே மார்லோ முதலானவர்களுக்கு முடியாததாய் இவ்விஷயத்தில் பெண்ணரசியரை மேன்மைப்படுத்தி யெழுதியிருக்கிறார். கிரீக் தேசத்திலெழுதியவர், பெண்களைப்பற்றி நாடகங்களில் சரிவர எழுதல் முடியாது போயிற்று. மார்லோ முதலானவர்களுக்கு, தக்க பழக்கமில்லாமல், பெண்களில் பெரியோரும் பெருந்தன்மை யுடையோரையும் வரைதல் முடியாமல் போயிற்று. ஷேக்ஸ்பியர் ஒருவரே, இவ்விஷயத்தில் தக்கவாறு இவர் குணங்களையுங் குணாதிசயங்களையுங் குறிப்பிட்டிருக்கிறார்.

ரோசலிண்டு, இமோஜன், வையோலா, டெஸ்டிமோனா, ஒபீலியா, முதலியவருடைய குணசிரேஷ்டங்களை யாங்காங்கு அவர் சரிதத்தைக் கூறும்போது வேண்டியவாறு எடுத்துரைப்போம். இப்போது சில குணசீலரைப்பற்றியே சொல்ல முடியும்.

ஹென்றி யெட்டாவர் என்பவரது ராணியாகிய காதரயின் என்பவள் பெண்ணிற் சிரேஷ்டமானவருள் ஒருவள். இவள் உண்மையும், பொறுமையும், மனையாளுக்கான குணச்சிறப்பத்தனையும் வாய்ந்தவள். தன் கணவன் இவளால் தனக்கு ஆண் குழந்தைகள் பிறக்கவில்லையென்று இவளை மணம்புரிந்தது, தகுந்ததன்றென்று தள்ளி வைக்கும்போதுங்கூட அவரது நன்மையே கருதுபவளாயும் உல்ஸி போன்ற மற்றவர்கள் அரசனைத் தூண்டிவிட்டு இவளிடம் வந்து அரசன் ஆணைப்படி அப்படித் தள்ளிவைக்கச் சம்மதம் கேட்கும்போது அவர்களை உதறி உதறிப்பேசி, தான் ராஜாத்தியென்று அக்கெட்ட மனசுள்ள பாதகருக்குக் காண்பித்தும், தன் கணவனுக்கெதிரே மிகுதியும் பணிவுள்ளவளாயிருந்தாள். ஆகவே அவ்வரசனே இவளில் சிரேஷ்டமான பெண்ணரசி யுண்டென்பவன் பொய்யன் என்று அவளை வியந்து பேசும்படி நடந்து கொண்டாள்.

இனி ஜூலியஸ் ஸீஸர் என்னு நாடகத்தில், புருட்டஸின் மனைவியாகிய போர்ஷியா என்பவளுமித்தகைய பெருமாட்டியேயாம். அவள் மற்றப் பெண்கள் போலில்லாமல், மனித தைரியமும், குணமாட்சிமையுமுடையவள். ஆகவே அவள் புருஷன் தான் செய்யும் விஷயங்களைக் குறித்து இவளுடன் யோஜித்துக் கொள்வதுண்டு. ஸீஸர் கொடுங்கோல் மன்னனாக முயலுகின்றானென்ற வுடன் அவரைக் கொல்ல ஏற்பாடு செய்யும்போது அது விஷயம் தன் மனைவிக்குச் சொல்லிப் போகிறான். அச்சமயத்தில் அவள் அரசாங்க ஸபைக்குப்போன கணவனுக்கு ஒரு கெடுதியும் வரப்படாது என்று மனம் பதைத்துக் கொண்டு எவ்வளவு தைர்யசாலியா யிருந்தாலும், அன்பு மேலிட தன் கணவனைப் பார்த்துவர ஒரு வேலைக்காரனை அனுப்புகிறாள். ஆனால் அவனுக்கு இன்ன விஷயம் என்று சொல்லாமல் நீ அச்சபைக்குப்போய் என்று ஆரம்பித்துத் தன்மன ஆவலில் என் இன்னம் போகாதிருக்கிறாய் என்று சங்கதி முழுவதும் சொன்னவள்போல் பதைபதைப்பது அவளன்பையும், ஆவலையுங் காண்பிக்கும். பிறகு தன் கணவன் போர்க்களத்தி லிறந்துவிட்டா னென்றதும் தன் தகப்பனது பெருமையையும் தன் கணவனது பெருமையையு முத்தேசித்து வேலைக்காரரப்புறம் போயிருக்கையில் நெருப்பை விழுங்கி யிறந்து போனாள்.

இனிப் பெண்ணாய்ப் பிறந்தவரில் தெய்வகுணமேயுடையவளெனப்பட்ட கார்டீலியாவைப்பற்றிச் சில சொல்லுவோம். தன் தமக்கையர் புருஷரோடுசேர்ந்து கொண்டு அரசனாய தம் தகப்பனை மிகுதியும் பங்கப்படுத்தி மானக்குறைவு செய்யுமிடத்து அத்தகப்பன் தன்னை யதிகமாய்ப் பிரியத்துடன் நடத்தாவிட்டாலும், தான் பிரான்சு தேசத்தரசனாய தன்கணவனுடன் சந்தோஷமாயிராமல், இத்தகப்பனுடன் இருந்து அவர் படுங் கஷ்டங்களை யெல்லாம் அவருடன் பட்டு, அவர் கடைசி காலத்தில் தன்னாலியன்றமட்டும் அவருக்காறுதலு முதவியுஞ் செய்து வந்தாள். இது பொறாமல் அவள் தமக்கையர் இவளையு மிவள் தகப்பனையும் தங்கள் தகப்பனென்றும், தங்கள் தங்கையென்றும் பாராமல் கொன்று விடுகிறார்கள். ஆனால் தீமை விளைப்பவரொன்று முருப்படுவதில்லை. ஆகவே இவரொவ்வொருவராய்ப் பட்டழிகிறார்கள். இக்கதையில் இத்தகைய தெய்வகுணம் வாய்ந்ததாகக் கார்டீலியாவைக் குறிப்பிட்டது ஷேக்ஸ்பியர் பெண்களில் கெட்டவர்களிருந்தாலும், கைகூப்பிக் கும்பிடக்கூடியபடி பெருந்தன்மையுங் குணகீர்த்தியு முடையவரிருக்கிறார்களென்று காண்பிப்பது, அவர் பெண்களென்றா லெவ்வளவு மரியாதையுஞ் சிறப்பும் வைத்து எவ்வளவு பெருமையாயவர் குணங்களைப் பாராட்டி வந்தாரென்று தெரிய வருகிறது.

இவ்விதமாய் ஆண் பெண், அரசர் பாலர், பெரியோர் சிறியோர், குணசீலர், சண்டாளர் முதலிய அனைவரையு மாராய்ந்தற்றுணர்ந்து ஒரு விதமான குணத்தையுந் தவறவிடாது தன் நாடகங்களிலேயே உலகத்திலுள்ள பலவிதமான பண்பையு மொன்று சேர்த்து,எப்பொருளினும்,அறிவிற் சிறந்ததால்மெய்ப் பொருள் கண்டது அவரது மாட்சிமையாகும். இது பற்றியே மற்ற கவிகளிற் குற்றமின்னது குணமின்னது என்று சீர்தூக்கிக் குணமதிகப்பட்டதென்று அவர் கவிகளைக் கற்பதுபோலில்லாமல், அத்தனையும் பழுது சிறிதுமின்றிச் சிறந்த கீர்த்தி வாய்ந்தவையென்று புகழ்ச்சியினால் மட்டுமல்ல தினந்தோறும் எவ்விடத்திலும் எல்லாவிதமானவரும்,எத்தொழில்புரிபவராயினுந் தமதுணவுபோல் இவரதுநாடகங்களை வாங்கிப்படித்து வருவதாலும், இவரோடு பழகினவர் மட்டுமல்ல, உலகிலெல்லாவிடத்தில் எல்லா ஜாதியாரு மொருங்கே யிவரைப் பிரசித்தி மேன்மை யடைந்தவரென்று சொல்லுதலாலும், அனேக நூற்றாண்டுகளாயும் மனிதரது அறிவு மென்மேலும் விர்த்தியடைந்தவந்தும், அவரது எண்ணங்கள் பல விஷயங்களில் மாறுபட்டிருந்த போதிலும், ஷேக்ஸ்பியரது அறிவின் ஆழத்தையு முயர்வையும் அறிதல்கூடாமலிருப்பதாலும், அவரைப் ற்றியு மவர்நாடகங்களைப் பற்றியு மெண்ணிறந்த புத்தகங்கள் அநேக சிறந்த கிரந்த கர்த்தாக்களெழுதியிருப்பதாலும், அவரது குணசீலரை நாம் அனேக விஷயங்களுக் கடிக்கடிக் குறிப்பிடுவதாலும், அவர் வார்த்தைகளும் வாக்கியங்களும், ஆங்கிலபாஷையிலெழுதப்பட்ட புத்தகமதனைத்தினிலு மாங்காங்கே சேர்த்தெழுதப்பட்டிருப்பதாலும் பழமொழியாகப் யன்படுவதாலும், கவிகள், அரசாட்சி செய்யுமன் ர், மந்திரிகள், முதலியோர் மனிதரைத் தம் வழி சலுத்த வாக்கு வல்லமையை உபயோகிக்குங்கால் ஷேக்ஸ்பியரது வாக்கியங்களையும் அவரது பிரயோகங்களையும் கையாண்டுவருதல், இக்காலத்திலு மெல்லாவிடத்திலு மெவ்வண்ணம் ஷேக்ஸ்பியர் மனிதர் மனத்தைக் கவர்ந்து, அவரறிவை அதிகரிப்பித்து நல்வழி செலுத்தி வருகிறாரென்பதற்கு இவையே ஏராளமான அத்தாக்ஷியாகும்.

இதனாற்றான், இதுவரை இவரை கடலுக்கும், மலைக்கும், சூரிய சந்திர நக்ஷத்திர மண்டலங்களுக் கொப்பிடும்போதும் இவரது பெருமை அத்தகைய பெருமையையு மெளிதிற்றாக்கி நிற்கின்றது. இதுபற்றியே இனி எவ்வளவு காலமாயினும் ஆங்கிலேய பாஷையிலும் மற்றுலகிலுள்ள எல்லாப் பாஷையிலும் மனிதர் தம்மியற்கையின்படி மேன்மேலு மறிவு மிகுந்தவராக வாகச் சிறப்புப்பெற்றாராகிலும் அவர் அறிவினை ர்த்தி யாக்குவதோர் முக்கியமான சாதனமாகும். வற்றின் எல்லையில்லாப் பொருளும், வாடாத வாய் மையுங், கவித்திறமு மிவ்வகைச் சீர்த்தி செய்யுமென் து திண்ணம்.

—*A Master of Arts.*

# பெரும்புயல்

## THE TEMPEST

இத்தாலியாதேசத்துக் கீழ்க்கரை யோரத்தில் மிலான் என்னும் பட்டணத்தில் பிராஸ்பெரோ என்னும் பிரபு அரசாட்சி செய்துவந்தார். இவர் மிகுந்த பராக்கிரமசாலியாய் இருந்த படியினால், அவர் அரசாட்சி எங்கும் பிரபல்லியமாய் நாடெங்குஞ் செழித்து, நலமெங்கு மிகுந்து, ஜனங்கள் பெருகிச் சந்தோஷித்து இவ்விதமாய்க் குடியுயர கோனுயர்ந்தது. ஆனால் அரசனுக்கு மிராண்டா என்னும் பெண்ணைத்தவிர வேறு சந்ததியில்லை. என்றாலும் நம்முள்ளிருப்பிதுபோல் ஆண்பிள்ளைகள் மட்டுமே யன்றி, பெண்பிள்ளைகளும் பட்ட மேறுதலால், இப்பெண் அவருக்குப் பின்பட்ட மேறுதற்குரியவள். ஆகவே அரண்மனையில் மிகுந்த சிறப்புடனும், செல்வாக்குடனும், அவள் வளர்ந்து வந்தாள்.

அக்காலத்தில் அனேகர் மாந்திரீக விஷயமாக அனேக நூதன விஷயங்களை அறிந்து கொள்ளும்படி அதைப்பற்றிய நூற்களை விசேஷமாய்க் கற்றுவந்தார்கள் பிராஸ்பெரோ அரசாட்சியிலெவ்வளவு பராக்கிரமமுடையவரோ அவ்வளவு சகல கல்வியிலுந் தேர்ச்சியுடையவராதலின் இப்புது விஷயமென்னவென ஆராயப்புகுந்து நாளுக்குநாள் அதிலேயே ஊக்கமதிகமாய் ஊன்றி, தன் ராஜாங்க நடவடிக்கைகளை தன் தம்பியாய அன்டோனியோ விடம் ஒப்புவித்தார். அன்டோனியோ சாதாரணமாக நற்குணம் வாய்ந்த மனிதன். ஆனால் அனேகருக்கு அவரிருக்குமிடம், கிடைக்கும் சாவகாசம் முதலியவற்றால் அவர் குணுதிசயங்கள் எற்படுவதால், தன் தமையன் இவ்விதமாய் உலகவிஷயங்களைவிட்டு விலகி அரசாட்சியைக் கவனியாமல் மாந்திரிகங்கற்று வருவதனால், தானே அதிகாரம் செலுத்துவதுடனும், அரசனாகவே யிருக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணம் நாளுக்குநாள் அவன் மனதில் குடிபுகுந்து அவன் நற்குணத்தை யெல்லாம் சிறிது சிறிதாகப் போக்கி பிராஸ்பெரோவுக்கே ஒரு கெடுதி சூழச் செய்வித்தது. ஆகவே இதைச் செய்து முடிக்கும்படி, ராஜாங்கத்தில் தனக்கு வேண்டியவர்களுக்கு உயர்ந்த உத்தியோகங் கொடுத்து, வேண்டாதவர்களை சிறிது சிறிதாக நீக்கியும், மற்றுமுள்ளவர்களை ஆங்காங்கே ஆசை வார்த்தைசொல்லி சொற்ப நன்மை முதலியன செய்து முற்றிலும் தன் வசப்படுத்திக்கொண்டான். விரிந்து அகன்று நாற்புறமும் வேரூன்றி,

கிளைகளைத் திசையிலு மடர்ந்து நிறைந்து நிற்கும் ஆலவிருக்ஷமும், அதனடியில் வளரும் கரையான் புத்தினால் நாளடைவில் வேறற்று வீழ்ந்து போகிறது. மாடமாளிகை கூடகோபுரம் நிறைந்த அரிய பெரியதொரு அரண்மனையும், அதன்மேல் பாசி படர்ந்து, பின்னர் பார்பாராய்ப் பிளந்து பாழடைந்து போவதுண்டு. அவ்வண்ணமே, பிராஸ்பெரோ தான் எவ்வளவு பராக்கிரமமுடையவனாயிருந்தாலும், குடிகள் தன்னை யெவ்வளவு அதிகமாய் அன்பு பாராட்டி வந்தாலும் அதையே பெரியதாய் எண்ணி இவ்விதம் தன் தம்பி கையில் அரசாட்சியை ஒப்புவித்துவிட்டபடியால், அவனுஞ் சிறிது சிறிதாய் அதிகாரத்தைக் கவர்ந்து, நேப்பிள்ஸ் நகரத்து அரசனுக்குச் சிற்றரசனாயிருந்து தன் தேசத்தை அவனுக்குக் கீழ்ப்படுத்தி, கப்பம் கட்டிவருவதாய் ஏற்பாடுபண்ணி, அவ்வரசனை மிலான் பட்டணத்திற் கெதிராக படையெடுத்துவரச் செய்தான். மிலான் ராச்சியமோ சுயராச்சியமாயிருந்தது. அதாவது அவ்வரசாட்சி மற்ற ஒருவருக்குங் கீழ்படாமலும், அத்தேசத்தவரால், அத்தேசத்திலுள்ளவர்கள் நன்மையே முக்கியமாய்க் கருதி நடத்தப்பட்டு வந்தது. இப்போது அன்டோனியோ செய்த ஏற்பாடு என்னவென்றால்,' தான் முடிசூட்டிக்கொள்ள வேண்டுமென்பதற்காக, தன் சுயநயம் பாராட்ட தன்னாட்டை மற்றொரு அரசனுக்குக் கீழ்படுத்தி அவன் கட்டளைக்குள்பட்டு நடத்தும்படியாயிற்று. நேப்பிள்ஸ் அரசன் இவ்விஷயத்தைக்குறித்து]சந்தோஷப்பட்டு உடனே படையெடுத்து வந்தான். அன்டோனியோ அவருக்குதவியாய் கோட்டை வாசல்களை துரோகமாய்த் திறந்துவிட்டு, ஊரை எளிதில் பிடித்து விடும்படி செய்தான். பின்னர் கூடுமானால் பிராஸ்பெரோவையும் அவன் குமாரத்தியையும் கொல்லவே ஏற்பாடு செய்வதாயிருந்தான். ஆனால் அவர்களிருவரைப் பற்றியும் ஜனங்கள் நினைத்திருந்த நல்லெண்ணமும், அவர்களைக் கொன்றுவிடுவதால் தன்னை யெல்லோரும் வெறுக்கவேண்டி வருவதையும் உத்தேசித்து, பழுதுபட்ட கப்பல் ஒன்றில், ஓட்டத்துடுப்பும் பாய் மரமுமொன்று மின்றி, திசைகாட்டுங் கருவியுமின்றி, திக்கற்று திசையற்றுப் போய்விடும் வழியாய் இரவிலேயே அவர்களிருவரையும் ஏற்றி கடல் மார்க்கமாய் அனுப்பிவிட்டான். அன்டோனியோ இப்படிக் கப்பலைத் தயார் செய்யச் சொல்லி ஏற்படுத்தின ஆள் உண்மையாகவே பிராஸ்பெரோவுக்கு வேண்டியவனாயும், அவனுக்கு என்ன கெடுதி வருமோ தெரியவில்லையே, நம்மால் மற்ற யெதுவுஞ் செய்ய முடியாவிட்டாலும் இந்த கடைசி நேரத்திலாவது இயன்ற உதவி செய்வோமென்று, யாருக்குந் தெரியாமல் பிராஸ்பெரோ எல்லாவற்று மதிகமாய் எண்ணியிருந்த மாந்திரீக புஸ்தகங்களையும், அவர்களிருவருக்கும் சில நாட்களுக்கு வேண்டிய உணவும் இரகசியமாய்ச் சேர்ப்பித்துக் கப்பலில் வைத்திருந்தான்.

ஆகவே தகப்பனும் குமாரத்தியும், இராப்பொழுதில் மிகுதியும் பழுதுபட்ட ஒரு கப்பலிலிருந்து, கடல் அலை மோதின பக்கமெல்லாம் காற்றடித்த திசையெல்லாம் அல்லாடி, இருட்டிலும், மழையிலும், குளிரிலும் வருந்தி, விடியற் காலையில் நிர்மானுஷியமான தீவொன்றில் கரையில் ¦வந்து சேர்ந்தார்கள். பிராஸ்பெரோ அந்தக் கப்பலிலிருக்கும்போது தன் தம்பியின் துரோகத்தை நினைத்து வருத்தம் சகிக்கமாட்டாமல், இப்பாழும் உயிர்தான் என்ன வென்று உயிரை வெறுத்து கடலிலிறந்துவிடத் தான் அடிக்கடி துணிந்தார் என்றாலும் தன்னுடன் தன் புத்திரியிருந்தபடியால் தான் அப்படி இறந்துவிட்டால் தன் மட்டில் சவுக்கியமாயிருப்பதன்று அந்தப் பைங்கிளியாகிய பெண்மணி யென்னாவாளென்று அடிக்கடி நினைந்து அவளுக்காக தானும் உயிர் பிழைத்து, தக்க சவுசரியந் தேடினார். இது விஷயத்தை பின்னால் மிராண்டாவிடம் ஒருதரம் அவர் சொல்லுகையில் அவள் ஐயோ! அந்தச் சமயத்தில் உங்களுக்கு நான் எவ்வளவு தொந்தரவா யிருந்திருப்பேன். உங்கள் சவுகரியந் தேடிக்கொள்ளக் கூட முடியாத சமயத்தில் எனக்குஞ் சேர்ந்து என்னையுங் கவலையாய்ப் பார்த்துக் கொள்வது எவ்வளவு கஷ்டமென்று அவள் வருத்தப்பட்டாள். அப்பொழுது பிராஸ்பெரோ அப்படியன்று குழந்தாய்! உன்னால்தான் உனக்கென்றுதான் நானும் உயிர் பிழைக்க வேண்டியிருந்தது. ஆகவே உன்னால்தான் நான் உயிர் பிழைத்திருக்கிறேன் என்று என் உயிரைக் காப்பாற்றின உன்னைக் கொண்டாட வேண்டுமென்று சொன்னார். என்ன விது. இது உலகில் யாவரும் அனுபோகத்தில் அறிந்துகொள்ளக் கூடியதே. புருஷனை யிழந்தவள், பிள்ளைக்காக உயிர் பிழைத்திருக்கிறாள். மற்றபடியும், வேர்ட்ஸ்வர்த் என்னுங் கவிஞர் சொல்லுவதுபோல், மனிதர்க்கு வயது ஆக ஆக உயிர் வாழ்வின் ஊக்கம் குறைவுபடுகிறது. அப்படி ஊக்கம் குறைவுபட்டு பிணம்போல் கிடந்து மூச்சு மட்டும் விட்டு நெட்டுயிர் போலுற்ற

பிணம்போ வில்லாதிருப்பது, குழந்தைகளினாலும், அவர்கள் வேடிக்கைகளையும், அவர்கள் இனி எவ்வழி திரும்புவார்கள், அவர்களுக்கு வேண்டிய விஷயங்களென்னவென்று நினைத்து தக்க முயற்சி யெடுப்பதால் மட்டுமே மனிதனுக்கு உயிர் வாழ்வின் ஊக்கம் வருவதால் மக்கள் பேறினும் மனிதற்குக் கடவுள் தரும் பெரும்பயன் வேறொன்றுமில்லை யென்று அக்கவி சொல்லி யிருக்கிறார்.

இதுநிற்க, அவர்கள் வந்து இறங்கிய தீவு கடலின் நடுவே, எவ்வித தேசத்திற்கும் வெகுதூரத்திற் கப்பாலிருந்தது. அதில் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பாக, மாந்திரீகத்திற்காக தன் தேசத்தினின்று தள்ளப்பட்ட ஸைகோராக்ஸ் என்னும் அம்மையார் கிழவி ஒருத்தி இருந்து வந்தாள். அவள் அந்தத் தீவிற்கு வந்தபொழுது கற்பிணியா யிருந்து, அதற்கு வந்த பின்னர் மனிதவுருவில்லாமல் அசங்கியமாய், அறுவறுப்பான ஜெந்துபோன்ற குழந்தை யொன்று பிறந்தது. அவர்களிருவரும் அந்த விடத்தில் தனியரசு போலிருந்து கொண்டு வந்தார்கள். இந்த ஸைகோராக்ஸ் மூக்கு கட்டைவிரலி விடித்து உடல்முழுவதும் சக்கிரம்போல் வளைந்துபோன குடுகுடு கிழவி; யென்றாலும் தன் மந்திரசக்தியினால் இவள் அந்த தீவிலுள்ள பூதங்களை யாண்டு வசப்படுத்தி வந்தாள். காலையி லெழுந்ததும், அல்லது அனேகமாய் இரவிலேயே யிவள் அண்டங்காக்கையி னிறக்கை கொண்டு, சதுப்புநிலம், இலை முதலியன அழுகி வீச்சம்வீசும் குளங் குட்டைகளிலும் சில மரங்களி னிலைகளிலும் சேர்ந்து நிற்கும் பனித்துளிகளைத் தடவி யெடுத்து மருந்து சேர்த்து மாந்திரீகத்துக்கு வைத்துக்கொள்வதுண்டு. இதுபோல மற்ற அறுவறுப்பான இடங்களிலெல்லாம் தனக்கு மருந்துவேண்டிய விஷயங்களுக்கு அத்தீவில் உள்ள பூதங்களை அடிக்கடி ஏவி வருவதுண்டு. அப்பூதங்கள் நல்ல பூதங்களென்றும் கெட்ட பூதங்களென்று மிரு பிரிவினவா யிருந்தன. அதில் கெட்ட பூதங்கள் ஸைகோராக்ஸ் சொல்லியபடியெல்லாம் செய்யத் தயாரா யிருந்ததால் அவைகள் சௌக்கியமா யிருந்தன. நல்ல பூதங்களுக்கு அது மிகவும் கெட்டகாலமா யிருந்தது. இப்படி நல்ல பூதங்களில் ஏரியல் என்பதொன்று. அது இந்த அம்மையார் கிழவி சொல்லுவன வற்றிற்கெல்லாம் உடன்படாமல், அவளிட்ட அறுவறுப்பான வேலைகளைச் செய்யாத படியினால், ஆலமரத்தை யொன்றைப் பிளந்து அந்தப் பிளப்பில் ஏரியலை குட்டையிலடைத்தாற்போல பலமாயிருக்கி மந்திர சக்தியால் அடைத்து விட்டாள். அது அவ்விடமிருந்து மிகுதியும் கஷ்டப்பட்டது. பிறகு சிறிது நாள் சென்றபின் அந்த அம்மையார் கிழவியும் இறந்துபோய் விட்டாள். அவள் பிள்ளையான மிருக மனிதனாய் காலியனுக்கு மந்திரமும் மாயமும் ஒன்றுந்தெரியாது. கிழவியும் ஏரியலை விடுவியாமலே யிறந்துபோய் விட்டாள். ஆகவே அந்தப்பூதம் கரடிகளும் புலிகளும் கூட மனமிளகும்படி, காடெங்கும் அதிரி எதிரொலி பிரபலித்து முழங்கும்படி, ஐயோ நான் உதவியன்றி இங்கே அவலமாய்ப்போகிறேனே என்று பிரலாபித்து அழுது கொண்டிருந்தது.

இந்த சமயத்தில் நாம் முற்கூறியவாறு பிராஸ்பிரோவும் அவர் புத்திரி மிராண்டாவும் அக்கப்பலினின்றும் கரையில் வந்து சேர்ந்தார்கள். இது எவ்விதத்தீவு. இதில் நாமெப்படி யிருந்து உயிர்வாழலாமென்று அந்த இடமெல்லாம் சுற்றிப் பாக்கையில், மிருக மனிதனான காலிபன் கண்ணுக்குத்தென்பட்டு இது நல்ல தண்ணீர் இடம். இது மழைக்குத்தங்கத் தக்க குகையென்றெல்லாம் வந்து இவர்களுக்குத் தெரிவித்தான். அதையெல்லாம் தெரிந்து கொண்டு பின் அவ்விடத்தில் அடைபட்டிருந்த பூதங்களை தன் மந்திர சக்தியால் விடுவித்தார். ஏரியல் என்னும் பூதம் இவர்மேல் மிகுந்த விசுவாசமும் நன்றியறிவுள்ளதுமாய் இவருக்கு அத்தீவில் முக்கிய வேவுகாரனாக வேண்டிய வேலைகள் யாவுஞ் செய்துவந்தது.

பிராஸ்பெரோ முதலில் காலிபனை வெகு பிரியமாக நடத்தி அவன்பேரில் அதிக பக்ஷமுடையவராய் மிருகமாயிருந்தவனை மனிதனாகத் திருப்பவேண்டுமென்று மிகவும் முயற்சிசெய்து, பாஷைகற்பித்து இயற்கையினழகை யெல்லாம் காண்பித்து, கடலிலலை உயர்ந்து சுருட்டி மிகுந்த இரைச்சலோடு, பாரையிடிந்தாற்போல் விழுவதையும், சூரியன் உதிக்கும்போது கடலில் அலையிலிருந்து அலைக்கு மின்னல் ஒளிபோல் பிரகாசித்து எவ்விடத்திலும் வெளிச்சம் பரவி அழகு வாய்ந்து நேரஞ்செல்லச்செல்ல உயருவதையும், பக்ஷிகள் மரக்கிளைகளில் பாடுவதினினிமையும், சோலைகளினிடையே சூரியன் உச்சத்தில் நின்று உக்கிரமாய் கிரணங்கள் விடுக்கும்போதுங்கூட அக்கிரணங்கள் சிறிதும் பிரகாசிக்கக் கூடாமலடர்ந்த விடங்களின் நிர்சப்தமான மாட்சிமையையும், மற்ற விடங்களில் சூரிய வெயில், சந்திரவெளிச்சம், நக்ஷத்திர வெளிச்சம் முதலியன மரங்களின்மேல்தண்ணீர் போல்

கட்டி நிற்பதுபோலவும், காற்றடித்து இலையசைந்து இடையிடையே சிறிது சிறிதான வழிதோன்ற அதின் வழியாய் வெளிச்சம் இறங்கியதுபோலும் உடனே மறைந்ததுபோலும், இன்னும் பலவிதமாய் ரம்மியமான இயற்கை யழகையும், இயற்கை யற்புதங்களையும் அவனுக்குக்காட்டி, இதுவரை அதுபோன்ற காக்ஷிநிறைந்த அந்தத்தீவில் குடியிருந்தாலும் அதனருமை பெருமை யறியாதவனுதலால் அவனுக்கு அந்த அழகையெல்லாம் தெரிவித்து அவனை மனிதரில் மிகவும் நுண்ணறிவு பொருந்தி அழகின் வண்மை தெரிந்தவனுக்கமுயன்றார். இதுவுமன்றி தாகத்திற்கு தண்ணீர் அருந்தும்போது அதில் ருஜிக்காகவும், வாசனைக்காகவும் காட்டு மாம்பழம் போன்ற சிறு கனிகளைப் போட்டுக்கொடுத்து வெகு நாகரீகமாகவும், சொகுசாகவும், எவ்விதத்திலும் உயர்நடை, நல்ல பழக்கமுடையவனுக்க முயன்றார். என்றாலும், இவர் கற்பிப்ப தொன்றுமே தக்க முயற்சியுடன் பயின்று கொள்ளவுமில்லை, தன் மிருகபுத்தியே மேலிட்டு, மிருகத்தின் சோம்பேரித்தனமும் முரண்டு முட்டாள் தனமுமே அதிகரித்து தன் குருவின் குழந்தைக்கே வற்புறுத்தி பலாத்காரமாய் மணம்புரியும்படி ஒரு கெடுதி சூழவாரம்பித்தான். அது உடனே பிராஸ்பெரோவுக்குத் தெரிந்து சிச்சீ! இனி இத்தகைய மனிதனுக்கு இத்தகைய கல்வி பயிற்றுவது சரியன்று. நாம் கற்றனவெல்லாம், யார் யார் பயிற்சிக்குத் தக்கதோ அவற்குப் பயிற்றுவதன்றி, மற்றப்படி கல்லாதார் செவி மாட்டின், அதில் கையுறும் குற்றம் நமதே பிரிதன்றன்றென்று பெரியோர் வாக்கியமிருக்கிறதல்லவா. மற்றப்படியும் கருங் காக்கையைக் கழுவி வெண்மை செய்யத்தொடங்கி முயலு முயற்சியத்தனையும் பயன்படாத்துயரம். தாழ்ந்தவேலை செய்வதற்கேயிவன் தகுதி அவையன்றி மற்ற எவ்வித முயற்சியு மிருவருக்கும் பயன்படாது என்று கண்டு அவனை விறகுகொண்டுவந்து சேர்க்கவும், தண்ணீர் கொண்டு வந்து கொட்டவும், மற்று மிதுபோல வேலை செய்யச்செய்து அவன் வேலையை ஏரியல் என்னும் நற்பூதம் மேற்பார்த்து வரும்படி கட்டளையிட்டார். ஏரியல் மிகவும் மனோரம்மியமும் சந்தோஷகரமும் பொருந்திய பூதம். பலவித சக்தியுமுடையது. மனிதர் கண்ணுக்குத் தோன்று உருவும் கண்ணுக்குத் தோன்றுவன வற்றில் பற்பல உருவும் எடுக்கக்கூடிய சக்தியுண்டு. மிகவும் வேடிக்கை புத்தியுள்ள பூதமாதலால் காலிபனை வேலை யேவுவது அனேகமாய் கண்ணுக்குக்காணுத உருவமாய் நின்று எவ்வித மாயமாய் ஒருவன் தன்னையடிப்பதும் கிள்ளுவதும் போலி... கும்படியும் இன்னும் பலவிதமாய் வேடிக்கையா... வினயமாயும் தூண்டி வேலை வாங்குவதுண்டு. கா... பன் முணுமுணுத்துக் கொண்டாவது, தொந்தர... பொறுக்கமாட்டாமல் திட்டிக்கொண்டு வைத்... கொண்டே வேலையைச் செய்து முடித்து வருவான்.

ஏரியல் இவனை வேலை வாங்குவதோடு, பிராஸ்... பெரோவுக்கு என்ன செய்யவேண்டுமோ அந்த... வேலைகளை யெல்லாம் ஒழுங்காகவும் சரிவரவும் செய்து வந்தது. அனேகமாய் அவர் மாந்திரீக விஷயமா... வேண்டியவற்றிற்கு இது காற்றில் பறந்துபோயாவது கடலில் நீந்தியாவது கடலின் அடி வண்டலில் நுழைந்துபோயாவது பூமி யடியிலுள்ள சுரங்கங்களில்வே... செய்தாவது வேண்டுவன பொருள்களைக்கொண்டு வந்து சேர்ப்பிப்பதாம். இவ்வித உதவி எல்லா பூதசேகளுஞ் செய்ய, மனிதராலாவது மற்ற யெவ்விததாலாவது யாதொரு இடையூறுஞ் சிறிதுமின்றி, தன்னன்பு அழுந்தியூன்றி நின்ற மாந்திரீகத்தை மேன்மேலுங்கற்று சகலவிதமான சக்தியையும் பெற்று நாளுக்குநாள் மிகுதியுஞ் சிறப்புவாய்ந்து, பிராஸ்பெரோ தன் மகளை அன்போடுஞ் சௌகரியத்தோடும் வளர்த்து வந்து மற்றொரு பன்னிரண்டு வருஷங்கள் ஆயின.

இதனிடையே மிலான் பட்டணம் ஆண்டுவந்த அன்டோனியோ, நேப்பிள்ஸ் அரசனுக்குக் கப்பம் கட்டிவந்து அவனுக்குக் கீழ்ப்படிந்து வந்தான். நேப்பிள்ஸ் நகரத்தரசனுக்குக் கிளாரிபேல் என்னும் பெண்ணும் பர்டினண்டு என்னும் ஆண்பிள்ளையுமிருந்தார்கள். பிராஸ்பொரோவுக்குத் தம்பியிருந்தது போல் நேப்பிள்ஸ் அரசனுகிய அலான்ஸோவுக்கும் செபாஸ்டியன் என்று ஒரு தம்பியிருந்தான். இப்படி பன்னிரண்டு வருஷங்களாயின வென்று சொல்லப்பட்ட வருஷத்தின் இறுதில், கிளாரிபேல் என்னும் ராஜஸ்திரியை டியூனிஸ் என்னும் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த பட்டணத்தில் அவ்வூரரசனுக்கு மணம் புரிவித்தார்கள். அக்கல்யாண வைபோகங்களுக்கு என்று, அனேக அழகான பெருங்கப்பல்களை சேர்த்துக் கொண்டு, சிற்றரசர் சூழ, பலவாத்தியம் முழங்க, மிக்க ஆடம்பரத்தோடும், கம்பீரத்தோடும், மணம்புரிவித்து விட்டு எல்லோரும் திரும்பவும் நேப்பிள்ஸ் போகப் புறப்பட்டு கடல்மார்க்கமாய் வந்து கொண்டிருந்தார்கள்.

—*A Master of Art*

# கல்யாணி

## KALYANI *

### 3-ம் அதிகாரம்

வீரசேனன் தன் இராஜ்ய தந்த்ரவேலைகளிலும் ஜனசார பரிபாலன சந்தோஷங்களிலும் முழுகி, ராஜதானியில் எப்பொழுது மிருப்பவனாதலால், அந்தப் பரந்த ஜமீனிலுள்ள இடங்களை யெல்லாம் விவரமாகத் தெரியாதவனாயிருந்தான். கல்யாணியோ, தன் ...ாயுடன் திருப்புனத்தில் கோடைகாலமெல்லாம் ...சிப்பவளாதலாலும், அவளுக்கு இயற்கையாயுள்ள ...ரியத்தாலும் வேறே வினோதங்களில்லாமையாலும் ...டிக்கடி அங்கே திரிவதாலும், அவ்விடத்திலுள்ள ...லையும் முடங்கும், நெடுவழிகளும், குறுக்குப் பாதை ...ளும், காடடர்ந்த மார்க்கங்களும், முட்டுச் சந்துகளும் தெரிந்தவளாயிருந்ததால் தன் பிதாவுக்கு வழிகாட்டிச் சென்றாள்.

வீரசேனன் சுயமாக இயற்கைப் பொருள்களின் அழகுகளில் பிரியமற்றவனல்லவென்று சொன்னோமல்லவா. அவனுடைய சூதற்ற அழகிய குமாரத்தி போகும் வழியில் புத்திரீய வாஞ்சையுடன் அவன் கையில் தொங்கிக்கொண்டு ஓரிடத்தில் நிற்கும் வெகு நாள் சென்ற ஒரு தேக்குமரத்தின் பரிமாணத்தைக் காட்டினாள். எதிர்பாராத மற்றோர் இடத்தில் வழி திரும்பி மலைகளின் மத்தியில் சென்று அவர்களுக்குத் திகைப்புண்டாக்கிற்று. உடனே ஒரு உயர்ந்த மேட்டிலேறினார்கள். அவ்விடத்திலிருந்து பார்க்கும் பொழுது கீழே பெரிய மைதானம் தோன்றிற்று. அவர்கள் சிறிது தூரம் குன்றுகளுக்கும் காடுகளுக்கும் மத்தியில் செல்ல அது கண்ணுக்குத் தெரியாமல் போய்,!ஒரு தாழ்ந்த ஏகாந்த ஸ்தலத்தை அடைந்தார்கள். அப்பொழுது அவனுக்குண்டான பெருமகிழ்ச்சிக்களவில்லை.

கண்கவர் காட்சியாயிருந்த அவ்விடத்தில் போகையில், முனியம்மாள் குடிசை அதன் சமீபத்திலிருப்பதாகக் கல்யாணி சொன்னாள். சிறு குன்றிலிருந்து திரும்பினவுடன் அதைச் சுற்றி ஒரு கால்வழி போயிற்று. அதில் தினந்தோறும் நடப்பவர் கால்கள் ...ட்டு அது தேய்ந்ததா யிருந்தது. அதில் செல்ல அது அந்தக் குடிசையின் எதிரில் கொண்டுவந்து விட்...டது. ஒரு பள்ளமான இருண்ட குகைவாயில் அந்தக் குடிசை யிருந்ததானது அதில் வசிப்பவர்களின் கருகிய மன நிலைக்குத் தக்கதாய் மனதாரச் செய்யப்பட்டது போலிருந்தது.

அது ஒரு பெரிய பாறைக்குக் கீழே இருந்தது. மேலிருந்து கல்லுகள் பெயர்ந்து கீழே விழும்போல் தோன்றிக்கொண்டிருந்தன. சுவர்கள் கழுப்பற்றையால் கட்டப்பட்டு, கூறை புல் மேய்ந்திருந்தது. அதில் அனேக பாகங்கள் பழுதாயிருந்தன. அதிலிருந்து இலேசாகப் புகை எழும்பிச் சுருண்டு மேலே செல்வது அந்த முகட்டிலிருந்து மேலே தொங்கிக் கொண்டிருந்த பாறைக்கு ஒரு தூண் நிறுத்தியது போன்றிருந்தது. அங்கு மிங்கும் சிதறி நிற்கும் சில செடிகளை மாத்திரம் வேலியாகவுடைய நாகரீகமற்ற ஒரு சிறு தோட்டத்தில் தனக்கு ஜீவனோபாயமான தேன்கூடுகளின் சமீபத்தில் அந்தக் கிழவி உட்கார்ந்துகொண்டிருந்தாள்.

துர் அதிர்ஷ்டத்தால் செல்வமெல்லாமொழிந்து இழிவான குடிசையில் அவளிருந்தபோதிலும், அவளைப் பார்த்தவுடனேயே அவளுடைய தள்ளாமையாவது, தரித்திரமாவது, துர்ப்பாக்கியமாவது, கண்தெரியாமையாவது ஆச்சரியப்படத்தக்க அந்தப் பெண்பிள்ளையின் மனவூக்கத்தைக் கெடுக்கவில்லையென்று எல்லாரும் இலேசில் தெரிந்துகொள்ளலாம்.

ஒரு பெரிய பழைய மரத்தடியில் போட்டிருந்த ஒரு மண்மேடைமேல் அவளிருந்தாள். அவள் நெட்டை, கம்பீரமானவள். ஆனால் வயது சென்றமையால் கொஞ்சம் கூனுண்டாயிருந்தது. குடியானவளுடைய உடுப்புத் தரித்திருந்தாலும் சாதாரணக் குடித்தனக்காரருடைய உடுப்புப்போலல்லாமல் அசாதாரணமாக அது சுத்தியாயிருந்தது. அவர்களுக்குள்ள மாதிரியில்லாமல் அவள் அதை நன்றாயும் வேறுவிதமாயும் தரித்திருந்தாள். ஆனால் அவளுடைய முகத்தின் தீர்க்கத்தைக் கண்டுதான் அவளைப் பார்ப்பவர்கள் அவள் ஒரு சிறு குடிசையிலிருந்தபோதிலும் அவளிடத்தில் மரியாதையுடனும் உபசாரத்துடனும் பேசும்படி நேரிடுகிறது. அது தனக்குரியது தானென்ற மன அமைதியுடன் அவள் அதை அங்கிகரிப்பாள். அவள் இளமையில் அதிக அழகாயிருந்திருக்க வேண்டும். இப்பொழுது அது குன்றியிருப்பினும் பொறிகளின் வன்மையும், ஆழ்ந்த யோசனையும், சரியான பெருமையும், அவள் நிலையிலிருப்பவர்களிலும் எவ்வளவோ அவள் மேன்பட்டவளென்று காட்டக் கூடியவைகளாயிருந்தன. கண்ணொளியில்லா முகத்திற்கு இவ்வளவு தீர்க்க

* An adaptation of Sir Walter Scott's Bride of Lammermoore.

மிருக்குமென்று ஒருவரும் நினைக்க முடியாது. அவள் கண்கள் ஏறக்குறைய முழுவதும் மூடப்பட்டிருந்தாலும் முகத்திற்குப் பழுதொன்றும் செய்யவில்லை. தன்னைச்சுற்றித் தேனீக்கள் செய்யும் ரீங்காரத்தைக் கேட்டுக்கொண்டு சாந்தையாய்த் தூங்காமல் யோகத்திலிருப்பவள்போல, ஆழ்ந்த யோசனையில் அவளிருந்துகொண்டிருந்தாள்.

அந்தத் தோட்டக் கதவின் சங்கிலியைத் திறந்து கல்யாணி "முனியம்மாள்! என் பிதா உன்னைப் பார்க்க வந்திருக்கிறார்" என்று சொன்னாள்.

"உன் தகப்பனாருக்கு வந்தனம். கல்யாணி! உனக்கும் வந்தனம்" என்று வந்தவர்களுக்கு எதிரில் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு முனி சொன்னாள்.

அவளுடைய வெளித்தோற்றத்தைக்கண்டு ஆச்சரியமடைந்த வீரசேனன், அவளுடைய சம்பாஷணையும் இனிமையாயிருக்குமோ என்று தெரிய ஆவல்கொண்டு "அம்மா! உன் தேன்கூடுகளுக்கெல்லாம் இன்று காலைப்பொழுது அனுகூலமாயிருக்கிறது போலும்" என்றான்.

"ஆம். அப்படித்தான். இப்பொழுது ஆகாசம் முன்னிலும் சாந்தமாயிருக்கிறதாக எனக்குத் தெரிகிறது" என்றாள்.

"அம்மா! இந்தத் தேனீக்களை யெல்லாம் நீதானா காப்பாற்றுகிறாய்? அது எப்படி நடக்கிறது?" என்று வீரசேனன் கேட்டான்.

"அரசர்கள் தங்கள் குடிகளைக் காப்பாற்றுவதுபோல், பிரதிநிதிகளால், என்னுடைய பிரதான மந்திரி எனக்கு வாய்த்தது என் அதிர்ஷ்டம். அவள் பெயர் பார்வதி" என்று முனியம்மாள் சொல்லி, தன் கழுத்தில் கயிற்றில் கட்டித் தொங்கவிட்டிருந்ததும் வீட்டு வேலைக்காரரை அழைக்க அக்காலத்தில் வழங்குவதுமாகிய ஒரு சிறு வெள்ளி ஊதுகுழலை வாயில் வைத்தூதினாள். உடனே 15 வயதுள்ள பார்வதி குடிசையிலிருந்து வந்து அவள் முன் நின்றாள். அவள் முனியம்மாளுக்குக் கண் தெரிந்தால் எவ்வளவு துப்புரவாய் சேலை கட்டியிருப்பாளோ அவ்வளவில்லாவிட்டாலும் சாதாரணமாக எதிர்பார்க்கக் கூடியதிலும் அதிகச் சுத்தமாய் வஸ்திரம் தரித்திருந்தாள்.

"பார்வதி, இம்மந்திரிக்கும் கல்யாணிக்கும் கொஞ்சம் தினைமாவும் தேனும் கொண்டுவந்து கொடு. சுத்தியாயும் காலதாமதமில்லாமலும் நீ கொண்டுவந்து கொடுத்தால், நீ அவலட்சணமாய்ச் செய்வதை அவர்கள் பாராட்டமாட்டார்கள்" என்று சொன்னாள்.

பார்வதி தன் எசமாட்டியினுத்தரவை நாம் எதிர்பார்க்கக்கூடியவண்ணம் அழகாகச் செய்து முடித்தாள். அவளுடைய கால்களும் பாதங்களும் ஞண்டுபோல ஒருபக்கம் செல்லவும், குடித்தனக்காரரும், வேலைக்காரரும் இதுவரை காதால் கேட்டதே ஒழியக் கண்ணால் கண்டிராத யஜமானனைப் பார்த்துக் கொண்டே தலை மற்றொரு பக்கத்தில் திரும்பவும் அவள் போனாள். ஒரு வெறும் இலையில் தினைமாவும் தேனும் கொண்டு வந்து வைத்ததை அவர்கள் மரியாதையுடன் அங்கீகரித்தார்கள். விழுந்து கிடந்த ஒருமரத்தின் பழுதாய்ப் போன அடிக்கட்டையிலிருந்துகொண்டே வீரசேனன் இன்னும் பேச்சை நீட்டிக்க வேண்டுமென்னும் ஆசையுடையவனாய் எந்தத் தக்க விஷயத்தைப் பற்றி எவ்விதம் பேசுவதென்று தெரியாமலிருந்தான்.

சற்றுப் பொறுத்து "அம்மா! நீ இந்த இடத்தில் வெகு காலமிருந்திருக்கிறாயோ?" என்று வீரசேனன் கேட்டான்.

"நானிவ்விடம் வந்து 60 வருஷமாயிற்று". என்று கேட்ட கேள்விக்கு இன்றியமையாத உத்தரம் மரியாதையுடனும் கவுரவத்துடனும் அவள் சொன்னாள்.

"உன்னுடைய பேச்சிலிருந்து ஆதியில் நீ இந்த ஊர்க்காரியல்லவென்று தோன்றுகிறது" என்றான்.

"அல்ல. நான் மலையாளத்தில் ஜனித்தவள்" என்றாள்.

"ஆனாலும் உன் சொந்த நாட்டில் போலவே இவ்வூரிலும் ஆசையுடையவள்போல் தோற்றுகிறாய்" என்றான்.

"ஈசுவரன் எனக்கு விதித்த சுகதுக்கங்களை நான் அனுபவித்தது இவ்விடத்திலேதான். யோக்கியனும் அன்புள்ளவனுமான கணவனுக்கு மனைவியாக இங்கே 20 வருஷமிருந்தேன். சீரும் சிறப்பும் பெற்று நல்ல ஸ்திதிக்கு வரக்கூடியவர்களாயிருந்த ஆறு குழந்தைகளை நான் பெற்றதும் இவ்விடந்தான். இவ்விடத்திற்றான், ஈசுவரன் அந்த இன்பங்களையெல்லாம் பிடுங்கிக்கொண்டது. அவர்களெல்லாரும் இறந்தொழிந்ததும் இவ்விடத்திலேயே; அவர்களுயிரோடிருந்தபோது அவர்களுரைவிட வேறே ஊர் எனக்கில்லை. இப்பொழுது அவர்களிறந்து இங்கே புதைக்கப்பட்டிருப்பதால் அவர்களுடையதைத் தவிர எனக்கு வேறே நாடில்லை" என்று கண்ணில்லா விருத்தை சொன்னாள்.

"உன் வீடு அதிகப்பழுதாயிருக்கிறதே" என்று வீரசேனன் கேட்டான்.

அப்பொழுது கொஞ்சம் கூசிக்கொண்டு கல்யாணி மிகுந்த ஆவலுடன் "என் பிரிய பிதாவே! உமக்குச் சரியென்று தோன்றினால் அதை உடனே ஜீரணோத்தாரணம் செய்யும்" என்று சொன்னாள்.

"என்னருமைக் கல்யாணி! என் ஜீவகாலம் வரை இது நிற்கும்; என தெஜமானனுக்கு இது விஷயமாய்ச் சிறிதுகூட தொந்தரை கொடுக்கப் பிரியமில்லை" என்று முனியம்மாள் சொன்னாள்.

"ஆனால் ஒருகாலத்தில் உனக்கு நல்ல வீடும் மிகுந்த ஐசுவரியமுமிருந்தன ஐயோ! இப்பொழுது உன் முதிர்ந்த வயதில் இந்தக் குடிசையில் குடியிருக்கிறாயே" என்றாள் கல்யாணி.

"கல்யாணி! நான் எவ்வளவுக்குப் பாத்திரமோ அவ்வளவு நன்மையும் எனக்கிருக்கிறது. நான் பட்ட பாட்டினாலும், மற்றவர்கள் பட்டதைப் பார்த்ததாலும் என்னுயிர் எப்பொழுது மடியவில்லையோ அப்பொழுதே இவ்வுயிர் வல்லுயிரென்று எனக்குத் தெரியும். அதைத் தாங்க என் சரீரமும் சலிக்காததே" என்று கிழவி கூறினாள்.

"அனேக மாறுதல்கள் உனக்குண்டாயிருந்திருக்கின்றன வென்று தோன்றுகிறது. ஆனால் உன் அனுபோகத்தால் அவைகள் வருமென்று நீ எதிர்பார்த்திருக்கலாமே" என்று வீரசேனன் சொன்னான்.

"அவைகளை யெல்லாம் சகித்துக்கொள்ள அது கற்பித்தது பிரபுவே" என்றாள் முனியம்மாள்.

"காலம் செல்லச்செல்ல அவைகள் சம்பவிக்க வேண்டியவைகள் தானென்று உனக்குத் தெரிந்திருக்கலாமே" என்றான்.

"ஆம். இப்பொழுது நீருட்கார்ந்திருக்கிற அடிக்கட்டை ஒரு காலத்தில் உயர்ந்து தடித்த மரமாயிருந்தது. அது பழுதாகியோ, வெட்டப்பட்டோ மற்றொரு காலத்தில் கீழேவிழ வேண்டியதுதானென்பது எனக்குத் தெரிந்ததுதான். ஆனாலும் என் வீட்டிற்கு நிழல் கொடுத்துக்கொண்டிருந்த மரம் அழிந்து கீழே விழுவதை என் கண்கள் காணாமலிருக்குமென்று நம்பினேன்" என்றாள்.

"மற்றொரு குடும்பத்தினர் இந்தச் சமஸ்தானத்தை யாண்ட நாட்களைக் குறித்து நீ விசனப்படுகிறதாயிருந்தாலும், உன்னிடத்தில்எனக்குண்டாகியஇதம் குறையுமென்று நீ நினைக்கவேண்டாம். அவர்களிடத்தில் அன்புடனிருக்க உனக்குப் போதுமான காரணம் சந்தேகமில்லாமலிருந்தது. அவர்களிடத்தில் உனக்குள்ள நன்றியறிதலைக்கண்டு எனக்கு உன்னிடத்தில் மிகுந்த கவுரவமுண்டாகிறது. உன் குடிசையைச் சிறிது செப்பனிடச் செய்வேன். நாமிருவரும் இன்னும் நன்றாய்ப் பழகினால், சிநேகிதர்களாவோமென்று நம்புகிறேன்" என்று வீரசேனன் சொன்னான்.

"என்னைப்போல் வயது சென்றவர்களுக்குப் புதுச் சிநேகிதர் கிடைக்கிறதில்லை. உமது உதாரத்துவத்திற்காக உமக்கு வந்தனம். நிச்சயமாக அது நல்லெண்ணத்துடனுண்டானதுவே. ஆனால் எனக்கு வேண்டியதெல்லாமிருக்கிறது. என்னுடைய யஜமானனிடத்திலிருந்து வேறே அதிகமொன்றும் நான் பெற்றுக்கொள்ள முடியாது" என்று முனியம்மாள்சொன்னாள்.

"ஆனால் சரி. நீ தோற்றத்திலும் அதிகப் புத்தியும் படிப்புமுடையவளாயிருக்கிறாயென்று நானுன்னை நினைக்கிறதாயும் உன்னாயுள் காலம்வரை இவ்விடத்தில் வரி கொடுக்காமல் குடியிருப்பாயென்று நான் நம்புகிறதாயும் சொல்ல இடங்கொடு" என்றான்.

"நான் அப்படிச் செய்வேன். உமக்குப் புனபதி இந்த நாட்டை விற்ற கிரயப்பத்திரத்தில் அதொரு நிபந்தனையென்று நான் நம்புகிறேன். இந்த அற்பவிஷயம் உம்முடைய ஞாபகத்திலிருந்து நழுவி யிருக்கலாம்" என்றாள்.

வீரசேனன் திகைத்து "என் ஞாபகத்திற்கு வருகிறது. உன் பழய சிநேகிதரிடத்தில் அதிகப் பிரியமிருப்பதால், அவர்களுக்குப் பின் வந்தவனிடத்தில் எவ்வித அனுகூலமும் பெற உனக்குப் பிரியமில்லையென்றெனக்குத் தெரிகிறது" என்றான்.

"பிரபுவே! அப்படியல்ல. நீரெனக்குச் செய்ய விரும்பும் உதவிகளை நான் வேண்டாமென்று மறுத்தாலும் உம்முடைய விருப்பத்திற்காக நான் நன்றி யறிதலுடையவளாயிருக்கிறேன். அதற்குக் கைமாறாக நானிப்பொழுது சொல்லப் போவதிலும் மேலானதைச் செய்யஅசக்தையாயிருப்பதற்காக விசனப்படுகிறேன்" என்று சொன்னதைக்கேட்டு வீரசேனன் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்துக்கொண்டு மௌனமாயிருந்தான். "கனவானே! நீர் செய்வதைக் கவனித்துச் செய்யும். செங்குத்தான மலையின் ஓரத்தில் நிற்கிறீர்" என்று அழுத்தமாயும் பயபக்தியுடனும் அவள் தொடர்ந்து சொன்னாள்.

"அப்படியா! இராஜதுரோகமா? சதியா? உன் காதிற்கு எதாவதெட்டியிருக்கிறதா" என்று, தன் மனம் அத்தேசத்தின் இராஜ்ய தந்திரங்களில் செல்ல, அவன் கேட்டான்.

(தொடரும்.)

S. V. கள்ளபிரான் பிள்ளை, பீ. ஏ.

## உல்லாஸன் சரித்ரம்

### ADVENTURES OF ULYSSES

### பீடிகை

**வா**ல்மீகி மஹாமுனியால் வடமொழியிற் செய்யப்பட்டிருக்கிற இராமாயண கதையை அறிந்தவர்கள், உல்லாஸன் சரிதம் படிக்குங்கால் புதுமை ஒன்றுங் காணரெனினும், ஹிந்துக்கள் இராமாயணத்தைக் கொண்டாடுமளவு இதர ஜாதியார் கொண்டாடும் இதிகாசங்கள் உண்டென்று இந்நூலால் அறிந்து கொள்ளலாம். ஏறக்குறைய மூவாயிரம் வருஷங்களுக்கு முன் கிரேக்கர்களில் ஹோமர் என்று ஒரு மஹாகவி இருந்தார். அவர் 'இலியத்', 'ஒடிஸ்லி', என்றிரண்டு இதிகாசங்கள் செய்தார். "ஒடிஸ்லி" என்பது முதலிற் சொன்ன நூலின் தொடர்ச்சியாம். 'இலியத்' என்னுங் காவ்யத்தின் கதையைச் சுருக்கிச் சொல்வோம்.

ஆசியா கண்டத்தின் மேற்குப் பாகத்தில் இலியம் அல்லது த்ரோஜா என்னும் மாநகர் ஒன்றிருந்தது. அதனரசனுக்குப் **பிரியம்** என்று பெயர். அவன் குமாரர்களில் பாரிஸ் என்பவன் மிகுந்த விடன். கிரீஸ் தேசத்தில் ஸ்பார்டா என்று ஒரு நகரமுண்டு. அந்நகரதிபன் **மனிலாஸ்**; மனிலாவின் மனைவி ஹெலன். ஹெலனுடைய ரூபலாவண்யங்களைக் கண்டு, தேவர்களும் அவள்மேல் மோகங்கொண்டார்களாம். பாரிஸ் ஸ்பார்டாவுக்குச் சென்முன். பாரிஸ் அழகு நிறைந்த இளைஞன். ஹெலன் பாரிஸைக் கண்டவுடனே அவனுக்குச் செய்ய வேண்டிய உபசாரங்களைச் செய்தாள். உண்ட வீட்டிற்கு இரண்டு நினைக்கிற பாரிஸ், ஹெலனை எவ்வாறோ தன் வசப்படுத்திக் கொண்டு அவள் புருஷன் ஊரிலில்லாத ஸமயத்தில், அவளை இட்டுக்கொண்டு தன் பிதாவின் ஸ்தானமாகிய த்ரோஜா நகரத்திற் கோடிவந்து அங்குத் தானும் ஹெலனும் கணவனும் மனைவியும் போலச் சுகித்திருந்தார்கள்.

மனிலாஸ் ஸ்பார்ட்டாவுக்குத் திரும்பவந்து, மனைவி காணமற் போனதை நினைந்து மனமுருகி இருக்கையில், பாரிஸ் அவளைத் திருடி த்ரோஜா நகரத்தில் வைத்திருக்கிறன் என்னுஞ் செய்திகிடைத்தது.

புறத்தேசத்தவன் கிரீஸில் பிரவேசித்து அந்நாட்டரசன் மனைவியைக் கவர்ந்தோடினதைக் கேட்ட கிரேக்கர்களுக்கு மிகுந்த கோபம் பிறந்தது. யுத்தவீரர்களும் பேரரசர் சிற்றரசர் முதலானோரும் தங்கள் படைகளைச் சரிவர ஆயத்தஞ் செய்து கொண்டு த்ரோஜா நகரத்தைப் பிடிக்கச் சென்றார்கள்.

இவ்வாறு போர்புரியப் போனவர்களில் இதாகா என்னும் தீவில் அரசு செலுத்திவந்த உல்லாஸன் ஒருவன். மற்ற வீரர்களைவிட இவன் யுக்தி, ஸத்யம், புஜபலம், முதலிய ராஜகுணங்களிலுயர்ந்தவன். இவன் பிதாவுக்கு **லேயர்கீஸ்** என்றும், இவன் மாதாவுக்கு **அந்திக்லியா** என்றும்பெயர். இவனுக்கு வாழ்க்கைப் பட்ட பெண்மணி **பனிலோபி**. உல்லாஸன் த்ரோஜா ந[illegible]க்குப் புறப்படுங்காலத்தில் பனிலோபிக்கு இருவது வயதுதானிருக்கும். உல்லாஸன் குமாரன், தலைமகன் ஆறுமாதத்திய கைக்குழந்தை. வீட்டு விஷயங்கள் மேற்சொன்ன நிலைமையிலிருக்க எவனாவது யுத்தத்திற்குப் புறத்தேசம் போக மனந்துணிவானோ? உல்லாஸனோ மனிலாஸுக்கு ஸம்பவித்த மானபங்கம் தன்னதே யென்றெண்ணினன். பரதுக்கஞ் சகியாத பரமகாருணியன். விஷயாதிகளில் பிரியமிருக்கக்கூடிய யௌவன காலத்தில் மனையையும் மனைவியையும் மகனையும் மாதாபிதாக்களையுந் துறந்து தூரதேசத்திற் போர்செய்யப் போனன்.

மேற்சொன்ன போர் பத்தாண்டு நடந்தது. உல்லாஸன் செய்த யுக்தியினுல் த்ரோஜா நகரம் பிடிபட்டு அக்கினிக்கிரையாக்கப் பட்டது. இருதிறத்தாரிலும் சண்டையில் மாண்ட வீரர்களுக்குக் கணக்கில்லை. கிரீஸிலிருந்து போன படையாட்களில் பிழைத்தவரின் ஸங்கியை சிறிது. அச்சிறுபடையைக் கப்பல்களிலேற்றிக்கொண்டு திரும்பி இதாகாவுக்கு வருங்கால் உல்லாஸனுக்கு நேர்ந்தகாரியங்களைச் சொல்லுங் காவியத்திற்குத்தான் ஹோமர் "ஒடிஸ்லி" என்று பெயரிட்டார்.

உல்லாஸனுக்கு இஷ்டதேவதை மினெர்வா. ஹிந்துக்களுக்கு ஸரஸ்வதி பூஜ்யையாயிருப்பது போலவே கிரேக்கர்களுக்கு முன்காலத்தில் மினர்வா பூஜ்யையாயிருந்த தேவதை. உல்லாஸனுக்கு ஆபத்துக்கள், மனத்தளர்ச்சி முதலானவைகள் உண்டான போதெல்லாம் மினெர்வா அவனுக்குப் பிரஸன்னமாகி மனவெழுச்சியுண்டாக்கிப் புகழடைவித்தாள்.

ஜன்மபூமியான இதாகாவுக்கு உல்லாஸன் திரும்பிவந்து சேர இருபது வருஷமாயிற்று. இந்த நீண்ட காலத்தி லுண்டான மாறுதல்களனேகம். அவைகளையெல்லாம் சரித்திரத்திற்காணலாம். கவித்திறத்தில் ஸமஸ்கிருத பாஷையில் கிரந்தங்கள் செய்திருக்கிற புலவர்களுக்கு, ஏகதேசமாவது ஹோமர் ஸமானன் என்று புலப்படும். ஹிந்துக்களுடைய தற்கால மதக்கொள்கைகளையே மூவாயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த கிரேக்கர் கள் அனுசரித்து வந்தாரென்பதும் தெளிவாகும். உல் லாசனுடைய குணதிசயங்கள் மெச்சத்தக்கவையென்ப தும் திண்ணம். இத்தியாதிகாரணங்களை முன்னிட் டே ஒடிஸ்ஸி என்னுங் காவியத்தை மொழிபெயர்க்க லானேம்.

## முதல் அத்தியாயம்

வருத்தான் வருத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.
ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

உல்லாஸன், த்ரோஜா நகரத்தை அழித்தபின், சென்ற பலநாடுகளையும், செய்த பல காரியங்களையும் பற்றி இனிச் சொல்வோம். நாட்டையும், வீட்டையும், மனைவியையும் விட்டுப் பிரிந்து பத்தாண்டானமை யால் உயிர்த்துணைவியையும் ஜன்ம பூமியையும் பார்க்க வேண்டுமென்கின்ற அவா உல்லாஸனுக்கு மேலிட் டிருந்தது. ஆசியா கண்டத்திலுள்ள நாடுகளின் செல் வப்பெருக்கையும் செழிமைப்பெருக்கையும் உத்தே சிக்குமளவில் இதாகாவைப் பாழ்நில மென்றுதான் சொல்லவேண்டும்; ஆயினும், காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சென்றபடி, உல்லாஸனுக்கு அன் னியதேசம் ஒன்றும் தன் நாட்டைப்போல இன்ப மானதாயும் விரும்பத்தக்கதாயும் தோன்றவில்லை. இக் காரணம் பற்றியேதான் காலிப்ஸோ அளித்த அம ரத்வத்தையும், ஸூர்ய புத்ரியாகிய ஸூரவி செய்த மாயங்களையும் உல்லாஸன் வெறுத்தான்.

த்ரோஜா நகர் நீங்கிக் கப்பலேறிக் கடலைக் கடந்து வருகையில் பெரும் புயலடித்து உல்லாஸனும் அவன் போர்வீரர்களும் இருந்த கப்பல்கள் கிரேக்கர்களுக்கு விரோதிகளான ஸைக்கர் துறையில் ஒதுக்கப்பட்டன. உல்லாஸன் தன் ஆட்களோடு கரையிறங்கி ஸைக்கர் பிரதான நகரத்தைப் பிடித்து எதிர்த்தவர்களைக் கொன்று அவர்கள் பொருளையும் பறித்துக்கொண் டான். கிரேக்கர்கள் பெற்ற வெற்றியே அவர்களுக் குப் பிராணாபாயமுண்டாக்கிற்று. கொள்ளைப் பொரு ளும் ஸம்பிரமமான உணவும் அகப்பட்டமையால் உல்லாஸன் ஆட்கள் உண்டு களித்துச் சத்ருக்கள் இருக்கிறார்களென்பதையே முற்றிலும் மறந்து விட் டார்கள். ஸைக்கர்கள், தங்கள் விரோதிகள் கள் ளுண்டு மயங்கிக் கிடக்கும் சமயம் பார்த்துப் படை களைச் சேர்த்து கிரேக்கர்களை எதிர்த்து அனேகரைக் கொன்று பறிகொடுத்த பொருள்களை யெல்லாம் மீண்டும் பெற்றுத் தங்கள் வீரத்தனத்தைக் காட் டவே, உல்லாஸனும் அவனுட்களும் ஸைக்கர் நாட்டி னின்று சீக்கிரம் கப்பலேறி வெளிக்கிளம்பினர்கள்.

உல்லாஸனும் அவனுடனிருந்தவர்களும் தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று என்று மனத்தை உறுதிப்பாடு செய்துகொண்டு பிரயாணத்தை நடத்தி னர்கள். இரண்டொருநாள் சென்ற பின் சண்ட மாருதம் ஒன்று வீசி உல்லாசனுடைய கப்பல்களை அங்குமிங்கும் அலைத்துப் பெருங்கஷ்டத்தை யுண்டாக் கிற்று. மூன்றுநாள் ' ஆகாயத்திலிருந்த மேகங்கள் விலகி ஸூர்யப்பிரகாச முண்டாயிற்று. உல்லாஸன் இதாகாவுக்கு யாதொரு தடையுமில்லாமல் கப்பல்களை நடத்திக்கொண்டு போகலாமென்று நம்பிக்கைகொண் டிருந்தான். இப்படி யிருக்கையில் மேல்காற்று வீச ஆரம்பித்துக் கப்பல்கள் இதாகாவுக்குப் போகாமல் தடை செய்யப்பட்டன. பத்து நாளிவ்வாறலைந்தபின் உல்லாசனும் அவனுட்களும் 'லதபுக்' என்ற நாட்டார் துறையைச்சேர்ந்தார்கள். அவ்வூரார் ஓர்மரத்தின் கனி யையுண்டே ஜீவித்திருந்தவர்கள். குடிதண்ணீர் கப் பலுக்குக் கொண்டுவரவேண்டியதற்கு உல்லாஸன்தன் ஆட்களிற் சிலரைத் துறையிலிறக்கி அனுப்பினன். புதிதாய் வந்தவர்களுக்கு ஊரார் பலவுபசாரங்கள் செய்து தமதுணவுகளைக் கொடுத்தார். அதை வயிறா வுண்ட உல்லாஸனுட்கள் வந்த காரியத்தை முற் றிலுமறந்து நாடு நகரம் மனைவிமக்கள் எதையும் நினை யாமல் மதிமயங்கிக் கிடந்து விட்டார்கள். உல்லாஸன் சிறிது காலம் காத்துப் பார்த்தும் ஒருவரும் திரும்பி வாராமையால், "முன்பின்னறியாத துறையில் என் ஏழுர்களை இறக்கினேனே, அவர்கள் உயிரோ

டிருக்கிறார்களோ, கொலையுண்டார்களோ, என்ன செய்வேன்?" என்று துக்கப்பட்டதைச் செவியுற்ற வேறு சிலர், "மஹாராஜாவே, தாம் இவ்வாறு விசனித்தல் தகுதியன்று. எங்களிற் சிலர் நேரில்போய் நடந்த விஷயங்களைப் பார்த்து வருகின்றோம். அநுமதி அளித்தல் வேண்டும்," என்று விண்ணப்பிக்க, உல்லாஸனும் சம்மதித்தான். இவர்கள் நாட்டிற்குள் சென்று பார்க்குங்கால் தமது தோழர்களெல்லாரும் கள்ளுண்டு மயங்கினவர்கள்போல் கிடந்ததைக்கண்டு அவர்களைத் தொட்டெழுப்பி, "நமது அரசன் உமக்கிட்ட கட்டளையை முற்றிலும் மறந்தீர்களோ? குடிதண்ணீர் கொணரவந்த நீவிர் குடிவெறி கொண்டவர்போலிருக்கின்றீர்களே. ஊரையும் வீடு வாசல்களையும் மனைவி மக்களையும் பார்க்க உமக்கு விருப்பமில்லையா? உங்கள் நடவடிக்கைகளை நமதரசனறிந்தால் சிரஸாக்கினை செய்துவிடுவாரே. உறக்கத்தை விட்டெழுங்கள். கப்பலேறி ஊர் செல்வோம்" என்று சொல்ல, கனியுண்ட காளைகள் "எங்களுக்கு நாடும், மனைவியும், மக்களுந் தேவையில்லை. இங்கே எப்பொழுதுமிருந்து கனியுண்டு களித்திருப்போம். உங்களோடு கப்பலில் இனி யாத்திரைசெய்ய வரமாட்டோம்" என்று உறுதியாய்ச் சொல்ல, புதிதாய் வந்த உல்லாஸன் ஆட்கள் முன் வந்தவர்களை யெல்லாங் கயிற்றால் பிணித்துக் கப்பலிலேற்றிச் சிறைப்படுத்தி வைத்து 'லதபுக்' நாட்டிலிறங்கின ஸம்பிரமம் போதும் போதுமென்று நினைத்து இதாகாவை நோக்கிக் கப்பல்களை நடத்திக் கொண்டு போனார்கள்.

அன்றிரவு முழுமையும் பல ஆர்க்கரையோரங்களாய் மரக்கலங்களை ஓட்டிக்கொண்டு போய் மறுநாளுதயத்தில் ஸீக்லாப் என்னும் ஜாதியார் வசித்த நாட்டின் கரை சேர்ந்தார். ஸீக்லாப்பர் பருத்தவுடலர்; தொழிலில் ஆட்டிடையர்; வேளாண்மைத் தொழில் செய்யாதவர்; உழுது பயிர்செய்யாமலே அந்தப் பூமியில் கோதுமையும் வாற்கோதுமையும் விளைந்தன; சட்டதிட்டங்களுள்ள ராஜகாரம் அந்த நாட்டிலில்லை. மலையுச்சியிலுள்ள குகைகளில் ஸீக்லாப்பர் வஸித்தனர். கணவனும் மனைவியும் குழந்தைகளும் தந்தலையாட்டமுள்ளவர்கள். மனம்போன போக்கெல்லாம் போனவர்கள். அவர்களுக்குக் கப்பலாவது தோணியாவது இல்லை. கைத்தொழிற் செய்பவரும் கிடையாது. அவர்கள் புறத்தேச யாத்திரை செய்வதுமில்லை. அந்த நாட்டுக் கடற்றுறையில் கப்பல்கள் தங்கும்படியான துறைமுகங்கள் மட்டும் மிகுந்திருந்தன. உல்லாஸன் தன் ஆட்களில் பன்னிரண்டு பெயர்களை இட்டுக்கொண்டு ஸீக்லாப்பர் நாட்டின் வளமை பெருமைகளைக் காண வென்று கப்பலை விட்டிறங்கிச் சென்றான்.

குடியிருக்கும் வீடுபோலத் தோன்றியமுதற் கட்டிடத்திற்குள் உல்லாஸனும் உடன் வந்தவர்களும் பிரவேசித்தார்கள். கைவேலைத் திறமொன்றுங் கண்ணிற்படவில்லை. இழைக்காத முழு மரங்களையே தூண்களாக வைத்திருந்தமையால் வேலைக்காருடைய உடல்வலிக்கு அத்தாக்ஷி ஏற்பட்டதேயன்றிக் கச்சித வேலைக்காரர்கள் அந்த நாட்டிலுண்டென்பதற்கு ஸாக்ஷ்யம் ஒன்றுமில்லை. அந்தக் குகைக்குரியவனை நேரிற்பார்க்க அவாப் பிறந்தது. தானோபாயத்தினால் மூடர்களையும் வசப்படுத்திக் கொள்ளலாகும் என்னும் நம்பிக்கையால் உல்லாஸன் தன் கப்பல்களில் வைத்திருக்கும் சாராயத்தைப் பெருமிதமாய் வீட்டுக்குடையவனுக்குத் தந்து அவனால் உபகரிக்கப்படலாமென்றெண்ணங் கொண்டான். கிரேக்கர்கள் சாராயம் ஸுகந்தமானது. மஹா பலிஷ்டனும் தண்ணீரைக் கலக்காமல் அம்மதுவை மாத்திர முண்ணுதலில்லை. அதன் ஸுகந்தத்தை ஒருமுறை மோந்தவன் அதைப் பருகாமலிருக்க மனங்கொள்ளான். மதுவை உட்கொண்ட எவனுக்கும் வீராவேசம் பிறத்தலுண்டு.

உல்லாஸனும் அவனாட்கள் பன்னிருவரும் அக்குகைக்குட் பிரவேசிக்கும் போதே ஒரு தோற்பை நிரப்பிய சாராயத்தை எடுத்துப்போனார். அக்குகை பலபீமன் என்னும் ஒரு ராக்ஷஸனுடையது. அவன் மடைப்பள்ளியில் இறைச்சித்துண்டங்கள் மூலைக்கு மூலை சிந்திக்கிடந்தன. தொட்டிகளிலும் சட்டிகளிலும் ஆட்டுப்பால் கறந்து வைக்கப்பட்டிருந்தது. உயிர்ப்பிராணிகள் சிலவற்றை அடைத்திருந்த அறை ஒன்றிருந்தது; ஆடுகளை யெல்லாம் மேய்ச்சலுக்கு ஓட்டிப் போயிருந்தான். குகையின் புதுமைகளை உல்லாஸனும் அவன் தோழர்களும் பார்த்துக்கொண்டிருக்கையில், பலபீமன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு குகைவாயிலண்டை வந்தவுடன், தன் தலைமீதிருந்த விறகு மூட்டையைக் கீழே வீழ்த்தின சத்தம் இடி வீழ்ந்தாற் போலக் கிரேக்கர்கள் காதிற்பட்டது. உல்லாஸன் முதலானோர் மிகுந்த அச்சமுற்றார்கள். பலபீமன் பருமனில் பருவதம்போலிருந்தான்; வருணகுமாரனென்று பெருமை சொல்லிக் கொண்டிருந்தான். அவனுக்கு நடுநெற்றியில் ஒரே கண்ணுண்டு. அவன் அதை உருட்டி விழிக்கையில் மனிதருக்குக் கர்ப்பங்கலங்கும். பெண்ணாடுகளை உட்புறத்தில் ஓட்டி, ஆணாடுகளை வெளியிலேயே நிறுத்திவிட்டான். இரவில் வேறொருவரும் குகைக்குள் பிரவேசியாதிருத்தலுக்கு ஒரு பெரிய பாறாங்கல்லை எளிதில் தூக்கி வாசற்படியை யடைத்துவிட்டு ராக்ஷஸன் உள்ளே வந்து கறவை ஆடுகளையெல்லாம் கறந்து பாலைத் தொட்டி

விலும் சட்டியிலும் சேகரித்து நெருப்புமூட்டிச் சுற்றுமுற்றும் பார்க்கையில் உல்லாஸனுடன் வந்த சிலர் அவன் திருஷ்டியிற் பட்டார்.

அவர்களைக் கண்ட மாத்திரத்தில் பலபீமன் "நீர் யார்? வணிகரோ, திருடரோ?" என்று அதட்டியும் உரத்தும் கேட்க, கிரேக்கர்கள் பேச நாவெழாமல் பிரமித்து நின்று விட்டார்கள்.

உல்லாஸன் ஒருவன் மட்டில் துணிவாய் ராக்ஷஸனிடத்திற் போய், "பிரபுவே, நாங்கள் திருடருமல்ல, வணிகருமல்ல; த்ரோஜா நகரத்திலிருந்து திரும்பி வரும் கிரேக்கர், அத்ரியஸ் குமாரனான ஆகமெம்னன் என்பவனால் நடத்தப்பட்ட யுத்தத்தில் த்ரோஜா நகரம் அழிக்கப்பட்டது. தாம் எல்லோரிலும் வல்ல பிரபு; தமக்கு நாங்கள் ஸாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்கிறோம். எங்களைப்போன்ற அகதிகளுக்குத் தாம் அன்னபானாதிகள் தந்தால் கடவுளுடைய கிருபைக்குப் பாத்திரராவீர்; அன்றேல் அவர் கோபத்தினால் தமக்குக் கேடு விளையும்," என்றான்.

ராக்ஷஸன், "அடா முழுமூடா, தெய்வத்தினிடத்தில் பயம் வைத்தல் வேண்டுமென்று போதித்தலுக்கு இவ்வளவு தூரம் வருவானேனடா, ஆட்டுப்பால் குடித்து வளர்ந்த உங்கள் தேவனுக்கு நாங்கள் எள்ளளவும் அஞ்சமாட்டோம். உங்கள் தேவர்களை விட நாங்கள் பலிஷ்டர்கள். வேண்டுமாயின் உங்கள் தேவனை எங்களோடு சண்டைசெய்து பார்க்கச்சொல். அந்த யுத்தத்தில் நீங்களும் சேர்ந்து கொள்ளலாம். அது நிற்க. கப்பல்களில் வந்தீர்களல்லவா, உங்கள் கப்பல்கள் எங்கு தங்கியிருக்கின்றன? உம்மோடு எத்தனைபேர் வந்திருக்கிறார்கள்?" என்றான்.

உல்லாஸன் மஹா மேதாவியானபடியால், "மஹா பிரபுவே, எங்களுக்குக் கப்பலுமில்லை, தோழர்களுமில்லை. எங்கள் கப்பல் பாறையில் மோதி உடைந்துபோயிற்று. இங்கு வந்திருப்பவர்களைத் தவிர மற்றவரெல்லாம் கடலில் மூழ்கி இறந்தார்கள்" என்று விடை பகர்ந்தான்.

ராக்ஷஸன் ஒன்றும் பேசாமலே சுற்றுமுற்றும் பார்த்து உல்லாஸன் தோழரிலிருவரைப் பிடித்துத் தரையிலடித்து மூளையைச் சிதறச்செய்து அவர்கள் மாம்ஸத்தையும் ரத்தத்தையும் உண்டு ஆட்டின் பாலைப் பருகிக் கீழே படுத்துறங்கினான். கீக்லாப்பர் நரமாம்ஸ பக்ஷிணிகளென்றறிந்தே ஒருவரும் அவர்கள் துறையிலிறங்குவதில்லை. ராக்ஷஸன் நித்திரை செய்யுங்காலத்தில் உல்லாஸன் கத்தியை உருவிக்கொண்டு ராக்ஷஸனை ஒரே வெட்டாய் வெட்டி விடலாமென்றெண்ணங் கொண்டான். குகை வாசலையடைத்த கல் ராக்ஷஸனைத்தவிர மற்றொருவரும் பெயர்க்க முடியாதென்று யோசித்து அவனைக் கொல்லாமல் விட்டான். அன்றிரவு முழுதும் எந்த வேளையில் பிராணச்சேதம் வருமோ என்று அஞ்சிக்கொண்டே உல்லாஸனும் உடனிருந்தவர்களும் காலத்தைக் கழித்தார்கள்.

கே. வேங்கடராமய்யர், பி. ஏ.

# வஸந்த மாளிகை

## VASANTHA MALIKAI

### அத்தியாயம் 4.

### ஸந்நிதி

*His Holiness*

**உ**யர்ந்த சிற்பப்பணிகளுடன் அமைக்கப்பட்ட ஓர் மண்டபத்தின் மத்தியில், பொன் வெள்ளி முதலான உயர்வகை உலோகங்களால் நிர்மிக்கப்பட்டு, பட்டு மெத்தை தைக்கப்பட்ட ஓர் அழகிய ஆஸனத்தின்கண் அமர்ந்து, சீனா வெண்பட்டால் தைக்கப்பட்ட திண்டில் சாய்ந்துகொண்டு, உயர்ந்து பருத்த சரீரமும், பொன்னிறமாய், தளதளவென்று ப்ரகாசிக்கும் மேனியும், முகத்தில் செழித்து வளர்ந்து, இடையிடையே நரைகளுடன் கலந்து மார்பின்மேல் தவழும் தாடியும், கழுத்துமுதல் கால்வரை தவழும் காஷாயப் பட்டு உடையும் தலையில் கட்டிய சால்வையுடனும் சுமார் 45 வயதுள்ள நமது திருவூர் மடாதிபதிகள் வீற்றிருந்தார்கள்.

நாம் முன் அத்தியாயத்தில் கூறியபிரகாரம், நமது வீரர்கள் ஸந்நிதானத்துக்கு முன் அழைத்துச் செல்லப்பட்டார்கள். தர்மராஜன் மடாதிபதியைப் பார்த்தவுடன், மரியாதையாய் வந்தனஞ் செய்து பக்கத்தில் நின்றான்.

வலபத்ரனோ ஸ்வாமிகளைப் பார்த்ததும் யாதொன்றும் செய்யத் தோன்றாமல், ஆச்சரியத்தாலும், பொறாமையாலும், சந்தோஷத்தாலும் வயிற்றெறிச்சலாலும் மாறி மாறி பாதிக்கப்பட்டவனாய் கற்சிலைபோல் திகைத்து நின்றான்.

வலபத்ரனைப் பார்த்தவுடன், ஸ்வாமிகளின் உடல் முழுதும் மின்சார ப்ரயோகமானதுபோல் திடீரென்று நடுநடுங்கிற்று. அவரது மலர்ந்த வதனமானது திடீரென்று கறுத்து ஓர் விகாரமடைந்தது. அகத்தினழகு முகத்தில் தெரியுமல்லவா?

ஆயினும் தன் மனக்கலக்கங்களையும் முகவிகாரங்களையும் ஒருவாறு மறைத்துக்கொண்டு, மனோ தைரியத்துடன், வந்தவர்களை நோக்கி,

**ஸ்வாமிகள்.**—"வாருங்கள். உட்காருங்கள். தாங்கள் எவ்விடமோ? தங்கள் நாமதேயம்? இவ்விடம் வந்த விசேஷம் என்னவோ?" என்று பரபரப்புடனும் நடுக்கத்துடனும் வினவினார்.

தர்மராஜன்.—"எல்லாம் ஸந்நிதானத்தைத் தர்சித்து விட்டுப் போகலாமென்றுதான்.—"

ஸ்வாமிகள்.—"ரெம்ப ஸந்தோஷம். வேறே எதாவது விசேஷம் உண்டானால் தெரிவிக்கிறது" என்று சொல்லிவிட்டு, உயர்பிறப்பையும் உத்தமகுணத்தையும் தெரிவிக்கும் தர்மராஜனிடமிருந்து பதில் எதிர்பார்ப்பவர்போல் அவன் முகத்தைப் பார்த்தார்.

தர்மராஜு பதிலுரைக்க ஆரம்பிக்குமுன் நமது வலபத்ரன் "ஏதோ ஸந்நிதானத்தைப் பார்த்து ரெம்ப நாளாச்சுது. சங்கிலிகருப்பன், ஷம்ஸுதீன், ஜான், ஸந்நிதானம்—அடியேன்—வலபத்ரன்"

ஸ்வாமிகளின் முகத்தில், கோபமும் துக்கமும், மாறி மாறி வேதனை செய்ய, ஸ்வாமிகள் வலபத்ரனை நோக்கி "உம்முடைய பெயர் வலபத்ரனா?" என்றார்.

வலபத்ரன் "ஆமாம். ஸந்நிதானம் ஆதியில் சங்கிலிக் கருப்பனாய்ப்பிறந்து—கர்னாடக நவாப் ராணுவத்தில் 'ஷம்ஸுதின்'—கும்பினியான் ராணுவத்தில் ஜான்—முதலானவர்களுடைய நெருங்கிய சிநேகிதன்—சந்நிதானம்—இப்பொழுது—அடியேன்—"

தர்மராஜுவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. வலபத்ரன் இவ்வளவு ஸரஸமாய் வெகுநாள் பழக்கம்போல் பேசுவதும் ஸ்வாமிகளின் முகம் அடிக்கடி வாடுவதையும் பார்க்க அவனுக்கு ஆச்சரியமும் சந்தேகமும் உண்டாயின.

ஸ்வாமிகள்.—"வலபத்ரரே அவர் யார்?"

வலபத்ரன்.—"அவரா—அவர்—பெரிய மனுஷ்யாள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்களே— அந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவரென்று சொல்லிக்கொள்ளுபவர்களில் ஒருவர் அவர்—இப்பொழுதுதான் நமது கோஷ்டியிலே சேர அதிக ஆவலுடன்—இருக்கப்பட்டவர். நல்லபுத்திசாலி. சீக்கிரம் நமக்கு மேலேவரக் கூடியதிறமையுடையவர். ஆனால் ரொம்பயோக்யர்—" என்று முன்னும் பின்னும் சம்பந்தமன்னியில்சொல்ல

ஸ்வாமிகள்.—திடீரென்று ஆஸனத்தினின்றும் எழுந்து, "வலபத்ரரே தாங்கள் மாத்திரம் உள்ளே வரலாமோ? உமது நண்பர் இங்கேயே இருக்கட்டும்—அவாள்-மனது—

தர்மராஜன்.—"அதனால் பாதகமில்லை. தாங்கள் திரும்பிவரும் வரை நான் இவ்விடத்திலேயே காத்துக் கொண்டிருக்கிறேன்," என்று சொல்ல, வலபத்ரனும், ஸ்வாமிகளும், அவ்வறையினின்றும் வெளியேறி 'ஸரஸ்வதி மஹாலு'க்குள் வந்து சேர்ந்தார்கள்.

இவ்வறையானது முன்காலத்தில் ஓர் பெரிய 'புஸ்தகசாலை' (Library) யாய் உபயோகிக்கப்பட்டிருந்தது. மாலிக்காபரின் கோபாக்னிக்குத்தப்பின சில ஏட்டுப்பிரதிகள் மாத்திரம், இப்பொழுது, சில கட்டிய கயிறுகள் அறுந்ததாகவும், சில பாகங்கள் கரையான்களுக்கு இரையானதாகவும், சில முறிந்தும், சில ஒட்டடைக்குள் அகப்பட்டதாகவும், பற்பல விதமாய்க் காலக்கொடுமைக் குட்பட்டு, கவனிப்பாரன்றி, நாசமடைந்து கொண்டிருந்தன.

வலபத்ரன்.—உள்ளே நுழைந்ததும் அதிக ஸரஸமாய் ஸ்வாமிகளை நோக்கி "என்னப்பா! ஷம்ஸுதீன்—!

ஸ்வாமிகள்.—கோபத்துடன் வலபத்ர! இனிமேல் இவ்வாறு பிதற்றாதே. இந்தமாதிரி யெல்லாம் அழைக்காதே—உன் தடித்தனம்—"

வலபத்ரன்.—"ஸரி! என்னப்பா! ஜான்!"

ஸ்வாமிகள்.—"என்னடா தடியா! இந்தமாதிரி"

வலபத்ரன்.—என்னப்பா! சங்கிலி!

ஸ்வாமிகள்.—"என்ன!" என்று பற்களை நற நற வென்று கடித்தார்.

வலபத்ரன் கைகளைக்கொட்டி மடமட வென்று சிரித்து "பேஷ்! சாமியாரே பேஷ்!"

"சங்கிலி யாய்த் துலுக்கனாய்,
'ஜான்' என்ற கிறிஸ்தவனாய்,
சாமி யாராய்—"

அடேடே! பேஷ், சாமியார்! இனிமேல் உன்னைச் சாமியார் என்றே கூப்பிடுகிறேன். அடே டே உனக்கு வேட்டிகட்டிக் கொள்ளுவது போலிருக்கப்பா! நீ மதம் விட்டு மதம் மாறுவது—"

சாமியார்.— (இச்சரிதம் முழுதும் இப்பெயராலேயே இக்கதாபுருஷனைக் குறிப்பிடுவோம்). அடே! வலபத்ர உன்னை இப்படியே தூக்கிப் பக்கத்திலுள்ள அகழில் எறிந்து விட்டால்—

வலபத்ரன்.—(கண்களைச் சிமிட்டிக்கொண்டு) "அதுமுடியாதே! முதலாவது—துணியமாட்டாய்.—துணிந்தாலும் உன்னால் முடியாது. உன்னைப் பார்க்கிலும் நான் சிறுவயது—பலசாலி," என்று சொல்லித் தன் வலைக்கையைக் குவித்துக்கொண்டு தன் முன்கையின் சதைப் பற்றைப் பார்த்து மகிழ்ந்து, குவித்த கையைச் சாமியாரின் தலைக்கு நேரே பிடித்தான்.

இதற்குள் சாமியார் நடுநடுங்கி வலபத்ரன் தோளைத் தட்டிக் கொடுத்தார்.

வலபத்ரன் கீழே கிடந்த ஓர் "எட்டை" கையி லெடுத்து அங்கிருந்த ஓர் தூணில் ஓங்கியடிக்கவே அது பழைய பிரதியானதால் சிதறிப்போய் விட்டது.

வலபத்ரன்.—"ஏ! இப்பொழுது இந்த ஏடுகள் உன் வசத்திலகப்பட்டு சீரழிவதை, இவ்வேடுகள் எழுதினவர்கள் கண்டால் வயிறெரிவார்கள். உன் வீட்டிலே விறகுக்குக்குறைவில்லை மழைகாலத்தில்—"

சாமியார்.—என் பரிசாரகன் இதைத்தானே உப யோகிக்கிறான். நன்றாய் எரிகிறதாம்.

வலபத்ரன்.—சாமியாருக்கு மூளை இருந்தாலல்ல வோ பரிசாரகனுக்கு மூளை—

சாமியார்.—சரி! வலபத், சரி! நீ வந்த கார்யம்?

வலபத்ரன்.—(கண்களைச் சிமிட்டிக்கொண்டு)"எல் லாம் ஸந்நிதானத்தில் யாசகத்தின்பொருட்டுத்தான்."

சாமியார்.—"நான் என்ன செய்யக்கூடியது. நானோ தரித்திரனிலேயும் தரித்திரன்—"

வலபத்ரன்.—"இதெல்லாம் வீண்பேச்சு. ஒரே வார்த்தையாய்ச் சொல்லுகிறேன். நீ பிறந்து,துலுக்க மதத்தைச் சேர்ந்து 'ஷம்ஸுதீன்' என்று கர்னாடக சேனையிலிருந்ததும், அதில் ஸுபேதார் 'ஆலிம்' என்பவரின் கொலை—"

சாமியார்.—திடுக்கிட்டு நடுநடுங்கினார்.

வலபத்ரன்.—பயப்படாதே—ஆகையால் அதுவும் தெரியும், கிறிஸ்தவனாய் மாறி கும்பினிப்பட்டாளத் தில் 'ஜான்' என்று திரிந்ததும் அதைவிட்டு ஓடிவந்த தும், இப்பொழுது, திருவூர் பண்டார ஸந்நிதிகளாய் விளங்குவதும்—எல்லாம் தெரியும். உன் அதிருஷ்டம் நீ இந்தத் தசையிலிருக்கிறாய். என் அதிருஷ்டம் நான் திண்டாடுகிறேன். அது போகட்டும், ஆகையினாலே—நான் சொல்லுவது!—என்னையும் சேர்த்துக்கொள்—இரண்டுபேரும் சேர்ந்தோமோ உலகத்தில் நமக்கு நிக ரில்லை. சிஷ்யனாய் இருக்கிறேன்—அல்லது—என்ன செய்யச் சொன்னாலும் செய்கிறேன். எனக்குப்பணம்—பணந்தான் குறி. "பணமில்லார்க்கிவ்வுலகமில்லை"—என்னவோ யாரோ சொன்னபடி,—பணம்—பணம்—பணந்தான் எனக்கு வேண்டும். எல்லாம் நீயே அனுப விக்க ஆசைப்படாதே. பேராசை பெருநஷ்டம், எனக்கு ஏதாவது சரியானவழி சொல்லவில்லையோ—அப்பொழுதும் உன்பாடும் திரிசங்குஸ்வர்க்கந்தான். வேட்டைக்குப்போவதில் ஒன்றுக்கு, இரண்டு நாய் இருப்பது நலந்தானே. சொல்லு! நாமிருவரும் சேர்ந்தே—

சாமியார்.—மனம் நொந்தவராய், வலபத்ரனை நோக்கித் தீனமான குரலுடன் "வலபத்ர, வீணாக என்னையும் கெடுத்து, உன்னையும்—"

வலபத்ரன்.—அதென்ன! இருந்தால், ஹாயா! சௌக்கியமாய் இருக்கவேண்டும்!

சாமியார்.—நான் ஒரு ஏற்பாடு செய்கிறேன். எனக்கு யார் எஜமான் ஆக இருக்கின்றாரோ, எவரு டைய பேருதவியால், நான் இவ்வளவாவது கால க்ஷேபஞ்செய்து வருகிறேனோ அவரிடத்தில் நீயும் ஓர் வேலைக்காரனாக—

வலபத்ரன்.—"ஆனால், சும்மா பரிசாரகன், மசா லிச்சி—இப்படியெல்லாம்," என்று தன் மீசையை முறுக்கிக்கொண்டான்.

சாமியார்.—அப்படியொன்றுமில்லை, உன் அந்தஸ் துக்கும், உன் ஆண்மைக்கும், உன் பலத்துக்கும் தக்க படி—நான் ஏற்பாடு செய்கிறேன். ஆனால் நீ மாத் திரம் ஒரு உதவிசெய்யவேண்டும்.

வலபத்ரன்.—"ஹா! ஷம்ஸுதீன்! ஆ ஜான், ஆ சாமியாரே 'மறந்தல்லோ போய்விட்டேன். நீ உயிரைக் கொடுக்கச்சொன்னாலும் கொடுக்கிறேன்—சொல்!"

சாமியார்.—என் பூர்வவிருத்தாந்தத்தை நீ வெளி யே சொல்லி என் பிழைப்பைக் கெடுத்து விடாதே. உனக்குக் கோடிப்புண்ணியமுண்டு. இந்த மாதிரி யெல்லாம் முன்போலச் சிறுபிள்ளைத் தனமாய்ச் சொல்லிக் கொண்டிருந்தால், நாலு பேர்கள் இருக் கும்பொழுதும் வாய்தவறி வந்துவிடும். உன் குடி வெறியாலும் பிதற்றிவிடுவாய்—ஆகையால்—நீ தயவு செய்து—

வலபத்ரன்.—"இந்தப் பதினெட்டாம் படியான் ஆணை சொல்லுகிறேன்! நீ சொன்னபடி நீ செய், நான் சொன்னபடி நான் செய்கிறேன். இது தான் நமக்குள் ஒப்பந்தம். நீயும் அப்படியே ப்ரமாணஞ் செய்—ஆ!—நீ எதை வைத்து ப்ரமாணம் பண்ணப் போகிறாய், மதுரை வீரனா? கொரானா, பைபிளா, அல்லது கீதையா—உனக்குத்தான் ஒருமதமும் ஸ்திர மில்லையே!" என்று சொல்லிக் குலுங்கச்சிரித்தான். இவர்கள் இவ்வாறு சம்பாஷித்துக்கொண்டிருக்கை யில், பக்கத்து அறையிலிருந்து "ஐயோ! ஐயோ!" என்று ஓர் பெருங்கூக்குரல் கேட்டது. சாமியார் "இலா யில்லா! அல்லாஹோ! தொலைந்தேனே! தொலைந் தேனே"என்றுதலையிலடித்துக்கொண்டு சத்தம் பிறந்த அறையை நோக்கி விரைந்தோடினான். வலபத்ரன் "அடே மூடப்பயலே! பூர்வஞாபகம்போலிருக்கிறது. என்னை யிவ்வளவு போதித்துவிட்டுத்தான் 'அல்லா,' 'அல்லா' என்கிறான்" என்று சிரித்துக்கொண்டு தானும், சாமியார்கூட அவ்வறைநோக்கி ஓடினான்.

## மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### வியாஸ விதானம்

### Essay writing

### IV. ஆராய்ச்சி வியாஸங்கள்

### REFLECTIVE ESSAYS

### 2. ஸாதாரண உபமானங்கள்—குரங்கு கையில் பூமாலை அகப்பட்டாற்போல

**Familiar Metaphors—Monkey's treatment of garlands**

குறிப்பு.—உபமான விளக்கம்—உபமேய விஷயங்கள்—மதவிஷயப் பொருத்தம்—விளக்கக் கதைகள்.

குரங்கு மிகச் சஞ்சலமுடைய ஒரு ஜந்து. அது இருந்தவிடத்திலிராது எப்பொழுதும் எதையாவது ஒன்றைச் செய்துகொண்டு ஓடியாடித் திரியும். தன் மனதில் தோன்றுவதற்கு ஏற்ப அது காரியங்களை நடத்திவிடும். இப்படிப்பட்ட ஜந்துவிடம் பார்வைக்கு அழகாயும் விதம் விதமான வர்ணங்கள் வாஸனைகள் உடையதாயும் உள்ள புஷ்பங்களால் அமைந்த மாலை ஒன்றைக் கொடுத்துவிட்டால் அது அதை முதலில் கையில் எடுத்துப் பார்க்கும். அப்பொழுதே அந்த மாலை குலுங்கி அசையும். உடனே இது ஒரு ஜந்து என்ற அச்சம் வந்துவிடும். அநேக வர்ணங்கள் அதன் பயத்தை அதிகப்படுத்தும். உடனே அதை அதிகமாக அசைத்துப்பிய்த்து எறியப்பார்க்கும். மாலை அதிகமாக வளைந்து அசையத் தொடங்கும், அதற்குப் பாம்பு என்ற ஞாபகம் வருமோ என்னமோ! அதை அசைத்துத் தேய்த்துச் சிதறி அடித்துவிடும். மாலை இறந்துவிட்டது என்ற நம்பிக்கை அதற்கு வந்ததும் அதன் அருகில் செல்லும். அதன் வாஸனை தாக்கத் தொடங்க, கசங்கிய புஷ்பங்களை எடுத்துமுகர்ந்து நோக்கிக் கொஞ்சம் ஆனந்தத்தை அடையும். ஆதலால் குரங்கின் கையில் மிக மிருதுவான புஷ்பமாலை அகப்பட்டால், அதை உள்ளபடி வைத்துப் பார்த்தும் முகர்ந்து பார்த்தும் ஆனந்திக்கலாம் என்பதை உணராது அதை முதலில் கசக்கி எறிந்து பின்னர் வாஸனையை மாத்திரம் அனுபவித்து நிற்கும்.

இந்த உபமானம் ஸாதாரணமாக உலக விஷயங்களில் உபயோகப்பட்டு வருவது. ஒரு வஸ்துவின் அருமை அறியாத ஒருவனிடம், அது போய்ச்சேர, அதைக்கெடுத்து அனுபவிக்கும் ஸமயங்களில் எல்லாம் இந்த உபமானத்தை உபயோகிக்கலாம். மிகுந்த அழகுடையவளாயும் குணவதியாயும் உள்ள பெண்சாதி, வீட்டில்இருக்க அவள் மனம் நோகும்படி கொடியவழிகளில் நடந்து பரஸ்திரீகளிடம் ஈடுபட்டு மானமிழக்கும் பாதகன், பூமாலையை அலங்கோலப் படுத்தும் குரங்கே. நல்ல உடைகளை அணியும் விதம் தெரியாது அல்லது நல்ல துணிகளைத் தக்க உடைகளாக அமைக்கத் தெரியாது வீணாக்கும் குணமுடைய ஒருவன் இவ்வுபமானத்திற்கு ஏற்றவன். வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைபவன் போல ஸகல ஸுக விஷயங்கள் அமையப்பெற்றிருந்தும் அவைகளை நீக்கித் தாழ்ந்தவைகளில் உழல அவைகளை உபயோகப்படுத்தும் கண்மூடிகளான பணக்காரர்களே இத்தகையோரிற் சிறந்தவர். நல்ல பாடுபட்டுழைக்கும் வேலைக்காரர்களை வைத்துக்கொண்டு அவர்களை ஸந்தோஷப்படுத்தி வேலையை முடித்துக்கொள்ளத் தெரியாது அவர்களைப் புண்படுத்தி மிகுந்த கஷ்டத்தின் பேரில் அப்ரீதியாக வேலை வாங்கும் அதிகாரி இக்குரங்கு என்பதற்கு என்ன தடை? ஆகவே குரங்கின் கைப்பட்ட பூமாலையைப் போலச் சீரழியும் விஷயங்கள் உலகில் பலவுள. அவ்வவற்றை எளிதில் கண்டு தெளிய முற்கூறிய சில உதாரணங்களே போதும்.

இனி மதவிஷயமாக இவ்வுபமானம் எவ்வாறு எடுத்தாளப்படுகின்றது என்பதை ஆராய்வோம். தகுந்த ஸ்வரத்தோடு சொல்லமுடியாது ஸபைகளில் வாயில் வந்தபடி எல்லாம் இழுத்து எடுத்துரைக்கும் திறனுடையோர் கையில் வேதம் குரங்கின்கைப் பூமாலை போலாய்விடும் என்னலாம். இது தக்ஷிணதேசத்தில் சிற்சில கூட்டத்தார் தவிர மற்றை வேதத்தை உச்சரித்தாள்பவர் பெரும்பாலார் விஷயங்களில் முற்றிலும் பொருந்தும். இவர்கள் அதிகமாகப் பலரறிய ஸபைகளில் வேதங்களை எடுத்து ஆளாமலிருப்பது நலம். இம்மாதிரியேதான் மதவிஷய உண்மைகளின் சிறப்பை உணராது அவைகளைக் குதர்க்கம் செய்பவரும். கடவுள் எங்கும் பரவியிருக்கிறார் என்பது எல்லா மதங்களுக்கும் பொதுவான உண்மை. ஒருவன் இதை வைத்துக்கொண்டு இதன் எல்லையை உணராது, 'என் கெட்ட எண்ணங்களுள்ளும் கடவுள்தானே இருக்கிறார். இந்தப் பாழும் கடவுள்தானே என்னைக் கொடியவனாக்குகிறார்' என்று கடவுளை வெறுத்துக்கொண்டு, கெட்டவழியில் நடப்பதை விடாது நிற்பவன் முற்கூறிய மதவிஷய உண்மை சிதறி அடிக்கும் குரங்கே எந்த உண்மையால் மேன்மை பெற்றுச் சாந்தி

பெற்று நித்ய திருப்தனாக வேண்டுமோ, அதைக் கொண்டே இந்த மஹான் மாறுச்சஞ்சலத்தை ஸம்பாதிக்கிறுனே! இவனைவிட அறிவுடையோர் உலகில் யாராவது உண்டோ! ஆகவே அரிய மதவிஷயங்களை அதிகாரிகளில்லாதவர்களுக்கு உணர்த்தினுல் அது குரங்கின் கையில் கொடுத்த பூமாலைபோல நாசமடைந்து கைக்கொள்பவனையும் மீளாநரகில் வீழ்த்தும். இதற்கேற்பவேதான் அரிய வேதாந்த உண்மைகள் அச்சில் வந்து விட்டபடியால் அவைகளைக் கற்றுணர்ந்து அநேகர் அஸாரவேதாந்தம், கலுவாய் வேதாந்தம், விதவை வேதாந்தம், முதலிய ஆபாஸ வேதாந்தங்களைப் பின்பற்றி, ஈச்வரபக்தி, தானதர்ம புத்தி, விஷய வைராக்யம் முதலியவைகளை இழந்து தத்தளித்துக்கொண்டு வாசாவேதாந்தம் பேசி வருகின்றனர். இவர்கள் கையில் அகப்பட்ட வேதாந்தம் குரங்கின் கைப்பட்ட பூமாலையே. ஆகவே எந்த உண்மையையும் எல்லை உணராது மனம்போனபடி திருப்பிக்கொண்டு தத்தளிப்பதே இந்த உபமானத்திற்குத் தக்க உபமேயம்.

இந்த உபமானத்திற்கேற்ற கதை ஒன்று ஷேக்ஸ்பியர் இயற்றிய அற்புத நாடகங்களில் ஒன்றுகிய ஒதெல்லோ என்பதில் காணப்படுகின்றது. முன்னொரு காலத்தில் வெனிஸ் என்ற பட்டணத்தில் ஒதெல்லோ என்ற ஒரு மூர் ஜாதியானிருந்தான். இவன் அந்த நாட்டு ஸேனபதி. நாட்டிற்காக வெகு பாடுபட்டு எதிரிகளைத் தலை எடுக்க ஒட்டாது அடித்திருந்த உதவி புரிந்தவன். அந்த ஊர் ஆலோசனை ஸபையாரில் ஒருவராகிய ப்ரபான்ஷியோ என்பவர் இவனை அடிக்கடித் தமது வீட்டிற்கு அழைத்துவந்து இவன் வீரச்செயல்களை இவன் வாயிலிருந்தே கேட்டு ஆனந்திப்பது வழக்கம். இப்படி இருக்கையில் இவைகளைக் கேட்டுவந்த ப்ரபான்ஷியோ பெண்ணுகிய டெஸ்டிமோனு என்பவளுக்குப் பெரிய அபாயங்களிலிருந்து தீரமாக வெளியேறிய ஒதெல்லோவிடம் மெய்க்காதல் பிறந்தது. ஒரு நாள் நள்ளிரவில் தகப்பனுருக்குத் தெரியாது இருவருக்கும் கல்யாணமும் நடந்தேறியது. இதை உணர்ந்த தகப்பன் ராஜ ஸபைக்கு இவ்விஷயத்தைத் தெரிவித்து ஒதெல்லோவுக்குத் தக்க தண்டனை வரும்படி செய்து கல்யாணத்தை உடைத்துவிட வேண்டும் என்று முயன்றுன். அதே ஸமயத்தில் நாட்டை எதிரிகள் படை எடுத்து வர ஒதெல்லோ ஸஹாயம் அரசனுக்கு அவசியம் வேண்டியிருந்ததாலும், டெஸ்டிமோனுவும் நேரிட அரசன் முன்னிலையில் தன் மெய்க்காதலை வெளியிட்டதாலும் ப்ரபான்ஷியோ எண்ணியபடி யாகாமல் போய்விட்டது. டெஸ்டிமோனுவும் தகப்பனை மிக வருத்த மனம் வாராது ஒதெல்லோவோடே சண்டைக் களத்திற்குப் புறப்பட்டு விட்டாள். அயல் வாழ்ந்தால் ஆறு மாதம் பட்டினி என்ற கதையாக விருக்கும். ஒரு கீழ் அதிகாரி ஒதெல்லோவிட மிருந்தான். அவன் பெயர் ஐயாகோ. அவன் எப்படியாவது இவர்கள் காதலைப் பிரித்து ஆபத்து விளைக்க வேண்டுமென்று சூழ்ச்சிகள் செய்தான். ஒதெல்லோவிற்குக் கீழ் அடுத்த படியில் மிக அழகு வாய்ந்தவனும் நல்லவனும் அவன் பிரீதியை ஸம்பாதித்தவனும் உள்ள காஸியோ என்ற ஒரு உத்யோகஸ்தன் இருந்தான். அவன் பேரில் ஒரு பழி சுமரும்படி செய்து அவனுக்கு வேலை போகும்படி செய்தான். அவனிடம் சென்று டெஸ்டிமோனு மூலமாகப் போனுல் மறுபடி வேலை கிடைக்கும் என்று தூண்டிவிட்டு, ஒதெல்லோவிடம்போய் டெஸ்டிமோனுவுக்கு அழகிய காஸியோவிடம் காதல் உண்டாய்விட்டது என்று துபம்போட்டுவிட்டான். உண்மையில்தான் மிகுந்த அழகு வாய்ந்தவனுய் இல்லாதிருந்ததாலும், டெஸ்டிமோனுவின்மெய்க்காதலின்சிறப்பை உணராததாலும், 'போரிலும் கொள்ளிவைத்துமாரிலும் அடித்துக்கொள்ளும்' குணம் வாய்ந்த ஐயாகோவின் சூதை உணராததாலும், ஒதெல்லோவுக்கு டெஸ்டிமோனு மேல் ஸந்தேகம் வந்துவிட்டது. காஸியோவுக்காக அவள் பரிந்துகொண்டுவர இந்த ஸந்தேகம் திடப்பட்டுவிட்டது. ஐயாகோவும் சிற்சில குறிகளால் இதை நிலை நிறுத்திவிட்டான். முடிவில் ஒதெல்லோ டெஸ்டிமோனுவைக் கொன்றுவிடுவதாகத் தீர்மானித்து ஓர் இரவில் அவள் கழுத்தைப்பிடித்து நசுக்கிவிட்டான். அப்பொழுதுகூட கணவனைக் கடிந்துகொள்ளாது அவள் உயிர் விட்டாள். இந்த விஷயத்தில் ஸீதையைவிட இவள் மிகச்சிறப்புற்று விளங்கினுள். இவள் இறந்ததும் ஐயாகோவின் பெண்சாதி மூலமாக அவன் சூது வெளிப்பட்டது. பின்னர் ஒதெல்லோ டெஸ்டிமோனுவின் சிறப்பை எடுத்துப் பாராட்டித் தானும் உயிர் விட்டான். டெஸ்டிமோனு ஒதெல்லோ என்னும் குரங்கின் கைப்பட்ட பூமாலை என்று கூறவும் வேண்டுமோ?

### போதுக்குறிப்பு

1. உபமான விளக்கம்.
2. உபமேய விஷயங்கள்.
3. மதவிஷயப் பொருத்தம்.
4. விளக்கக் கதைகள்.

### இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள்

1. நெருப்பிற் பட்ட மெழுகைப்போல.
2. கருடனைக்கண்ட பாம்புபோல.
3. வெண்கலக் கடையில் யானை புகுந்தாற் போல.
4. முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டாற் போல.
5. ஆடிக்காற்றில் இலவம்பஞ்சு பறப்பதுபோல.
6. ஸூர்யனைக் கண்ட பனிபோல.
7. காயும் பயிருக்குப் பேயும் மழைபோல.
8. எழுத்தறியாதவன் ஏட்டைச் சுமந்ததுபோல.
9. சிவபூஜைவேளையில் கரடியைவிட்டடிப்பதுபோல.
10. கற்பூரமலையில் ஆக்நேயாஸ்திரம் ப்ரயோகித்தது போல.
11. பழம்நழுவிப் பாலில் விழுந்ததுபோல.
12. யானை தன்தலையில் மண்ணையள்ளிப் போட்டுக் கொள்வது போல.
13. பார்த்தால் பசுபோல பாய்ந்தால் புலிபோல.
14. புற்றிலிருந்து ஈசல் புறப்பட்டாற்போல.
15. குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டது போல.

* 16. பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததுபோல.
* 17. இலவுகாத்த கிளிபோல.

## மொழிபெயர்ப்பு விளக்கம்

## Translation Models

(13) *A curious thief catcher*:—A thief prowling about the hall of a hotel in search of plunder, came upon a basket filled with vegetables. Inserting his hand to secure the contents, his fingers were severely bitten by a scorpion, which happened to be in the basket. He withdrew his hand with all speed, but could not manage to shake off the encumbrance. The scuffle, and the cries which the bitten thief gave vent to, brought in the landlord and the rest of the household. Before thief could escape, he was secured, and given into custody.

### ஒரு விநோதமான திருடன் பிடிப்போன்

ஒரு சாப்பாட்டு விடுதியிலிருந்தகூடத்தில்கொள்ளை விரும்பி ஒரு திருடன் உலாவிக்கொண் டிருக்கையில் காய்கறிகள் நிறைந்த கூடை ஒன்றைக் கண்டான். அதனுள்ளிருந்தவைகளை எடுத்துப் பத்திரப்படுத்திவிட அதனுள் கையிட அந்தக்கூடையுள்ளிருந்த தேள் ஒன்று அவன் விரல்களில் கடுமையாகக் கொட்டிவிட்டது. அவன் கையை உடனே எடுத்துவிட்டபோதிலும், கூடை சரிந்து ஏற்பட்ட தடையை அவனால் நீக்கிக் கொள்ள முடியவில்லை. அங்கு ஏற்பட்ட சச்சரவு, வலி பொறுக்கமுடியாது திருடன் இட்ட கூக்குரல் முதலியவைகள், விடுதிக்காரரையும் அங்கிருந்த மற்றும் உள்ளோரையும் அங்கு வரும்படி செய்தது. திருடன் தப்பியோடும் முன் பிடிபட்டு காவற்காரர் வசம் ஒப்புவிக்கப்பட்டான்.

(14) *Why can we put out a candle by blowing ?*:—The candle, like a fire, goes on burning after it is lit, because it produces heat enough to warm the stuff of which it is made up, to the temperature at which it combines with oxygen. The wax of the candle is made into gases by the heat, these hot gases are burnt with oxygen of the air. If we blow the candle, we blow away the hot gases with our breath, and, though our breath is warm, it is not nearly warm enough to keep the candle alight. What really happens, then, is that, by blowing, we lower the temperature of the candle to a point below that at which the stuff of the candle and the oxygen of the air are capable of combining with each other. We thus put the candle in the same state as it was before it was lit, and it will not start burning again until new heat is supplied to it by another match.

### நாம் ஊதுவதால் மெழுகுவர்த்தி அணைவானேன்?

மெழுகுவத்தியில் அடங்கி யிருக்கும் வஸ்துக்களைப் பிராணவாயுவோடு பொருந்த சேர்க்கத்தகுந்த உஷ்ண நிலைக்கு ஏற்றப் போதுமான உஷ்ணம் மெழுகுவத்தி ஏற்றிய உடன் உண்டாவதால் அதுவும் ஸாதாரண நெருப்பைப்போல ஏற்றிய பின்னர் எரிந்துகொண்டே இருக்கும். மெழுகுவத்தியின் மெழுகு உஷ்ணத்தால் வாயுக்களாக மாற ஸாதாரண வாயுவிலுள்ள பிராண வாயுவோடு சேர்ந்து எரிந்து போகின்றன. நாம்

ஊதுங்கால் நமது மூச்சுக் காற்றால் உஷ்ண வாயுக்கள் சிதறிப்போகின்றன. நமது மூச்சு உஷ்ணமாயினும், மெழுகுவத்தியை எரியும்படிசெய்யப் போதுமான உஷ்ணமுடையதல்ல. ஆகவே, அதன் வஸ்துக்கள் ஸாதாரண வாயுவிலுள்ள பிராணவாயுஉடன்பொருந்த சேருவதற்கு வேண்டிய உஷ்ண நிலைக்குக் கீழ் மெழுகுவத்தியின் உஷ்ணத்தை இறக்கிவிடுவதே நாம் ஊதுங்கால் உண்மையாய் நடப்பது. இவ்வாறு மெழுகுவத்தி எற்றுவதற்கு முன்னிருந்த நிலைக்கே அதை இப்பொழுது கொண்டுவந்து விடுகிறோம். வேறொரு நெருப்புக்குச்சியால் புதிய உஷ்ணம் வந்து சேர்ந்தால் அல்லது அந்த மெழுகுவத்தி மறுபடி எரியத் தொடங்காது.

(15) *Boldness*:—It deserves to be considered that boldness is ever blind, for it sees not dangers and inconveniences. Therefore it is bad in council though good in actual work. The right use of bold persons, therefore, is that they never command in chief but serve as seconds under the direction of others. For in council it is good to see dangers, and in actual work not to see them, unless they are very great. If in boldness he ignores great dangers, he belongs to the class of fools who rush in where angels fear to tread. Fortune sometimes befriends the bold.

### தைர்யம்

ஆபத்துக்கள் அஸௌகரியங்கள் முதலியவைகளைக் கவனியாதிருப்பதால் தைர்யத்திற்கு ஒருவித கண் மூடித்தனம் உண்டென்பது நாம் ஆராயத் தகுந்ததே. ஆதலால் அது கார்யஸித்திக்கு அவசியமாயினும், ஆலோசனைக்கு மிகக் கெட்டது. எப்பொழுதும் தலைமை வஹியாது, பிறர் ஏற்பாட்டின் கீழிருந்து தொழில் புரிவதே தைர்யவான்களது நேர்மையான உபயோகம். ஆலோசனை செய்யுங்கால் அபாயங்களைக் கருதுவது நன்மை, தொழில் நடத்துங்கால் மிகப் பெரியவைகளாக விருந்தாலன்றி அபாயங்களை நினைக்கவே கூடாது. தைர்ய அதிகத்தில் பெரிய அபாயங்களை மதியாதிருப்பவர், பெரியோர் நாட நடுங்கு மிடங்களில் புகுந்து கலக்கும் மூடர்கள் வகுப்பினரே சிற்சில வேளைகளில் தைர்யவான்களுக்கு அதிர்ஷ்டமும் அனுகூலிவிடலாம்.

## நாகாநந்தம்

## NAGANANDAM : A CLASSICAL DRAMA

நாயகி.—(கண்ணீர் விட்டுக்கொண்டு) இந்தக் கதையின் முடிவு இன்னமும் தெரிந்ததில்லையா? ஸரி—வா—மித்ராவஸுவைப் போய்க் காணலாம் வா.

தோழி.—(வியஸனத்தோடு—தனக்குள்) ஐயோ! என்ன மெய்ம்மறந்து, உயிர்மேல் கவலையில்லாமல், அவள் வார்த்தை வெளிவருகிறது. (உரக்க) நாயகி! முன்னமே மனோஹரிகை அங்குபோனாள். ஒருவேளை, எனது தலைவன், மித்ராவஸு இங்கையே வரவுங்கூடும்.

(மித்ராவஸு வரல்)

மித்ராவஸு.—என் தந்தையால் இவ்வாறு அணையிடப்பட்டிருக்கிறேன்—'குழந்தாய்! மித்ராவஸு! அரசிளங்குமாரன் ஜீமூதவாஹனன் நமதருகே இருப்பதாக நாம் அறிகிறோம்; அவனே தக்க வரனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறான்; ஆகையால் அவனுக்கே மலயவதியைக் கொடுக்கப்படும்.' ஆனால் பிரிய மிகுதியால் எனக்கென்னமோ வேறுவிதமாகப் படுகிறது.

கலைநிறைந்து நெறிபுகழ்ந்த
கைநிறைந்து வீரகன்
னிலைநிறைந்து துணையிறந்த
வணநிறைந்து நெடுமரு
னலையெரிக்க வுயிர்த்துறக்கு
மாண்மைவிஞ்சை மணியினை
விலையிறந்த பின்னைவேட்டன்
வேட்டுமெற்கு துன்பமும்.

நான் இந்த ஜீமூதவாஹனன் கௌரியாலத்திற்கு அருகு சந்தனப்பொதும்பரில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். இங்குதான் சந்தனத்தோப்பிருப்பது. இதனுள் போவேன்.

(உள் நுழைதல்)

விதூஷகன்.—(ஆத்ரத்துடன் பார்த்துக்கொண்டு) நண்பா! இந்தச் சித்திரப்பெண்ணை வாழையிலையால் மூடு. ஒருவேளை இங்கு வருகிற வித்தர் நாட்டு இளவரசு, மித்ரவஸு, அவளைக் காண நேரிடலாம்.

நாயகன்.—(சித்ரத்தை வாழை இலையால் மூடுகிறான்).

மித்ரா.—(உள் நுழைந்து) ராஜகுமாரா! உமக்கு மித்ராவஸு வந்தனமளிக்கின்றனன்.

நாயகன்.—(நோக்கி) மித்ராவஸு! வரவேணும் இங்கு உட்காரும்.

தோழி.—அரசி! குமரன் மித்ராவஸு வந்திருக்கிறார்.

நாயகி.—தோழி! எனக்கு மிகவும் சந்தோஷம்.

நாயகன்.—மித்ராவஸு! ஸித்தர்நாட்டு மன்னன் விச்வாவஸு சௌக்கியமே அன்றோ?

மித்ரா.—ஆம்; எந்தை ஸுகமே; அவரது ஆணை மேலே உம்மிடம் வந்துளேன்.

நாயகன்.—பிரஸ்தாபர் என்ன கூறுகின்றனர்?

நாயகி.—(தனக்குள்) அப்பாவின் ஆணை என்னவென்று கேட்பேன்.

மித்ரா.—இவ்விதம் என் தந்தை கூறுகின்றனர்:

' எமக்கு மலையவதி என்றோர் மகள்; அவள் ஸித்தர் குலத்து உயிரே ஆகும். அவள் என்னால் உனக்கு அளிக்கப்படுகிறாள்; பெற்றுக்கொள்ளப்படுவாளாக!"

தோழி.—(ஸந்தோஷத்தோடு—சிரித்துக்கொண்டு) அம்மணி! நீர் ஏன் இப்பொழுது கோபங்கொள்ளவில்லை?

நாயகி.—(சிரிப்போடு, மடைமையுடன் கீழ்நோக்கிக்கொண்டு) தோழீ! பரிஹாஸம் செய்யாதே! அவர் வேறு யார் மேலோ மோஹங்கொண்டிருப்பதை நீ மறந்துவிட்டாய்.

நாயகன்.—(மறைவாக) நண்பா! நான் இப்பொழுது தர்மஸங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன்.

விதூஷகன்.—(மறைவாக) அஹா! எனக்குத்தெரியும்! உன்னெஞ்சம் அவளிடம் தவிர மற்றவரிடம் ஆனந்தமடையாது. ஏதோ சாக்கு போக்குச் சொல்லி இந்தப் பயலை அனுப்பிவிடு.

நாயகி.—(இகழ்ச்சியுடன்—தனக்குள்) என்ன கல்நெஞ்சன்! யார்தான்—இதை—முன்னே சொல்லமாட்டார்?

நாயகன்.—மித்ராவஸு! உமது கௌரவப் பெருஞ் சேர்க்கையை யார்தான் விரும்பார்? ஆனாலும், வேறு இடத்தில் பதிந்த மனத்தைத் திருப்புவது அஸாத்யமாகப்படுகிறது. ஆகையால் அவளை பெறமுடியாதவனாய் இருக்கிறேன்.

நாயகி.—(மூர்ச்சிக்கிறாள்.)

தோழி.—அரசி! தைர்யத்தை விடாதே!—தைரியத்தை விடவேண்டாம்!!

விதூஷகன்.—ஐயா! இந்த மனிதன் பிறருக்குள் பட்டவன். இவனைத் தொந்தரை செய்வதில் என்ன பிரயோஜனம். இவர் தந்தையிடம் போய் உமக்கு வேண்டியதைக் கேளுமே.

மித்ரா.—(தனக்குள்) அந்த ஆள் சொல்லியது ஸரிதான். இவன் பெற்றோர் மொழியை மீறான். இவன் தந்தையும் இக்கௌரி ஆச்ரமத்திலேயே இருக்கிறான். நான் அவன் பெற்றோரிடம் சென்று மலையவதியை அளிப்பேன்.

நாயகி.—(மூர்ச்சையிலிருந்து தெளிகிறாள்.)

மித்ரா.—(வெளிப்படையாக, உரக்க) நாம் எமது எண்ணத்தை வெளியிட்டிருக்க, நமது விருப்பத்தைத் தடுப்பது நியாயமோ என்பது அவ்விடம், அரசகுமாரற்கு, நன்றாகத் தெரியும்.

நாயகி.—(வெறுப்போடு—சிரித்து) என்ன இது; மித்ராவஸு, வார்த்தையைத் தடுத்து அவமானப்படுத்தப்பட்டும், இன்னம் என்னமோ வேண்டுகிறான்.

(மித்ராவஸு போதல்)

நாயகி.—(தனக்குள்—கண்ணீரும் கம்பலையுமாகத் தன்னை நோக்கி) கொடுந்துயரத்தாலும், கொடுந் துரதிருஷ்டத்தாலும் இழைக்கப்பட்ட இந்த பாழும் உடலை யான்வைத்து—இனி என்ன பயன்உண்டு? இறத்தல்தான் வழி. இருந்து என்ன உண்டு? இந்த அசோக மரத்தடியில்—இவ்வதிமுக்தக்கொடிக் கென்னுயிரைக் கொடுத்துவிடுகிறேன்—இதுதானுகடைசியில்—(சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, உரக்க) தோழி! மித்ராவஸு தூரம் சென்றானா இல்லையா பார். நானும் போகவேண்டும்; பார்.

தோழி.—(சில அடிகள் பெயர்த்து வைத்து, பின்னோக்கி, தனக்குள்) அவள் மூளை சரியில்லைபோலிருக்கிறது. நான் முன்னடவாது, இங்கு தெரியாதிருந்து அவள் என்ன செய்கிறாள் என்று பார்ப்பேன்.

நாயகி.—(சுற்றுமுற்றும் பார்த்து, கயிற்றைக் கைக்கொண்டு, கண்ணீர்விட்டு) அம்மணீ! கௌரி! நான் இந்த ஜன்மத்தில் உனக்குப் பிரீதியுண்டாக்கவில்லை. மறு ஜன்மத்திலாவது இவ்வாறு அதிருஷ்டமற்றிராமல் இருக்கச்செய்யும். அம்மணீ! இனி என்வேலையை முடிப்பேன். (கழுத்தைசுற்றிக் கயிறு சுற்றுகிறாள்.)

தோழி.—( பார்த்து, பரப்பரப்புடன் ஓடிவந்து) கொலை! ஐயோ! கொலை! சகாயம்! ஓ! சகாயம்! இங்கு யாருமில்லையா? அரசி கொலைபுரிகிறாள்! ஐயோ! ஐயையோ! சகாயமிங்கு யாருமில்லையா?

நாயகன்.—(பரபரப்புடன் ஓடிவந்து) அவள் எங்கே? எங்கே?—அவளெங்கே?

தோழி.—இதோ ! அசோக மரத்தண்டை.

நாயகன்.—(சந்தோஷத்துடன் உற்று) ஹா ! இதுவே என்னுளைக்குகந்த பொருள் ! (நாயகியை கைமேல் சாய்த்துக் கொடிகளை அறுக்கிறான்.)

பேதாய் அழகி தடுக்கா துடுக்காற் பீடற்றாய்
போதார் சாம்விட் டெரியாய் புரையார் கொடியிற்றே!
தாதார் மலர்பூ தறிக்கத் தரிக்கா கைப்போதின் [தரோ!
தேதே மிடற்றைக் கொடியீர்த் திடச்செய் திட்ட

நாயகி.—(வெருண்டு) தோழி ! இது, யார் இது இப்பொழுது இங்கு ? (நன்றாகப் பார்த்து, வெறுப்புடன் அரசன் கைகளை எடுத்தெரிந்து) அஹோ ! என் கையை விடு ! நீ யார் என்னைத்தடுக்க? உயிரைவிடவும் உன்னைக் கேட்டா ஆகவேண்டும் ?

நாயகன்.—

பூண்ப ழிச்சுமை புன்கைப்பொன் னாற்செயு
நாண்ப தித்தல நாணிற்கொன் னுண்பட்டு
வீண்ப டச்செயு வேதக்கண் டெடுத்துறீ இ
காண்ப தன்றிப்பின் கடப்பது மாகுமென் ?

விதூஷகன்.—(தோழியிடம் வந்து) அம்மணீ ; இந்த அம்மாள் தன்னுயிரை வாங்க முயற்சித்தாளே அதன் காரணம் யாது ?

தோழி.—அதோ—உன் நண்பன், அவர்தான் காரணம்.

நாயகன்.—என்ன ? நானா அவள் தற்கொலை புரிவதற்குக் காரணம் ! எனக்கது விளங்கவில்லை !

விதூஷகன்.—அது எப்படி அம்மணீ ?

தோழி.—(அர்த்தமாகும்படி) "உமது நண்பரது மனத்தைக் கொள்ளை கொண்டவளுடைய உருவம் மேடைமேல் அவரால் சித்தரிக்கப்பட்டது. அவள்மேல் ஆசையால், மித்ராவஸு அளித்தும், என்னை அவர் கொள்ளவில்லை" என்று ஏக்கங்கொண்டு, மனங் கலங்கி இவ்வாறு செய்ய நிச்சயித்தாள்.

நாயகன்.—(ஸந்தோஷத்தோடு தனக்குள்)—என்ன? இவள் விச்வாவஸுமகள் மலையவதியா? இல்லாவிடில், கடலிலிருந்து அல்லது எங்கிருந்து சந்திர ஒளி கிளம்பும்? அடே! நான் எப்படி ஏமாற்றப்பெற்றேன் !

விதூஷகன்.—அப்படியானால், அம்மணீ ! என் நண்பன் நிரபராதி. இம்மாதே அங்கு சித்தரிக்கப்பட்டது. நம்பிக்கை இல்லாவிட்டால் நீங்களே நேராகச் சென்று பளிங்கு மேடையைப் பாரும்.

நாயகி.—(ஸந்தோஷத்துடன் நாயகனை நோக்கிக் கொண்டு, கூச்சத்தால்கையை இழுத்துக்கொள்கிறாள் )

நாயகன்.—(சிரித்துக்கொண்டு) நான் விடமாட்டேன், நீ என் மனக்குடிகொண்ட பெண்ணைக் கல்லின் மேல் காணுவிடில்—.

(எல்லோரும் சந்தனப்போதும்பருள் போகின்றனர்.)

விதூஷகன்.—(வாழை இலையை எடுத்துவிட்டு) அம்மணீ ! இதோ பாரும் அவரது மனங்கொள்ளை கொண்ட மாதை.

நாயகி.—(பார்த்து, மறைவாகச் சிரித்துக்கொண்டு) சாதுரிகே ! ஏனடீ ! நானா இங்கு எழுதப்பட்டிருக்கிறேன் ?

தோழி.—(சித்ரத்தையும், நாயகியையும் நோக்கி) அம்மணீ ! என்ன சொல்லுகிறீர் ? இங்கு நீங்கள் எழுதப்பட்டீரா என்றா?—என்னால் சொல்லமுடியாது? உன்னை இந்த ஸலவைக்கல் பிரதிபிம்பமாகக் காட்டுகிறதோ ? அல்லது உன்னையே அந்தச் சித்திரத்தில் பதித்திருக்கிறதோ ? அது எதுவோ ? இரண்டும் ஒன்றாகவே இருக்கிறதே !

நாயகி.—(சிரித்துக்கொண்டு) இவர் என்னை இந்தச் சித்திரத்தில் காட்டியதால், தோழி, நான் வசைக்காளாய் விட்டேனடி.

விதூஷகன்.—ஓகோ ! ஐயா ! உமது காந்தர்வ மணமாய் விட்டது. இனி அரசியின் கையை விட்டு விடும். இங்கு யாரோ ஓர் மடந்தை பரபரத்து ஓடி வருகின்றனள்.

(ஓர் தாதி வரல்)

நாயகன்.—(சிரித்துக்கொண்டு, மெதுவாக நாயகியின் கையை நழுவ விடுகின்றனன்.)

தாதி.—(ஸந்தோஷத்துடன், பரபரக்க ஓடிவந்து) அம்மணீ ! நீங்கள் நிரம்ப அதிர்ஷ்டசாலி ! அரசன் ஜீமூதவாஹனனது தாய் தந்தையரால் தாங்கள் ஒப்புக் கொள்ளப்பட்டீர்.

விதூஷகன்.—(கூத்தாடிக்கொண்டு) பலே! பலே ! எங்கள் ஐயன் இஷ்டம் பலித்துவிட்டது ; ஓஹோ ! இல்லை,—அரசி மலையவதியின் இஷ்டம் பலித்தது ;

அடே அதுவும் இல்லையா, இந்தக் கட்டை தடிப்பிரமசாரி, தனியன், பார்ப்பான் இவன் இஷ்டந்தான் பலித்தது.

தாதி.—(அரசியை நோக்கி) அம்மணீ இளவரசு மித்ராவஸுவினால் ஆணையிடப்பட்டதாவது! "இன்றே மலையவதியின் கல்யாணத்தைப்பற்றிய சுபகார்யங்களை எல்லாம் நடத்தி விடவேண்டியது. "சுபஸ்ய சீக்கிரம், நீ போய் அவளைத் துரிதமாக அழைத்துவா." ஆகையால் நாம் போவோம் வா.

விதூஷகன்.—ஆனால் நீ போய்விட்டாய்! தேவடியாள் மகளே! அரசியையும் அழைத்துப் போவாய்! அரசே! நாம் என் இனி இங்கு இருக்கவேண்டும்?

தாதி.—அடே மடையா! படபடத்து பேசாதியடா! உனக்கும் ஸ்நாநம் பண்ணவேண்டிய காலம் வந்து விட்டதடா.

(தாதிகளோடு அரசி கடைக்கண்ணால்
கூச்சத்தோடு நாயகனை நோக்கிக்கொண்டு
போதல்.)

நேபத்யத்தில், (காயகர் பாடுதல்—)

காவிரைக்கும் பொடிச்சுண்ணங்
காலையிற்செக் கரைக்காட்ட
மாவிரைக்கும் பொற்சுண்ணம்
பொன்காட்ட மேருவென
மாலுறைக்கு மலையத்து
மடநலார்நும் மஞ்சனக்கு
காலுறைக்குங் கவிக்கலந்து
காலத்தை காண்டனரே.

விதூஷகன்.—நண்பா! அதிருஷ்டமே. ஸ்நாந வேளை நெருங்கி விட்டது.

நாயகன்.—(ஸந்தோஷத்தோடு) அப்படியானால் நண்பா! நாம் என் இங்கு இருக்கவேண்டும். போகலாம் வா; நாம்போய் எனது தந்தையைத் தொழுது மஞ்சனம் ஆடுமிடம் போகலாம்.

மனத்துள் ஒற்று மணர்ந்தனர்ச் சில்லரி
வினத்துள் ஒற்று மிளமையி லொற்றுநற்
கனத்துள் ஒற்றுங் கவின்பிறப் பொற்றியு
மனத்துள் ஒற்று மணந்தனர்ச் சில்லரே.

இரண்டாவது அங்கம் முற்றிற்று.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

## உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி

## TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

### அத்யாயம் 7

### ஸமயோசித தந்திரம்

இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே யாமாயின்--இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே அவ்வில்
புலிகிடந்த தாறுய் விடும்.

காட்டுப் பூனைகள் ஆணும் பெண்ணுமாகக் கூடி மிக ரஸமாகப் பேசி வந்த பேச்சைக் கட்டை போட்டு நிறுத்தியவன் அவர்கள் அயல் வீட்டுக்காரருள் ஒருவன். அவன் வழியில் அவன் பெயர் போனவன். உலகிலுள்ள அற்புதங்களுக்கு அளவே இல்லை. காணக் கண் படைத்தோர்கள் தடையின்றி இவைகளைக் காண்பார்கள். நமது சிறு கதையும் இவ்வுலகத்தின் சிறு துண்டாதலால் இதிலும் சில அற்புதங்கள், ஆங்காங்கு காணப்படும். இம்மாதிரியான விஷயங்களுள் வந்தவனாகிய சுந்தரய்யன் ஒருவன். இவனிடம் கலகம் மூட்டுந் திறம் குடிகொண்டிருந்தது. ஆதலால் இவனுக்கு ஸங்கீத சிரோமணியான நாரதரது பெயர் அவ்வூராரால் கொடுக்கப்பட்டு வழங்கி வந்தது. தேஹம் நீங்கிய கிருஷ்ணனது தீட்டு வீட்டிலிருந்து திரும்பி வரும் பொழுது சூதுக்காரனான நாயனுடு முகம் உத்ஸாஹத்தால் பூரித்துக்காந்தியுடனிருப்பதை இவன்கண்டு விட்டான். வீட்டுக்குப்போதல், உலர்ந்த வஸ்திரம்தரித்தல், நாயனுடு வீடு வருதல் எல்லாம் அரை நொடியில் முடிந்துவிட்டன. பகவத் ஸங்கல்பப்படி ரஹஸ்யங்களைத் துப்பறிந்து வெளியிடும் கூட்டத்தாருள் தானாகவே தலையிட்டுக்கொண்டிருந்த இந்தச் சேவகன், காட்டுப் பூனைகள் கலந்து பேசிக்கொண்டிருக்கையில் ஒன்றையும் விடாது ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்தான். 'அந்தப் பயல் கிருஷ்ணன் போனானோ இல்லையோ? நம் பயல் தான் ஸொத்துக்குப் பாத்யஸ்தன்!' என்ற பரமரஹஸ்யத்தைக் கூறி மிக ரஸமாக இப்பொழுது 'தெரிஞ்சுதா?' என்று தலை அசைத்துக்கொண்டு உத்ஸாஹமாகக் காட்டுப்பூனை கேட்ட காலத்தும், நண்பன் ஸுந்தரய்யன் ஒருவருக்கும் தெரியாது அங்கேதான் ஒளித்திருந்தான். தான் மறைந்திருப்பது அங்கு

யாருக்கோ தெரிந்து விட்டது என்ற ஸந்தேஹம் அவனுக்கு உண்டாகிவிட, சதியாலோசனை முடியும் வரையில் மறைந்திருந்தே கேட்டுவிடவேண்டும் என்று எண்ணங்கொண்ட அவன் அவ்வாறு செய்யமுடியாமல் போய்விட்டது. விஷயங்கள் ரஸாபாஸமாகப் போவதற்கு முன்னமே அதை ஸரிப்படுத்த எண்ணி 'பொடி இருந்தால் கொடு' என்று கேட்டுக் கொண்டே தைர்யமாக வீட்டுள் நுழைந்து விட்டான். நமது ஸமூக வாழ்க்கையில் இந்த அல்பப்பொடி படுத்தும் பாடு தான் என்ன ! ப்ராஹ்மணன், சூத்ரன் ; ஜமீன்தாரன், அவன் நாய்க்காரன் ; திவான் அவன் சமயல்காரன், ஆகிய இதுபோன்ற அநேகரைத் தமது நிலை தடுமாறி நெருங்கிக் கலக்கும்படி செய்வது இந்த காந்தச் சூர்ணம்தான். இம்மாதிரி எல்லாவற்றையும் ஸமரஸப்படுத்தும் இப்பொடியைத்தான் ஸுந்தரய்யன் இந்த ஸங்கட ஸமயத்தில் ஸஹாயமாகக் கொண்டு தகுந்த சாக்குக்காட்டி உள்ளே புகுந்து விட்டான். வழக்கப்படி இவன் வந்ததும் நாயன்னு மனைவி விலகி விட்டாள். அப்பொழுது இவன் 'சங்கரா ! என்ன சிரமம் !' என்று சொல்லிக்கொண்டு ஒழுங்காக உட்கார்ந்து விட்டான்.

நாயன்னு.—(கூட உட்கார்ந்து கொண்டு) என்ன ! என்ன ஸங்கதி ? என் இவ்வளவு களைப்பு ஒனக்கு ?

ஸுந்தரய்யன்.—ஒரு பிச்சைக்காரப்பயல், அவனுக்கு மதுரையாம், அவனோடுபோட்ட சண்டை போரும் போரும் என்னுச்சு.

நாயன்னு.—அவனரு ? அவனோடே சண்டை என்ன ?

ஸுந்தரய்யன்.—அந்தப் பயல் அந்தப் பாவி லக்ஷ்மிக்கு ஒறவாம் : கிருஷ்ணன் ஸொத்தெல்லாம் அவளுக்கும் அவள்கொடிய தகப்பனுக்கும் தான் போக வேண்டும் என்று பாத்யம் கொண்டாடரான். ஒரு பைஸாகூட அவளுக்குப் போகாதபடி பார்த்துக் கொள்ளத்தக்கவாள் இருக்கா என்று கூறிக் கோபம் அதிகமாக வாயில் வந்தபடி எல்லாம் அவனைத் திட்டினேன். இந்த மதுரைப் பயல்கள் எல்லாம் முடிச்சுமாறிகள். என்ன சொல்லரே ?

நாயன்னு.—இந்த மதுரை முடிச்சுமாறிகளுக்கு என்ன பாத்யம் இந்த ஸொத்தில் ?

ஸுந்தரய்யன்.—நிஜம்தானே ! அதற்குத் தகுந்த பாத்யஸ்தான் இருக்கானே !

நாயன்னு. (உறக்க) பாத்யஸ்தானா ! என்ன ! பாத்யஸ்தான் இன்னரயே ? அதற்குப் பாத்யஸ்தன் ஒருத்தன்தான். அவனுக்குத்தான் அதுபோகும் !

ஸுந்தரய்யன்.—ஸரிதான்! நீ சொல்ரது நெஜம். பாத்யஸ்தன் ஒருத்தன்தான். அவன் ஒன் பந்து ஸீதாராமன் தானே ? எனக்கு நன்னுத் தெரியுமே.

நாயன்னு.—(கோபித்து முகமும் கண்ணும் சிவக்க கதறுகிறான்) நான் கணக்கிட்டுப்பாத்தேன் ! பாத்துட்டேனே ! ஸீதா ராமனுகட்டும் எந்தப் பிசாசாகட்டும் கிட்ட வரட்டும் ! அவனுக்குச் சொல்லரே வழி ! கொன்னுடுவேன்தொட்டான்னு ! ஸொத்து என்னது! நான்தான் யஜமானன் !

ஸுந்தரய்யன்.—நீயா ! அது எப்படி ? சொல்லு பார்ப்போம்.

நாயன்னு.—ஆமாம், சொல்ரேன் கேளே, நானல்ல. ஆனல்—

இந்தத் தருணத்தில் அடுப்பங்கரையிலிருந்து ஒரு பெரிய அழுகுரல் கேட்டது. அது தன் கண்மணி குரல் என்று அறிந்த நாயன்னு வாரிப் புடைத்துக் கொண்டு எழுந்து என்ன விசேஷம் என்று பார்த்து வர ஓடினன். போய்ப் பார்ப்பனே ! ஸுப்பி கை ஓயாது அந்தப் பயலை அடித்துக்கொண்டிருந்தாள். 'அடிகண்ணுட்டி ! என்னடீ இது ! என்ன என் கண்மணியை இப்படி அடிக்கிறயே! என்ன ஸங்கதி?' என்று கூச்சலிட்டான். என்ன செய்தும் அடி மேல் மேலும் பலமாக விழத்தொடங்கியது. அழுகைக்குரலும் அதிகப்பட்டது. நாயன்னு அவளைமறுபடி கடிந்து கொள்ள, நான்கு வீடு கேட்கும்படி அவள் திருவாய் மலர்ந்தருளலானள். 'நான் அவனை என்ன செய்தா என்ன ? குடிபாழாய் போனு என்ன ? ஒங்களுக்கு இங்கே எது புத்தி ? வழிலேபோர பறப்பயகளோடே எல்லாம் ஒங்கள் யோசனைகள் தந்தரங்கள் இவைகளைப் படித்துச் சொல்லத்தான் ஒங்களுக்குப் போது சரியாக இருக்கே ! வீட்டுவேலை எவ்வளவு கடக்கு ! கன்னு தண்ணியில்லாது சாகரது, இலை காய்கரி தோட்டத்திலே இருந்து கொண்டுவரணும், தோய்க்க வேண்டிய வேஷ்டியோ மலையாகக் குமிஞ்சிருக்கு, நீங்க மாத்ரம் வாயோயாது 'மொச் மொச்' சென்னு பேசிக்கொண்டிருங்கோ. உங்களுக்கு என்ன பேச்சு வச்சிருக்கோ ! நீங்க சோம்பலாக எடத்தை விட்டசையாதிருங்கோ ! இந்தப் பயல் சாதம் சாதம் என்னு அடிச்சுக்கரான் ! இலை இல்லாது என்ன சோத்

தைக்கொட்டித்தொலைக்கிறது! எருமமாட்டு முதுகிலே மழை பேஞ்சாப்பிலேவந்தவன்போனவனிட்டெல்லாம் வம்பு பேசிக்கொண்டிருங்கோ' என்று சரமாரியாக அடித்து விட்டு, பயல் முதுகிலேயும் சரமாரியாக அடிகளைச்சொரிந்தாள். ஸுந்தரய்யன்காதிலும் இதுவிழுந்தது என்று சொல்லவும்வேண்டுமோ? திருடனல்லவா அவன், தான் இந்த ஸமயம் மதிமோசம் போனதைத் தெரிந்துகொண்டு விட்டான். நாயன்னாவினுடைய மனோராஜ்யத்தை வெளியே இழுக்க வேறு நல்ல தருணம் பார்த்துக்கொண் டிருக்கும்படியாய் விட்டது.

நண்பர்களே! இதற்குள் உங்களுக்கு விஷயம் விளங்கிக்கொண்டு வரலாம் ஸுப்பி அடுப்பங்கரையி லிருந்து கணவனுக்கும் அவன் தோழனுக்கும் நடந்து வந்த ஸம்பாஷணையைக் கவனித்துக் கொண்டிருந்தாள். தன் கணவன் கணக்கிட்டதாயுள்ள தன் மனோராஜ்ய ரஹஸ்யத்தை மடத்தனமாய் அவனிடம் வெளிவிடும் தருணம் வந்ததையும் கண்டுவிட்டாள். உடனே இந்த அலங்கோலம் நேராதபடி தடுக்க அவனைத் தோழனைவிட்டுப் பிரிக்க எண்ணி இந்தப் பிள்ளையை அடிக்கும் உபாயத்தை மேற்கொண்டாள். இவ்வளவும் ஸுந்தரய்யனுக்குத் தெரியாதா? உடனே அப்பொழுது போய்விடுவதே நலம் என்று கருதி 'நாயன்னா நான் போய்வரேன், எனக்கு வேலை இருக்கு' என்று வாய் வார்த்தையாகக் கூறிவிட்டு, மனதிற்குள் 'இந்த நாயன்னா மனோராஜ்யத்தைக் கொண்டு இதில் ஸம்பந்தப்பட்டவர்களை எல்லாம் எப்பாடு படுத்துகிறேன் பார்!' என்று கருவிக்கொண்டு வெளியே போய்விட்டான். ஸுப்பி பலமாக அவன் பின்னரே சென்று மடார் என்று கதவைத் தாளிட்டு விட்டு, 'வழியில் போகிறவனுக்கெல்லாம் சொத்து விஷயமான ஏற்பாடுகளை வெளிவிடலாகாது, அதிலும் ஸுந்தரய்யனை நம்பவே கூடாது' என்னும் அரிய விஷயத்தைப்பற்றித் தன் கணவனுக்குப் பெரிய தலயணை மந்திரம்ஒன்று உபதேசித்துத்தீர்த்தாள். இந்தப் பிரஸங்கம்முற்றுப்பெற்றதும், தன் கணவன் அடிக்கடி வெளியேபோனால் உளரிக்கொட்டிக்களரி மூடிக் கொண்டிருப்பானே என்று அஞ்சி அவனை வீட்டு பந்தோகானவில் சில காலம் அடைத்துத் தடை செய்தாள்.

## ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES.

### ருக்மணி அல்லது பக்திநிலை

#### பக்திமலர்ந்த காதை

போதெல்லாம் போது கொண்டுன்
பொன்னடி புனைய மாட்டேன்;
தீதிலா மொழிகள் கொண்டுன்
திருக்குணம் செப்ப மாட்டேன்;
காதலால் நெஞ்ச மன்பு
கலந்திலேன்; அதுதன் னாலே
எதிலேன் அரங்கற் கல்லேன்!
என் செய்வான் தோன்றி னேனே!—

தொண்டரடிப் பொடியாழ்வார்.

அன்பெனுங் கடலையடைந்து இன்பமடையவேண்டுமென்று தனதுள்ளம் என்னு மத்தால் தவறாத பக்தி என்னும் கயிற்றால் கடைந்து, ஆராத வமுதனாகிய அன்பனை அடைந்தும், உடலோடு வந்த தனது உடன் பிறந்தவனிடம் ஆசையானது ஓர்பால் மனதைச் சலிக்கச்செய்யினும், ஸ்ரீ பலராமரது உத்தம உபதேச மொழிகளால் அவ்வாசையை ஒழித்து, பரந்தாமனிடம் நிலைத்த பேரன்பு திருகின்ற உருவாகி, கொழுந்து விட்டு படரும் இளங்கொடிபோல் எண்ணுதற்கு முடியாத காலத்திற்குள் வளர்ந்து, படர்ந்தெரியும் பிழம்பு போல ஓங்கித்திரண்டு விளங்கிய எம்பெருமாட்டியின் மனோ நிலைமையைக் கூறுதலும் வேண்டுமோ? துவாரகா நகரத்தை அடைந்து எம்பெருமான் யாவரும் காண தன் முழு மனத்தோடு அம்மையர் பால் அன்பொழுக ஆனந்த மென்னும் கடலைக் கண்ட பெரும் அழகிய சந்திரன்போன்ற பிராட்டியாரை மணக்க ஊர் முழுதும் அலங்கரித்தும், ருக்மணியின் மனத்தின் ஒழுங்கின் அழகைச் சமம்பெறவில்லையென்று நாம் சொல்ல வேண்டுமோ? மாமரத்தை நாடுங் கொடியைப்போல எம்பெருமானைச் சரணமடைந்த கருணைக்கொடியாகிய ருக்மணியின் அழகின் முன் ஊர் அழகு ஈடுபடுமோ? மற்றும் தன் துணைவரையும் பெற்றோரையும் விட்டு பிறர்பால் வீழும்படி நேர்ந்த காலத்து தன்மனத்திற் கொப்பாததை ஒப்பாது எம்பெருமானை நாடவேண்டு மென்று இன்பத்தையுமடைந்து கண்ணனைக் கொண்டு ஆனந்தமுண்ட அம்மையாரின் மனோநிலைமுன் ஊரின் இன்பத்தில் ஆனந்தமடைந்தது எதிர் நிற்குமோ? இதை முற்றும்

உணர்ந்தவரானாலும் ஸ்ரீ பரந்தாமன் தனது கருணை விலாஸத்தின் மஹிமையால் தன்னை விரும்பிய லோக ஜனங்களுக்குத் தன்னுருவைக் காட்டலன்றி தன்பால் பூர்ணமாகிய மனத்தினோடும் ஈடுபட்ட சீலையாகிய பிராட்டியாரின் வைபவத்தையுங் காட்டவேண்டும் என்று உலக வழக்கின்படி மணஞ்செய்து ருக்மணியை தனது மனைவியாக அடைந்து அவள்பால் பிரத்யும்நன் என்னு மகனை அடைந்தார். அவனை நடுவில் இழக்க நேரிட்ட பொழுதும் அதைக் கணிசியாது தனது நாயகனது சிச்ருஷையே மேலிட்டுக் கொண்டு விளங்கிய காலத்தில் மற்றும் தன் மதலையை வைசித்ரிகமாக அடைந்து கண்ணனுர்க்கு செய்ய வேண்டியதையே தன்தொண்டாகப் பெற்று வாழ்ந்துவந்தாள்.

இவ்வாறு இருக்குநாளில் ஓர் நாள், தன் தோழிகளோடு ருக்மணி தனது முதல்வனாகிய பரந்தாமனை விசிறிக்கொண்டிருந்தாள். ஐயன், உலக முதல்வனாகிய மாயன், ஸுகமாக தனது படுக்கையில் படுத்திருந்தார். அதர்மத்தை ஒழித்து நன்மையை ஸ்தாபிக்க, பிறவியற்ற முச்செயலுக்குந் தலைமையைப் பூண்ட எம்பெருமான், தனது காவலை நடத்த தானே யதுகுலத்தில் அவதரித்தனர். அந்தஃபுரமுழுதும் முத்துவரிசைகளாலும்,மணியிழைத்த விளக்கின்பங்க்திகளாலும் அலங்கரிக்கப்பட்டு தேஜோமயமாக விளங்கியது. மல்லிகை மலர்ச்சாலையில் தேனீக்கள் நடனம் செய்து கொண்டிருந்தன. அகில்கட்டை நாற்றம் சூழ்வதோடு மந்தமாருதத்தால் கொண்டுவரப்பட்ட பாரிசாதாதிமலர்களின் வாசனைகளிலும், இடை இடையே சிறிய சதுக்கங்களின் வழியாக ஸூரிய சந்திரர்களின் நெடுங்கிரணங்களும் உள்நுழைந்து வீட்டைச் சித்தரித்தன. உள்ளறையில்வெண்மையானபடுக்கையில்அமைந்திருந்த ஸ்ரீவாஸுதேவனுக்கு ருக்மணி பிராட்டியார் தொண்டு செய்துக்கொண்டிருந்தனள். சேடிகளிடமிருந்த சாமரைகளை வாங்கித் தானே தனது தலைவனுக்கு வீசினாள்; அவர் சிரமத்தை ஆற்றிக்கொண்டிருந்தாள். அச்சுதர் பக்கத்தில் அம்மையார் அழகு மிகவும் பூரித்து தோன்றியது. அவள் சவரி வீசிய காலத்தில் கையிலிருந்த கணையாழிகளின் ஓசை கங்கணங்களின் ஓசையிலும் நூபுரங்களின் ஓசையிலும் மயங்கி இசைச் செய்தன. அளகபாரத்தின் ஒழுங்கினாலும், அணிகளாலும் தன் மனங்கனிய உருவுகொண்டு எதிரில் விளங்கிய புன்னகையும் நன்னடையுங்கொண்ட ருக்மணியை நோக்கி ஸ்ரீ வாஸுதேவன் புன்னகைதந்து கீழ்வருமாறு கூறினார் :—

"அடி அரசி! லோகபாலர்க்கு ஸமானமான வலிமையும் வீரமும் பெருமையையும் பெற்ற அழகும் பெருந்தன்மையும் பெற்ற அரசர்களால் விரும்பப்பட்டனை! உன்னுடன் பிறந்தாராலும் தந்தை முதலானோர்களாலும், அன்று அச்சணியில் காம இச்சையால் உன்னை அடைய தோன்றிய சேதி யரசர்க்கு கொடுப்பதாக நிச்சயித்திருக்க, அவர்களை வெறுத்து, அவர்களுக்கு தினையளவும் ஸமானமில்லாத என்னை என் விரும்பினாய்? ஜராஸந்தனுக்காக நடுங்கி, அழகுடையாய்! நாங்கள் இந்த ஸமுத்ர நடுவில் பதுங்கி கிடக்கிறோம்! அழகிய வளைந்த கண்களையுடையாய்! பெண்களுக் கடங்காத மனிதனை மணந்து பெண்கள் மனவெறுத்துவிடலாகுமல்லவா? நான் எளியன்; ஏழை! ஏழை ஜனங்கள் என்னை விரும்புவரேயன்றி, செல்வத்தில் விளங்கும் பெரியோர்கள் என்னைஸ்மரிப்பதுகூட இல்லை.என்னை லக்ஷியமும் செய்யார்.செல்வத்தாலும் குணத்தாலும், ஒழுங்காலும், அந்தஸ்தாலும், பிறப்பாலும், வரவாலும், செலவாலும் ஒத்தாரிடத்தே மணப்பதே தகுந்தது. ஏழைகளைச் செல்வர் அடைவது ஸுகத்தைத்தரவே தராது. ஹே! வைதர்பி! நீ முன்னமே ஆலோசியாமல், தெரிந்தும், எளியவர்களால் விரும்பப்படும், குணங்களின்று விளங்கும் என்னை மணந்து விட்டாய். போனாலும் போகட்டும். இப்பொழுதும் ஒன்றுங் கெட்டுப்போக வில்லை. இப்பொழுதே நீ உனக்கு மனத்திற் கினியவனாயும், இம்மைக்கும் மறுமைக்கும் சுகத்தை யளிக்கக்கூடிய பரமவீரனாகிய க்ஷத்ரிய னொருவனை வரிக்கலாம். அதற்கொன்றும் நேரமாகவில்லை. எனக்கு இன்னமும் சேதிநாட்டரசன், தந்தாவக்ரன், ஜராஸந்தன் முதலியவர் மாத்திரமன்றி உனது உடன்பிறந்த ருக்மி முதலியோரும் பகைவர்களாக இருக்கிறார்கள். அடீஇ குணமுடையாய்! செல்வச் செருக்கால் கர்வித்து வீராப்புடன் வாழும் அவர்களை எதிர்த்ததால் கீழோர்களது கோபத்திற்கு இலக்கு ஆகி விட்டேன். அது மாத்ரமோ. நாங்கள் ஸந்யாஸிகள். எங்களுக்குபெண்டு, பிள்ளை செல்வம் இவை எல்லாம் எதற்கு? நாங்கள் எங்கள் உடம்பு வீடு இவைகளைக்கூட கவனியாதவர்கள். நாங்கள் ஞானவிருத்தியால் ஒளிபோல் களங்கமற்று ஆத்மானுபவத்தையே விரும்பினவர்;— ஆதலால் என்னை விரும்புவதில் உனக்கு ஸுகமும் கிடையாது: பெருமையுங் கிடைக்காது. இடையனைக் கட்டிக்கொண்டு பெருங் கொற்ற மன்னன் மகளாகிய ருக்மணி வாழ முடியுமா? அது எவ்வாறு முடியும்—?"

இவ்வாறு தனது உண்மை அன்பிற்குறிய நாயகியை நோக்கி கூறி ருக்மணியின் மனநிலைமைக் குன்றும்படி செய்துவிட்டு ஸ்ரீ பரந்தாமன் வாய்மூடிக் கொண்டு சும்மா இருந்தனர்.

இவ்வாறு என்றுங்கேளாத மொழிகள் தனது ஆசை நாயகன் வாயினின்று வெளிவரக்கண்ட ருக்மணி நடுநடுங்கி,திகைத்து,சிந்தாஃக்ராந்தையாய்,தம்பித்து நின்றாள். மூவுலகின் தலைவர்க்கும் தலைவனாகிய எம்பெருமானது மொழிகளைக்கேட்டு கவலைகொண்டாள். அவள் மனந்துடித்தது. உடல் வெயர்த்தது. பின் தனது அழகிய கால்விரல்களால் பூமியைக்கீண்டு, தலை குனிந்து சொரிந்த கண்ணீரால் மார்பிலணிந்த குங்குமத்தை மையாக்கி சிந்தைகொண்டாள். ஒன்றும் தோன்றாது, பேசவும் நாவெழாது, வந்த அழுகையையும் அடக்கிக்கொண்டு கீழ்நோக்கிய பார்வையோடு

கீழ் உட்கார்ந்து விட்டாள். துன்பமானது மனத்தைக் கலக்க, பயத்தால் மனங்குழம்பி, ஒன்றுந்தோன்றாது தன்கையிலிருந்த விசிறியை நெகிழவிட்டாள். துன்பத்திற்காளாகி ஒன்றுந்தோன்றாது தலைமயிர் முழுதும் சூழப்படா கீழ்மயங்கி வீழ்ந்து விட்டாள். காற்றால் அடிபெயர்ந்து வீழ்ந்த வாழைபோல் கீழிருந்த ருக்மணியை நோக்கி எம்பெருமான்-கண்ணன்-கருணை வீசி தன்மனத்திற்கினிய கண்ணாட்டியை, ஆசைமொழியின் எளனத்தைக்காணாதஅந்தப்பிராட்டியாரை, தன் கட்டிலிலிருந்தி இரங்கி தனது கைகளால் வாரி அணைந்து, தலைமயிரைக் கோதி முகத்தைத் தனது செந்தாமரைக்கரங்களால் தடவிக்கொடுத்து, வழிந்த நீரைத்துடைத்து, முகத்தோடு முகம் வைத்து அணைந்தனர். அசரசரண்யனான ஸ்ரீவாஸுதேவன், பக்தர்களை ரக்ஷிக்கும் பெரியோனான அந்த கண்ணன் தனது நயமொழிகளால் மனங்குலைந்து வருத்தமுற்ற ருக்மணியைத் தேற்றினார். மேலும் பின்வருமாறு கூறினார்.—

“ அடி அழகுடையாய்! நான்சொன்னவார்த்தைக்கு கோபியாதே! நீ என்னிடங்கொண்ட பக்தி எனக்கு நன்றாகத்தெரியும். உனது வில்லைப்பழித்து வளைந்து நீண்ட புருவங்கள் கோபத்தில் துடித்து, உதட்டின் படபடப்பில் மயங்கி உன்முகம் கோபாவேசத்தில் காணவேண்டும் என்று ஆவல் கொண்டு உன்னை பரிகாசம் செய்தேன். கிருஹஸ்தர்களுக்கு, அழகுடையாய், தமது காதலரோடு பரிஹாஸமாக பொழுதுபோக்கல் ஒரு பெரும்பாக்கியமன்றோ? ”

இம்மொழிகளைக் கேட்டு தன்னை பரிகாசஞ்செய்ததாக தெரிந்துகொண்டு பரந்தாமனைவிட்டு பிரிய நேராதென்றுணர்ந்து தனது பயத்தை ஒழித்து, அழகிய தனது திருவாய்மலர்ந்து கடைக்கண்வீசி மெல்லிய வசனங்களால் கீழ்வருமாறு சொல்லுவாள்—

“ செந்தாமரைக்கண்ணா! எனது |பெரியோய்! உமக்குச்சமானமில்லை என்று நீசொல்லியது உண்மைதான்! நீங்கள் யார்? மூவர்க்கு முதல்வனாகிய முதல்வர் அன்றோ? நான் யார்? “குணம்பொல்லேன்”. பெருமையிற்சிறந்தாய் நீயன்றோ ஆத்மன்? குணம் ஒழிந்து பரம ஞானமாக செழித்து விளங்கும் பரம ஆத்மன் நீங்களே அன்றோ? தாங்கள் பயந்து கடலுள் ஒளிந்து இருப்பதும் உண்மைதான்? அனந்த குணங்களைக்கண்டு நடுங்கி உணர்ச்சியின் உள்ளுறையும் கடலுள் உறைந்து நிற்கின்றீர். எக்காலத்திலும் பூதங்களுடன் சண்டையிட்டுக்கொண்டே இருக்கின்றீர். அனர்த்த பரம்பரா வாஸமாகிய ராஜாங்க நிலையை ஒழித்து உமது அன்பர் உம்மை நாடுகின்றனர். அவர்கள் எளியவர்கள் தானே! உமது பாதாரவிந்த ஸேவை செய்து ஆராத வமுதனை அடைந்து அமுதமுண்ணும் முனிவர்களது அறியவொண்ணா நடக்கையை மானிட உருவங்கொண்ட மிருகங்களின் மனத்தில் எறுமோ?

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

### *Hon. Mr. V. Krishnaswami Aiyar, C. S. I.*

### கனம்-வே-கிருஷ்ணஸ்வாமி அய்யர், ஸி. எஸ். ஐ

சென்ற வருஷத்து கடைசிமாதம் 28-ம் தேதியில்தான் கனம் ஸ்ரீமான் வே. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் இவ்வுலகைத்துறந்து இந்நாடு முழுதையும் குதூஹலத்திலிருந்து துன்பமடையும்படிச் செய்தது. அரசன் சத்திரபதியின் மஹா மகுடாபிஷேகத்தைக்காண சென்றவர், தான் போகப் புறப்படுவதற்குமுன் அவருடைய வயிற்றின்கீழ் தோன்றிய சிறு சிரங்கு வலிகொண்டு உள்ளூறவோடி மிகவும் அயரும்படிச் செய்ய இடையே மகுடம் புனைவதைக் காண்பதைவிட்டு தன்னூர் அடைந்து, சற்று வியாதி குறைந்து பின்நிறைந்து அதிதீவரமாய் சிரங்கு அறுக்க ஸ்வஸ்த மடையலாமென்று அதற்கு இணங்கி, எல்லா வைத்யர்களாலும் கைவிடப்பட்டு பெரியோருலகை அடைந்தனர். காலை 5 மணிக்கு உயிர் நீங்கியது. பெரியோர்களாலும் விசாரிக்கப் பட்டதன்றி, அநுதாபத்தின் பொருட்டு கனம் கவர்னர் அவர்கள் விசாரித்துவிட்டு அன்று முழுதும் கோட்டையில் கொடியை அறை மட்டம் தாழ்த்தி, சென்ற உயிரின் பெருமை பாராட்டி குண்டுகள் போடும்படிச் செய்து, அன்றுமுதல்|ஜனவரி 3-ம் தேதி முழுதும் ராஜ்யத்தில் துக்கம் கொண்டாடும்படியாகப் பிரசுரம்செய்து, அன்று அய்யர் அவர்களது பெருமை, சீர், செயல் முதலிய கொண்டாடி “போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் கெஜட், எக்ஸ்ட்ரார்டினரி ” ஒன்று வெளியிட்டனர். வீட்டில் வந்த பொழுது சவத்தை சுடலைகொண்டு செல்லும்பொழுது ராஜாங்கராணுவ மரியாதை செய்வதாகவும் சொன்னார். ஆனால் அவ்வாறு செய்வது மதவிரோதமுண்டாக்கக்கூடும் என்று அறிந்து செய்யவில்லை.

ஜில்லா முனுசிப்பாக காலஞ்சென்ற வேங்கடராமய்யருடைய மகனாக 49 வருஷங்களுக்கு முன் தோன்றிய இவர் சென்னை ராஜாங்க கலாசாலையில் படித்து பி. எ. பரிக்ஷை கொடுத்து 1883-ம் வருஷம் நியாயவாத பரீக்ஷை தேறி, நியாயவாதியாக 1885-ம் வருஷம் அப்யசிக்க ஆரம்பித்தனர். பின் தனது புத்தி விசேஷத்தாலும், மதியூகத்தாலும், வாக்தாடியாலும், நட்பத்தாலும், யாவற்றையும் அதிசீக்கிரத்தில் கிரஹிக்கக்கூடிய திறமையினாலும் வரவர மேன்மை ஓங்கி மிக உயர்ந்த வக்கிலாக விளங்கியதன்றி, ராஜாங்க விஷயங்களிலும் தலை நுழைத்து மஹாஜன சபையில் மிக உழைத்து, அநேக தானதர்மங்களைச் செய்து, கைத்தொழில் அபிவிருத்தியின்பொருட்டு ப்ரேரேபணைகளும் செய்துக்கொண்டும் இருந்தனர். இந்திய காங்கிரஸ் என்னும் மஹாநாடுக் கூட்டத்திலுங் கலந்துழைத்து வந்தனர்.

ஸ்ரீரங்கம் வித்வான் கிருஷ்ணமாசாரியார், அய்யர் டர்பாருக்கு போவதற்குமுன் எழுதிய பாக்களில் கண்டவாறு,நோயால் பிணிப்பட்ட உடம்பைஅழியாது காக்க ஓர்வைத்தியசாலையும், மாயையால் பிணிக்கப் பட்ட உயிரைக்காக்க ஓர் கலாசாலையும் ஏற்படுத்தினர். இதற்கு முன்னமே தனது மனத்திற்கு மிக நேசனாக விளங்கிய ரானடேயின் ஞாபகச் சின்னமாக செய்ய ஓர் சரித்திரஸங்கமும் உயிர்க்க உதவி புரிந்தனர். இவ்வாறு இவர் செய்த தர்மங்களைக் குறித்து ராஜாங்கத்தினும் கெய்ஜர்–இ–ஹிண்டி என்னும் மெடலும் கொடுக்கப்பட்டது.

இத்தகையாராகிய கொடையான் ராஜாங்க சட்ட நிர்மாண ஸபையில் செய்த ப்ரஸங்கங்களின் மேன்மையைக்கொண்டு 1910-ஆம் ஹைகோர்ட் நியாயாதிபதியாக நியமிக்கப்பட்டு, 1911-ஆம் கவர்னரின் ஆலோசனை அங்கத்தினரில் ஒருவராக ஏற்படுத்தப்பட்டனர். இந்த நிலைமையே ஒரு இந்தியன் ராஜாங்கத்தில் அடையக்கூடிய உன்னத நிலையாகும். அங்கு அவர் தனது வேலை மாத்திரமன்றி தனது வேலையன்றி மற்றைய அங்கத்தினருடைய வேலையைக்கூட ஆக்ரமித்துக் கொண்டுவந்தனர். இவர் சக்தியை உத்தேசித்து அரசன் மகுடாபிஷேககாலத்து இந்திய தாரகாநேசன் (C. S. I.) என்னும் பட்டமும் அளிக்கப்பட்டது.

இது அவர் வாழ்க்கைவழி. அவர் செய்த தர்மம் பல. சில முன்னமே சொல்லப்பட்டன. மற்று தர்மரக்ஷண ஸபையுண்டாக்கி கோயில்களைச் சீர்திருத்த முயன்றது; காசி ஹிந்து கலாசாலைப்பொருட்டளித்த கொடை; இன்னமும் சில்லரையில் பல. அவர்க்குப் பழைய ஆரிய திராவிட பாஷைகளை விருத்திசெய்ய வேண்டுமென்பது பிரபலமாகிய எண்ணம்: இதற்காக, சென்னை சர்வாங்க கலாசாலையில் "கிழக்கத்திய பாஷையில் டிக்ரி" ஒன்று உண்டாக்கினர்.

அவர் குணம் குற்றமற்றதென்று கூற யாவரும் தைரியம் கொள்ளார். தாமரைத் தண்டிற்கு முள்ளுண்டாயினும் அழகிய மலர்களை உண்டாக்குகின்றன—அதுபோல், அய்யாவான் இறந்த நாளன்று தமிழிற் சிறந்தார் ஒருவர் கூறியவாறு அவரிடமிருந்த "இளங்கோபம்" பின் அவர் மனம் மலர இடம் கொடுத்ததென்பதற் கையம் இல்லை. ஆயினும் அவர் சில ஸங்கதர்மம் (Institutional Charities) செய்தனரே அன்றி அம்மஹான் ஏஸு(Jesus)கூறியவாறு தன் வலதுகை செய்த தருமம் இடதுகை அறியாதிருக்கட்டும் என்று செய்தது பலவன்று. இங்கு கூறியது அய்யாவரது பெருமையைக் குறைக்கவன்று. ஸத்ஸங்கதர்மமானது பின்பற்றுவர் கையில் பட்டு தத்தளிக்கு நிலைமையில் வராது காப்பது மாத்திரமன்றி தமது பெயரைப் பிரதிஷ்டைச் செய்யச் செய்ததென்று சொல்லக்கூடியதென்னும் வசைச் சொல்லைக்குறித்தே அவ்வாறு சொல்லியது. அவர் ராஜாங்கவேலையில் செய்த செயல்கள்யாவும் ஜனங்களுடைய மனத்திற் கினியதோ இல்லையோ என்று விஸ்தாரப்படுத்த அவர் இருந்த காலம் சிறிதே ஆகும். அவ்விஷயம் பல அபிப்பிராயங்களிற் இடம் கொடுக்கக்கூடியதாயினும் அதைச் சொல்லத்துணிய காலம் தானே கைக்கொள்ளும். தன்னுடைய அபிப்பிராயத்தில் ஒப்பாதவர்களிடம் அவர் கொண்ட அஸூயையும், வாக்படபடப்பும், எடுத்தெறிந்துபேசும் தன்மையும், உன்னத நிலையே உண்டாக்கி இருக்கலாம். தன்னுடைய செயல் நியாயம் என்று தான் கொண்ட அபிப்ராயத்தால் அவ்வாறு செய்தார் என்பது பிறருடைய மனவிசாலத்தை பாராதவர் என்று சொல்ல இடம் தரும். "நெற்கும் உமியுண்டு" என்றவாறு பலாமுள்போல வெளிக்காட்டிய ஸ்வபாவத்தின் உள்ளிருந்த இனியபாவம் அவரோடு பழகியவர் அனைவரும் கண்டிருப்பார் என்பதற்கு ஐயமில்லை. அவருடைய குணவிசேஷம் எவ்வாறு இருப்பினும் அவர் தனதுநாட்டு பாஷைகளின் விருத்தியின் பொருட்டும், தருமங்களின் நன்னிலமையின் பொருட்டும் உழைத்தது மற்றெல்லாவற்றையும் மறக்கும்படிச் செய்யும். அதுமாத்திரம் அன்று. அவருக்கு ஸமானம் நுட்பமாக விஷயத்தை கிரஹிக்கும் தன்மையும், அதிசீக்கிரத்தில் எதையும் செய்யக்கூடிய சக்தியும், மனோதைரியமும், திட அபிப்ராயமும் இந்த ராஜதானியில் இனிக்கிடையாது. இத்தகையபெரியோர் உலகில் அநேகர் கிடைப்பதரிது. இவரும் அதிசீக்கிரத்தில் பேருலகிற்கு அழைக்கப்படுவார் என்று யாரும் எண்ணவில்லை. கிருஷ்ணஸ்வாமி அய்யர் தேகவியோகமடைந்தார் என்பது அன்று ஓர் கனவாகத்தோன்றியதே அன்றி நடந்த செயலாகப் படவில்லை. இம்மானுஷகாயத்தின் நிலைமை அவ்வளவு தான். ஆயினும் அவர் செய்த தருமமானது, ஸங்கதருமமதுவே ஆயினும், என்றும், யாவராலும் போற்றக் கூடியதாகி அவற்கு புகழுடம்பை அளித்து, அது ஜனங்கள் மனத்தில் வாழச், செய்யும் என்பதற்கையமில்லை. ஆகையால் அப்புலவர் கூறியாங்கு,

தோன்றிற் புகழொடு தோன்றுக : அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.